

திருவிளையாடற்
புராணம்
பரஞ்சோதி முனிவர் அருளியது

திருவிளையாடற் புராணம்

(64 - படங்கள் அடங்கியது)

பரஞ்சோதி முனிவர்
அருளியது

உரைநடை :
தி. நமச்சிவாயம்

சகுந்தலை நிலையம்

சகுந்தலை நிலையம்
18, (பழைய எண். 171), பவளக்காரத் தெரு,
மண்ணடி, சென்னை - 600 001.
போன் : 25250092

நூல் விவரப் பட்டியல்

நூலின் பெயர்	:	திருவிளையாடற் புராணம்
ஆசிரியர்	:	பரஞ்சோதி முனிவர்
உரைநடை	:	தி. நமச்சிவாயம்
பதிப்பு ஆண்டு	:	முதல் பதிப்பு - ஆகஸ்ட், 1999 இரண்டாம் பதிப்பு - ஜூன், 2002 மூன்றாம் பதிப்பு - டிசம்பர், 2005 நான்காம் பதிப்பு - மே, 2008 ஐந்தாம் பதிப்பு - மார்ச், 2010
பதிப்புரிமை	:	© சகுந்தலை நிலையம்
தாள்	:	மேப் லித்தோ
நூல் அளவு	:	12.5 x 18 செ.மீ.
எழுத்து	:	11 புள்ளிகள்
பக்கங்கள்	:	384
பைண்டிங்	:	கலிக்கோக் கட்டு
விலை	:	ரூ. 100.00
ஒளி அச்சு	:	விஜி கிராஃபிக்ஸ் சென்னை - 600 024.
அச்சிட்டோர்	:	கலர் விங்ஸ் சென்னை - 600 005.
நூல் வெளியீடு	:	சகுந்தலை நிலையம் சென்னை - 600 001.

213

முன்னுரை

இறைவன் அருளாலே நந்தி தேவரிடத்திலே கேட்டுத் தெரிந்த சனற்குமார முனிவர், வேத வியாச முனிவருக்குச் சொல்ல, அதை வேத வியாச முனிவர் சூதக முனிவருக்குச் சொன்ன பதினெண் புராணங்களிலே ஒன்றாகிய காந்த புராணத்தில் சங்கர சங்கிதையில் சொல்லப்பட்டதான திருவாலவாய் மகிமை யென்கிற வடநூலைத் தமிழில் நமக்குத் தந்தவர், பரஞ்சோதி முனிவர்.

தமிழ்ச் சங்கம் வைத்துத் தமிழ் வளர்த்த மதுரையில் அருளாட்சி செய்து வரும் சொக்க நாதப் பெருமான் திருவருளால் அறுபத்து நான்கு திருவிளையாடல்களும் நிகழ்ந்தவையாகும். இத் திருவிளையாடல்கள் அனைத்தும் மதுரை மாநகருக்கே உரியவையாகும்.

சிவபெருமான் தன் அடியார்களை ஆட்கொள்வதற்காக நிகழ்த்திய அறுபத்து நான்கு திருவிளையாடல்களையும், பரஞ்சோதி முனிவர் திருவிளையாடற் புராணம் என்ற பெயரில் அருளியிருக்கிறார்.

மதுரை மாநகருக்குப் பல புராணங்களிருப்பினும் அவற்றுள் மிகவும் சிறப்புடையது திருவிளையாடற் புராணமே.

இந்நூல் 64 படலங்களும் மூன்று பிரிவுகளும் கொண்டதாகும்.

1 முதல் 18 படலங்கள் - மதுரைக் காண்டம்
19 முதல் 48 படலங்கள் - கூடற் காண்டம்
49 முதல் 64 படலங்கள் - திருவாலவாய்க் காண்டம்

இவ்வாறு 64 படலங்களில் 64 திருவிளையாடல்களும் கூறப்பட்டுள்ளன.

தமிழ் அன்பர்கள் இதனை விருப்பமுடன் வரவேற்றுப் படித்துச் சொக்கநாதப் பெருமானின் அருளினைப் பெற்றிட அன்புடன் வேண்டிக் கொள்கின்றேன்.

- ஆசிரியர்

பொருளடக்கம்

பக்கம்

முதற் பகுதி
மதுரைக் காண்டம்

இரண்டாம் பகுதி
கூடற் காண்டம்

மூன்றாம் பகுதி
திருவாலவாய்க் காண்டம்

★ ★ ★

நூற் பயன்

எண்சீரடி ஆசிரிய விருத்தம்

திங்களணி திருவால வாயெம் மண்ண
    றிருவிளையாட் டிவையன்பு செய்து கேட்போர்
சங்கநிதி பதுமநிதிச் செல்வ மோங்கித்
    தகைமைதரு மகப்பெறுவர் பகையை வெல்வர்
மங்கலநன் மணம்பெறுவர் பிணிவந் தெய்தார்
    வாழ்நாளு நனிபெறுவர் வானா டெய்திப்
புங்கவரா யங்குள்ள போக மூழ்கிப்
    புண்ணியராய்ச் சிவனடிக்கீழ் நண்ணி வாழ்வார்.

திருவாலவாயில் வீற்றிருக்கும் சோமசுந்தரக் கடவுளின் திருவிளையாடல்களை அன்புடன் வழிபட்டுக் கேட்பவர்கள், சங்க நிதியும், பதும நிதியும் பெற்றுக் குபேர சம்பத்துடன் வாழ்வார்கள். அறிவுள்ள புத்திரர்களைப் பெறுவார்கள். பகையை வெல்வார்கள். திருமணம் ஆகாதவர்கள் மங்கல மாகிய மணம் செய்து கொள்ளப் பெறுவார்கள். நோய் எதுவும் அவர்களை அணுகாது, பூரண ஆயுள் பெற்று, சுவர்க்க பதி சென்றடைவார்கள். சுவர்க்கலோகத்தில் சிவபெருமானுடைய திருவடி நிழலில் பொருந்திய பேரின்பத்தை அனுபவித்தவாறு நீடூழி வாழ்வார்கள்.

ஆசிரியர் வரலாறு

பரஞ்சோதி முனிவர் சோழவள நாட்டில் உள்ள திருமறைக்காடு என்னும் திருப்பதியில் தோன்றினார். தந்தையார் மீனாட்சிசுந்தர தேசிகர். சைவ வேளாள மரபைச் சார்ந்தவர்.

பரஞ்சோதியார் இளமைப் பருவத்திலேயே தமிழிலும் வடமொழியிலும் உள்ள சிறந்த நூல்களை ஐயந் திரிபு அறக் கற்றார். இவர்தம் பாடல்கள் சைவத் திருமுறைகள், சைவ சித்தாந்த சாத்திரங்கள், சங்க இலக்கியங்கள் முதலியவற்றின் சிறந்த கருத்துக்களைக் கொண்டு விளங்குகின்றன. சொல்லழகும் பொருளழகும் நடையழகும் வாய்ந்து மிளிர்கின்றன. இப் பாடல்கள் பக்திச் சுவை நனி சொட்டச் சொட்டப் படிப்பவரைப் பரவசப் படுத்துவன.

பரஞ்சோதி முனிவர் ஒரு துறவி. பல சிவத் தலங்களையும் தரிசித்து மதுரையை அடைந்தார். அங்கு மீனாட்சி யம்மையையும் சோமசுந்தரப் பெருமானையும் வழிபட்டு வந்தார்.

ஒரு நாள் இரவு மீனாட்சியம்மையார் இவரது கனவில் தோன்றிச் சிவபெருமான் மதுரையில் புரிந்த திருவிளையாடல் களைப் பாடும்படி கூறியருளினார். முனிவர் அவ்வாறே பாடி முடித்தனர். சொக்கநாதப் பெருமான் திருமுன்பு பல புலவர்கள் அடங்கிய அவையில் இந்நூல் அரங்கேற்றப்பட்டது.

பரஞ்சோதி முனிவர் வேதாரணிய புராணம், திருவிளையாடல் போற்றிக் கலிவெண்பா, மதுரைப் பதிற்றுப்பத்தந்தாதி ஆகிய பல்வேறு நூல்களையும் இயற்றியுள்ளார். இவர் காலம் 350 ஆண்டுகட்கு முற்பட்டது.

o

திருவிளையாடற் புராணம்

காப்பு

கலி விருத்தம்

சத்தி யாய்ச்சிவ மாகித் தனிப்பர
முத்தி யான முதலைத் துதிசெயச்
சுத்தி யாகிய சொற்பொரு ணல்குள
சித்தி யானைதன் செய்யபொற் பாதமே.

பாயிரம்

வாழ்த்து

அறுசீரடி ஆசிரிய விருத்தம்

மல்குக வேத வேள்வி வழங்குக சுரந்து வானம்
பல்குக வளங்க ளெங்கும் பரவுக வரங்க ளின்ப
நல்குக வுயிர்கட் கெல்லா நான்மறைச் சைவ மோங்கிப்
புல்குக வுலக மெல்லாம் புரவலன் செங்கோல் வாழ்க.

கடவுள் வணக்கம்

சிவபெருமான்

அறுசீரடி ஆசிரிய விருத்தம்

வென்றுளே புலன்க ளைந்தார் மெய்யுண ருள்ளந் தோறுஞ்
சென்றுளே யமுத மூற்றுந் திருவருள் போற்றி யேற்றுக்
குன்றுளே யிருந்து காட்சி கொடுத்தருள் கோலம் போற்றி
மன்றுளே மாறி யாடு மறைச் சிலம்படிகள் போற்றி

சிவசக்தி

வேறு

கரும்புமுதல் கடிமலர்ப்பூங் குழல்போற்றி
யுத்தரியத் தொடித்தோள் போற்றி
கரும்புருவச் சிலைபோற்றி கவுணியர்க்குப்
பால்சுரந்த கலசம் போற்றி
இரும்புமனங் குழைத்தென்னை யெடுத்தாண்ட
வங்கயற்க ணெம்பி ராட்டி
அரும்புமிள நகைபோற்றி யாரணநூ
புரஞ்சிலம்பு மடிகள் போற்றி.

பரமசிவம்

கலி நிலைத்துறை

பூவண்ணம் பூவின் மணம்போலமெய்ப் போதவின்ப
மாவண்ண மெய்க்கொண் டவன்றன்வலி யானை தாங்கி
மூவண்ண றன்சந்தி திமுத்தொழில் செய்ய வாளர்
மேவண்ண லன்னான் விளையாட்டின் வினையை வெல்வாம்.

சிற்சத்தி

இதுவுமது

அண்டங்க ளெல்லா மணுவாக வணுக்க ளெல்லா
அண்டங்க ளாகப் பெரிதாய்ச் சிறியதாயி னானும்
அண்டங்க ளுள்ளும் புறம்புங் கரியாகி னானும்
அண்டங்க ளீன்றா டுணையென்ப ரறிந்த நல்லோர்.

சொக்கலிங்கமூர்த்தி

கலி விருத்தம்

பூவி னாயகன் பூமக ளாயகன்
காவி னாயக னாதிக் கடவுளர்க்
காவி நாயகன் னங்கயற் கண்ணிமா
தேவி நாயகன் சேவடி யேத்துவாம்.

அங்கயற்கண்ணம்மை

அறுசீரடி யாசிரிய விருத்தம்

பங்கயற்க ணரியபரம் பரனுருவே தனக்குரிய படிவ மாகி
யிங்கயற்க ணைகனுலக வெண்ணிறந்த சராசரங்க ளீன்றுந் தாழாக்
கொங்கயற்கண் மலர்க்கூந்தற் குமரிபாண் டியன்மகள்போற் கோலங் கொண்ட
அங்கயற்க ணம்மையிரு பாதப்போ தெப்போது மகத்துள் வைப்பாம்.

சபாநாயகர்

உண்மையறி வானந்த வுருவாகி எவ்வுயிர்க்கு முயிராய் நீரின்
றண்மையனல் வெண்மையெனத் தனையகலா திருந்து சராசரங்க ளீன்ற
பெண்மையுரு வாகியதன் னானந்தக் கொடிமகிழ்ச்சி பெருக யார்க்கும்
அண்மையதா யம்பலத்து ளாடியருள் பேரொளியை யகத்துள் வைப்பாம்.

சோமசுந்தரக் கடவுள்

சடைமறைத்துக் கதிர்மகுடந் தரித்துநறுங் கொன்றையந்தார். தணந்துவேப்பந்
தொடைமுடித்து விடநாகக் கலனகற்றி மாணிக்கச் சுடர்ப்பூ ணேந்தி
விடைநிறுத்திக் கயலெடுத்து வழுதிமரு மகனாகி மீன நோக்கின்
மடவரலை மணந்துலக முழுதாண்ட சுந்தரனை வணக்கஞ் செய்வாம்.

தடாதகைப் பிராட்டியார்

செழியர்பிரான் றிருமகளாய்க் கலைபயின்று முடிபுனைந்து செங்கோலோச்சி
முழுதுலகுஞ் சயங்கொண்டு நிறைகொண்டு நந்திகண முனைப்போர் சாய்த்துத்
தொழுகணவற் கணிமணமாலிகைசூட்டித் தன்மகுடஞ் சூட்டிசெல்வந்
தழைவுறுதன் னரசளித்த பெண்ணரசி யடிக்கமலந் தலைமேல் வைப்பாம்.

வெள்ளியம்பல வாணர்

பொருமாறிற் கிளர்த்துடந்தோ ளொருமாறன் மனங்கிடந்த புழுக்க மாறி
வருமாறிற் கண்ணருவி மாறாது களிப்படைய மண்ணும் விண்ணும்
உருமாறிப் பவக்கடல்வீழ்ந் தூசலெனத் தடுமாறி யுழலு மாக்கள்
கருமாறிக் கதியடையக் கால்மாறி நடித்தவனைக் கருத்துள் வைப்பாம்.

தக்ஷிணாமூர்த்தி

கல்லாலின் புடையமர்ந்து நான்மறையா றங்கமுதற் கற்ற கேள்வி
வல்லார்க ணால்வருக்கும் வாக்கிறந்த பூரணமாய் மறைக்கப் பாலாய்
எல்லாமா யல்லதுமா யிருந்ததனை யிருந்தபடி யிருந்து காட்டிச்
சொல்லாமற் சொன்னவரை நினையாம நினைந்துபவத் தொடக்கைவெல்வாம்.

சித்தி விநாயகர்

உள்ளமெனுங் கூடத்தி லூக்கமெனுந் தறிநிறுவி யுறுதி யாகத்
தள்ளரிய வன்பென்னுந் தொடர்பூட்டி யிடைப்படுத்தித் தறுகட் பாசக்
கள்ளவினைப் பசுபோதக் கவளமிடக் களித்துண்டு கருணை யென்னும்
வெள்ளமதம் பொழிசித்தி வேழத்தை நினைந்துவரு வினைக டீர்ப்பாம்.

சுப்பிரமணியர்

சுரங்குதிரைக் கருங்கடலுங் காரவுணப் பெருங்கடலுங் கலங்கக் கார்வந்
துறங்குசிகைப் பொருப்புஞ்சூர்ப் பொருப்பும் பிளப்பமறை யுணர்ந்தோராற்றும்
அறங்குலவு மகத்தழலு மவுணமட வார்வயிற்றி னழலுமுள
மறங்குலவு வேலெடுத்த குமரவேள் சேவடிகள் வணக்கஞ் செய்வாம்.

திருவிளையாடற் புராணம்

1. இந்திரன் பழி தீர்த்தது

அன்றொரு நாள் கிரேதா யுகத்திலே தேவர் கோனாகிய இந்திரன் சுவர்க்க லோகத்திலே மந்தார நிழலின் கீழ் வீற்றிருந்தான். அது சமயம் அவன் முன்பு மயிலைப் போன்ற சாயலையுடைய, அன்னம் போன்ற நடையுடைய தேவமாதர் நாட்டியம் ஆடிக் கொண்டிருந்தனர். இன்பமயமான கீதங்களைப் பாடிக் கொண்டிருந்தனர்.

நாட்டியக் காட்சியும் இசையின்பமும் தேவேந்திரனைப் பெரிதும் கவர்ந்துவிட்டன. சந்தோஷம் என்னும் பெருங் கடலுள் மூழ்கிவிட்டான், தன்னையே மறந்து விட்டான். அந்தச் சமயம் பார்த்துத் தேவகுருவாகிய வியாழ பகவான் அங்கு வந்து சேர்ந்தார். அவர் சிவபெருமானுக்குச் சமமான பெருமை உடையவர். அவர் வருவதைக் கண்ட இந்திரன் பெண் மயக்கத்தினாலே மதிமயங்கித் தனது சிங்காதனத்தை விட்டு எழுந்து வரவேற்று உபசாரம் செய்யாது இருந்து விட்டான்.

தேவேந்திரனது அலட்சியப் போக்கைக் கண்ட வியாழ பகவானும் அங்கிருந்து விரைவாகச் சென்று விட்டார். அப்பொழுதிருந்து தேவேந்திரனுடைய ஐசுவரியம் மங்கிக் குறையத் தொடங்கியது. அப்பொழுது இந்திரன் தனது பெருங்குற்றத்தை உணர்ந்து கொண்டான். தனது குருவைத் தேடிச் சென்றான். எல்லா உலகங்களிலும் சென்று தேடினான். கடைசியாக நான்முகனாகிய பிரம்மா வாழ்கின்ற சத்தியலோகம் சென்றான்.



அங்கும் வியாழ குருவைக் காண முடியவில்லை. ஒன்றும் தோன்றாதவனாகி மிகுந்த மனக் கலக்கத்துடன் பிரம்மாவின் முன்னால் விழுந்து வணங்கினான். பிறகு நடந்தவற்றை எல்லாம் சொன்னான்.

அதைக் கேட்ட பிரம்மா குருவை அவமதித்த பாவம் கொழுந்து விட்டு உயர்ந்து தேவேந்திரனை விழுங்க வரும் காலம் நெருங்கி விட்டதை உணர்ந்தார். ஆதலால், இந்திரனைப் பார்த்து, "வியாழனைப் பார்க்கும் வரையிலும் துவஷ்டாவின் குமாரனும், மூன்று தலைகள் கொண்டவனும், அசுரனாகப் பிறந்தாலும் அறிவிலும் ஒழுக்கத்திலும் சிறந்தவனாகிய விசுவரூபன் என்பவனை உனது குருவாக ஏற்பாயாக!" என்று சொன்னார். பிரம்மாவின் சூழ்ச்சியைத் தெரிந்து கொள்ள மாட்டாத இந்திரன் வணங்கி விடைபெற்றுச் சென்றான்.

தன்னிடம் வந்த தேவேந்திரனைத் தனது சிஷ்யனாக ஏற்றுக் கொண்டு விட்டது போலவே நடக்கத் தொடங்கினான் விசுவரூபன். விசுவரூபன் தனது மனத்திலே வஞ்சகம் உடையவனாகவே இருந்தான். என்ன இருந்தாலும் அசுரனல்லவா?

பின்பு ஒருநாள் தேவேந்திரன் விசுவரூபனிடம் யாகம் ஒன்று செய்து தருமாறு வேண்டினான். யாகம் செய்து கொண்டிருக்கும்போது அந்த அசுரனும் உள்ளொன்று வைத்துப் புறமொன்று செய்தான்.

'அசுரர்கள் அனைவரும் உய்யவேண்டும்!" என்று தன் மனத்திலே நினைத்து "தேவர்கள் வாழ்வதாக!" என்று வெளியே சொல்லி யாகம் செய்தான்!

இந்த வஞ்சகச் செய்கையைத் தேவேந்திரன் தனது ஞான திருஷ்டியால் அறிந்து கொண்டான். உடனே தனது வச்சிராயுதத்தை வீசி விசுவரூபனது மூன்று தலைகளையும் வெட்டி வீழ்த்தினான். அசுரனாயிருந்தாலும் பிரம்ம குலம் அல்லவா? பிரம்மஹத்திப் பாவம் விரைவாக வந்து இந்திரனைப் பிடித்துக் கொண்டு விட்டது. மிகப் பெரிய கஷ்டங்களுக்கு ஆளாயினான் இந்திரன். தேவர்கள் எல்லாரும் சேர்ந்து தங்கள் தலைவனது பிரம்மஹத்தி தோஷத்தை மரங்கள், மண், பெண்கள், நீர் ஆகிய நான்கிற்கும் பங்கிட்டுக் கொடுத்து விட்டனர். தோஷம் நீங்கிய தேவர்கோன் தனக்கு ஏற்ற பொலிவைப் பெற்றான்.

தனது குமாரன் விசுவரூபன் தேவேந்திரனால் கொல்லப்பட்ட செய்தியைக் கேட்ட துவஷ்டா மிகுந்த கோபம் கொண்டார். பழிவாங்கும் எண்ணத்தோடு கொடிய யாகம் ஒன்றைச் செய்தார். அந்த யாகத் தீக் குழியிலிருந்து விருத்திராசுரன் என்பவன் தோன்றினான். கோர உருவத் தோடும், கையிலே கொடிய வாளோடும், கோபக்கனல் பறக்க, திசைகள் அதிரச் சிரித்துக் கொண்ட நின்றான். நாள்தோறும் அவன் பெருகி வளர்ந்துகொண்டே வந்தான். ஒரு நாள் துவஷ்டாவிருத்திராசுரனைப் பார்த்து, ''தேவேந்திர னோடு போர் செய்து அவன் உயிரைப் போக்கிவா,'' என்று ஏவி விட்டார்.

வடவைப் பெருங்கனலைப் போன்ற சினம் கொண்டெழுந்த விருத்திராசுரன் தேவேந்திரன் முன்னால் போய் நின்றான். தேவேந்திரனும் தனது வெள்ளை யானையாகிய ஐராவதத்தின் மேலேறிச் சண்டைக்கு வந்தான். இருவரும் உக்கிரமாகப் போர் செய்தனர். இந்திரன் தனது வச்சிராயுதத்தை விருத்திரன் மேல் வீசினான். அதனால்

கோபங் கொண்ட அசுரன் தன் கையில் இருந்த இரும்பு உலக்கையால் இந்திரனின் தோளிலே அடித்தான். இந்திரனுக்கு நினைவு தவறி விட்டது. சிறிது நேரத்திலேயே தெளிந்தும் விட்டது. விருத்திராசுரனுடன் இனிப் போர் செய்ய முடியாது என்பதை நன்றாக உணர்ந்து கொண்ட இந்திரன் சத்தியலோகம் சென்றான். பிரம்ம தேவனைக் கண்டு வணங்கித் தனக்கு விருத்திரனால் ஏற்பட்ட கஷ்டங்களை எடுத்துக் கூறினான்.

பிரம்மா, இந்திரனை உடன் அழைத்துக் கொண்டு, வைகுண்ட லோகத்திற்குச் சென்றார். இருவரும் மஹா விஷ்ணுவைத் தொழுதனர். பிரம்மா நடந்தவற்றைச் சொன்னார்.

எல்லாவற்றையும் உணர்ந்த விஷ்ணு மொழிந்தார். "இந்திரனே! உனது வச்சிராயுதம் மிகவும் பழையதாகி விட்டது. எதிரியின் உயிரை வாங்கும் பலம் அதற்கு இல்லை. இப்போது உனக்குப் புதிய வச்சிராயுதம் வேண்டும். வழி சொல்கிறேன், கேள். அமிர்தம் பெறுவதற்காகப் பாற்கடலைக் கடைந்த பொழுது தேவர்களும் அசுரர்களும் ஆயுதங்களோடு வரக் கூடாது என்று கருதி எல்லாருடைய ஆயுதங்களையும் சேகரித்துத் ததீசி என்ற மகரிஷியிடம் ஒப்படைத்தோம். பல ஆண்டுகள் கழிந்து விட்டன. யாரும் தன்னிடம் வந்து ஆயுதங்களைக் கேட்காததால், ததீசி ரிஷி அவைகளை விழுங்கி விட்டார்! அவர் விழுங்கிய ஆயுதங்கள் எல்லாம் ஒன்று சேர்ந்து அவரது முதுகந்தண்டோடு பொருந்திவிட்டன. ததீசி முனிவரின் முதுகெலும்புதான் உனக்கு வேண்டிய புதிய வச்சிராயுதம். இந்திரா! நீ சென்று கேட்பதற்கு முன்பாகவே கருணாநிதியான அம்முனிவர் தந்துவிடுவார், செல்க."

விஷ்ணுவையும் பிரம்மாவையும் வணங்கி விடை பெற்றான், தேவேந்திரன். தன்னுடன் தேவர்களையும் அழைத்துக் கொண்டு ததீசி மாமுனிவர் இருப்பிடம் சென்றான். அவரைப் போற்றி வணங்கினான். முனிவரும் முகமலர்ச்சியுடன் வரவேற்று விவரம் கேட்டார்.

''கொடிய அசுரர்களைக் கொன்று தேவர்களைப் பிழைக்கச் செய்ய முடியும் அரிய பொருள் தங்களிடம் உள்ளது. அதனைத் தந்தருள வேண்டும்,'' என வேண்டினான் இந்திரன்.

வேண்டிய அளவிலே எக்காலமும் தெரியவல்ல ததீசி முனிவர் இந்திரன் கோரியதைப் புரிந்து கொண்டார். ''உங்களுடைய பெருந்துன்பத்தைப் போக்குவதற்காக என் உயிரை விடுவேன்; உடலைக் கொடுப்பேன். நெஞ்சிலே இரக்கமில்லா அரக்கர் ஒழிய வேண்டும். நானும் இதனால் அறமும் புகழும் ஒருங்கே பெறுவேன்!'' என்று கூறிவிட்டுச் சிவயோக சமாதியில் அமர்ந்தார். உடனே ஒளியுருவம் பெற்றுப் புஷ்பக விமானமேறிச் சிவலோகம் சென்றார்.

ததீசி முனிவரது முதுகந்தண்டைக் கொண்டு தேவ தச்சனாகிய விசுவகர்மா புதியதொரு வச்சிராயுதமாகச் செய்து தேவேந்திரனிடம் கொடுத்தான். புதுப் பலம் பெற்ற இந்திரன் நால்வகைச் சேனையுடன் விருத்திராசுரனை எதிர்க்கக் கிளம்பினான்.

விருத்திரனும் தனது அசுரப்படையுடன் எதிர்த்து வந்தான். தேவாசுர யுத்தம் மிகவும் மும்முரமாகவும் கடுமையாகவும் நடந்தது.

இந்திரன் விடுத்த தேவாஸ்திரங்களுக்கெல்லாம் மாற்றாக அஸ்திரங்களை ஏவிக் கொண்டிருந்தான் விருத்திரன். எதிர்ப்புக்கு மாற்று, மாற்றுக்கு எதிர்ப்பு என்று போர் சென்று கொண்டிருந்தது. முடிவாக இந்திரன் தன் கையிலிருந்த புதிய வச்சிராயுதத்தை வேகமாக ஆட்டிக் காட்டினான். விருத்திராசுரன் அதனைக் கண்டு நிரம்பப் பயந்து விட்டான். ஓடோடிச் சென்று சமுத்திரத்திற்குள் விழுந்து முழுகி, மறைந்து விட்டான்.

இந்திரனும் அவனைத் தொடர்ந்து சென்று கடலுள் மூழ்கினான். எங்கெல்லாமோ தேடினான், அசுரனைக் காணவில்லை. மனம் சோர்ந்த இந்திரன் பிரம்மாவிடம் சென்று முறையிட்டான். சிந்தனை செய்து பார்த்த பிரம்மா, ''அகஸ்திய மகரிஷியிடம் சென்று இந்தச் செய்தியைச் சொல்வாயாக,'' என்று சொல்லிவிட்டார்.

பிரம்மாவின் ஆணைபெற்ற இந்திரன் விரைவாகப் பொதிகை மலை சேர்ந்தான். அங்கே அகஸ்திய முனிவரைக் கண்டு பணிந்தான். பின்னர் தனக்கு நேர்ந்ததை யெல்லாம் சொன்னான். கடலுள் ஒளிந்திருக்கும் விருத்திரனைத் தன்னால் கண்டு பிடிக்க முடியாததையும் கூறி வழி கேட்டான்.

தேவர்தம் துயரைப் போக்கி அவரைக் காக்கும் எண்ணம் கொண்ட மகாவிஷ்ணுவைப் போன்ற அகஸ்திய மகரிஷி கடல் நீரை எல்லாம் தன் உள்ளங் கையில் ஏந்திக் குடித்து விட்டார்.

நீர் வற்றிப் போனதும் கடலுக்குள் இருந்த எல்லாப் பொருள்களும் தெளிவாகத் தெரிந்தன. மலை உச்சி ஒன்றின் மேல் விருத்திராசுரன் தவம் செய்து கொண்டு

அமர்ந்திருந்தான். உடனே தேவேந்திரன் தனது புதிய வச்சிராயுதத்தால் அசுரனது தலையை அறுத்துத் தள்ளினான். பிரம்ம ஹத்தி தோஷம் இம்முறையும் தேவர் கோனைப் பற்றிக் கொண்டது.

விருத்திராசுரப் பிரம்ம ஹத்தியானது இந்திரனைப் படுத்தி வைத்த பாடு கொஞ்ச நஞ்சமல்ல. இந்திரன் என்ன செய்வான், பாவம்! பயமடைந்த இந்திரன் வேகமாக ஓடிச் சென்றான். வடகிழக்குத் திக்கிலிருந்த தாமரைக் குளத்திற்குள் மூழ்கினான். தாமரைத் தண்டு ஒன்றின் நூலுக்குள்ளே தன்னை ஒளித்துக் கொண்டான். தேவேந்திரன் இல்லாத தேவலோகம் ஒளியும் அழகும் குறைந்து விட்டது.

இதற்கிடையில் நகுஷன் என்பான் அசுவமேதயாகங்கள் செய்து இந்திர பதவி பெற்றான். அவன் கர்வம் பிடித்தவனாக வும் அகம்பாவம் கொண்டவனாகவும் அலட்சியம் நிறைந்தவனாகவும் இருந்தான். தவிர இந்திராணியையும், சப்த ரிஷிகளையும் மிகவும் அவமதித்ததால் சாபம் பெற்றுப் பாம்பாகி மண்ணில் விழுந்தான்.

தலைவனை இழந்த தேவர்கள் செய்வது இன்னது என்று தெரியாது தங்கள் பெருமதிப்பிற்குரிய குருவாகிய வியாழ பகவானிடம் சென்று தங்கள் வருத்தத்தைத் தெரிவித்து விண்ணப்பித்துக் கொண்டனர். வியாழ பகவான் வட கிழக்குத் திக்கிலிருந்து தடாகத்திற்குச் சென்று ஒளிந்து கொண்டிருந்த இந்திரனைக் கூவி அழைத்தார்.

இந்திரன் வெளிப்பட்டு வந்தான். வியாழ பகவான் இந்திரனைத் தன்னுடன் அழைத்துக் கொண்டு கிளம்பினார். இந்திரன் தனது குருவை மிகுந்த பணிவோடு வணங்கி,

''எளியேனை வாட்டுகின்ற இந்த தோஷம் நீங்கும் வகை எது? அருள வேண்டும்!'' எனப் பணிவோடு வேண்டினான்.

வியாழ பகவானும், ''இந்திரா! உன்னைப் பிடித்துள்ள இந்த பிரம்ம ஹத்தி தோஷம் நீங்க வேண்டிய இடம் பூலோகம்தான். வேட்டையாடுதலைக் காரணமாகக் கொண்டு, இந்த தோஷத்தைப் போக்கிக் கொள்ளும் பொருட்டுப் பூலோகத்திற்குச் செல்வாயாக!'' என்றார்.

இந்திரன் தனது வெண்குதிரைமேல் ஏறிக் கொண்டான். குருவும் தேவர்களும் அன்புடன் சூழ்ந்து வந்தனர். பூமியிலே வந்து இறங்கினான். சிவபெருமான் வாழும் திருக்கைலாச மலையை அடைந்து வழிபட்டான். பின்னர் தெற்குத் திசை நோக்கிப் புறப்பட்டான். கங்கை முதலான பல புண்ணிய நதிகளில் நீராடி, திருக்கேரதம், காசி, காஞ்சிபுரம் என்னும் பல சிவ க்ஷேத்திரங்களைக் கண்டு வணங்கினான். இன்னமும், அவனைப் பிடித்த பிரம்ம ஹத்தி தோஷம் நீங்கினபாடில்லை.

பொலிவு குறைந்து கொண்டே வந்தது. இறுதியாகக் கடம்பவனத்து எல்லையின் பக்கமாக வந்தவுடன் பிரம்ம ஹத்தி தோஷம் இந்திரனை விட்டுப் பிரிந்து சென்று ஓடி விட்டது. பெரும் பாரம் இறங்கியவனைப் போல இந்திரன் மிகுந்த சந்தோஷம் அடைந்தான். குருவினிடம் மகிழ்ச்சியைத் தெரிவித்துக் கொண்டான்.

உடனே வியாழ பகவானும், ''இவ்விடத்தில்தான் உலகில் சிறந்த புண்ணிய ஸ்தலமும், புனித தீர்த்தமும் இருக்கின்றன. நாம் அவற்றைக் கண்டு கொள்ள வேண்டும், சென்று தெரிந்துவா,'' என்று ஆணையிட்டார். தேட்டம் கொண்டு நாட்டமுற்ற தேவேந்திரன் கடம்பவனத்துக்குள் புகுந்தான்.

அந்த வனம் முழுவதுமே தெய்வ மணம் கமழ்வதாக இருந்தது. குயில் பறவைகள் 'ஓம், ஓம்' என்று கூவின. கிளிகளும் 'நமச்சிவாய' சொல்லின. இந்திரன் உள்ளத்திலே பேருவகையும் பேரமைதியும் குடி கொண்டன. புளகாங்கிதம் அடைந்தான்.

இதற்கிடையே இந்திரனது தூதுவர்கள் வந்து சேர்ந்தனர். அவர்கள் வணங்கி மகிழ்ந்து வியந்து, "மன்னவரே! நாங்கள் காணக் கிடைக்காத காட்சியைக் கண்டோம். அளவுக்குக் கட்டுப்படாத தெய்வத் தன்மையையும் இந்தக் கடம்பவனத்திலே கண்டு வந்தோம். புனிதமும் தூய்மையும் கொண்ட தீர்த்தக் கரையிலே, கடம்பமரத்தின் நிழலிலே சிவலிங்கம் ஒன்றுள்ளது. அது ஒப்பற்றது. தானே முளைத்தெழுந்து, ஒளிமயமாக இருக்கிறது!" என்று சொன்னார்கள்.

ஒற்றர்களின் மூலமாக வந்த அமுதினும் இனிய வாக்கைக் கேட்ட இந்திரன் மகிழ்ச்சிக் கடலில் திளைத்தான். பக்தி மேலிட்டவனாய்த் தனது சிரமேல் கை குவித்து, எல்லாம் ஒடுங்கியவனாகித் தனது தோஷம் விலகக் காரணமாக இருந்த சிவலிங்கத்தைக் கண்டு களிக்க விரைந்து சென்றான். மூல காரணமாகி முளைத்தெழுந்த சிவக் கொழுந்தைத் தன் ஆயிரங்கண்களாரக் கண்டான் இந்திரன். ஆடினான், பாடினான், ஆனந்தக் கூத்தாடினான் தேவேந்திரன். ஆனந்தக் கண்ணீர் சொரிந்தான். நா தழுதழுத்தது. உடல் நடுங்கியது. பக்திப் பரவசம் மேலிடப் பல துதிகள் இயம்பினான்.

பின்னர் சச்சிதானந்த சொரூபமாக விளங்கும் அன்புருவான சோமசுந்தரக் கடவுளுக்கு அருச்சனை செய்யும் பொருட்டு, சுவர்க்கலோக மலர்கள் கொண்டுவரச் சொல்லிச்

சில தேவர்களை அனுப்பினான். அடுத்து இந்திரன் விசுவகர்மாவை அழைத்து, விமானம் ஒன்று அமைக்குமாறு கட்டளையிட்டான். அருகில் இருந்த தாமரைக் குளத்திலே மலர்கள் பறிக்கச் சென்றான்- விரைவிலே அருச்சனை செய்யும் எண்ணத்தோடு. ஆனால் நல்ல நறுமலர்கள் கிடைக்கவில்லை.

இந்திரன் ஏக்கம் கொண்டான். தேவர்கோனின் மனச் சோர்வை உணர்ந்த சோமசுந்தரக் கடவுள் உடனே அருள் புரிந்தார். அந்தத் தடாகத்திலே பொன் தாமரை மலர்கள் பூத்து விட்டன. இந்த அதிசயத்தைக் கண்ட இந்திரன் பக்தி மேலிடக் கூத்தாடினான். அந்தத் தீர்த்தத்திற்குப் பொற்றாமரைக்குளம் என்று திருப்பெயர் இட்டான். பொற்றாமரைத் தடாகத்தில் குளித்தெழுந்தான். பொற்றாமரை மலர்களைப் பறித்துக் கொண்டு சிவசன்னிதானத்தை அடைந்தான்.

அச்சமயம் ஆகாயத்திலிருந்து ஒளிமயமான மாணிக்க விமானம் ஒன்று இறங்கி வந்தது. எட்டு யானைகள், முப்பத்திரண்டு சிங்கங்கள், அறுபத்து நான்கு சிவகணங்கள் தாங்குமாறு தேவதச்சனால் படைக்கப்பட்ட விமானம்தான் அது. அந்த விமானத்தைச் சாத்திய பின்பு தேவேந்திரன் சோமசுந்தரக் கடவுளுக்குப் பூசை செய்ய முற்பட்டான். அதே சமயத்தில் தேவலோகத்திலிருந்து பூசைக்கு வேண்டிய பொருள்களும் சோடசோபசாரப் பொருள்களும் வந்து சேர்ந்தன. மறுபடியும் இந்திரன் பொற்றாமரைத் தடாகத்தில் நீராடி, வெண்ணீறு தரித்து, உருத்திராட்ச மாலை அணிந்து, சிவாகமப்படி பெரும் பூசை செய்யலானான். பக்தி வெள்ளம் பெருகிப் பாயப் பரவசனான தேவேந்திரன் பல முறைகள் வணங்கி வணங்கிப் போற்றினான்.

இந்திரனது பூசனையை ஏற்று மகிழ்ந்த சோமசுந்தரக் கடவுளும் திருவருள் கொண்டு வெளிப்பட்டார். "உனக்கு வேண்டுவது என்ன? சொல்," என்று திருவாய் மலர்ந்து அருளினார்.

சிரசின் மேல் கைகூப்பியவனான இந்திரன், "தேவரீரைப் பூசை செய்யும் பாக்கியத்தைக் காட்டிலும், பெரும் பேறு வேறு உண்டோ? எப்பொழுதும் பூசை செய்து கொண்டே யிருக்கும் தேவரீரது தொண்டனாக இருக்கவே விரும்புகிறேன்!" என்றான்.

இது கேட்ட சோமசுந்தரப் பெருமானும் கருணையுடன், "அன்ப! நீ ஒவ்வொரு சித்ரா பௌர்ணமியன்றும் வந்து பூசை செய்வாயாக. ஆண்டு முழுதும் செய்கின்ற பூசையின் பயனை அந்த ஒரு நாளிலேயே பெறுவாய். நீ தேவலோகம் சென்று பல இன்பங்களை அனுபவித்து வாழ்வாயாக! யாம் உனக்கு மோட்சம் கிடைக்குமாறு உனக்குப் பக்குவம் வந்ததும் அருள்வோம்!" என்று திருவாய் மலர்ந்தருளி மறைந்தார்.

பின்னர்த் தேவர் கோன் சிவபக்திச் செல்வனான தன்மையோடு பொன்னுலகம் சேர்ந்தான்.

உ. வெள்ளை யானை சாபம் தீர்த்தது

பாரத தேசத்தில் பல புண்ணிய நதிகள் உள்ளன. அவை என்றும் வற்றாத ஜீவநதிகள். அவற்றுள் சிறந்ததாகக் கருதப்படுவது கங்கை நதியாகும். புனிதமான கங்கை நதியின் கரையினில் புண்ணியத் தலமான காசி என்ற க்ஷேத்திரம் உள்ளது.

இந்தத் தலத்தில் முன்பொரு சமயம் துருவாச மகரிஷியானவர் சிவாகம முறைப்படி ஒரு சிவலிங்கத்தைப் பிரதிஷ்டை செய்து வழிபட்டு வந்தார். முனிவரின் பூசையை ஏற்று மகிழ்ந்தவராய்ச் சிவபெருமான் தமது திருமுடியிலிருந்து மிகவும் மணம் வீசும் பொன் தாமரை மலர் ஒன்றைக் கீழே விழும்படி அருளினார். சிவபெருமானின் திருவருளினால் கிடைக்கப் பெற்ற அம்மலரைத் துருவாச மாமுனிவர் மிகுந்த பக்தியுடன் தம்முடைய இரு கரங்களிலும் ஏந்திக் கொண்டார், அம்மலரைத் தம் கண்களில் ஒற்றிக் கொண்டார். பெரும் மகிழ்ச்சியடைந்த மகரிஷி அந்தப் பொன் மலருடன் தேவலோகம் புறப்பட்டார்.

துருவாசர் சுவர்க்க லோகத்தை அடைந்த சமயம், தேவேந்திரன் அசுரர்களை ஒழித்து வெற்றி பெற்ற பெருமிதத்துடன் சுவர்க்க லோகத்திற்குத் திரும்பிக் கொண்டிருந்தான். பல விதமான வெற்றிச் சின்னங்களுடனும், குதூகலத்துடனும் இந்திரன் வந்து கொண்டிருப்பதைத் துருவாசர் கண்டார். தேவர்கள் இந்திரன் அருகில் வந்து பல பொருட்களைத் தம்முடைய காணிக்கைகளாகக் கொடுத்தனர். இந்தக் காட்சியைக் கண்ணுற்ற துருவாசரும், தம்முடைய கையிலிருந்த



சிவபூசனைப் பொருளான பொன் தாமரை மலரைத் தம்முடைய ஆசிப் பொருளாக இந்திரனிடம் அளித்தார்.

செல்வச் செருக்கால் மதியிழந்த தேவேந்திரன், துருவாசரை மதியாமல், யானை மீது அமர்ந்திருந்தபடியே, பொற்றாமரை மலரை ஒரு கையை நீட்டிப் பெற்றுக் கொண்டான். அந்த மலரின் புனிதத் தன்மையை அறியாத இந்திரன் அதைத் தன் வாகனமாகிய வெள்ளை யானையின் மத்தகத்தின் மேல் வைத்தான். ஆனால், ஐராவதமாகிய அந்த வெள்ளை யானை, அச் சிவ மலரை அலட்சியமாகத் தன்னுடைய துதிக்கை கொண்டு கீழே தள்ளியது. அத்துடன் நில்லாமல் காலினால் மிதித்து உருத் தெரியாதபடி சின்னாபின்னப்படுத்தியது.

வெள்ளை யானை பெற்ற சாபம்

சிவபூசனைப் பொருளான பொன்தாமரை மலர் அவமதிக்கப் பட்டதைக் கண்ட துருவாச மகரிஷிக்குத் தாங்க முடியாத பெருங்கோபம் ஏற்பட்டது. கண்களில் கோபக்கனல் கொழுந்து விட்டு எரிந்தது.

''நிலையற்றதும், அழியக் கூடியதுமான செல்வச் செருக்கால் கர்வம் பிடித்த இந்திரனே! என்ன காரியம் செய்தாய் நீ? சிவபெருமான் திருமுடி மேல் வைத்துப் பூசிக்கப்பட்ட மலரை வணங்கிப் பெற்றுக் கொள்ளாமல், ஒரு கையால் வாங்கி அவமரியாதை செய்தாய். அது மட்டுமின்றி, அப்பூவை யானை சிதைக்க விட்டு விட்டாய். நீ அனுபவித்து வரும் செல்வமும், சிறப்பும் சிவபெருமான் அருளியவை என்பதை மறந்து விட்டாயா? இந்திரனே, உன்னுடைய முடியானது பாண்டிய வீரன் ஒருவனுடைய

திகிரியால் - (சக்ராயுதத்தால்) சிதறுண்டு போகக் கடவது! உன்னுடைய பட்டத்து வெள்ளை யானையும் காட்டு யானையாக மாறக் கடவது!'' என்று சாபம் கொடுத்து விட்டார்.

வெள்ளை யானை சாபம் தீர்த்த வரலாறு

தேவேந்திரன் அடைந்த சாபத்தைக் கேட்ட தேவர்கள் அனைவரும் அஞ்சி நடுங்கினார்கள். அனைவரும் துருவாச மகரிஷியிடம் ஓடினார்கள். அவருடைய காலடியில் வீழ்ந்து வணங்கி, இந்திரனுக்கும், வெள்ளை யானைக்கும் அளித்த சாபத்தை நீக்கியருளுமாறு வேண்டினர்.

துருவாசரும் கோபம் தணியப் பெற்று மனம் இரங்கினார். ''இந்திரன் செய்தது சிவ அபசாரம். அதைப் பரிகாரத்தால் போக்கிக் கொள்வது இயலாது. ஆதலால் இந்திரனது தலைக்கு வரும் ஆபத்து அவனுடைய முடியளவோடு சென்று விடக் கடவது!'' என்று தன்னுடைய சாபத்தை மாற்றியருளினார் மகரிஷி.

சாபம் பெற்ற வெண்ணிற யானையாகிய ஐராவதம் வானுலகத்திலிருந்து மண்ணுலகில் வந்து வீழ்ந்தது. அதனுடைய அறிவு நீங்கியது. பூவுலகில் அது கருநிறங் கொண்டு காட்டு யான்னைகளுடன் ஓர் எளிய யானையாகப் பலப்பல இடங்களில், பலவாறு அலைந்து திரிந்து இன்னல் பட்டது. நூறு ஆண்டுகளையும் கழித்து விட்டது.

ஒரு நாள் அந்த யானை தெய்வத் தன்மை நிரம்பிய கடம்ப வனத்துக்குள் தன்னையும் அறியாமல் நுழைந்து விட்டது. சிவபெருமானின் திருவருள் பெறும் காலம் நெருங்கி

விட்டது. கடம்ப வனத்துக்குள் சுற்றித் திரிந்த யானை பொற்றாமரைப் பொய்கையையும் கண்டு கொண்டது. அந்தப் பொய்கையானது யானையின் கண்களில் தென்பட்ட மாத்திரத்தில் முன்னைய அறிவு தோன்றியது.

அறிவுத் தெளிவு பெற்ற யானை பொற்றாமரைக் குளத்தில் நீராடியது. அதன் பயனாகக் காட்டானை வடிவம் நீங்கப் பெற்றது. கரிய நிறமும் மறைந்தது. வெண்ணிறம் பெற்றுத் தெய்வ யானையாகத் திகழ்ந்தது.

அதுசமயம் அந்த யானையின் முன்பாகச் சொக்கலிங்கப் பெருமான் தோன்றினார். யானை அவரைக் கண்டு வழிபட்டது. அப்பெருமானுக்குப் பூசை செய்ய எண்ணிய அந்த யானை பொற்றாமரைக் குளத்திலிருந்து நன்னீரைத் தனது துதிக்கையால் முகந்து கொண்டுவந்து சிவலிங்கத்திற்கு அபிஷேகம் செய்தது. பூசை மணியை ஆட்டிப் பூசையும் செய்தது.

தெய்வ யானையாகிய ஐராவதத்தின் பக்தி விசேஷத்தை உணர்ந்த பரமன் அந்த யானை விரும்பும் வரத்தைக் கேட்கலாம் என்று திருவாய் மலர்ந்தருளினார். நல்லுணர்வு பெற்ற அந்தத் தெய்வ யானை தனக்கு முன்பு நிகழ்ந்தது அனைத்தையும் உணர்ச்சிவசப்படக் கூறியது.

பிறகு, ''ஐயனே! தேவரீரது திருவிமானத்தைத் தாங்கும் எட்டு யானைகளோடு என்னையும் சேர்த்துக் கொள்ள வேண்டும். எம்பெருமானைச் சுமக்கும் பெரும் பாக்கியத்தை எனக்குத் தந்தருள வேண்டும்!'' என்று வேண்டி நின்றது.

கருணையே உருவாகத் திகழ்ந்த எம்பெருமான் தெய்வ யானையை மெச்சினார். "ஐராவதமே! உன் தலைவனான தேவேந்திரன் என்னுடைய பக்தன், ஆதலால் அவனை நீ சுமந்திருப்பதே நமக்குப் பெருமை தருவதாகும்!" என்று கூறிப் பல வரங்களைத் தந்து மறைந்தருளினார். ஐராவதம் பேருவகை அடைந்தது.

பின்னர் வெள்ளை யானை அங்கிருந்து அகன்று சொக்கலிங்கம் இருக்குமிடத்தின் மேற்குத் திக்கையடைந்தது. அங்கு ஐராவதத் தீர்த்தம் என்ற புனிதத் தீர்த்தத்தை உண்டாக்கியது. அதன் கரையில் ஐராவதேஸ்வரர் என்னும் சிவலிங்கத்தையும், ஐராவத கணேசர் என்னும் விநாயகமூர்த்தியையும் பிரதிஷ்டை செய்து பக்தியுடன் பூசைகளைச் செய்து வந்தது.

தனது யானையின் நிலையைத் தேவேந்திரன் கேள்விப் பட்டான். உடனே தனது பணியாளர்களை அனுப்பி வைத்து யானையை அழைத்து வரச் சொன்னான்.

பணியாளர்களைக் கண்ட ஐராவதம் அவர்களுடன் தெய்வலோகம் செல்ல மறுத்து விட்டது. அவர்களை முன்னே செல்லச் சொல்லி அனுப்பி விட்டுத் தான் பின்னே வருவதாகக் கூறியது. பணியாளர்கள் சென்றதும் சொக்கலிங்க மூர்த்திக்குக் கிழக்குப்புறம் தன்னுடைய தலைவன் இந்திரன் பெயரால் இந்திரேசுவரர் என்ற சிவலிங்கத்தைப் பிரதிஷ்டை செய்தது. அதற்கும் தினசரி பூசைகள் செய்து வந்தது.

பணியாளர்கள் திரும்பி வந்த பின்னரும் தன் யானை வந்துசேராதது கண்ட இந்திரன் மீண்டும் தனது பணியாளர்களை விரைவாக அனுப்பி வைத்தான்.

தன்னுடைய பூலோகப் பணி முடிந்து தேவலோகம் திரும்ப வேண்டிய காலம் வந்து விட்டது என்பதை உணர்ந்த ஐராவதம், தன்னைத் தேடி வந்த தெய்வப் பணியாளர்களுடன் தேவலோகத்திற்குத் திரும்பிச் சென்றது.

சுவர்க்க லோகத்தில் தனது தலைவனைக் கண்டு மகிழ்ந்து, வணங்கியது அந்த வெள்ளை யானை. பிறகு தான் துருவாச மகரிஷியின் சாபத்தால் பல காலம் இன்னல்களை அனுபவித்ததையும், சோமசுந்தரப் பெருமானைத் தரிசனம் செய்து தனது கடுஞ்சாபத்தைப் போக்கிக் கொண்டதையும் கூறியது. தேவேந்திரனுடன் இனிதே இருந்து வந்தது.

3. ஆலவாய்த் திருநகரம் கண்ட வரலாறு

சோமசுந்தரக் கடவுள் எழுந்தருளியுள்ள தெய்வத் தன்மை பொருந்திய கடம்பவனத்தின் கிழக்குப் பகுதியில் உள்ள மணவூர் என்ற பதியைத் தலைமையிடமாகக் கொண்டு பாண்டியர் குல திலகமான மன்னர் மன்னன் குலசேகரன் என்பவன் செங்கோல் வழுவாது ஆட்சி புரிந்து வந்தான். அக்காலத்தில் அவ்வூரில் ஒரு சிறந்த பக்திமானான வணிகன் வாழ்ந்து வந்தான். அவன் பெயர் தனஞ்சயன். அவன் அரும்பாடு பட்டுப் பொருட் செல்வத்தைத் தேடுவது போலவே, அருட் செல்வத்தையும் தேடிப் பெருக்குவதில் மிகவும் அக்கறை கொண்டிருந்தான். அவன் ஒரு சிறந்த சிவ பக்தன். தான் ஈட்டிய பொருளைக் கொண்டு பல புண்ணியச் செயல்களைச் செய்து வந்தான்.

ஒரு சமயம் தனஞ்சயன் மேற்குப் பக்கத்திலிருந்த பல ஊர்களில் வியாபாரம் செய்து முடித்துக் கொண்டு,



மணவூருக்குத் திரும்பிக் கொண்டிருந்தான். அந்தி நேரமாகி விட்டது. எங்கும் இருள் சூழ்ந்தது. தனியாக வந்து கொண்டிருந்த தனஞ்சயன் வழியிலே கடம்ப வனத்துள் புகுந்து விட்டான்.

இருட்டி விட்டபடியால் மனம் சோர்ந்தவனாய் வருத்தத்துடன் மேற்கொண்டு பயணம் செய்யாமல் அங்கேயே தங்கி விட எண்ணினான். தங்குவதற்குரிய இடத்தைத் தேடினான். அப்போது அவ்விடத்தில் ஒளி பொருந்திய ஒரு விமானம் இருப்பதைக் கண்டான். அந்த விமானத்தை எட்டு யானைகள் தாங்கிக் கொண்டு இருப்பதையும் கண்டான். வியப்புடன் அருகில் சென்று பார்த்தான். அந்த விமானத்தின் நடுவில் சொக்கலிங்க மூர்த்தி எழுந்தருளியிருப்பதைக் கண்டான். அந்த திவ்விய லிங்க மூர்த்தியை வணங்கினான். அன்றிரவை அங்கேயே கழிக்க நினைத்தான்.

அன்று திங்கட்கிழமை நள்ளிரவு நேரம். தேவர்களுக்கு உகந்த சோமவார இரவு. ஆதலால் தேவர்கள் விண்ணி லிருந்து இறங்கிக் கடம்ப வனத்திற்கு வந்தனர். தேவேந்திரனுக்கு வாழ்வளித்த வள்ளல் சொக்கலிங்கப் பெருமானை வணங்கினர். சிவராத்திரிக்கு உரிய பூஜை முறைகளைப் போன்று நான்கு ஜாமங்களிலும் சொக்கலிங்கப் பெருமானுக்கு விசேஷ பூஜை செய்தனர்.

அந்தப் பெருமானின் திருவருள் கிடைக்கப் பெற்றதால், தனஞ்சயன் என்றழைக்கப்பட்ட அந்த வணிகனுக்கும் கிடைப்பதற்கரிய தேவகாட்சி கிட்டியது. தவிரவும், தேவர்களிடம் தன் கையினாலேயே சிவபூஜைக்கு உரிய கஸ்தூரி, பன்னீர் ஆகிய வாசனைப் பொருட்களை எடுத்துக் கொடுக்கும் பேறும் கிடைக்கப் பெற்றான்.

விடிய விடியப் பூஜை நடைபெற்றது. பொழுது விடிந்ததும் தேவர்கள் சொக்கலிங்கப் பெருமானை வழிபட்டுவிட்டு விண்ணுலகிற்குச் சென்றனர். தனஞ்சயன், அந்தக் கடம்ப வனத்தில் தனித்து எழுந்தருளியிருக்கும் சொக்கலிங்கப் பெருமானைக் கண்டு பேரதிசயம் அடைந்தான். பெருமானின் திருவடிகளில் வீழ்ந்து வணங்கி வலம் வந்தான். அங்கிருந்து நீங்க மனமில்லை. தன் ஊரான மணவூருக்கு ஒரு வழியாக வந்து சேர்ந்தான்.

ஊருக்குத் திரும்பிய தனஞ்சயன் உவகை மேலிட, அரசன் குலசேகர பாண்டியனிடம் சென்றான். அரசனை வணங்கி, "மன்னர் மன்னவரே! கடம்பவனத்தில் நேற்று இரவு பேரதிசயம் ஒன்றைக் காணும் பேறு பெற்றேன். வனத்துள் பேரொளியுடன் ஒரு விமானத்தையும், அதனுள் சிவலிங்கம் எழுந்தருளியிருப்பதையும் என் கண்ணாரக் கண்டேன். தேவர்கள் யாவரும் அவ்விடத்திற்கு வந்திருந்தனர். நான்கு ஜாமங்களிலும் நியம, நிஷ்டைகளுடன் பூஜை செய்தனர். விடிந்தவுடன் சென்று விட்டனர். நானும் ஊருக்குத் திரும்பி விட்டேன்," என்றான்.

தனஞ்சயன் கூறிய புதுமைச் செய்தியைக் கேட்ட குலசேகர பாண்டியன் பக்திப் பரவசத்துடன் சிவ பெருமானின் சேவடிகளைத் தியானித்து இரு கைகளையும் சிரமேற் கூப்பி வணங்கினான். பக்தியும், விசித்திரமும் நிரம்பிய மனத்துடன் அன்று பொழுதைப் போக்கினான்.

அன்றிரவு குலசேகர பாண்டியனின் கனவில் சிவபெருமான் ஒரு சித்தரைப் போன்று தோன்றினார். அரசனிடம், "பாண்டிய மன்னா! கடம்ப வனத்தைத் திருத்தித் திருநகரம் ஒன்று காண்பாயாக!" என்று ஆணையிட்டு விட்டு

மறைந்து விட்டார். வியப்பில் ஆழ்ந்துபோன குலசேகர பாண்டியன் அன்று இரவு பூராவும் தூங்காமல், விடியலை நோக்கிக் காத்திருந்தான்.

பொழுது விடிந்தது. முந்திய தினம் இரவில் கண்ட கனவு பசுமையாகப் பாண்டிய மன்னன் உள்ளத்தில் இலங்கியது. நித்திய கருமங்களை முடித்துக் கொண்ட மன்னன், தவத்தில் சிறந்த ஞானிகளையும், அமைச்சர்களையும் தன்னுடன் அழைத்துக் கொண்டான். முதல் நாள் பகலில் வணிகன் தனஞ்சயன் தன்னிடம் கூறியதையும், இரவில் தான் கனவில் கண்டதையும் அவர்களிடம் தெளிவாகக் கூறினான். பிறகு, நன்னிமித்தம் சேர்ந்ததும் அவர்களுடன் மேற்குத் திசையை நோக்கிப் புறப்பட்டான்.

பரிவாரங்களுடன் உரிய நேரத்தில் கடம்ப வனத்தை அடைந்தான். பொற்றாமரைத் தடாகத்தில் நீராடினான். தெய்வீகம் பொருந்திய விமானத்தைப் பார்த்தான். அதன் உள்ளே கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கும் சோம சுந்தரக் கடவுளைக் கண்ணாரக் கண்டான். மெய்சிலிர்க்க இரு கரங்களையும் சிரமேற் கூப்பி வணங்கினான். இறைவன் திருவடிகளில் வீழ்ந்து வணங்கினான்.

சிவபெருமானை நோக்கி, ''ஐயனே! விண்ணுக்கு ஒரு மருந்தும், வேத விழுப் பொருளுமாகிய தாங்கள் எங்கள்பால் அன்பு பூண்டு இந்தக் கானகத்தில் வந்து எழுந்தருளி யுள்ளீரோ? தங்கள் கருணையே கருணை!'' என்று பலவாறு போற்றினான். ஆனந்தம் மேலிடச் சொக்கநாதக் கடவுளை வலம் வந்தான். அதன் பிறகு தன்னுடைய அமைச்சர் பரிவாரங்களுடன் ஓரிடத்தில் தங்கினான்.

திருநகரம் கண்டது

சொக்கநாதர் எழுந்தருளியுள்ள இடத்தைத் திருத்தி அங்கு ஓர் அழகிய நகரத்தை உருவாக்கும் பணியில் ஈடுபட்டான் பாண்டிய மன்னன். அரசனுடைய ஆணையின்படி மந்திரிமார் பல ஏவலாட்களைப் பல இடங்களுக்கும் அனுப்பிப் பல வகைப்பட்ட தொழிலாளர்களை அழைத்து வருமாறு பணித்தனர். பெரிய பரப்பளவு உடைய அந்தக் காட்டைத் திருத்தி அழகிய ஒரு நகரத்தை உருவாக்கும் திருப்பணியில் ஈடுபடுத்துவதற்காகப் பல்லாயிரக் கணக்கான தொழிலாளர் அங்கு அழைத்து வரப்பட்டனர்.

காடு முழுவதுமாக அழிக்கப்பட்டது. நகரை உருவாக்குவதற்கு ஏற்றவாறு பெரிய நிலப் பரப்பு சம நிலமாக அமைந்து விட்டது. நகரத்தை எவ்வாறு அமைப்பது என்பது குறித்து அமைச்சர்களுடன் கலந்து ஆலோசித்துக் கொண்டிருந்தான் குலசேகர பாண்டியன்.

அதுசமயம் சிவபெருமான், முன்பு பாண்டியன் கனவில் தோன்றியபடியே, சித்தரைப் போன்று நேரிலே எழுந்தருளினார். சித்தர் பெருமானைக் கண்ட பாண்டிய மன்னன் எழுந்து வணங்கி வரவேற்றான். சித்தர் உருவில் எழுந்தருளிய சிவபெருமான், சிவாகமத்தின் வழியே தோன்றிய சிற்ப சாஸ்திர முறைப்படி ஆலயம், மண்டபங்கள், கோபுரம் மற்றும் கோயிலைச்சுற்றி அமையும் நகரம் ஆகியவை எந்த முறையில் அமைக்கப்பட வேண்டும் என்று விவரம் அளித்துவிட்டு மறைந்தருளினார்.

பாண்டியன் பல சிற்ப நூல் வல்ல ஸ்தபதிகளைப் பல இடங்களிலிருந்தும் தருவித்தான். இந்த மூர்த்தி அருளிய

வண்ணமே திருக்கோயிலும், திருநகரமும் காண்பதில் பெரிதும் ஈடுபட்டான். வேத பத்ம மண்டபம், அர்த்த மண்டபம், மகா மண்டபம், உற்சவ மண்டபம், யாகசாலை, பரிவார தேவர்களுக்கு உரிய கோவில்கள், சுற்றுப் பிராகாரங்கள், உயர்ந்த கோபுரங்கள், மதில்கள் ஆகிய அனைத்தையும் சாஸ்திர விதிப்படி தேர்ந்து அழகிய திருக்கோயிலை எழுப்பித்தான் பாண்டிய மன்னன்.

சோமசுந்தரப் பெருமானுக்கு எடுக்கப்பட்ட திருப் பெருங்கோயிலை நடுநாயகமாக வைத்துக் கொண்டு பல அழகிய திருவீதிகளை அமைத்தான். பல அம்பலங்கள், நாடக சாலைகள், சைவ முனிவர்கள் தங்குவதற்குரிய இடங்கள், கல்விச் சாலைகள், தருமச் சாலைகள் ஆகிய அனைத்தையும் சிறப்பாக அமைத்தான். மேலும் நகருக்கு அழகுதரும் பலவகைச் செயல்களையும் செய்து முடித்தான். அந்தத் திருப்பெரு நகரின் வட கிழக்கிலே தனக்கென்று ஓர் அரண்மனைய்யயும் கட்டிக் கொண்டான், குலசேகரன்.

திருநக்ரம் மதுரை என்றழைக்கப்பட்ட வரலாறு

அழகிய நகரை உருவாக்கிய பின்னர், அந்நகருக்கு நல்ல முறையில் சாந்தியினைச் செய்ய விரும்பினான், பாண்டிய மன்னன். அவனுடைய நல்ல எண்ணத்தைப் புரிந்து கொண்ட சோமசுந்தரப் பெருமான் தம்முடைய சடாமுடியில் உள்ள சந்திர கலையின் புதிய அமுதத்தைச் சிறிதளவே அந்நகர் மீது சிந்தியருளினார். அந்த அமுதத் துளியானது நகர் முழுவதும் பரவி, அந்த நகரத்தை முழுமையாகத் தூய்மையாக்கி விட்டது. சிவபெருமான் அருளிய மதுரமான அமுதத்தால் சாந்தியடைந்த அத்திருநகரம் ''மதுராபுரி'' என்று வழங்குவதாயிற்று.

பிறகு அந்நகருக்குப் பெருங்காவலாக இருக்கும்படியாகக் கிழக்கு, மேற்கு, வடக்கு, தெற்கு என்னும் நான்கு திசைகளிலும் முறையே ஐயனார், மகாவிஷ்ணு, பத்ரகாளி, சப்த மாதர்கள் ஆகிய தெய்வங்களைப் பிரதிஷ்டை செய்தான் குலசேகர பாண்டியன்.

சொக்கநாதர் திருக்கோயிலில் சிவாகம விதிப்படி சிவபூஜையானது ஆறு காலங்களிலும் வழுவாமல் நடைபெறும் பொருட்டு, வேதாகமங்களில் சிறந்த முனிவர்களையும்,சைவப் பிராமணர்களையும் காசி க்ஷேத்திரத்திலிருந்து அழைத்து வந்து மதுரையம்பதியில் நிலைபெறச் செய்தான் பாண்டிய மன்னன். வேத நெறியுடன், சிவ நெறியும், தர்ம நெறியும் மதுரை மாநகரில் செழித்தோங்கின. பாண்டியப் பெருநாட்டின் திலகம் எனத் திகழும் வண்ணம் மதுரையம்பதியைச் சிறப்புறச் செய்தான் குலசேகர பாண்டியன். சிவநேசச் செல்வனான குலசேகர பாண்டியன் நீதி வழுவாமல் ஆட்சி செய்து, பிறகு தன் மகன் மலையத்துவசன் வசம் ஆட்சியை ஒப்படைத்து விட்டுச் சிவபதவியடைந்தான்.

4. தடாதகைப் பிராட்டியார் அவதாரம்

மனுதர்ம சாஸ்திரத்தில் விதித்துள்ளபடி அறநெறி தவறாமல் செங்கோல் செலுத்தி வந்தான் மலையத்துவச பாண்டியன். உயிரினும் பெரிதாகப் போற்றப்படும் ஒழுக்கத்திலே சிறந்தவன். வெற்றியை ஆபரணமாகப் பூண்டவன். கருணைக் கடல் எனத் திகழ்ந்தவன். இனிய சுபாவம் உடையவன். கட்டழகு மிகுந்தவன். வடமொழிக் கலைகளிலும் மிகுந்த தேர்ச்சியும் புலமையும் பெற்றவன். சூரிய குலத்தவனாகிய சூரசேன சோழனது மகள் காஞ்சனமாலையை மணம் செய்து கொண்டவன். சோமசுந்தரப் பெருமானை முக்காலும் நியமத்தோடு வழிபாடு செய்பவன்.

பல சிறப்புக்களைப் பெற்றிருந்தும், மலையத்துவசனுக்கு ஒரே ஒரு பெருங்குறை இருந்தது. மகன் இல்லாக் குறைதான் அது. மகப்பேறு இல்லாமல் வருந்திய மன்னன் அசுவமேதயாகம் செய்ய ஆரம்பித்தான். வேத விதிப்படி தொண்ணூற்று ஒன்பது யாகங்களைச் செய்து முடித்து விட்டான். நூறும் செய்து முடிப்பானாயின் தேவேந்திர பதவி அவனுக்குக் கிட்டிவிடும் என்பதை உணர்ந்து கொண்ட தேவேந்திரன், மலையத்துவசன் முன்பு தோன்றி, "நீ வேண்டுவது மகனைப் பெறுவதுதானே யாகையால் புத்திர காமேஷ்டி யாகம் செய்வாயாக!" என்று கூறிவிட்டுத் தன் பொன்னுலகம் சென்றான்.

பின்பு மலையத்துவசன் தன் மனைவி காஞ்சன மாலையுடன் சேர்ந்து நியம நிஷ்டை தவறாது புத்திர காமேஷ்டி யாகம் செய்ய வாரம்பித்தான். வேத நீதிப்படி



மதுரைத் திருக்கோவிலுக்குக் கிழக்கே சிறந்த வேள்விச் சாலை அமைத்து யாகம் செய்யலானான். யாகம் மிகவும் சிரத்தையுடனும் பக்தியுடனும் நடந்து வந்தது.

யாகத்தின் இறுதி நாளான மங்கள தினத்திலே பாண்டியன் வலத்தோள் துடிக்க, ஏழுலகங்களும் மகிழ்ச்சி எய்த, சைவம், பாசுபதம், மாவிரதம், களாமுகம், பைரவம், வாமம் என்னும் அகச் சமயங்கள் ஆறும் தழைத்தோங்க, வேதங்களும் தேவதுந்துபிகளும் கோஷம் செய்ய, தருமம் மகிழ, பதினெட்டு மொழிகளுள்ள பூமியிலே தமிழ் மொழி பயில்கின்ற நாடு சிறப்புற, மூவேந்தருள் பாண்டியரே பெரும் சிறப்பு எய்த, அக்னி தேவனே தான் செய்த தவம் பயன்பெற, யாக குண்டத்திலிருந்து, உயிர்கள் அனைத்தையும் உலகங்கள் யாவற்றையும் பெற்றவளாகிய உமாதேவியார் மூன்று தனங்களுடைய ஒரு பெண் குழந்தையாக மூன்று வயதுடன் எழுந்து வந்து நின்றாள்.

பெண் குழந்தையின் கொண்டையினின்று முதது மாலை சுற்றப்பட்டுத் தொங்க விளங்கியது. பவள மாலை ஒளி வீசியது. இடையினைச் சுற்றியிருந்த மெல்லிய ஆடையின் மேல் மணிமேகலை ஒலிக்க, காதுகளிலிருந்து தொங்கும் மாணிக்கக் காதணிகள் துலங்க விளங்கினாள் திருக்குழந்தை. தளிர்த் திருவடிகளில் விளங்கிய சிலம்பும் சதங்கையும் கலந்து ஒலி செய்தன. மழலைச் சொற்களும் புன்னகையும் தோன்றும் திருவாயுடன் தளிர் நடையுடன் பூங்கொடி போன்று அசைந்து வந்து காஞ்சனமாலா தேவியின் மடியிலே, அறநெறி நின்றோர்க்கு இம்மை மறுமை இன்பங்களையும் வீடு பேற்றினையும் அருளும் உமையம்மை அமர்ந் திருந்தாள்.

காஞ்சனமாலை தான் அடைந்த பெண் குழந்தையை வாரியெடுத்து மார்போடு சேர்த்து உச்சி மோந்து முத்தமிட்டு இன்பக் கடலாடினாள். ஐந்தொழில்கள் புரிவதற்கும் அதிதேவதையான பராசக்தி, வாக்கு மனம் வேதங்கள் கடந்து நின்ற உமாதேவியாரே தனது திருமகளாக வந்து தோன்றுவதற்கு மலையத்துவச பாண்டியன் செய்த பெருந்தவம்தான் என்ன?

அன்பு மிகுதியால் உமாதேவியார் தனது குழந்தையாக வந்து அவதரித்த தன்மையையும், தன் மனைவி காஞ்சன மாலையின் தவப் பயனையும் முறையாகத் தெளிந்து கொள்ளாத மலையத்துவசன் உள்ளத்தே துன்பம் கொண்டான். "நான் ஒரு மகனை வேண்டினேன். அரும் தவம் புரிந்தேன்; புத்திரகாமேஷ்டி யாகம் செய்தேன். ஆனால் நான் அடைந்தது பெண் குழந்தையையே. என் செய்வேன்? இந்தப் பெண் குழந்தையும் மூன்று தனங்களுடன் பிறந்துள்ளதே, எனது பகைவர் எள்ளி நகையாடுவார்களே!" என வருந்திக் கொண்டிருந்தான்.

அது சமயம் சிவபெருமானின் அருளால் ஆகாச வாணியானது, "வேந்தே! கலங்காதே, மகனுக்குச் செய்வது போல எல்லா வகையான விசேஷங்களையும் உன் திருமகளுக்குச் செய்வாயாக. வேதநெறி வழுவாமல் எல்லாம் செய்து தடாதகை என்று நாமம் சூட்டிப் பின்னர் மகுடம் புனைவிப்பாயாக. ஏற்ற கணவன் வரும் காலத்தில் மூன்றாவதொரு தனம் தானே மறைந்துவிடும்!" என்று எழுந்தது.

இன்பமான விண்ணொலி கேட்ட மலையத்துவசன் அமைதியும் அன்பும் உவகையும் மிகக் கொண்டான்.

ஆனந்தக் கண்ணீர் பெருகி ஓடச் சோமசுந்தரப் பெருமானை வாழ்த்தித் துதித்தான். மங்கல வாத்தியங்கள் பல கோஷிக்க, யாகசாலையிலிருந்து கிளம்பி அரண்மனையை அடைந்தான். மறையவருக்கும் பிறருக்கும் ஏராளமான பொன்னை வாரி வழங்கினான். சோமசுந்தரப் பெருமானின் ஆலயத்திலே விசேஷ பூசைகளும் திருவிழாக்களும் செய்வித்தான்.

சிறையிருந்தோர் விடுதலை பெற்றனர். பகையரசர் தமது பழைய கௌரவம் திரும்பப் பெற்றுத் தத்தம் நாடு திரும்பினர். புலவர்கள் பொன்னும், மணியும், புத்தாடைகளும் இன்னும் பல சிறப்பும் பொருள்களும் பரிசாகப் பெற்றனர். மதுரை மாநகரும் பாண்டிப் பெருநாடும் பெருமகிழ்ச்சி கொண்டாடின

மலையத்துவசன் மகிழ்பூத்து விண்ணொலி அருளிய வண்ணமே தன் மகளுக்கு வேத விதிப்படி சாதகன்மம் முதலியவற்றைச் செய்து, தடாதகை என்று பெயர் சூட்டி உவந்தான். காஞ்சனையும் மலையனும் திருக்குழந்தையை மிகவும் செல்லமாக வளர்த்தனர். பிராயத்துக்குத் தகுந்த ஆட்டங்கள் காட்டித் தாய்க்கும் தந்தைக்கும் தோழியருக்கும் எல்லையற்ற மகிழ்வைத் தந்து நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்தோங்கி வந்தாள் தடாதகைப் பிராட்டியார்.

நான்கு வேதங்கள், ஆறு சாஸ்திரங்கள், பதினெண் புராணங்கள், அறுபத்து நான்கு கலைகள் எல்லாவற்றையும் முற்றவும் குற்றமின்றிக் கற்றுணர்ந்தார். யானை, குதிரை, தேர் முதலியவற்றைச் செலுத்தும் திறமையும் நன்கு பெற்றார். வில், வாள், வேல் ஆகிய சாஸ்திரப் பிரயோகங்களிலும் மிகுந்த வல்லமை பெற்றார்.

எல்லாக் கலைகளிலும் நன்கு தேர்ச்சி பெற்றுப் பெருந் தகுதியோடு விளங்கிடும் தன் திருக்குமாரியைக் கண்டு உளம் பூரித்தான் பாண்டியன். தடாதகைப் பிராட்டியாருக்குத் திருமுடி சூட்ட வேண்டும் என்று கருதினான். சுமதி என்னும் மந்திரி பட்டாபிஷேக நன்னாளைத் தேர்ந்தான். பல நாடுகளுக்கும் ஓலை போக்கி, முடி மன்னர்களை வரச் செய்தான்.

மதுரை மாநகரம் திருநகரமாகக் காட்சியளித்தது. கங்கை முதலான ஒன்பது புனித ஆறுகளின் நீர் தங்கிய பொற்குடங்களையும், சிங்காதனத்தையும் வேதியர் பூசித்து வழிபாடு செய்தனர். தேவர்களை மகிழ்விக்க யாகங்கள் பல செய்யப்பட்டன. பின்னர் பாண்டியப் பரம்பரைக்கு நெடுங்காலமாக உரியதான மணித்திரு மகுடத்தை யானையின் மேல் வைத்து ஊர்வலம் செய்வித்துப் பூசித்தனர்.

அதற்குப் பின்பு மாணிக்கக் கடிகையுடைய, பொன்னாலமைந்த ஐந்துதலை நாகப் படத்தை மேலே கவித்த, சிங்காதனத்தின் மீது தடாதகைப் பிராட்டியாரை எழுந்தருளச் செய்தனர். வேத நாதம் முழங்க, மங்கல வாத்தியங்கள் இயம்ப, புண்ணிய தீர்த்தங்களினால் அறவேள் அபிஷேகம் செய்வித்தனர்.

தனது திருக்குமாரிக்குப் பாண்டியன் மணிமுடி சூட்டித் தன் தலைமையை அளித்தான். பின்னர் வெள்ளை யானை மேலே ஆரோகணித்துத் தடாதகைப் பிராட்டியாரை நகர்வலம் செய்வித்தான். நகர் வலக் காட்சியைக் கண்ட பாண்டியன் ஆகாசவாணி கேட்டபோது கொண்ட உவகையிலும் பன்மடங்கு பேருவகை கொண்டான்.

சில நாட்கள் கழிந்த பின் மலையத்துவசன் விண்ணுலகம் சேர்ந்தான். அதன் பின்னர் உலகெலாம் ஒரே குடைக்கீழ் மனுநீதி தவறாது சிறப்புடன் அரசு புரியலானார் தடாதகை அரசியார். பெண்ணரசி தடாதகைப் பிராட்டியார் திருவாட்சியிலே தருமம், நியாயம், நீதி, புண்ணியம் எல்லாம் தழைத்தோங்கின. பிராட்டியாரது கொலுமண்டபம் திருமால் விலாசமாகவும் ஒருங்கே திகழ்ந்தது. செந்தமிழ்ப் புலவர், வடமொழி வாணர், வேதியர், கலைஞர், சமயப் பெரியோர், மெய்ஞ்ஞானிகள், நல்லமைச்சர் எல்லாரும் சபையின்கண் விளங்கிச் சிறந்தனர்.

தேவாலயங்களும் அறச்சாலைகளும் பல்கிப் பெருகின. சிறந்து ஓங்கின. அறங்களையும் வேள்விகளையும் விருத்தி செய்யுமாறு திரவியங்கள் ஈந்தார் பிராட்டியார். கல்வியையும் செல்வத்தையும் இரு கண்களென மதித்து அவற்றைத் தழைக்கும்படி அருளினார். சிவசக்தியே மலையத்துவசன் மகளாகி இப்புவியை மனுநீதி தவறாது ஆண்டார் எனில், அதனை எடுத்துக் கூற வல்லவர் யார்?

கன்னிப் பிராயத்திலே முடி புனைந்து தடாதகைப் பிராட்டியார் தனது அரசியல் நடத்தியதால் பாண்டி நாடு கன்னிநாடு என்ற பெயர் பெற்றதாயிற்று.

5. தடாதகை திருமணம்

திகிரிக் கதிரவன் துன்ப இருளைப் போக்கியது. வெண்குடைத் திங்கள் தண்ணிழல் தந்தது. உலகின்ற அன்னை உமாதேவியார் கன்னிப் பெண்ணாக இருந்து மனு தர்ம சாஸ்திர வழி தவறாது தனியரசாட்சி செய்து வந்த காலத்திலே மணப் பருவம் வந்து கூடியது. மணம் பெறவேண்டிய வயது வந்து முதிர்ந்து நிற்பதைக் கண்ட தாய் காஞ்சனமாலை, பிராட்டியாரை நோக்கி, "உனக்கு இன்னும் திருமணம் ஆகவில்லையே!" என்று சொல்லி வருந்தினாள்.

அது கேட்ட தடாதகைப் பிராட்டியார், "அன்னையே, கவலை வேண்டாம். உரிய காலம் வந்ததும் மணம் பெறுவேன். பலபடியாக எண்ணி வருந்த வேண்டாம். அஷ்ட திக்குகளிலும், இந்தப் பூலோகம் முழுவதிலும் சென்று நான் வெற்றிக் கொடி நாட்டி வருவேன்," என்று மறுமொழி இயம்பி விரைந்து புறப்பட்டார்.

தடாதகைப் பிராட்டியாரின் கருத்தை அறிந்த அரசர்களும், மந்திரிகளும், ஏனையோர்களும் வந்து சேர்ந்தனர். சங்குகள் முழங்கத் தேரின் மீது ஆரோகணித்தார் பிராட்டியார். பலவகை வாத்தியங்கள் கோஷம் செய்தன. இடதுசாரி வலதுசாரியாகச் சுழல வல்ல பெரிய வலிய போர்ப்படைகள் அதிர்ந்து சென்றன. சிறு மலைக் கூட்டம் போல யானைப் படைகள் சென்றன. கடல் அலைகளை நிகர்த்து வரிசை வரிசையாகக் குதிரைப் படைகள் சென்றன. கூற்றுவனையும் எதிர்த்து வெல்லும் காலாட் படைகளும் பல்வேறு ஆயுதங்கள் தாங்கிச் சென்றன. இவ்வாறாகச் சதுரங்க சைனியமானது பெரு முழக்கத்தோடு மதுரைமா நகரிலிருந்து



கிளம்பிச் சென்றது, பெரியதொரு சேனா சமுத்திரமே தரைமீது நடந்தது போலிருந்தது.

மங்கல கோஷம் முழங்கிக் கொண்டே இருக்கத், தேவியாரின் மணித்தேர் விரைந்து சென்று கொண்டிருந்தது. மீனக் கொடி, புலிக் கொடி, விற்கொடி, மயிற் பீலிக் குடைகள் எல்லாம் பிராட்டியார் தேரின் அருகில் சென்றன. முதலமைச்சன் சுமதி, தேவியாரின் திருவுள்ளக் குறிப்பை உணர்ந்து, நால்வகைப் படைகளையும் சேவகம் செய்து சென்றான். அளவில் அடங்காத சதுரங்க சேனைகளுடன் பூவுலகு மட்டுமின்றித் தேவலோகம் முதலிய உலகங்களிலும் பிற இடங்களிலும் செல்லுமாறு பணித்து, தடாதகை தேவியார் மன்னர்களின் ஐசுவரியங்கள் அனைத்தையும் கொள்ளை கொளச் செல்வார் ஆயினர்.

வடபுலத்து மன்னர்களான கஜபதி, துரகபதி, சுரபதி என்ற மூவேந்தரையும் வென்று, அவர்களது யானைகளையும், குதிரைகளையும், காலாட்படையினரையும் திறையாகப் பெற்றார் பிராட்டியார். பின்னர் தேவலோகம் சென்று இந்திரன் படையை எதிர்த்துப் போர் தொடங்கும் முன்னரே, இந்திரன் அற்றல் அழிவு பெற அமர்க்களத்திலிருந்து ஓட்டம் பிடித்தான். பிர்ராட்டியார், தேவமாதர்களையும், ஐராவதம் என்ற வெள்ளை யானையையும், உச்சைச் சிரவஸ் என்ற வெண் குதிரையையும், காமதேனுவையும், சிந்தாமணியையும் கற்பகம் முதலிய தேவ தருக்களையும் கவர்ந்து கொண்டு திரும்பினார். இப்படியாகவே ஏனைய திக்பாலர்களோடு எதிர்த்துப் போரிட்டு வென்று அவர்கள் பணிந்து கொடுத்த திறைப் பொருள்களை ஏற்றுக் கொண்டார். பின்னர் வெற்றி முழக்கத்தோடு கைலாச மலையை அடைந்தார்.

தடாதகைப் பிராட்டியாரின் படை வீரர்கள் ஆரவாரம் செய்து கொண்டே முன்னேறித் திருக்கயிலாய மலையினைச் சூழ்ந்து கொண்டனர். அதனைப் பார்த்த கயிலை மலைக் காவலர்கள் ஓடோடியும் சென்று நந்திகேசுவரரிடம் வணங்கி விண்ணப்பித்தனர். சிவபெருமானது திருவுள்ளக் குறிப்பினை உணர்ந்த நந்தீசர் பூத கணங்களை ஏவினார். பூத கணங்களுக்கும் பிராட்டியார் பெருஞ்சேனைக்குமிடையே கடும் போர் நிகழ்ந்தது. கடலோடு கடல் எதிர்த்தது போலவும், மலையோடு மலை மோதியது போலவும், கோரமான பெருஞ் சமர் விளைந்தது. தேவர்களும் வித்யாதரர்களும் அஞ்சி ஓடினர். நந்தி தேவரின் படைவீரர் எறிந்த ஆயுதங்களை யெல்லாம் தடாதகை தேவியார் தனது வச்சிராயுதத்தால் தகர்த்தெறிந்தார். சிவ கணங்கள் வலிமை இழந்தவர்களாகிப் புறமுதுகு காட்டி ஓடினர். பராசக்தியினது ஆற்றல்தான் என்னே! யாரே எடுத்துரைக்க வல்லார்?

ஆயுதங்களும் வாகனங்களும் அழிந்து ஆற்றல் அழிந்து ஓய்ந்து சோர்ந்து வருகின்ற தனது இனத்தவரின் நிலைமையைக் கண்ட நந்திகேசுவரர் இரக்கமும் வருத்தமும் கவலையும் கொண்டார். தம் தலைவரும் கைலாசபதியுமான சிவபெருமானை அண்டி அவரது திருவடிகளை வணங்கி நேர்ந்த அனைத்தையும் விண்ணப்பித்துக் கொண்டார்.

சிவபெருமான் புன்னகை செய்தருளினார். பின்னர் ஆயுதங்கள் ஏற்று ரிஷப வாகனத்தேறிச் செருக்களம் சென்றார். அங்கு சென்று சிவ கணங்களை அஞ்சியோடச் செய்து, 'எவர் எதிர்த்தாலும் வெல்வேன்' என்று முழக்கும் வீரசௌந்தரியப் பெண் சிங்கமாம் தடாதகைத் தேவியைக் கண்டார். அம்மையார் திரு உருவத்தையும் வீரச் செயல் களையும் நேரிலே கண்டு மகிழ்ந்தருளினார்.

தடாதகைப் பிராட்டியாரும் பல்வகைக் கோலங்காட்டி நின்ற பாம்பலங்காரப் பெருமானை, பெருங்கருணைத் தடங்கடலான சிவபெருமானை நேருக்கு நேர் கண்டார். இசைந்த ஏறும், கலியுரிப் போர்வையும், எழில் நீறும், இலங்கு நூலும், புலியதள் ஆடையும் பொருந்திய பொன்னார் மேனியன் அருள் கனிந்தான். அருள் நோக்குப் பாய்ந்த அளவிலே அம்மையாரின் மூன்றாவதான நடுத்தனம் மறைந்து விட்டது. பிராட்டியாரின் உள்ளத்திலே அச்சம், நாணம், மடம் முதலிய பெண்மைக் குணங்கள் மேலோங்கி நின்றன. தாழ்ந்த பூங்கொடியைப் போலத் தலையைக் குனிந்து கொண்டு தரை பார்த்து நின்றார், தேவியார்.

வரும்பொருள் உணரவல்ல முதன்மந்திரி சுமதி அசரீரி அன்று இயம்பிய மணிவாசகங்களை உள்ளத்தே கொண்டான். அம்மையாரை வணங்கி, ''பேரரசியாரே! கொன்றை மாலை அணிந்த, அதிசுந்தரரான இச்சிவ பெருமானே தங்கள் மணவாளன்!'' என்று கூறினான். தடாதகைப் பிராட்டியார் பேரன்பு பெருக அமைதியோடு நின்றார்.

இது கண்டு உவகையுற்ற தேவ தேவனான சிவபெருமான் கருணை குழைய, ''திக்கு விஜயத்தின் பொருட்டு எப்பொழுது நீ புறப்பட்டாயோ, அப்போதிருந்து யாமும் உன்னைப் பிரியாது தொடர்ந்தே வந்தோம். வேதங்கள் இயம்பியபடிக்கு அடுத்து வருகின்ற சோம வாரத்திலே, சுப முகூர்த்தத்திலே, உன்னைத் திருமணம் புரிந்து கொள்ள வருவோம். நீ மதுரை செல்வாயாக!'' என்று திருவாய் மலர்ந்தருளினார்.

திங்கட் குல விளக்கனைய தடாதகைப் பிராட்டியார், தலைவரிடத்தே தன் பக்தியையும் ஆவியையும் ஒருங்கு

வைத்துத் தனது மதுரையம்பதியை வந்தடைந்தார். அஷ்டமங்கலம் தாங்கிய குலமாதர் எதிர் கொண்டழைக்கத் தமது செல்வத் திருமாளிகைக்கு எழுந்தருளினார்.

அமைச்சர்கள் திருமண ஓலை எழுதி எல்லா நாடுகளுக்கும் அனுப்பி வைத்தனர். மதுரை மாநகரம் எங்கும் மணமுரசு முழங்கியது. இயற்கை அழகும் வலிமையும் கொண்ட மதுரைப் பெருவூர் மிகுந்த எழிலுடன் தோன்றிப் பல்வகைக் கோலங் காட்டிப் பொலிந்தது. பட்டாபிஷேக விழாவன்று திகழ்ந்த பாங்கில் பன் மடங்கு திகழ்ந்து நின்றது, மதுரை மூதூர். தெருக்களிலே மலர்களோடு குளிர்ந்த பன்னீரைக் கலந்து தெளித்தனர் நகர மாந்தர். வாசனைப் பொடிகளை வாரி இறைத்தனர். பாவை விளக்குகளை நிற்க வைத்தனர். பசிய மலர்கள் பந்தல்களினின்று தொங்கின. மாணிக்க மரகத மாலைகள் நிறைபடத் தொங்கி ஒளி கூட்டின. மங்கல தீபங்கள் வீடுகளெங்கும் சுடர்விட்டன. கங்கை, காவேரி, யமுனை, சரசுவதி ஆகிய புண்ணியப் பேராறுகளின் புனித நீர் கொணரப் பெற்றது. திருமண வூராம் மதுரை திருமங்கல வூராகத் திகழ்ந்தது.

திருமண மண்டபம் திவ்யமாக அமைக்கப் பட்டது. பளிங்கினால் செய்த யானைகள் மண்டபத்து முன் வாசலில் இருபாலும் நின்றன. படிகள் பொன்னால் அமைந்தன. நீலமணி யாளிகள் பத்தி கட்டி நின்றன. திண்ணைகளில் மணிகள் பதிக்கப் பெற்றிருந்தன. பளிங்குக் கற்களாலாகிய சுவர்களுக்கிடையே மரகதத்தாலாகிய சாளரங்கள் விளங்கின. பவளத் தூண்கள் ஆயிரம் நின்றன. மேலே இந்திர நீலமணிகளால் செய்த பொதிகைகள் இருந்தன. பொன்னால் செய்த உத்தரங்கள், செம்மணி விட்டங்கள் துலங்கின. மேனிலை சந்திரகாந்தக் கல்லால் செய்யப்பட்டிருந்தது. எங்கும் இன்பத் திருமணம் எழுந்து வீசியது.

திருமண மண்டபத்தின் நடுவிலே கற்பகத்தரு கொடுத்த வயிரச் சிங்காசனத்தின் மேல் பொற்பலகை அமைத்தனர். அதற்கு மேலே பவளக் குடத்தோடு சதுரமாக அமைத்த கழுத்துக் கொண்ட தூண்கள் நாட்டி, பளிங்கு உத்தரங்களையும் பவளக் கொடுங்கைகளையும் பரப்பி, மூன்று அடுக்குகளை அமைத்து, சிற்ப சாஸ்திர விதிப்படி பலவகை மணிகளால் விமானத்தை எழில் மிக விளங்கவைத்தனர். சோமசுந்தரக் கடவுள் தடாதகைப் பிராட்டியாரோடு வீற்றிருப்பதற்கு நவமணிகள் இழைத்த பொன்னிருக்கை ஒன்றும் அமைத்தனர்.

கற்பகத் தரு ஆடை அணிகலன்களைக் கொடுத்தது. காமதேனு அறுசுவை நல்கும் ஐவகை உணவுகளைக் கொடுத்தது. சிந்தாமணி கருதிக் கேட்ட பொருள்களையெல்லாம் கொடுத்தது. மதுரைத் திருநகரச் சிறப்பிலே தேவர் தலைநகரே நாணம் உற்றது.

மலையத்துவச பாண்டியன் திருமகளாகிய தடாதகைத் தேவியாரின் திருமண விழாவினைக் கண்டு களிக்க உலகின் பல்வேறு பகுதிகளில் இருந்து அரசர் அனைவரும் திறைப் பொருள்களோடு வந்தனர். திருமால், பிரம்மா, இந்திரன், உருத்திரர்கள், அஷ்டபைரவர், அஷ்டதிக்குப் பாலகர், அஷ்ட வசுக்கள், சூரியர், சந்திரர் முதலிய தேவர், நாரதர், வியாசர் ஆகிய மகரிஷிகள் எல்லாரும் வந்து நிரம்பினர்.

பெருநிதிக் கிழவனான குபேரனே சிவபெருமானுக்குத் திருமணக் கோலம் புனைவித்து மகிழ்ந்தான். திருமண மங்கலக் கோலம் கொண்ட சிவபெருமான் ரிஷப வாகனத்தின் மீது எழுந்தருளினார். மதுரைப் பெரும் பகுதியை நோக்கி அனைவரும் ஒரு முகமாகக் கிளம்பினர்.

மதுரையம்பதி மணவாள சுந்தரரைப் பொற்சின்னங்கள் ஆர்த்து வரவேற்றது. சுமதி முதலியவர்கள் எதிர்வந்து தரிசித்து வணங்கினர். பல் தேசத்துப் பெண்டிர் எதிர் கொண்டு வந்து தரிசித்தனர். அனைவரும் மணமகனையும் மணமகளையும் வியந்து போற்றினர். மங்கல மங்கையர் அஷ்ட மங்கலப் பொருள்களை ஏந்தி வர, தேவமாதர் கர்ப்பூரம் காட்ட, இன்னிசைக் கருவிகள் இயம்ப, சிவபெருமான் அரச மாளிகைக்கு எழுந்தருளினார்.

பின்னர்க் காஞ்சனமாலையார் சிவபெருமானை அண்டி வணங்கி, ''தேவரீர் தடாதகையைத் திருமணம் செய்து கொண்டு இந்த நகரத்தின் செல்வத்தையும் கன்னிப் பாண்டி நாட்டையும் கைக்கொண்டு அரசு செய்து அருள்வீராக!'' என்று விண்ணப்பித்துக் கொண்டார்.

சிவபிரான் திருவுள்ளம் இசைந்து இசைக் கருவிகள் இன்னொலி வழங்கத் திருக்கல்யாண மண்டபத்தை அடைந்தருளினார். ஆங்குச் சென்று சதுர் வேதங்கள் முழங்கச் சிங்காதனத்தில் வீற்றிருந்தருளினார். திருக்கல்யாண மண்டபத்திலே இரு மூர்த்திகளும் தேவர்களும் மண்ணுலகத் தவரும் நெருங்கி அமர்ந்திருந்தனர். திருமண முகூர்த்தம் வருகிறவரையும் தேவமாதர் புரியும் ஆடலைக் கண்டு அருள்வராயினார்.

தடாதகைப் பிராட்டியாரும் திருமஞ்சனம் ஆடி, தான தருமங்கள் பல செய்து திருமணக் கோலம் புனையத் தொடங்கினார். லக்ஷ்மியும், சரஸ்வதியும் போட்டி போட்டுக் கொண்டு பிராட்டியாருக்கு அலங்காரம் செய்வித்தனர். பிராட்டியார் அணிந்த ஆடை வகைகளையும் அணிமணி களையும் உத்தமக் கவிஞர்களாலும் வருணித்தல் இயலாது.

சிவபெருமான் அளவற்ற ஆனந்தமும் ஆச்சரியமும் கொள்ளுமாறு அமைந்திருந்தது திவ்யாலங்காரம்.

திருமணத்திற்குரிய நன்னிமித்தம் வர, கலைமகளும் திருமகளும் கைலாகு கொடுக்க, வேதங்கள் கோஷிக்க எழுந்தருளினார் சுந்தரவல்லி தடாதகைத் தேவி. திருமண முரசங்கள் ஒலித்தன. சங்குகள் முழங்கின. விண்ணவர் மலர் பொழிந்தனர். மணமகள் அசைந்து மெல்ல நடந்து வந்து ஒதுங்கி, தம்பால் கருணை நிரம்பிய சிவபெருமான் அருகில் அமர்ந்தருளினார். செம்பொன் மணித்தவிசின் மேல் சிவபெருமானுடன் தடாதகைப் பிராட்டியார் நெருங்கி இசைந்து அமர்ந்திருந்த திருக்கோலம் பண்ணும் பாடலும், நீரும் தண்மையும், பாலும் சுவையும், மலரும் மணமும், மணியும் ஒலியும் போலத் திகழ்ந்தது.

திருமண வைபவம் தொடங்கியது. மகாவிஷ்ணு பொற்கலசத்திலுள்ள நன்னீரால் மணமகன் சிவனாரின் திருவடிகளைக் கழுவினார். மணம் கமழும் சந்தனம் இட்டு மலர் தூவினார். திருவடி கழுவிய நன்னீரை அனைவரும் சிரமேல் தெளித்துக் கொண்டனர்.

பின்னர் ஆங்கிருந்த மகாவிஷ்ணு காந்தள் மலரைப் போல் சிவந்த சிவபெருமானது வலத் திருக்கரத்திலே தடாதகைப் பிராட்டியாரின் வலத் திருக்கரத்தை வைத்து வேத மந்திரம் சொல்லித் தாரை வார்த்துக் கொடுத்துக் கன்யாதானம் செய்தார். தேவர்கள் பூமழை கொண்டு சொரிந்தனர். சித்தவித்யாதரர் கண்டு மகிழ்ந்தனர். பாவலர் நாவலர் பாடி மகிழ்ந்தனர். அரம்பையர் ஆடினர். விஞ்சையர் அமுத கீதம் பாடினர். முனிவர்கள் 'ஹரஹர' என்று தோத்திரம் செப்பினர். யாவரும் தேவத் திருமண இன்பத்திலே உளமாரத் திளைத்தனர்.

பிரம்மதேவன் தனது நான்கு புத்திரர்களுடன், நாற்புறங்களிலும் நான்கு மறைகளின் மங்கள மொழி ஒலிக்க, திருமணச் சடங்குகளை வேதாகம சிவாகம முறைப்படி நிறைவாகச் செய்து முடித்தார். மகாயோகியான சிவ பெருமான் தடாதகைப் பிராட்டியாருக்குத் திருமாங்கலியம் பூட்டித் திருமணம் செய்து கொண்டார். உலகங்கள் எல்லாம்- உயிர்களெல்லாம் பேரின்பம் அடைந்தன.

பின்புதிருமாலுக்கும் நான்முகனுக்கும் தேவர்கட்கும் தம் சிவகணங்களுக்கும் நீங்காத அருட்பிரகாசத்தை வழங்கி அருளினார் சோமசுந்தர பாண்டியக் கடவுள். வந்திருந்த ஏனையோருக்கும் வரிசை முறைப்படி வழங்கி அருளி அருள் விடை கொடுத்தனுப்பினார்.

அதன் பின்பு சிவபெருமா்ன் நல்லரசாட்சி நடத்திக் காட்டியருளினார். வெள்ளிப் பொருப்பை விட்டு நீங்கிய சிவபெருமான் பாண்டி நாட்டு ஆட்சிப் பொறுப்பை ஏற்றுச் சோமசுந்தர பாண்டியனாக விளங்கியருளினார்.


6. வெள்ளியம்பலத் திருக்கூத்து ஆடியது

பரஞ்சுடராகிய சிவபெருமான் உலகினை நடாத்துவதற்கான அறம், பொருள், இன்பமானவற்றை நிலை நாட்டும் பொருட்டே சுந்தரபாண்டியனாக வந்தருளித் திங்கட் குலமணியான தடாதகைப் பிராட்டியாரைத் திருமணம் செய்து கொண்டார். பின்பு திருமணத்திற்கு வந்திருந்த தேவர்களையும், மகரிஷிகளையும், மன்னர்களையும், ஏனையோர்களையும் நோக்கி, "அமுது செய்ய வருக!" என்று திருவாய் மலர்ந்தருளினார். அவர்கள் அனைவரும் விரைந்து பொற்றாமரைத் திருக்குளத்திலே நீராடிவிட்டுத் தங்கள் நியமங்களை முடித்துத் திரும்பினர்.

அது சமயம் பதஞ்சலி மகரிஷியும் வியாக்கிரபாத மகரிஷியும் சுந்தரப் பெருமானை அடிபணிந்து வணங்கி, "கருணாமூர்த்தியே! பொன்னம்பலத்திலே தேவரீர் ஆடியருளும் திரு நடனத்தைத் தரிசனம் செய்த பின்பே உணவு கொள்வது அடியவர்களான எங்கள் நியமம்!" என்று விண்ணப்பித்துக் கொண்டனர்.

அடியார்களின் எண்ணத்தை அப்படியே நிறைவேற்றி வைக்கும் அண்ணல் சிவபெருமான், "அதே நடனத்தை யாம் இம் மதுரையம்பதியிலே நடித்துக் காட்டுவோம். உலக வடிவாகிய விராட் புருஷனுக்குத் தில்லையம்பதி இருதயம்; மதுரையம்பதி துவாதசாந்த ஸ்தானம் ஆகும்," என அருளினார்.

"தெய்வப் பேரரசே! ஏனைய அங்கங்கள் எவை?" என்று இரண்டு ரிஷிகளும் வினவினர்.



சுந்தர பாண்டியர் மிகுந்த பணிவுடன், "திருவாரூர் மூலாதாரம், திருவானைக்கா சுவாதிஷ்டானம், திருவண்ணாமலை மணிபூரகம், தில்லை அநாகதம், திருக்காளத்தி விசுத்தி, காசி ஆஞ்ஞை, திருக்கயிலாயம் பிரம்மாந்திரம் ஆகும். மதுரையம்பதி துவாதசாந்த ஸ்தலம். இத் திருப்பதி எவ்வகையில் மேலாகியது எனில், எல்லாவற்றுக்கும் முன்னால் தோன்றிய முறையாலே!" என்று திருவாய் மலர்ந்தருளி, இரு பெரு முனிவர்களுடன் திருக்கோயிலுள் புகுந்தருளினார்.

சுந்தரப் பெருமானின் இச்சா சக்தியாலே இந்திர விமானத்தின் கீழ்ப் பகுதியில் வெள்ளியம்பலம் ஒன்று தோன்றியது. அவ்வம்பலத்தினிடையே மாணிக்கப்பீடம் ஒன்றும் தோன்றியது. அம் மணிப்பீடத்தின் மேலேறி நின்ற சுந்தரப் பெருமான் மெஞ்ஞானப் பேரொளி வடிவமாக நின்றார்.

சிவகணங்கள் மொந்தை தண்ணுமைகளை முழக்கினர். நந்திகேசுரர் மத்தளம் கொட்டினார். திருமால் இடக்கை முழக்கினார். தும்புரு நாரதர் இருவரும் இசை பாடினர். சரஸ்வதி தேவி சுருதி கூட்டினார்.

தூக்கிய இடது திருவடி குவிந்த செந்தாமரை மலரை நிகர்த்திருந்தது. வலக்கரங்கள் ஐந்திலும் அபய ஹஸ்தத்திலே திரிசூலமும் ஏனைய நான்கு திருக்கரங்களிலே உடுக்கை, அம்பு, வாள், மழு முதலியனவும் இலங்கின. இடக்கரங்கள் ஐந்திலே வரத ஹஸ்தத்திலே நாகமும், ஏனைய நான்கு கரங்களிலே அக்னி, வில், கேடயம், கதை முதலியனவும் இலங்கின. திருநீல கண்டமும், சங்க குண்டலம் பூண்ட திருச்செவியும், விரித்த செஞ்சடையும், வெண்ணீறு

துலங்கும் திருமேனியும், விரிகமல நயனங்கள் மூன்றும், பாம்புக் கச்சையும், நீலமேனி வாலிழை பாகமும், உமையம்மையார் மேல்- வைத்த திருப்பார்வையும் திருநகையும் தோன்றத் திருநடனம் செய்தருளினார் சுந்தரப் பெருமான். அதுபோழ்து கங்கையாறு பாயும் ஒலியும், மங்கல டமருகத்தின் ஒலியும், மந்திர ஒலியும், வேதத்தொலியும், அங்கைத்தீயின் ஒலியும், திருவடிச் சிலம்பின் ஒலியும் ஆகிய அனைத்தும் ஒன்று கலந்து எங்கும் பரவியது. அடியவர்களின் இரு செவிகளும் ஒலியின்னமுதைப் பருகின.

இவ்விதமாகச் சிவபெருமான் வெள்ளியம்பலத் திருநடனம் ஆடியருளியதைப் பதஞ்சலி வியாக்கிரபாதர் இருவரும் கரங்களைத் தலை மேல் கூப்பித் தரிசித்துத் திருவடியில் வீழ்ந்து வணங்கினார்கள். வேத கீதங்களால் மனமார நாவாரப் போற்றி செய்து பேரின்பக் கடலுள் மூழ்கி அன்பு மயமானார்கள். மகரிஷிகளின் பொருட்டு ஆடிய திருநடனத்தைத் தேவர்கள், முனிவர்கள், யோகியர், கந்தருவர், கிம்புருஷர், அவுணர்கள் எல்லாரும் தரிசித்து வணங்கினர். பதஞ்சலி மாமுனிவர் சிவானந்தத்திலே மூழ்கி விட்டார். ஆனந்தக் கண்ணீர் அருவி சோர இறைவனைப் பலபடியாகத் தோத்திரம் செய்தார்.

வெள்ளியம்பலக் கூத்தாடும் சுந்தரேசர் இருமாமுனிவரையும் நோக்கி, ''நல்லது, நீங்கள் இருவரும் விரும்பியது யாது?'' என்று வினவியருளினார்.

''எந்தையீர்! இத் தெய்வத் திருநடனம் எப்போதும் இவ்வெள்ளியம்பலத்துள்ளே நிலைத்து நிற்க வேண்டும். இத் திருக்காட்சி கண்டவர் பாசபந்தங்கள் விலகட்டும். அருள் புரிந்திடுக!'' என்று வேண்டினர், இருவரும்.

நடராசப் பெருமானும், ''செந்தமிழுக்கு இருப்பிடமான இப்பாண்டிக் கன்னி நாடு செய்த தவம் காரணமாக நீங்கள் கோரிய வரத்தை அளித்தோம்!'' என்று திருவாய் மலர்ந்தருளினார்.

சிவ கணத்தார் கைகோத்துக் கூத்தாடினர். தேவர்கள் பூமழை பொழிந்தனர். முனிவர்கள் ஆனந்தக் கண்ணீர் உகுத்தனர். அன்புருவாகத் திகழ்ந்த பதஞ்சலி, வியாக்கிர பாதர் இருவரையும் துதி செய்து உவகையுடன் தழுவிக் கொண்டனர்.

7. குண்டோதரனுக்கு அன்னம் இட்டது

தடாதகைப் பிராட்டியார் தமது திருமணத்திற்கு வந்திருந்த மாதவர்கள், மறையவர்கள், பல நாட்டு அரசர்கள் எல்லார்க்கும் முறையே பொற்பாத்திரங்களிலே அறுசுவை உண்டியை உண்பித்து, சந்தனம், பட்டாடை, ஆபரணம், தாம்பூலம் மற்றும் ஏனைய பொருள்களும் முறையாக அளித்து உபசாரம் செய்து ஐம்பத்தாறு நாட்டு வேந்தர்கட்கும் மற்றவருக்கும் விடை கொடுத்து அனுப்பினார்.

அதுசமயம் சமையல் தொழில் செய்வோர் வந்து தேவியின் திருவடி வணங்கி, ''தாயே! அடியவர் சமைத்த அன்னத்திலே ஆயிரத்தில் ஒரு பங்குகூடச் செலவாக வில்லை. நாங்கள் என்ன செய்ய வேண்டும்?'' என வினவினர்.

பிராட்டியார் எழுந்து பெருமான் முன் வந்து வணங்கி ஒரு பக்கத்தில் நின்று, ''தேவரீர்! தங்களுடன் முப்பத்து



முக்கோடித் தேவர்களும் வருவர் என்று எண்ணிச் சுவையுணவு அளவற்றதாக ஆக்கச் செய்தோம். எஞ்சியுள்ள அன்னமோ இமயமலை யளவு குவிந்துள்ளது. அன்னத்துக் கேற்பச் சமைத்த காய்கறிகளும் சுற்றச் சூழவிருக்கும் சிறு மலைகளைப் போலக் குவிந்து கிடக்கின்றன!'' என்று கூறினார்.

சுந்தர பாண்டியப் பெருமான் அதனைக் கேட்டு, தேவியாரிடத்துத் தான் கொண்ட அன்பின் விளைவாக ஒரு திருவிளையாடல் புரியத் திருவுளம் கொண்டார்.

தனக்குத் திருக்குடை ஏந்தும் பூதகணத் தலைவன் குண்டோதரனது பேராற்றலையும் உலகறியச் செய்ய விரும்பினார் போலும். தேவியை நோக்கிக் குறுநகை செய்து, ''வேந்தரில் சிறந்த பாண்டிய குமாரியே! உனக்குப் பணி புரியத் தேவலோகத்துப் பஞ்ச தருக்களும் உன்னகத்தே உள்ளன. அளவற்றதான உனது செல்வப் பெருக்கின் பெருமையை நாம் அறியுமாறு செய்தாய் போலும். உனது பெரு விருந்தினை உண்ண நம் கணத்துள்ளே பசியால் வருந்துபவர் யாரையும் காணோம்!'' என்று சொல்லிவிட்டு, அருகிலே நின்றிருந்த குண்டோதரனது வயிற்றிலே வடவாக்கினி புகுமாறு திருவுளம் கொண்டார். வடவைத்தீ வயிற்றுனுள் புகுந்து வருத்தியதால் குண்டோதரன் தளர்ந்து உயிரொடுங்கிச் சிவபெருமானை நோக்கி, ''பெருமானே! பெரும் பசி என்னை வருத்துகின்றது!'' என்று இரங்கினான்.

சிவபெருமான் தமது பிராட்டியாரை நோக்கி, ''எமக்குக் குடை பிடிக்கும் குட்டைக்கால் பூதத்திற்குப் பிடி சோறு கொடுப்பாயாக; அப்புறம் கூறுகின்றேன்,'' என்று கூறியருளினார்.

பிராட்டியார் பெருமானை வணங்கி விடைபெற்றார். பசித்தீயினால் வருந்திய குண்டோதரனும் உடன் சென்றான்.

அரசியாரின் ஏவலுக்கிணங்கச் சேவகர் பெரும் பசிக் குண்டோதரனை இட்டுச் சென்று சோற்று மலையின் முன்பு கொண்டு விட்டனர். குண்டோதரன் சோற்றை எடுத்ததையோ உண்டதையோ யாவரும் காணவில்லை. அன்ன மலை மறைந்து விட்டது. ஏவற்பெண்டிர் கைநெரித்து வியப்புக் காட்டினர். சிலர் பயந்தனர். சிலர் ஓடினர். சிலர் கண்களைப் பொத்திக் கொண்டனர்.

பின்னர் அப்பூத குண்டோதரன் காய்கறி வகைகள், நெய், பால், தயிர், தேன் எல்லாவற்றையும் உண்டு தீர்த்தான். மேற்கொண்டு பல வகைப் பழங்கள், பணியாரங்கள், கரும்புகள், தேங்காய், வேகாத காய்கறிகள், அரிசி, நவதானியங்கள் அனைத்தையும் தனது கையால் வாரி வாரி எடுத்துத் தனது பெருவயிற்றினுள் அடைத்துக் கொண்டான். இதை யெல்லாம் கேட்டும் கண்டும் தெரிந்த தடாதகை தேவியார் அதிசயம் அடைந்தார்.

தனது இன்ப அன்பு நாயகனிடம் சென்று நாணத்துடன் தலை கவிழ்ந்து நின்றார் தேவியார். அவரது நிலை தெரிந்த சோமசுந்தரக் கடவுள் தேவியைப் பார்த்து விளையாட்டாக, ''நான் அனுப்பிய பூதம் உண்டு மீதம் இருக்குமானால் மேற்கொண்டு சில பூதங்களை அனுப்புவேன்!'' என்றார்.

பிராட்டியார், ''ஐயனே! தேவரீர் அனுப்பி வைத்த பூதம் வெந்தது வேகாதது அனைத்தையும் உண்டு விட்டது. மேற்கொண்டு பூதங்களை அனுப்பினால் உலகத்தையே விழுங்கிவிடுவார்கள். பிறகு தங்களது யுகாந்தகால ருத்திரர் என்ற பெயர் உறுதியாகி விடும்!'' என்று பணிவுடன் கூறினார்.

அது சமயம் பெரும் பசித் தீ வருந்தக் குண்டோதரன் வந்து, "வெள்ளியம்பலத்திலே திருநடனம் செய்த சுந்தரக் கடவுளே! மலையெனக் குவிந்திருந்த அன்னம் உண்டும் என்பசி தீரவில்லை. எனக்கு ஒன்றும் தெரியவில்லையே, என்ன செய்யட்டும்?" என்று கதறினான்; புலம்பினான்; பெருமூச்சு விட்டான்; ஆவி சோர்ந்து அயர்ந்தான்.


8. அன்னக் குழியையும் வையையையும் அழைத்தது

வேதநாயகனான சோமசுந்தரப் பெருமான் பின்னர் தடாதகைப் பிராட்டியரை நோக்கி உள்ளே நகைத்துக் கொண்டே பசிப் பிணியால் அல்லல் படுகின்ற குண்டோதரனுக்காகத் தனது சக்தியாகிய அன்னபூரணியை நினைந்தருளினார். உடனே நான்கு திசைகளிலும் இருந்த தயிர்க் கடலானது நிலத்தின் இடையே கிழித்துக் கொண்டு ஊற்றெடுத்துப் பொங்கி எழுந்ததுபோல நான்கு பெருங்குழிகள் தம்மிலிருந்து சுவை மிகுந்த தயிர் கலந்த அன்னம் பொங்கி எழுந்தது.

அப்போது சுந்தரபாண்டியர் தமது குடையாள் குண்டோதரனைப் பார்த்து, "உனது பெரும் பசி நீங்கும் வண்ணம் உண்பாய்!" என்று கட்டளை யிட்டருளினார்.

நான்கு சோற்றுக்குழிகளிலிருந்தும் தயிர்ச் சோற்றை வாரி வாரி உண்டான். இறைவன் திருவருளால் குண்டோதரன் தன் பெரும்பசி தீர்ந்தான். உடல் எல்லாம் வயிறாகப் பருத்த குண்டன் தரையிலே விழுந்து மூச்சுவிட முடியாமல் புரண்டான்.

தீரு - 5



அடுத்துக் குண்டோதரனுக்குத் தாகம் மேலிட்டது. நீர் நிலைகளைத் தேடிச் சென்றான். கிணறு, ஓடைகள், குளங்களிலே வாய்வைத்து உறிஞ்சிக் குடித்தான், அவை வறண்டு போகுமாறு. அப்போதும் அவனது பெருந்தாகம் தணியவில்லை. சுந்தரப் பெருமானின் திருவடிகளில் விழுந்து முறை செய்தான். உடனே சிவபெருமான் தனது திருமுடியில் துலங்கிய கங்காதேவியை நோக்கி, "மாதே! மதுரையம்பதியின் புறத்தே ஒரு நதியாக விரைவில் வருவாயாக!" என்று ஆணையிட்டார்.

சிவபெருமானது திருச்சடையை விட்டு நீங்கிக் கொண்டிருந்த கங்காதேவியானவள், "முன்பு ஒருக்கால் பகீரதனுக்காக என்னைத் தீர்த்தமாகத் தேவரீர் விடுவித்த போது என்னில் மூழ்குகின்றவர்களின் பாவத்தையும் குற்றங்களையும் களைந்து செல்லுமாறு பணித்தீர்கள். இன்னும் நான் ஒரு ஆறாகிப் பாய்ந்தால் என்னைக் காண்பவரோ, தொட்டவர்களோ, என்னில் மூழ்கியவர் களோ, தேவரீரிடம் பக்தியும், கல்வியும், ஞானமும், வீடும் பெறும்படி அருள வேண்டும்!" என்று வேண்டிக் கொண்டு விடைபெற்றாள். பின்பு மிகுந்த வேகத்தோடு எழுந்து நல்லாறாக வானத்திலிருந்து இறங்குவதற்குச் சென்றாள்.

நதி உருவங் கொண்ட கங்கைக்கு அலைகள் கை வளையல்களாக அமைந்தன; முத்துக்கள் பற்களாக விளங்கின; நுரையே ஆடையாகியது; பூங்கொடிகளே இடை; கருமணல் மணங்கமழ் கூந்தல்; இவ்வாறாகத் தானே பலவகைப் பாங்கு காட்டிப் பேரிரைச்சல் செய்து வருகின்ற ஆறு, கதியிலே யானை போலக் கம்பீரமாகவும், வளைந்து நெளிந்து வருவதிலே பாம்பினைப் போன்றும், நிலத்தைத் தோண்டி வருவதிலே வராக மூர்த்தியைப் போல்வும்,

வாமனனைப் போலவும், கண்ணனைப் போலவும் வந்து கொண்டிருந்தது.

ஓடிவந்த பெருவெள்ளத்தைக் கண்ட சிவபெருமான் தாகத்தால் துடித்துக் கொண்டிருந்த குண்டோதரனைக் கண்டார். "அந்தோ, எனது நீர் வேட்கை தணிய வில்லையே!" என்று வெதும்பிய குண்டோதரனை அந்த ஆற்றின் அருகே விடுத்தார்.

குண்டோதரன் பொங்கிப் பெருகி வரும் அந்த நதியின் நடுவே சென்றான். தனது இரண்டு கைகளையும் கரைகளோடு சேர்த்து நீட்டிக் கொண்டான். தடைபெற்ற ஆற்று நீர் பெரிய மடுவைப்போல் தேங்கியது. தங்கிய தண்ணீரைத் தன் பெருவாய் திறந்து பருகினான் குண்டோதரன். தணியாத தாகம் ஒருவாறாகத் தணிந்தது. பின்னர் அவன் களிகொண்டு சிவபெருமான் சன்னதி சேர்ந்து திருவடிகளில் விழுந்து வணங்கினான். அன்பு ததும்பும் நற்கீதமும் படித்தான்.

சொல்லுக்குப் பொருளாக விளங்கும் சுந்தரேசர் தனது குடை பிடிக்கணம் பாடும் பாட்டினைத் திருச்செவி மடுத்து மகிழ்ந்தார். பூதகணங்களுக்குத் தலைமை வகிக்கும் பதவியையும் குண்டோதரனுக்கு அருளினார். பின்னர் தடாதகைத் தேவியாரோடு செங்கோல் செலுத்தி அருளினார்.

குண்டோதரனின் தாகம் தீர்க்க வந்த புனித ஆறு வையை என வழங்கப்படுவதாயிற்று. சிவபெருமானது செஞ்சடை யில் இருந்து வந்ததால் சிவகங்கை எனப்பட்டது. சிவஞான தீர்த்தம் என்றும் போற்றப் பெறும். மிகவும் வேகமாக வந்ததால் வையையாறு வேகவதி எனவும், மதுரைப் பதியை மாலை போலச் சூழ்ந்து வந்ததால், கிருத மாலை எனவும் திருப்பெயர் பெற்றது.

9. எழுகடலை அழைத்தது

சோமசுந்தரப் பெருமான் பாண்டியத் திருக்கோலம் பூண்டு அனைத்துலகினையும் குளிர்வெண்குடையால் நிழல் தந்து அறவழி பிறழாது ஆண்டு வந்தார். அந்த நாட்களில் ஞான சாஸ்திரத்தின் அரும் பொருளை உணர்ந்த ரிஷிகளும், தூய முனிவராகிய தவப் பெரியார்களும் முறைப்படி பெருமானைக் கண்டு வருவார்கள்.

அவ்வாறே வேதமுணர்ந்த கௌதமமுனிவர் சுந்தரப் பெருமானைச் சந்தித்துத் திரும்புங்கால் காஞ்சனமாலையின் திருமனையை அடைந்தார்.

காஞ்சனமாலை அவரை எதிர்கொண்டழைத்துப் பொன்னிருக்கையிலே அமர்த்தி வணங்கி, ''பரமசிவத்தின் அடியவரே! பிறப்புத் தொடர்பு ஒழிக்கவல்ல தவத்தினைக் கூறி அருள வேண்டும்!'' என விண்ணப்பித்தார்.

கருணை முனிவர் திருமுக மலர்ந்து, ''அருஞ் சிறப்பினையுடைய காஞ்சன மாலையே! தடாதகைப் பிராட்டியின் தாய் நீ; சிவபெருமானே நினது மருமகன். உனக்குத் தெரியாத தவமா வேறு ஒருவர் அறிவார்? இருந்தாலும் சொல்கிறேன்.

''மானசம், வாசிகம், காயிகம் எனத் தவம் மூன்று வகைப்படும். தான தருமத்திலே எண்ணம் நாட்டல், உயிர்களிடத்து அன்பு கொள்ளல், பிறர் செய்த தீமை பொறுத்தல், உண்மை உரைத்தல், மோனத்தமர்ந்து சிவத்தைச் சிந்தித்தல், புலன்களை அடக்குதல் முதலியனவே மனத்தால் செய்யப்படும் மானசம் ஆகும். பஞ்சாட்சர



மந்திரத்தை ஜபம் செய்தல், உருத்திர மந்திரங்களை ஓதுதல், தோத்திரப் பாடல்களைப் பாடுதல், தருமங்களை எடுத்துரைத்தல், வாக்கால் செய்யப்படும் வாசிகம் ஆகும். சிவபெருமானைப் பூசித்தல், திருக்கோவிலை வலம் வருதல், இறைவன் சன்னதி சென்று வணங்குதல், பல திவ்ய க்ஷேத்திரங்களுக்கும் சென்று வருதல், கங்கை முதலிய தொலைவிலுள்ள புண்ணிய நதிகளுக்குச் சென்று ஸ்நானம் செய்தல் முதலியன உடம்பால் செய்யப்படும் காயிகம் ஆகும். இந்த முத்தவங்களுக்கும் காயிகம் சிறந்தது. அதனுள் கங்கை முதலான நதிகளுக்குத் தனித்தனியே சென்று நீராடுதல் சிறப்புடையது. அப்புனித நதிகள் எல்லாம் வந்து சங்கமமாகும் கடலில் நீராடுதல் எல்லாவற்றிலும் மிகவும் சிறந்தது!'' என்று மொழிந்தார்.

கௌதம முனிவர் மொழியைக் கேட்ட காஞ்சன மாலை கடல் நீராடப் பெருவிருப்பம் கொண்டார். தன் செல்வப் புதல்வி தடாதகைத் தேவியிடம் தன் விருப்பத்தைத் தெரிவித்தார். உடனே பிராட்டியார் தமது தலைவர்பால் சென்று, ''குண்டோதரனுக்காக அன்றொரு நாள் அன்னக் குளமும் வைகை நதியும் அழைத்துத் தந்தருளிய கருணையங்கடலே! எனது அன்னை கடல் சென்று நீராட விரும்புகின்றார்,'' என்று விண்ணப்பித்துக் கொண்டார்.

தடாதகைப் பிராட்டியாரின் திருமொழிகளைச் செவிமடுத்த சுந்தரப் பெருமான், ''ஒரு கடல் என்ன, ஏழு கடல்களையும் வரவழைத்து விடுவோம்!'' என்று கூறி அவை வரும்படிக்குத் திருவுளங் கொண்டருளினார். எம் பெருமான் எண்ணிய மாத்திரத்திலே ஏழு கடல்களும் மதுரையம்பதியின் கிழக்குத் திக்கிலுள்ள ஒரு வாவியிலே ஏழு வகையான வண்ணங்களோடு வந்து பொங்கி நின்றன.

பொங்கி எழுந்த ஏழு பெருங்கடல்களும் சிவபெருமான் திருவாணைப்படி வாவியில் சென்று அடங்கின. தனக்கே உரிய வெள்ளை வண்ணத்தோடு ஏழு கடல்களின் நிறங்களும் சேர அஷ்டமூர்த்தியாகிய சிவபெருமானை நிகர்த்து எண்வகை வண்ணங்களோடு விளங்கியது, அந்த வாவி.


10. மலையத்துவசனை அழைத்தது

சுந்தரபாண்டியப் பெருமான் தேவியாரோடு வந்து எழு கடலும் நிறைந்த திருக்குளத்தின் அருகே நந்தவனத்திலே சிங்காதனத்திலே எழுந்தருளினார். பின்னர் தமது தேவியாரை நோக்கி, ''யாம் உனக்காகவே எழு கடல்களையும் இந்த நகரத்திலே வருமாறு அழைத்தோம். இதிலே வந்து கடலாட உன் அன்னையை அழைப்பாயாக!'' என்று திருவாய் மலர்ந்தருளினார். அதன்படிக்கே தடாதகைப் பிராட்டியாரும் தன் தாயாம் காஞ்சனமாலையை அழைத்துக் கொண்டு எழு கடல் திருக்குளக் கரைக்கு வந்தருளினார்.

காஞ்சனமாலை அப்போது சிவயோகியர்களைப் பார்த்து, 'கடலில் நீராடுவதற்குரிய விதி யாது? சொல்லுங்கள்,'' எனக் கேட்டார்.

சிவயோகியர், ''கற்பிற் சிறந்த காஞ்சனையாரே! கணவனது கை, குமாரனது கை, பசுக் கன்றின் வால் இவற்றுள் ஏதேனும் ஒன்றைப் பிடித்துக் கொண்டு நீராடுதலே முறை,'' என்று செப்பினர்.

அது கேட்ட காஞ்சனை, ''அந்தோ! எனக்குக் கணவனோ, புத்திரனோ இல்லையே! எனக்குக் கிடைக்கக் கூடியது கன்றின் வால்தான் போலும்!'' என்று தன் மகளை நோக்கி வருந்திப் புலம்பினார்.



தடாதகைத் தேவியார் உடனே தனது தலைவர் சிவபெருமான் முன்னால் சென்று வணங்கித் தன் அன்னையின் குறையை வெளிப்படுத்தி விண்ணப்பித்தார். சுந்தரப்பெருமான் அப்போது இந்திரனோடு ஒன்று சேர்ந்து தேவலோகத்திலே அமர்ந்திருந்த மலையத்துவச பாண்டியனைத் திருவுளம் கொண்டார். மலையத்துவச பாண்டியன் சிவபெருமானது திருவுளத்திறத்தால் இந்திர லோகத்தை விடுத்துத் தெய்வ விமானம் ஒன்றிலே ஏறிக்கொண்டு, மதுரையில் உள்ள எழுகடல் தடாகத்தருகே வந்து சேர்ந்தான். ''யான் பெண்மகவு பெற்றதனால் அடைந்த பேறு இது!'' என்று சொன்னான், பாண்டியன். சுந்தர பாண்டியப் பெருமானை வணங்கச் சென்றான். தன் மாமனாகி விட்டபடியால் பெருமான் தடுத்து விட்டார்.

சுந்தரப் பெருமான் அன்புள்ளங் கொண்டு மலையத்துவசனை அருளுடன் நோக்கி, ''மனைவியுடன் சென்று தீர்த்தம் ஆடுவாயாக!'' என்று இயம்பினார். தன் மகளைக் கண்ட பாண்டியன் பெருமகிழ்வு கொண்டான். கணவனை நேரே கண்ட காஞ்சனமாலை நாணங் கொண்டு வணங்கினாள். பின்பு தனது விரலிலே பரிசுத்தத்தின் பொருட்டுப் பவித்திரம் அணிந்து பஞ்சாட்சர மந்திரத்தை உச்சரித்து மறையவர் கூறிய விதிப்படி தன் கணவன் கரத்தைப் பற்றிக்கொண்டு மிகுந்த சந்தோஷத்தோடு எழுகடலில் நீராடினாள்.

காஞ்சனமாலையும் மலையத்துவசனும் புண்ணிய தீர்த்தம் ஆடிக் கரையேறியதும், சோமசுந்தரப் பெருமானின் திருவருளாலே பாசம் விலக, உமையொரு பாகத்தாரது அருள் வடிவத்தை அடைந்தனர். ஒளி தெறிக்கும் திருநீல கண்டமும், நான்கு கரங்களும், நெற்றிக்கண்ணும் கொண்ட சிவசொரூபத்தை உலகோர் கண்டு வியந்தனர்.

அது சமயம் சிவலோகத்திலிருந்து தேஜோ மயமான தெய்வ விமானம் வந்து இறங்கியது. சுந்தர பாண்டியப் பெருமானின் ஆணையால் இருவரும் எல்லாத் தெய்வங்களும் வணங்க, விமானத்தில் ஏறினர். தேவர்கள் பூமழை பெய்தனர். தூமறைகளும், துந்துபிகளும் முழங்க, திவ்ய விமானம் மேலே எழுந்தது. 'ஹர ஹர' கோஷம் எங்கும் பரவியது. முனிபுங்கவர் வாழ்த்த, தேவர்கள் துதிக்க, விமானம் சிவலோகத்தை நோக்கிச் சென்றது.

சுந்தர பாண்டியரும் தடாதகைப் பிராட்டியாரும் அரண்மனை திரும்பினர். அங்கு அறக்கொடியான பிராட்டியார் தன் தலைவன் திருப்பாதங்களை வணங்கி, வேதப்பொருளாகிய சிவபெருமான் தனது ரூபத்தையே தனது பெற்றோர்க்கு அளித்தருளிய பெருங்கருணையை எண்ணி எண்ணி வியந்து மகிழ்ந்தார். ''எனது தாய் நீராட அழைத்தருளினீர். ஸ்நானம் செய்து எழுந்ததும் அவர்கட்குத் தேவரீரது சொரூபத்தையே ஈந்தருளினீர். பாண்டிய வம்சம் நின்று விட்டது என்ற பழி ஏற்படாதவாறு செங்கோல் செலுத்தி வருகின்றீர். இந்த நிலைமைக்கு இடையூறு ஒன்றும் இனி ஏற்படாதே?'' என விண்ணப்பித்துக் கொண்டார்.

சுந்தர பாண்டியனார் தனது தேவியாரின் உள்ளக் குறிப்பினைத் திருவுளம் கொண்டு மறைந்தார்.

11. உக்கிர பாண்டியன் அவதாரம்

சோமசுந்தரப் பெருமானே சுந்தர பாண்டியராக அமைந்ததனாலே சேர சோழ பாண்டியர் என்னும் மூவேந்தர் குலத்துள் சந்திர குலத்தில் வந்த பாண்டியர் வம்சமே மிகவும் சிறப்புற்று விளங்கியது. அச் சுந்தர பாண்டியரே பாண்டியர் குலக் குறையையும் நீக்கத் திருவுளம் கொண்டார். மகேந்திர ஜாலம் செய்பவனைப் போலச் சிவபெருமான் முருகப் பெருமானைத் தடாதகைப் பிராட்டியாரிடத்தே தோன்றும் படிக்குத் திருவுள்ளங் கொண்டார்.

அம்மையாரும் கருப்பவதி ஆயினார். உலகப் பெண்டிர்க்கு ஏற்படுவது போலவே பிராட்டியாருக்கும் மாதம்தோறும் கருத்தரித்தற்கேற்றதான வேறுபாடுகள் தோன்றின. வேதியர்களும் முனிபுங்கவர்களும் வந்திருந்து ராஜ குலத்தாருக்குரிய விசேடங்களை மதுரையம்பதியிலே மங்களம் ததும்ப மாதந்தோறும் செய்து முடித்தனர்.

பாண்டிய நாடு தான் செய்த தருமத்தின் பலனை அடையுமாறும், தூய தவத்தவரின் மனம்போல வானம் களங்கமின்றித் துலங்கவும், திங்கட் கிழமையும் திருஆதிரை நட்சத்திரமும் தாம் செய்த பிரார்த்தனையின் பயன் பெறுமாறும், குருவெனும் வியாழன் கேந்திரத்தில் ஒளியுடன் ஏறி விளக்கமுற்ற சுபமுகூர்த்தம் நிகழவும், சதுர் வேதங்கள் தாமே முழங்க, தேவர்கள் மலர் பொழிய, இலட்சுமியும் சரசுவதியும் இறும்பூது எய்தவும், சுந்தரப் பெருமானும் சுந்தரப் பெருமாட்டியும் கொண்டருளிய திருக்கோலத்திற்கு ஏற்ப, இளஞ் சூரியனைப் போல - முருகக் கடவுள்போலத் தடாதகைப் பிராட்டியாரிடத்தே திருக்குமாரன் ஒருவன் அவதரித்தான்.



அவதரித்த தன் புதல்வனைப் பிராட்டியார் எடுத்து உச்சிமோந்து தழுவி ஏந்தித் தம் கணவரது திருக்கரத்திலே கொடுத்து வாங்கினார்.

மகாவிஷ்ணு, பிரம்மா, இந்திரன் ஆகிய தேவர்களும், மஹரிஷிகளும், ஏனையோர்களும் தமது மனைவிமாரோடு சுந்தர பாண்டியரின் திருமனையை அடைந்தனர். சேர, சோழரும் வட பகுதி வேந்தர்களும், குறுநில மன்னர்களும் சேனைகள் சூழ்ந்து பாண்டியரையும் பிராட்டியாரையும் தரிசனம் செய்து, துதித்து, திருமகன் தோன்றியது குறித்து உவகை மொழிகள் பல பேசித் தத்தம் இடங்களுக்கு ஏகினர்.

''முருகப் பெருமானே குழந்தையாக வந்துள்ளான்!,'' ''இக் குமாரனது ஆணை ஏழு உலகங்கள் அனைத்தையுமே காக்கும்!'' ''பாண்டி நாட்டார் செய்த பெருந்தவந்தான் திருக் குமாரன் தோன்றக் காரணம்!'' ''அறம், பொருள், இன்பம், வீடு என்னும் நான்கும் தனித்தனி இயற்றிய பெருந்தவத்தின் பயனேயாம் இச்செல்வக் குமாரனின் திருத்தோற்றம்!'' என்றெல்லாம் பலர் பலபடி விளம்பினர்.

மதுரையம்பதி மங்கல விழாக் கொண்டாடிப் பெருமகிழ்ச்சி காட்டியது. தான தருமச் செய்கைகள் பல ஊரெங்கும் மலிந்தன. பனிநீர், சந்தனம், கஸ்தூரி முதலியவற்றைத் தெளித்துத் தூய்மை செய்தனர் நகர மாந்தர். எங்கும் கோலாகலமும் குதூகலமும் தாண்டவம் ஆடின.

சுந்தர பாண்டியர் தனது அரும்புதல்வனுக்கு வேத முறைப்படி சாதகன்மம் முதலான்வற்றை நடத்தினார். அத்திருக் குழந்தைக்கு உக்கிர வர்மன் என்று பெயர் சூட்டியருளினார். திருக்குழந்தை திவ்யமாக வளர்ந்து

வந்தது. அதனது ஐந்தாவது வயதிலே வேதநூல் விதிப்படி பூணூல் அணி விழாவையும் செய்து முடித்தார், சுந்தர பாண்டியர்.

சுந்தர பாண்டியர் பணித்தபடி தேவகுருவாகிய வியாழ பகவான் முறையே பதவொழுக்கம், கனம், ஜடை, சாகை, ஆரணம் நிரம்பிய வேதக் கலைகள் எல்லாம் கற்றுக் கொடுத்தார். படைக்கலப் பயிற்சியும், யானை குதிரை ஏறிச் செலுத்திடும் பயிற்சியும் கற்பித்தார்.

வெகு விரைவில் உக்கிரவர்மர் அறுபத்து நான்கு கலைகளையும் ஒருங்கே அறிந்து கொண்டார். பாசுபதாஸ்ரப் பயிற்சியினை மட்டும் தம் தந்தையிடத்தே கற்றுக் கொண்டார். தனது எட்டாம் வயது நிரம்புவதற்குள்ளாக எண்ணற்ற கலைகள் அனைத்தையும் கற்றுணர்ந்த பண்டிதராகி விட்டார் உக்கிர வர்மர்.

வயதுக்கேற்ற வளர்ச்சியும், எழிலும், ஆற்றலும், ஆண்மையும், ஆடலும் காட்டி வளர்ந்து வந்தார் உக்கிர வர்மர். தமது பதினாறாவது ஆண்டிலே அழகுடன் வீரமும் காட்டி, "தலைவனாகிய முருகக்கடவுளே இவர்!" என்று போற்றும்படிக்கு அதி தீர பராக்கிரமசாலியாக விளங்கினார் சுந்தர குமாரர்.

அதிரூப சௌந்தரத் திருவாளனான உக்கிரகுமாரனிடத்தே முப்பத்திரண்டு லட்சணங்கள் அமைந்திருப்பதையும், அவனது சிறந்த குணங்களையும் கண்டு கொண்டார், சுந்தர பாண்டியர். தனது குமாரன் பூலோக முழுவதும் அரசாட்சி செய்ய வல்லவன்; நெடுநாள் வாழ்வான்; கீர்த்தி, நீதி, சாதுரியம், பண்பாடு, சிவபக்தி, கருணை, கல்வி, எவரையும்

வெல்லுதல், தேவரையும் விஞ்சுகின்ற திறமையுடைத்தாதல் உடையவனாகி, உலகப் பெருஞ் சக்கரவர்த்தியாக விளங்குவான் என்று தெரிந்தார்.

''குமாரனுக்கு முன்னதாகத் திருமணம் செய்வித்து விடுவோம்; அதன் பின்னர் மகுடாபிஷேகம் செய்வோம்!'' என்று திருவுள்ளம் கொண்டு, சுமதி முதலிட்ட மந்திரிகளோடு கூடி ஆராய்ந்தார்.

12. உக்கிர பாண்டியனுக்கு வேல் வளை செண்டு கொடுத்தது

உக்கிர குமாரருக்குத் திருமணம் செய்யக் கருதியுள்ளார் சுந்தரபாண்டியர் என்பதை உணர்ந்த மந்திரியர் மூதறிஞரோடு கூடி ஆராய்ந்தனர். விலத்திரு, சீரிய மரபு, உயர்குடிப் பிறப்பு, கீர்த்தி ஆனவற்றால் தம் அரசரிடம் சம்பந்தம் செய்யப் பொருத்தமும் தகுதியும் உள்ளவர் யார் என்பதைத் தேர்ந்தனர். முடிவாக வடநாட்டின் கண்ணே கல்யாணபுரம் என்ற பேரூரின் வேந்தனும், சூரிய குலத் தோன்றலுமாகிய சோமசேகரன் என்பவனிடத்துத் தோன்றிய காந்திமதி என்ற கன்னியா ரத்தினமே தகுதி என்று தெளிந்தனர்.

மதுரையம்பதியிலே மதி மந்திரியும் மூதறிஞரும் ஆராய்ந்து தெளிந்த அதே இரவிலே, கல்யாணபுரச் சோமசேகரன் திவ்யமான கனவு கண்டான். கனவினிலே சிவபெருமான் எழுந்தருளி, ''நராதிப! யாம் மதுரைச் சொக்கநாதர். நின் திருமகளாம் வடிவணங்கைச் சுந்தரபாண்டியன் திருக்குமாரன் உக்கிரனுக்குத் திருமணம் செய்து வைப்பாயாக!'' என்று கூறி மறைந்தருளினார்.



அம் மாதேவ மொழி கேட்ட சோமசேகரனின் உள்ளமும் முகமும் மலர்ந்து காட்டின. விழித்தெழுந்து கரங்குவித்துச் சிவபெருமானின் அருளின் எளிமையை எண்ணி எண்ணி வியந்து மகிழ்ந்தான்.

விடிந்ததும் தனது திருமகளுடனும் அமைச்சர்களுடனும், சேனைகள் சூழ மதுரை நகரை நோக்கிப் புறப்பட்டான்.

சுந்தர பாண்டியனின் உறவினரோடு அமைச்சர்களும் கல்யாணபுரம் நோக்கிப் புறப்பட்டு விட்டனர்- திருமணம் பேச! இருபுறத்தாரும் இடைவழியிலே சந்தித்துக் கொண்டனர். மதுரைக்காரர் சோமசேகரனைக் கண்டு, "முருகப் பெருமானை நிகர்த்த எங்கள் உக்கிரகுமாரருக்கு உங்கள் புதல்வியைத் திருமணம் செய்து தருவீராக!" என்றனர்.

அதுகேட்டுப் பெருமகிழ்வுற்ற சோமசேகரனும் தான் கண்ட இன்பக் கனவினை நவின்று, உடனே உடன்பாடு தெரிவித்தான். இந்த நல்விஷயத்தை முன்னர் சென்று அறிவிக்கத் தூதர்கள் மதுரை நோக்கி விரைந்தனர்.

பின்னர் அனைவரும் மதுரை வந்தடைந்தனர். சூரிய குலத் தோன்றலான சோமசேகரன் சந்திர குலத் தோன்றலான சுந்தர பாண்டியப் பெருமானை எதிர் சென்று பணிந்தான். சுந்தரர் சோமனைத் தழுவிக் கொண்ட பின், அழகுப் பெருமனை யொன்றிலே தங்குமாறு அனுப்பினார்.

திருமண நன்னாள் கணிக்கப் பெற்றது. மன்னர்கட் கெல்லாம் ஓலைகள் பறந்தன. திருமண விழாச் செய்தியை ஊரெங்கும் மண முரசு அறைந்து சொல்லியது. கமுகு, வாழை, முளைப்பாலிகை, நீர்நிறை பொற்குடம், தோரணம்,

கொடி முதலியன பொருந்தி வீடுகளும் வீதிகளும் வண்ணக் கோலம் பூண்டன. ஏற்கெனவே பொலிவு கொண்ட மதுராபுரி பன்மடங்கு பொலிவு கொண்டது.

சுந்தர பாண்டியனாரின் ஸ்ரீமுகம் பெற்ற வேற்று நாட்டு வேந்தர்கள், முனிவர் ஆகியோர் திருமணம் காண வந்தனர். சோழவேந்தன், கஜபதி, துரகபதி, நரபதி எல்லாரும் வந்தனர். சீனர் முதல் சாவகர் ஈறாக அயல் நாட்டு மன்னர்களும் வந்தனர். சைவத் தவ முனிவோரும், ஐவகைச் சைவரும், அறுவகைச் சமயத்தோரும் வந்தனர். மகாவிஷ்ணு, பிரம்மா, இந்திரன் முதலிட்ட தேவரும், பதினெட்டுக் கணத்தார்களும் வந்தனர். தடாதகைப் பிராட்டியாரையும் சுந்தர பாண்டியரையும் தரிசனம் செய்து வணங்கினர். சுந்தரபாண்டியரும் வந்த அனைவரையும் தக்கபடி ஏற்றுச் சிறப்புச் செய்தார்.

சோமசேகரனின் அரும் புதல்வி காந்திமதியின் எழிலினைக் கண்டு சுந்தர பாண்டியர் வியந்தார். அவர் வியந்து மகிழும் பாங்கினை உணர்ந்த வியாழ பகவான் சாமுத்திரிகா லட்சணத்தின்படி ஆராய்ந்து அங்குள்ளோர் யாவருக்கும் மங்கை நல்லாள் வடிவணங்கின் தன்மையைத் தெரிவித்து மகிழ்ந்தார். காந்திமதிக்கு ஒப்பான நங்கை எங்குமேயில்லை என்று தெரிந்தவர் எல்லாரும் உளம் பூரித்தனர்.

திருமண நன்னாள் வந்துற்றது. உக்கிர குமாரர் அஷ்ட மங்கலங்கள் சிறக்க யானையின் மீது கொணரப் பெற்ற வையை நீரிலே ஆடினார். திருமணக் கோலம்புனைந்தார். சங்கங்கள் முழங்க மணப்பொன் தவிசில் அமர்ந்தார்.

மணப்பெண் காந்திமதி திருமணக்கோலம் துலங்கக் குமாரரின் வலப்புறம் இடம் கொண்டார். காந்திமதியின் கரத்தினை ஏந்தி உக்கிர குமாரரின் கரத்தோடு பொருத்தி, தேவர் அரிய வேத மந்திரம் இயம்பித் தாரை வார்த்துக் கொடுத்தார்.

அதன் பின்னர் ஏராளமான பெருஞ்சிறப்புற்ற பொருள் களைச் சீர் வரிசைகளாக்கிச் சீதனமாகக் கொடுத்தார்.

பல்லியம் இயம்பின. தேவாகள் மலர் மாரி பொழிந்தனர். வேதகீத நாதம் எங்கும் பரவியது. நல்லோரையில் உக்கிரகுமாரர் காந்திமதிக்கு மாங்கல்ய தாரணம் செய்து திருமண வினைகள் ஆற்றினார்.

திருக்கல்யாண ஊர்வலம் மிகவும் சிறப்பாக ஆடல் பாடல்களுடன் இனிது நடந்தேறியது. நகர் வலம் வந்த உக்கிர குமாரர் தமது தேவியாரோடு இம்மையில் நன்மை தருவாரையும், சோமசுந்தரக் கடவுளையும் மீனாட்சி யம்மையையும் தரிசித்து, அரண்மனையை அடைந்தார். தம் பெற்றோரை வணங்கி எழுந்தார். பின்னர் வந்திருந்த அனைவரையும் தக்கபடி உபசரித்து விடையளித்து அனுப்பினார்.

நல்லாட்சி புரிந்து வருகின்ற காலம் ஒரு நாள் சுந்தரபாண்டியர் தனது குமார பாண்டியனை விளித்து, "மைந்தா! தேவேந்திரனும் கடல் வேந்தனும் உனக்குப் பெரிய பகைவர்கள். மகாமேரு மலை செருக்குற்று நிற்கிறது. ஆதலால் நீ இந்திரனது முடி சிதறுமாறு இந்த வளையினைக் கொண்டு எறிதல் வேண்டும்; கடல் வற்றிடும்படி இந்த வேலை விடல் வேண்டும்; மேருவின் தருக்குத் தகறும் வகையில் இந்தச் செண்டு கொண்டு அடித்தல் வேண்டும்!"

என்று மொழி பகன்று, வளை, வேல், செண்டு ஆன மூன்று ஆயுதங்களையும் தந்தருளினார். தந்தையாரைத் தொழுது முக்கலங்களையும் பெற்றுக் கொண்டார் உக்கிரகுமாரர். பின்பு சுந்தர பாண்டியர் வேதகோஷமும் பல்லியங்களும் ஒலிக்கத் தன் குமாரனுக்கு முடிசூட்டி உக்கிரபாண்டிய மன்னர் என்றாக்கினார்.

தமது ஆணையையும், அரசுரிமையையும், செங்கோலையும் குமாரனுக்கு அருளி, ''நெடுங்காலம் நீயும் தரும மார்க்கத்திலே, சத்திய மார்க்கத்திலே ஒழுகிச் செங்கோல் செலுத்துவாயாக!'' என்று வாழ்த்துரை அருளினார்.

அது சமயம் சிவகணத்தார் தமது பழைய வடிவங்களைப் பெற்றனர். சுந்தர பாண்டியப் பெருமான் தடாதகைத் தேவியாரோடு திருக்கோயில் சென்று எழுந்தருளியிருந்தார்.

உக்கிரகுமாரப் பெருவழுதி நான்மறை அறங்கள் ஓங்க, நற்றவம் வேள்வி மல்க, குறைவிலாது உயிர்கள் வாழ, மழை வளம் சுரக்க, மேன்மைகொள் சைவநீதி உலகமெலாம் விளங்கக் கோன்முறை அரசு செய்து வாழ்ந்து கொண்டிருந்தார்.

13. கடல் சுவற வேல் விட்டது

உக்கிரப் பெருவழுதி நல்லரசு செலுத்தி வந்த நாளிலே தருமங்கள் பலவும் செய்து புகழ் பரப்பி வந்தார். அசுவமேதயாகம் தொண்ணூற்றாறு செய்து முடித்தாகி விட்டது. தனது பதவிக்கு ஆபத்து நெருங்கிக் கொண்டு வருகிறது என்பதை உணர்ந்த தேவேந்திரன், உக்கிர பாண்டியன் மேல் கடுஞ்சினம் கொண்டான். பாண்டிய நாட்டில் மழை வளம் மிகுந்ததாலே பாண்டியன் இவ்வாறு வேள்விகள் செய்ய முடிகிறது என்பதையும் கண்டான்.

தேவர்கோன் சூழ்ச்சி செய்யலானான். உடனே சமுத்திர ராஜனாகிய வருணனை வரவழைத்து, ''பிரளய காலத்திலே உலகினை அழிக்க வல்ல கடலைப் போலக் கோபம் கொண்டு மதுரையை வளைத்து அழிப்பாயாக!'' என்று ஏவினான்.

மேலை விளைவுகள் அறியாப் பேதையான கடலரசனும் இந்திரன் கட்டளைப்படி செய்யத் துணிந்தான். வளம் பொருந்திய மாமதுரையை விரைவிலே சூழ்ந்து கொண்டு அழிக்கும் கருத்து வைத்தான். கடல் பொங்கி எழுந்தது. உயர்ந்த பேரலைகள் ஆர்ப்பரித்து ஓங்கின.

கடலரசன் தனது ஆமைப்படை, சுறாமீன் படை, அலைப் படைகள் முதலிய கொண்டு மதுராபுரியின் மீது படையெடுத்து வந்தான். மதுரைப்பதியின் கிழக்கே நெருங்கிப் பேரோசை புரிந்து கடல் பொங்கி வந்த நேரமோ நள்ளிரவு.



உக்கிர வழுதி உறங்கிக் கொண்டிருந்தார். சிவபெருமான் சித்தர் வேடம் தாங்கி, "மாறனே! உனது பேரூரை அழிக்கும் பொருட்டுக் கடல் பூரித்து வருகிறது. ஆகையால், நீ விரைந்து சென்று உனது வேலாயுதத்தை எறிந்து வெற்றி கொள்வாயாக!" என்று இயம்பியருளினார்.

உடனே உக்கிர பாண்டியர் தொழுது எழுந்தார். கண்ட கனவினை உணர்ந்தார். அமைச்சரோடு விரைந்து சென்றார். பொங்கிப் பெருகிப் பேரொலி செய்து வருகின்ற சமுத்திரத்தைக் கண்டு அளவற்ற ஆச்சரியம் அடைந்தார்.

கனவிலே தோற்றங் காட்டி அருளிய சித்தர் பெருமான் நனவிலும் நேரே தோன்றினார். "குமாரா! நீ தாமதம் செய்யாதே. உனக்குற்ற பெரும் பகையே இக் கடலுருவம் கொண்டு வந்திருக்கிறது. அதனுடைய ஆற்றல் அழியும் வண்ணம் உனது வேலினை எறிந்து உலகினைக் காப்பாயாக!" என்று மொழிந்தருளினார்.

சித்தர் மொழி கேட்ட உக்கிரபாண்டியர் தனது வேலாயுதத்தை எடுத்து வலஞ்சுழித்துக் கடல்மேல் எறிந்தார். அவ் வேற்படையின் நுனி கடலில் தொட்ட மாத்திரத்திலே, பழுக்கக் காய்ச்சிய இரும்பின் மேல் பட்ட சிறு நீர்த்துளி ஆவியாக மாறுவதை நிகர்த்து, கடல் சுறுசுறுவென்று சத்தமிட்டுக் கொண்டு வற்றி மிகவும் வலிமையிழந்து விட்டது. பெருங்கடல் பாண்டியன் கைவேலிடம் தோல்வியுற்றது. வேத வேள்வியைத் தடுத்து உலகினையே அழிக்கச் சூழ்ச்சி செய்த தேவராஜனின் எண்ணம் பலிக்கவில்லை.

அதுசமயம் உக்கிரவழுதியின் அருகிருந்த சித்தமூர்த்தியும் மறைந்தார். அதே கணம் சிவபெருமான் தமது

உமாதேவியாருடன் ரிஷப வாகனத்தோடு வானத்தில் நின்று காட்சி தந்தருளினார். அத் திருக்கோலம் கண்ட மாறனும் புவியில் வீழ்ந்து வணங்கினார்.

அஞ்சலி கூப்பியபடியே உக்கிரர் திருக்கோயிலை அடைந்து வணங்கினார். மாதர் அஷ்ட மங்கலங்களையும் ஏந்தி எதிர்வரத் தன் மாளிகையை மீண்டும் அடைந்தார். அதன் பின்னர் உக்கிரப் பெருவழுதி மதுரையம் பதிக்கும் கடலுக்கும் இடையேயுள்ள விளை நிலங்களையும் ஊர்கள் முதலியவற்றையும் சிவ பெருமானுக்கே உரிமையாக்கி நல்லாட்சி புரிந்து வரலானார்.

14. இந்திரன் முடிமேல் வளை எறிந்தது

உக்கிர பாண்டியப் பெருவழுதி செங்கோல் ஆட்சி செலுத்தி வந்த காலத்திலேயும் கோள் நிலை திரிந்தது. மாரிவறங் கூர்ந்தது. மேகங்கள் மழை பெய்யாது நின்றன. பயிர்கள் கருகின. சேர சோழ பாண்டியமென்னும் முத்தமிழ் நாடுகளிலும் வறுமைப் பிணி வாட்டி வதைத்தது.

அது கண்டு உளம் நொந்த முத்தமிழ் வேந்தரும் பரிகாரம் காணும் பொருட்டு அகஸ்திய மாமுனிவரைக் காணுமாறு பொதியமலையை அடைந்தனர். குறுமுனிவரிடம் தமது வறுமைக் கதையைக் கூறினர்.

அகஸ்தியர் கிரக நிலையை ஆராய்ந்தார். ''மூவேந்தர்களே! இனி மழை பொழிய வகையில்லை. கிரகாசாரப்படி பன்னிரண்டு வருஷங்களுக்கு மழையே பெய்யாது. ஆகையால் நீங்கள் மழைக்கதிபனாகிய தேவேந்திரனிடம் சென்று முறையிடுதலே நல்லது,'' என்றார்.



"தேவேந்திரனைக் கண்டு வரச் சுவர்க்கலோகத்திற்கு எவ்வாறு நாங்கள் செல்ல இயலும்?" என்று மூவேந்தரும் வினவினர்.

அப்போது அகஸ்திய மகரிஷி, "நீவிர் சோமவார விரதம் அனுஷ்டித்து வெள்ளியம்பலவாணரான நடராஜப் பெருமானின் திருவருள் பெற்று வான வழி செல்வீராக!" என்று மொழிந்தார்.

பின்னர் குறு முனிவர் சோமவார விரதம் நோற்கும் முறைகளைச் சாங்கோபாங்கமாக எடுத்து விளக்கத் தொடங்கினார். "சிறந்த தேவருள் சிறந்த தேவர் சிவ பெருமான். சிறந்த சக்திகளுள் சிறந்த சக்தி உமாதேவியாரே. சிறந்த விரதங்களுள் சிறந்து விளங்குவது சோமவார விரதமே. சோமவாரம் சோமசுந்தரக் கடவுளுக்கே உரிய நன்னாள். சிவபெருமான் உமையோடு இசைந்திருப்பதால் சோமன் என்று அழைக்கப்படுகிறார். மதுரையிலே இச்சோமவார விரதம் நோற்றல் சாலவும் நன்று. அமாவாசைச் சோமவாரமாக இருந்தால் பெரும் பயன் அளிக்கும்," என்று கூறி அம்மாமுனிவர் விரத வகைகளையும், செய்முறைகளை யும், முடிக்கும் முறையையும் விரித்துரைத்தார்.

சோமவார விரத மகிமையினை அகஸ்திய முனிவர் விளக்கம் செய்யக் கேட்ட முத்தமிழ் வேந்தரும் அவரை வணங்கி விடை பெற்று, சோமசுந்தர க்ஷேத்திரமாகிய மதுரையம்பதிக்கு வந்து சேர்ந்தனர். பொற்றாமரைத் திருக்குளத்திலே நீராடிய பின்னர் சோமசுந்தரப் பெருமானையும் மீனாக்ஷியம்மையையும் உளமாரத் துதித்து, சோமவார விரதத்தினை மேற்கொண்டு, அதனைச் செவ்வையாகச் செய்து முடித்தனர்.

விரதத்தின் பலனைப் பெற்ற சேர, சோழ பாண்டிய மன்னர் மூவரும் வான வழியே சென்று சுவர்க்கம் புகுந்து தேவேந்திர நகரை அடைந்தனர். தேவேந்திரன் முப்பெரு மன்னர் இருக்கும் பொருட்டு மூன்று சிங்காதனங்கள் இடச் செய்தான். அவர்களது ஆசனங்கள் தாழ்வானவையாக இருந்தன.

சேரனும் சோழனும் இட்ட அரியணையின் மீது அமர்ந்து விட்டனர். ஆனால் உக்கிரப் பெருவழுதி மட்டும் இருக்கையின் தாழ்ச்சியை உணர்ந்து இந்திரனது சிம்மாசனத்தில் ஏறி அவனுக்குச் சமமாக அமர்ந்து கொண்டார்.

இது கண்டு பொறாத தேவர்கோன் சேரனையும், சோழனையும் மட்டுமே நோக்கி முகமன் கூறி, ''வந்த காரியம் யாது?'' என வினவினான்.

அவர்கள் தமது நாட்டிலே மழையின்மையால் பஞ்சம் மலிந்தது தெரிவித்து, மழை வேண்டி நின்றனர். இந்திரன் மகிழ்ந்தான். அவ்விருவர் நாடுகளில் மட்டும் மழை பெய்ய அருளினான். அவர்கட்குப் பொன்னணி, நல்லாடை தந்து விடை கொடுத்தனுப்பினான்.

சேர, சோழ மன்னர்கள் சென்ற பின்பு, இந்திரன் உக்கிர பாண்டியன் கர்வத்தோடு தன்னருகே அமர்ந் திருப்பதையும், மேற்கொண்டு மழை வேண்டாதிருக்கும் பெருமிதத்தையும் உன்னிச் சூழ்ச்சியொன்று கருதினான். மிகவும் உயர்ந்த சிறப்புச் செய்பவனைப் போல, பல ஏவலர் தாங்கி வந்த முத்துமாலை ஒன்றைப் பாண்டியனுக்கு அன்புடன் கொடுத்தான்.

வழுதியும் அம்மாலையை ஏற்றுப் பூமாலையைப் போல அணிந்து கொண்டார். பெரும் பாரம் கொண்ட முத்துமாலையைத் தாங்கி வழுதியிருக்கும் பான்மை கண்ட இந்திரன் வியந்து, ''ஆரம் தாங்கு பாண்டியன்'' என்று அழைத்தான். உக்கிரவர்மர் அப்பெருமையைச் சிறிதேனும் இலட்சியம் செய்யவில்லை; மதுரையூருக்கு மீண்டு விட்டார்.

இந்திரன் ஆணையாலே சேரமும் சோழமும் மழை நிரம்பப் பெற்று வளமிக்கோங்கின. பாண்டியத்திலே மழைப் பொழிவையே காணோம். வற்கடம் நிலைத்தது.

உக்கிரப் பெருவழுதி ஒரு நாள் பொதிய மலையைச் சார்ந்த சந்தன வனத்திலே விலங்குகளை வேட்டையாடிக் கொண்டிருந்தார். அது சமயம் புஷ்கலா வருத்தம், சங்காரித்தம், துரோணர், காளமுகி என்ற நான்கு மேகங்களும் பொதிய மலையிலே தாழ்ந்து மேய்ந்து கொண்டிருத்தலைக் கண்ணுற்றார். உடனே அவற்றைப் பிடித்துக் கட்டி, விலங்கிட்டுக் கொண்டு சென்று, சிறைச்சாலையில் இடுவித்தார்.

இது தெரிந்த தேவர் கோன் கடுஞ்சினம் கொண்டு சமர் கருதிப் புறப்பட்டான். வரும் வழியிலே, மனிதன் ஒருவன் கடல் சுவற வேல் விட்டதையும், மிகவும் பாரமான ஆரத்தைத் தாங்கிய ஆற்றலையும் எண்ணி எண்ணி மனமுடைந்தான்.

உக்கிர வழுதியுடன் போர் தொடுக்கக் கருதித் தனது தேவப் படைகளோடு மதுரை மாநகரைச் சூழ்ந்து கொண்டான். பாண்டியனது ஒற்றர்கள் உடனே ஓடோடியும் வந்து வணங்கி

விஷயத்தைத் தெரிவித்தனர். உக்கிரவர்மர் சினமும் மானமும் மிகுந்தார். சதுரங்க சேனைகளுடன் போருக்குக் கிளம்பினார். தங்களோடு சண்டையிட வந்தவர் யார் என்று எண்ணிப் பாராத தேவர்கள் கோஷமிட்டு நெருங்கி வந்து ஆயுதங்களை வீசினர்.

தேவர் படைக்கும் பாண்டியர் படைக்கும் இடையே எழுந்த போர் கடுமையாகவும் அச்சம் விளைவிப்பதாகவும் இருந்தது. பேரிகை விளைவாகக் கூளிப் பேய்கள் தம் தலைவி கொற்றவையை வாழ்த்திக் களிக் கூத்தாடின. இந்திரன் சேனைகள் புறமுதுகு காட்டி ஓடின. இது கண்டு பொங்கிய இந்திரன் தெய்வப் படைகளை விடுத்தான்.

அனைத்தையும் எதிர்த்து முறித்தன பாண்டியன் படைகள். பின்னர் இந்திரனும் வழுதியும் மல்யுத்தம் புரிந்தனர். இந்திரன் தனது வச்சிராயுதத்தைப் பிரயோகம் செய்தான். உக்கிர பாண்டியரும் தன் கையிலிருந்த சக்ராயுதமான வளைப்படையைச் சுழற்றி வீசினார். வளை சென்று வச்சிராயுதத்தை எதிர்த் தொதுக்கிவிட்டு இந்திரனது முடியைத் தாக்கிக் கீழே வீழ்த்திச் சிதைத்து விட்டது. வெட்கமும் அச்சமும் உற்ற தேவர்கோன் ஓடினான். சிவபெருமான் திருவருள் இந்திரனது தலைக்கு வந்த ஆபத்தை முடியோடு போக்கியது.

பொன்னுலகில் புகுந்து கொண்ட இந்திரன் உக்கிர வழுதிக்குத் திருமுகம் ஒன்று வரைந்தனுப்பினான். அதிலே, ''பாண்டி நாட்டிற்கு மழை வளம் தருகிறேன். தளைப்பட்டுள்ள எனது நான்கு மேகங்களையும் விடுவிப்பாயாக,'' எனக் கோரியிருந்தான்.

ஸ்ரீமுகம் கொணர்ந்த தேவதூதன் வழுதியின் அடிபணிந்து ஒடுங்கி ஒதுங்கி ஓலையை நீட்டினான். அங்கிருந்தவன் ஓலையை வாங்கிப் படித்துக் காட்டினான்.

செவிமடுத்த பெருவழுதி இந்திரன் மேல் நம்பிக்கை கொள்ளவில்லை. மேகங்களை விடுவிக்க மனம் ஒப்பவில்லை. அது சமயம் அருகே இருந்த இந்திரனின் நண்பனான ஏகவீரன் என்ற வேளாளன், "பெருவழுதியே! நான் பிணையாக இருப்பேன்!" என்று கூறி வணங்கினான். வேளாளன் சொற்களை வேந்தர்கோன் நம்பினார். சிறைப்பட்ட நான்கு மேகங்களின் தளைகளை நீக்கச் செய்து விடுதலை வழங்கியருளினார். மேகங்கள் மேலெழுந்து சென்றன.

இந்திரனது ஆணையால் பின்னர் பாண்டிப் பெரு நாட்டிலே மாதம் மும்மாரி பொழிந்தது. ஆறு, குளம், ஏரி, வாவி, மடு முதலியன நீர் நிரம்பின. பாண்டி நன்னாடு பசுமை பெற்றுப் பொலிவுடன் துலங்கியது.

15. மேருவைச் செண்டால் அடித்தது

அகஸ்திய மஹரிஷி தனக்குச் சொன்ன சோமவார விரதத்தைத் தவறாது அனுஷ்டித்து வந்ததன் பயன் போல, உக்கிரவர்மரின் தேவியின் மணிவயிற்றிலே திருக்குமாரன் வந்து தோன்றினான். பிறந்த நன்னாளை மதுரைப்பதி சிறப்பாகக் கொண்டாடியது. சாதகன்மம் முதலிய விசேஷங்களைச் செய்து தன் மைந்தனுக்கு வீரபாண்டியன் என்று நாமகரணஞ் செய்தார், உக்கிரர். உற்ற வயதில் அம்மைந்தனும் கல்வி கேள்விகளில் சிறந்தவனாகிப் படைக்கலப் பயிற்சி பெற்றான். தனது அருமருந்தன்ன திருமகன் வளர்ச்சி கண்டு பெருமகிழ்வெய்தினார் பெருவழுதி.

அக்காலத்திலே கிரகங்கள் தத்தம் நிலைமாறி விட்டபடியால் மீண்டும் பாண்டிய நாட்டிலே மழை வளம் குன்றியது. நீர் நிலைகள் வறண்டன. வறுமை நோய் நாடு முழுவதையும் வருத்தியது. சோதிடரைக் கலந்தார் பாண்டிய மன்னர். ஓராண்டுக் காலம் மழை பொழியாது என்று தெரிந்தது. வழுதி பெரிதும் வருந்தினார்.

கவலை உள்ளத்தோடு சோமசுந்தரப் பெருமானின் சன்னதி சேர்ந்து, ''அண்ணலே! உயிர்கள் பசியால் வாடுகின்றனவே! என் செய்வேன்?'' என்று கண்ணீர் மல்கக் கூறி முறையிட்டார். பின்னர் எல்லையற்ற துன்பத்துடன் தன் மனைக்கேகினார்.

அன்றிரவு இன்னல் தோய்ந்த உள்ளத்தோடு தரையிலே நித்திரை செய்தார் பாண்டியர். சொக்கலிங்கப் பெருமான் சித்தராகக் கனவிலே வந்து, ''ஒளிபடைத்த வேலினாய்!



இப்போது மழை பெய்யாதாகையால் நீ வீணே வருந்த வேண்டாம். மலையரசனாய் விளங்கும் மகாமேரு பருவதத்தின் பக்கத்திலே பெரிய குகையொன்றினுள்ளே அளவற்ற பொருள் சேகரித்து வைக்கப்பட்டிருக்கின்றது. நீ சென்று மேருவின் தருக்கு ஒடுங்குமாறு செண்டால் அடிப்பாயாக. அது உன் ஆணைக்குக் கட்டுப்படும். பொன் பொதிந்துள்ள அறையின் மேலுள்ள பாறையை நீக்கி, வேண்டுகின்ற அளவுக்குப் பொன்னை வாரிக்கொள். பின்னர் அறை வாயை அடைத்துவிட்டு உனது இலச்சினையை அதன் மேல் பொறித்து வருவாயாக!'' என்று வாய்ச் சொல் அருளினார்.

உக்கிரர் அதிகாலையில் எழுந்து திருக்கோயில் சென்று சோமசுந்தரக் கடவுளை வணங்கினார். பின்னர்த் தனது சேனா சமுத்திரத்துடன் வட திசையை நோக்கிப் புறப்பட்டார். யானையின் மேலே மீனக்கொடி வீறுடன் பட்டொளி வீசிப் பறந்தது.

சோழம், தொண்டை, தெலுங்கம், கர்நாடகம், மாளவம், விராடம் முதலிய நாடுகளையும், இடையே குறுக்கிட்ட காடு, மலை, ஆறு, பாலை முதலானவற்றையும் கடந்து கங்காநதி தீரத்திலுள்ள காசி மாநகரை அடைந்தார். கங்கையில் ஸ்நானம் செய்து விசுவநாதரை வணங்கி விடைபெற்றார்.

கொடிய விலங்குகள் வாழும் காடுகள் தாண்டி, பல யோசனை தூரம் பரவியிருந்த பல கண்டங்களைத் தாண்டி, இமயம் கிம்புருட கண்டம், ஹேமகூடம்- அரிவருஷ கண்டம், நிஷதம்- இலாவிருத கண்டம் ஆனவற்றைத் தாண்டி, இறுதியாக மகாமேரு பர்வதத்தைக் கண்டார் உக்கிரபாண்டியர்.

உக்கிரப் பெருவழுதி மேருமலையைப் பார்த்து, ''மலையரசே! தெய்மலையே! தேவர் ஆலயமே!'' என்றெல்லாம் புகழ்ந்து விளித்தார். வாராமல் மேரு காலங்கடத்தியது. அதனது அலட்சியம் தெரிந்த பாண்டியர் தனது கையிலிருந்த செண்டினால் மேருவின் உச்சியிலே உரம் கொண்டு அடித்தார். வழுதியின் கோபம் தீர்ந்தது. மேருவின் கர்வமும் ஒழிந்தது.

அசையாப் பெருமலை அசைந்து துடித்தது. அதனகத்தே யிருந்த அனைத்தும் நிலை குலைந்தன. அடியுண்ட பின்னர் நான்கு முகங்களோடும், எட்டுக் கரங்களோடும், வெண்குடை தாங்கிய உருவங் கொண்டு மேருமலைத் தெய்வம் வழுதி முன் வந்து வெட்கி நின்றது. சோமசுந்தரப் பெருமானை வணங்க மறந்ததனால்தான் அன்று அடிபட்டதைத் தெரிவித்து, ''வந்த காரணம் யாதோ?'' என்று வேண்டியது.

பாண்டியர்கோன், ''யாம் பொருளை விருமபி வந்தோம்!'' என மொழிந்தார்.

மகிழ்வுற்ற மேருத் தெய்வம், ''அண்ணலே! விரும்பிய மாற்றுயர்ந்த செம்பொன் அந்த மாமரத்தின் நிழலின் கீழ் ஒரு பிலத்துள்ளே பாறையால் மூடப்பட்டுள்ளது. வேண்டிய அளவு எடுத்துக் கொள்க!'' என்று தன் கரம் சுட்டிக் காட்டியது.

பாண்டியரும் மாவின் கீழிருந்த பொன் பொதிந்த பிலத்தருகே சென்று, மூடிய பாறையை நீக்கித் தனது ஆசை தீரப் பேரளவு பொன்னை வாரி யெடுத்துக் கொண்ட பின், முன் போலவே மூடிவைத்து, எஞ்சியிருந்த பொன்னும் தன்னது எனக் கருதி, அதன் மேல் தனது பெயரையும், முத்திரையையும் பொறித்தார்.

மீளவும் தனது சேனைகள் புடைசூழப் பெருவழுதி மதுரையம்பதிக்குக் கோலாகலத்துடன் திரும்பிவந்தார். எல்லாரும் நல்வாழ்த்துக் கூறி வரவேற்றனர். பாண்டியர் திருக்கோவில் சென்று ஈசுவரனையும் ஈசுவரியையும் வணங்கி விட்டு அரண்மனை சேர்ந்தார்.

மேருமலை அளித்த பொற்குன்றம் பாண்டியக் குடி மக்களுக்குப் பசையளித்துக் காத்தது. கிரகங்களும் மீண்டும் தங்கள் பெரிய நிலை அடைந்தன. நாடு முழுவதும் மழை பொழிந்ததால் நல்வளம் பெருகியது. பசி நீங்கிய உயிர்கள் தழைத்தோங்கின.

இவ்வாறாக ஆரம் தாங்கு பாண்டியர் ஆட்சி புரிந்து, தனது திருக் குமாரன் வீரபாண்டியனுக்கு முடி சூட்டினார். அரசுரிமையை நல்கிப் பின்னர் சச்சிதானந்தப் பெருமான் சோமசுந்தரக் கடவுளின் திருவடியிலே இரண்டறக் கலந்து கொண்டார் உக்கிர பாண்டியர்.

16. வேதத்துக்குப் பொருள் அருளியது

கண்வ மகரிஷியும், கர்க்க மகரிஷியும் நைமிசாரணிய வாசிகள். அவர்களும் மற்றும் பல முனிவர்களும் வேதங்களை முறைப்படி பல முறை ஓதி வந்தனர். ஆனால், ஓதி வந்தாலும் வேதங்களின் உட்பொருளை அறியாது மயங்கி உள்ளமும் முகமும் வாடியிருந்தனர்.

அது சமயம் அரபத்தர் என்ற முனிவர் அங்கே வந்தார். அவர் ஆணவ மலத்தினை அறவே ஒழித்த புனிதர். வந்தவரை எதிர்கொண்டு ஏற்றனர் முனிவர்கள். முனிவர்கள் வாடியிருப்பதன் காரணத்தை வினவினார் அரபத்தர்.

''முனிபுங்கவரே! வேதத்தின் உட்பொருள் எங்கட்கு உணர்த்தும் குருநாதன் இல்லாமல் மருட்சி கொண்டுள்ளோம். ஆலோசனை எதுவோ?'' என்று கூறினர்.

அரபத்த மாமுனிவர் மொழியலானார்: ''ரிஷிகளே! வேதத்தை அருளிச் செய்த சிவபெருமானே அருளுருவம் கொண்டு வேதப் பொருளை உணர்த்துவது அன்றி வேறு வழி ஏது? புண்ணிய க்ஷேத்திரங்களிலே சிறந்த க்ஷேத்திரங்களுள் உத்தமோத்தமமான சிவக்ஷேத்திரமான மதுரையம்பதியே தவத்துக்குரிய ஸ்தலம். ஏனெனில் மதுரைப் பெரும் பதியானது விராட் புருஷனுடைய பிரம மந்திரத்திற்கும் மேலே பன்னிரண்டு அங்குலம் உயர்ந்து விளங்கித் துவாதசாந்த க்ஷேத்திரம் என்று பெருமையாக மதிக்கப் படுவது. சோமசுந்தரக் கடவுள் கோவில் கொண்டருளும் இந்திர விமானத்தின் தென்பாங்கிலே கல்லால மரத்தினடியில் இருந்ததனை இருந்தபடி இருந்து காட்டும் தட்சிணாமூர்த்தி எழுந்தருளியுள்ளார். அத்தகைமைசால்



தட்சிணாமூர்த்தியே உமக்கு வேதப் பொருளை உணர்த்தி அருளுவார். நீவிர் அவரது சன்னதி சேர்ந்து தவம் புரியுங்கள்.''

அதனைக் கேட்டு மகிழ்ந்த கண்ணுவாதி முனிவரவர்கள் மதுரை சேர்ந்தனர். பொற்றாமரைத் திருக்குளத்திலே தூய்மை பெற நீராடினர். பக்தி பெருகத் திருக்கோவிலுள் சென்று சொக்கநாதரையும் மீனாட்சியம்மையையும் வணங்கி வலம் வந்து தட்சிணாமூர்த்தியின் திருமுன் அடைந்தனர்.

அங்கு நளி ஆல நிழலின் கீழ் நற்புதுமை கண்டனர். கற்பவர் கன கிழவர். பொற்பவிரும் ஆசிரியன் பாலன்! அறிவிப்பவன் மோனத்தால், மாசிரியும் சீடர் மனத்து! சின்முத்திரை காட்டும் பரமாசாரியராகிய தட்சிணாமூர்த்தியின் முன்பு வீழ்ந்து துதித்தனர். பின்னர் அரபத்த முனிவர் அருளியபடி மேதா மந்திரத்தை நாள்தோறும் நன்னேரத்தில் ஓதி வந்தனர். கிருத்திகா பௌர்ணமி தொடங்கி மறு கிருத்திகா பௌர்ணமி வரை ஒரு வருஷ காலம் ஜபம் செய்தனர். ஹோமம் பிராமண போஜனம் முதலியனவும் செய்து கொண்டு வந்தனர்.

ஆல்கெழு கடவுள் தட்சிணாமூர்த்தி கருணை கொண்டார். முனிவர்களது உள்ளம் பக்குவம் பெற்றதுணர்ந்து மகிழ்ந்தார். பதினாறு வயது நிரம்பிய பிராமண குரு வடிவம் தாங்கி முப்பத்திரண்டு இலட்சணங்கள் விளங்க எழுந்தருளினார். நெற்றியில் திருநீறு துலங்கியது. திரு மார்பில் பூணூல் இனம் காட்டியது. திருக்கழுத்திலிருந்து உருத்திராட்ச மாலைகள் தொங்கின. வலக்கையில் தூய்மையான பவித்திரமும், இடக் கையில் ''சிவஞான போதம்'' எழுதிய ஓலைச் சுவடியும் விளங்கின. யாவரும் போற்றும் பழம் பொருள் எளிய வந்து காட்சி தந்து நின்றருளினார்.

ஆசாரியக் கடவுளை எதிரே கண்ட முனிவர்கள் வணங்கி நின்று, ''கலாநிதியே! வேதார்த்தமாகி விளங்கும் வேத மூர்த்தியே! அடைக்கலம் புகுந்தோம்!'' என்று சொல்லினர்.

பின்னர், ''ஞான குருவே! அடியராகிய நாங்களும் அகில உலகத்தாரும் உய்யும் வகையில் வேதப் பொருளை உபதேசித்தருள வேண்டும்,'' என்று மிகுந்த பணிவுடன் விண்ணப்பித்துக் கொண்டனர்.

கருணாநிதியாகிய பேராசிரியர் முனிவர்களை உடன் அழைத்துக் கொண்டு சிவலிங்கத்தின் திருமுன் சென்று வேதப் பொருள் உரைத்தருள்வாராயினர்.

''சுயம்புவாகி, உத்தமோத்தமமாகி, தத்துவ வடிவமாகி விளங்கும் இச்சொக்கலிங்கமே நித்திய வேதத்தின் ஆதி காரணப் பொருள்.. சுத்தாத்வைத சுயம்பிரகாசப் பொருள், சாஸ்திரங்கள் பராபரன், விஞ்ஞானன், நிராமயன் என்று புகழ்வது எல்லாம் பரப்பிரம்மமாகிய இத் திருமூர்த்தியேதான். இம் மூர்த்தியின் திருவுருவமே வேதம். வேதப் பொருள் சிவலிங்கமே யாகும்! சிவலிங்கம் வேறு, வேதம் வேறல்ல!''

பின்னர் குருநாதர் சிவலிங்க தத்துவத்தையும், அகார, உகார, மகார, விந்து நாத உண்மைகளையும், காயத்ரீ, சமஷ்டி, வியஷ்டி ஆனவற்றின் விளக்கங்களையும் இயம்பியருளினார். சிவாகமங்கள் இருபத்தெட்டும் ரிக், யஜுஸ், சாமம், அதர்வம் என்னும் நான்கு வேதங்களும், கரும ஞான காண்டங்கள் ஆகியனவும் உற்பத்தியான தன்மையை விளக்கியருளினார். நித்திய, நைமித்திய, காமிய கருமங்கள் மூன்றினையும் சிவபெருமான் திருமுன்

இயற்றினால் பெறற்கரிய வீடு பேறான மோக்ஷத்தையே சிவபெருமான் தந்தருள்வார் என்று திருவாய் மலர்ந்தருளினார்.

வேதத்துட்பொருளை விளங்க உரைத்த பரம குருநாதர் அருட் கனிவுடன் கண்ணுவாதி முனிவர்களைத் தமது அருட்கரத்தால் தடவிக் கொடுத்தார். பின்னர்ச் சிவலிங்கத்திற்குள் மறைந்தருளினார்.

17. மாணிக்கம் விற்றது

வீரபாண்டிய வேந்தனுக்குக் காமக்கிளத்தியர் பலர் இருந்தனர். அவர்களிடத்தே பேரழகு வாய்ந்த புதல்வர் பலர் பிறந்தும், குலப் பயிருக்குக் களை போல வளர்ந்தனர். தனது குல மனைவியினிடம் குழந்தை தோன்றாதது கண்ட பாண்டியன் மிகவும் வருந்தினான். ஆதலால் மன்னவனும் அவனது பட்ட மகிஷியும் அஷ்டமி, சதுர்த்தி, சோமவாரம் என்னும் சில விரதங்களை அனுஷ்டித்தனர்.

சில நாட்கள் சென்ற பின், நன் மகன் ஒருவன் தோன்றினான். வேதம் சொன்னபடி தன் சுகுமாரனுக்கு எல்லா விசேஷங்களையும் முறைப்படி செய்து முடித்தான். செல்வனும் எழிலோங்க வளர்ந்து வந்தான். ஒரு நாள் வேட்டையாடச் சென்ற காட்டிலே வீரபாண்டியன் புலியால் கொல்லப்பட்டான்.

வீரபாண்டியன் இறந்தது கேட்ட அனைவரும் வருத்தப்பட்டனர். அதுதான் சமயம் என்று நினைத்த காமக் கிளத்தியரின் புதல்வர் யானை, குதிரை, பல்வகைப் பொருள்கள், பொன் நகைகள், இரத்தினங்கள்



எல்லாவற்றையும் எடுத்துக் கொண்டு ஓடி மறைந்தனர். மந்திரியர் ஆலோசனை செய்து காலமான வீரபாண்டியனது அந்திமக் கிரியைகளை இளங்குமாரனைக் கொண்டு செய்து முடித்தனர்.

பாண்டியகுமாரனுக்குத் திருமுடி சூட்ட நினைத்த மந்திரிகள் பொக்கிஷத்தைத் திறந்து பார்த்தபோது திகைப்படைந்தார்கள். நவரத்தினங்கள் பதித்த பொன் முடியும், மற்றும் சில அதிமுக்கியமான பொருள்களும் அங்கே காணாமல் வருந்தினர். காமக் கிளத்தியரின் மக்களே களவாடிச் சென்றிருக்க வேண்டுமெனத் தெரிந்தனர்.

''சிறந்ததான மணிமுடி இன்னும் ஒன்று செய்யக் கருதினால் சிறந்த பெரிய மணிகள் இல்லை! மகுடம் இல்லாது போனால் சிம்மாசனம் இல்லை! பின்னர் அரசியல் இல்லை! என்ன செய்வது?'' என்று ஏங்கித் தவித்தார்கள். மந்திரிமார் சிவபெருமானைத் தரிசித்து அவருடைய திருவருளைத் தெரிந்து கொள்ளலாம் என்று நினைத்து ராஜகுமாரனுடன் திருக்கோவிலின் வாசலை அடைந்தார்கள்.

அச்சமயம் சோமசுந்தரக் கடவுளே இரத்தின வியாபாரியைப் போல வேஷந் தரித்துக் கொண்டு கோபுர வாசலில் வந்து நின்றார். அவருடைய தோளின் மேல் இரத்தினங்கள் கொண்ட மூட்டை இருந்தது.

அந்தத் தெய்வ இரத்தின வியாபாரி மந்திரிகளைப் பார்த்து, ''நீங்கள் எதற்காகக் கவலைப்படுகின்றீர்கள்?'' என்று கேட்டார்.

மந்திரிகளும் தங்கள் பட்டத்துக்குரிய ராஜகுமாரன் கிரீடம் புனைவதற்கு முடியாதிருப்பதைத் தெரிவித்தார்கள்.

''நீங்கள் கவலையை விட்டு விடுங்கள். என்னிடம் ஒன்பது வகையான இரத்தினங்களும் இருக்கின்றன. அவை

எல்லாம் பதினாறு கோடிப் பொன் விலையுள்ளவை. இதோ, மாணிக்கம் காட்டுகிறேன்,'' என்று சொல்லிவிட்டு, அந்த வியாபாரி கருப்புக் கம்பளியைக் கீழே விரித்து, அதிலே நடுவாக மாணிக்கக் கல்லை வைத்து, அதைச் சுற்றிவர எட்டுத் திக்குகளிலும் எட்டு வகையான இரத்தினங்களை வைத்தார். பார்த்தவர்கள் ஆச்சரியப்பட்டுக் கொண்டிருக்கும்போதே, ''இந்த நவரத்தினங்கள் யாவும் வலன் என்ற அசுரனுடைய உடம்பின் பகுதிகள்,'' என்று சொன்னார். மந்திரிகள் பெருத்த ஆச்சரியம் அடைந்து வலனைப் பற்றிய விவரங்கள் கேட்டனர்.

வணிகப் பெருமான் மந்திரிகளைப் பார்த்து, ''அசுர குலத்தில் பிறந்தவன் சிவ பக்தன். அவனது பூஜையில் சந்தோஷப்பட்ட சிவபெருமான் அவன் முன்னால் தோன்றி, ''என்ன வரம் வேண்டும்?'' என்று கேட்டார். தான் சண்டையிலே இறந்து போகக் கூடாது என்றும், எதேச்சையாகத் தான் இறந்து போனால் தன்னுடைய உடம்பின் பகுதிகள் எல்லாரும் ஆசைப்படும்படியான நவரத்தினங்களாக வேண்டும் என்றும் வரம் கேட்டான். சிவபெருமான் அருளினார். உடனேயே வலன் தேவலோகம் சென்றான். இந்திரனை எதிர்த்துச் சண்டை செய்தான். இந்திரன் தோற்று ஓடிப் போனான். ஆனால் வேறு வழியில் சதி செய்து வலாசுரனைக் கொல்ல நினைத்தான். திரும்பவும் யானையின் மேல் ஏறிவந்து, ''உன்னுடைய வீரத்தையும் வெற்றியையும் மெச்சுகிறேன். உனக்கு என்ன வரம் வேண்டும்? கேள், தருகிறேன்,'' என்றான் இந்திரன். வலாசுரன் இடியைப் போலச் சிரித்துவிட்டு, ''சிவ பெருமானிடமே வரம் பெற்றிருக்கும் நான் உன்னிடம் வரம் வேண்ட மாட்டேன். உனக்கு ஏதாவது வேண்டுமானால் கேள், தருகிறேன்,'' என்று எதிர் சொன்னான். தனது சூழ்ச்சி பலிக்கும் நேரம் வந்து விட்டதை உணர்ந்தான் இந்திரன்.

"வல்லாசுரனே! சிவபெருமான் இருக்கும் வெள்ளியங்கிரிச் சாரலை அடைந்து நான் பெரிய யாகம் செய்யப் போகிறேன். நீ யாகப் பசுவாக உடனே வர வேண்டும்," என்று சொல்லி விட்டான். இந்திரன் விரும்பியதைக் கேட்டான், வலாசுரன். "நீ என்னுடைய பகையாளி அல்ல; என்னுடைய நண்பன். தேவர்களே என்னைப் புசிப்பார்கள். எனக்குப் புகழோடு புண்ணியமும் கிடைக்கும். அப்படியே வருகின்றேன்," என்று இணங்கிவிட்டான்.

தனது மகனுக்குப் பட்டம் கட்டிவிட்டு விரைவாகச் சென்று நல்ல லட்சணங்கள் கொண்ட பசுவாகி, யாகசாலை யிலே நின்றான். வலாசுரப் பசு கொல்லப்பட்டது. அந்தப் பசுவின் வபையை வச்சிராயுதத்தால் எடுத்து, இந்திரன் யாகத் தீயில் ஆகுதி செய்து தேவர்களைச் சந்தோஷப்படுத்தினான். இந்திரனுடைய சூழ்ச்சி வெற்றி பெற்று விட்டது.

யாகப் பசுவாக வந்து உயிர் கொடுத்த உத்தம வள்ளல் வலாசுரனுடைய இரத்தமே மாணிக்கம் ஆனது. பற்கள் முத்துக்கள் ஆயின. மயிர் வைடூரியம் ஆயிற்று. எலும்பு வைரம் ஆயிற்று. கொழுப்பு கோமேதகம் ஆயிற்று. தசை பவளம் ஆயிற்று. கண்கள் இரண்டும் நீல மணிகள் ஆகின. கோழை புஷ்பராகம் ஆயிற்று. இவை அனைத்தும் சிவபெருமானுக்குப் பிடித்தமானவை என்று கூறினார்.

பின்பு நவரத்தினங்கள் தோன்றும் இடங்களையும், அவைகளுடைய நிறங்களையும், இனங்களையும், தெய்வங்களையும், பிரகாசத்தையும், நல்ல இரத்தினங்களை உடம்பிலே போட்டுக் கொண்டால் ஏற்படும் பலனையும் விரிவாக விளக்கிக் கூறினார் தேவ வியாபாரி.

பிறகு வடக்குத் திசையைப் பார்த்து உட்கார்ந்துகொண்டு, நவரத்தினங்களைப் பூஜை செய்து, எல்லாவற்றையும்

கையில் எடுத்துக் கொண்டு, சோமசுந்தரக் கடவுளை அஞ்சலி செய்து, ''ராஜகுமாரனுக்கு அளவற்ற ஆயுதமும் ஐசுவரியமும் ஓங்குக!'' என்று வாழ்த்திக் கொடுத்தார்.

ராஜகுமாரனும் சொக்கலிங்கப் பெருமானை வணங்கி, இருகைகளாலும் இரத்தினங்களை வாங்கிக் கொண்டான்.

அப்போது வணிகப் பெருமான், ''இந்த நவரத்தினங் களைக் கொண்டு புதிதான கிரீடம் செய்து குமாரனுக்கு முடிசூட்டி 'அபிஷேக பாண்டியன்' என்று பெயர் இடுங்கள்,'' என்று சொன்னார். மந்திரிகள் நவரத்தினங்களுக்கு விலை கொடுக்க வருவதற்குள்ளாக இரத்தின வியாபாரியைக் காணோம். எல்லாரும் திகைத்து நின்றபோது, வணிகப் பெருமான் உமாதேவியாருடன் ரிஷப வாகனத்தின் மேல் ஏறிக் கோவிலுக்குள் போவதைப் பார்த்தார்கள். வியாபாரி யாக வந்தவர் சிவபெருமானே என்று தெரிந்து கொண்டதும், எல்லாரும் கோவிலுக்குள் சென்று ஈசுவரனையும் ஈசுவரியை யும் வழிபட்டனர்.

நவ மாமணிகளைக் கொண்டு திறமையாகச் செய்யப் பட்ட புதுக் கிரீடத்தைச் சிறந்த நல்ல நாளிலே ராஜ குமாரனுக்கு வைத்து, ''அபிஷேக பாண்டியன்'' என்று பெயர் விளங்கச் சொல்லிப் பட்டாபிஷேகம் செய்தனர்.

அபிஷேக பாண்டியன் தனது வீரத்தால் பகைவர்களை வென்றான். தனது கருணையால் உலகை ஆட்சி செய்தான். அரண்மனைப் பொக்கிஷத்திலிருந்து களவாடப்பட்ட பொருள்களையும் மீட்டுக் கொண்டான். களவாடினவர் களுக்குக் கடுமையான தண்டனை விதித்தான்.

18. வருணன் விட்ட கடலை வற்றச் செய்தது

சித்ரா பௌர்ணமிதோறும் அபிஷேக பாண்டியன் சொக்கலிங்கப் பெருமானுக்கு அதி விசேஷமான பூஜைகளைச் செய்வது வழக்கம். பச்சைக் கர்ப்பூர நன்னீரால் அபிஷேகம் செய்து, ''கர்ப்பூர சுந்தரேசா!'' என்று சொல்லித் துதி செய்வான்.

அதே சித்ரா பௌர்ணமி இரவிலேதான் இந்திரனும் பூஜை செய்ய வருவது வழக்கம். அபிஷேக பாண்டியன் பூஜை செய்து முடிக்கும் வரையிலும் தாமதித்துக் காத்திருந்து பிற்பாடு அவன் தன் பூஜையை முடித்துச் செல்ல வேண்டியதாயிற்று.

ஒரு வருஷம் இப்படி நடந்த சமயத்தில், வருணன் இந்திரனைப் பார்க்கச் சென்றான். ''தேவேந்திரா! இன்று நீ வருத்தத்தோடு இருக்கக் காரணம் என்ன?'' என்று கேட்டான்.

''மதுரைச் சொக்கநாதரைப் பூஜை செய்வதிலே பாண்டியனால் தாமதம் ஏற்பட்டுவிட்டது. அதனால்தான் கொஞ்சம் கவலை,'' என்றான், இந்திரன்.

''சொக்கலிங்கம்தான் எல்லா லிங்கங்களைக் காட்டிலும் சிறந்ததோ?'' என்று கேட்டான் வருணன்.

உடனே இந்திரன், ''வருணா! அன்று என்னுடைய பிரம்ம ஹத்தி தோஷத்தையும், வெள்ளை யானையின் சாபத்தையும் போக்கி அருள் புரிந்தது சொக்கலிங்க மூர்த்திதானே! இது உனக்குத் தெரியாதா?'' என்றான்.



''அப்படியானால் என்னை வருத்தப்படுத்துகின்ற பெரிய வயிற்று நீர் நோயைச் சொக்கலிங்கம் தீர்த்து வைப்பாரா?'' என்று கேட்டான் வருணன்.

''பிறவி நோய்த் தீர்க்கவல்ல சிவபெருமான் உனது வயிற்று நோயையா தீர்க்க மாட்டார்? வேண்டுமானால் எம்பெருமானின் சக்தியைச் சோதித்துப் பார். பிறகு அவரது திருவிளையாடலை நீயே நன்றாகத் தெரிந்து கொள்வாய்,'' என்று பதில் சொன்னான் இந்திரன். வருணன் விடைபெற்றுச் சென்றான்.

மதுரைச் சொக்கலிங்கப் பெருமானின் திருவிளை யாடலைக் கண்டு, தன்னுடைய வயிற்று நீர் வியாதியை ஒழித்துவிட் எண்ணினான் வருணன். உடனே கடலைக் கூப்பிட்டு மதுரை நகரத்தை அழித்து வரும்படியாக ஏவி விட்டான். கடல் குமுறிக்கொண்டு பொங்கி எழுந்தது. ஆரவாரம் செய்து மரங்களை வேரோடு பிடுங்கி எறிந்தது.

பிரளய காலமே வந்துவிட்டதோ என்று எண்ணும்படி சூழ்ந்து வந்தது கடல். வருணனது சூழ்ச்சியைத் தெரிந்து கொள்ள மாட்டாத தேவர்கள் பிரம்ம கல்பத்திலும் அழிவடையாத மதுரையம்பதியும் அழிவடைந்து விடுமோ என்று பயந்தனர். கலக்கமடைந்த மனதோடு சோமசுந்தரக் கடவுளை வணங்கினார்கள்.

மதுரை மக்கள், 'இது சொக்கநாதர் திருவிளையாடலா? அல்லது நாம் செய்த பாவத்தின் பலனா?' என்று மனம் தடுமாறினர். அபிஷேக பாண்டியனும் செய்வது இன்னது என்று புரியாமல் திருக்கோவிலுக்குள் சென்று, ''எம்பெருமான் திருவடிகளே புகல்! ஓலம், ஓலம்!'' என்று கதறினான்.

உடனே சோமசுந்தரக் கடவுள் முன்தோன்றி, "பயப்பட வேண்டாம், பாண்டியா!" என்று புன்னகையுடன் மொழிந் தருளினார். பிறகு தன்னுடைய ஜடாமகுடத்திலிருந்த நான்கு மேகங்களையும் பார்த்து, "நீங்கள் விரைவாகச் சென்று மதுரை நகரத்தை அழிக்க வந்து கொண்டிருக்கும் கடலை அது வற்றிப் போகும்படி நன்றாக உறிஞ்சி விடுங்கள்," என்று ஆணையிட்டருளினார்.

மேகங்கள் நான்கும் எழுந்து முழங்கிப் புறப்பட்டன. சென்று பொங்குமாங் கடலை வற்றிப் போகும்படி நீரை உறிஞ்சிக் குடித்து விட்டன. நீர் வற்றிய கடல் சிவபெருமானே முழு முதற் காரண புராதனன் என்று தெளிவாகத் தெரிந்துகொண்டது. மதுரை நகரம் பிழைத்தது.

தேவர்கள், அபிஷேக பாண்டியன், நகர மக்கள் எல்லாரும் சோமசுந்தரக் கடவுளின் திருவிளையாடலைப் பாராட்டியவாறு மிகுந்த சந்தோஷத்துடன் தங்கள் இடம் சென்றனர்.

மதுரைக் காண்டம் முற்றிற்று.

19. நான்மாடக் கூடல் ஆனது

வருணன் தனது வலிமை குறைந்தது கண்டு மிகவும் வெட்கப்பட்டான். கண்கள் சிவந்தன. கோபத் தீ அவனைக் காய்த்தது. அவன் இன்னம் சோமசுந்தரப் பெருமானின் திருவிளையாடலைத் தெரிந்து கொள்ளவில்லை. ஆதலால், மீண்டும் தன்னுடைய ஏழு மேகங்களையும் கூப்பிட்டு மழை பெய்து மதுரையை அழிக்குமாறு ஏவிவிட்டான்.

ஏழு மேகங்களும் விரைவாகக் கிளம்பின. கருத்த உருவங்கொண்டு மேலே எழுந்தன, மேகங்கள். மின்னலை விசிறின. திக்குகளும் ஆகாயமும் அதிர்ச்சி அடையும்படி இடித்து முழங்கின. பெரிய பெரிய ஆலங்கட்டிகள் விழுந்தன. பளிங்குத் தூணைப் போல மழைத் தாரைகள் கொட்டின. சப்த மேகங்களும் கூடி வானை மறைத்தன. பெரிய புயல் காற்று சுழன்று சுழன்று வீசியடித்தது. மதுரை மாநகரம் மேகங்களால் முற்றுகையிடப்பட்டது.

அபிஷேக பாண்டியனும் மதுரை மக்களும் 'இன்றே உலகம் அழிந்து விடும்!' என்று நினைத்து மனம் கலங்கி வாட்டமடைந்தார்கள். ''நம்மை எல்லாம் காத்தருள வல்லவர் சிவபெருமானே!'' என்று தெளிவடைந்து, மக்கள் உடன் வர, அபிஷேக பாண்டியன் திருக்கோவிலுக்குச் சென்றான். எம்பெருமான் திருவடியில் விழுந்து காக்கும்படி கெஞ்சி வேண்டினான்.

சோமசுந்தரக் கடவுள் உடனே தனது சடைமுடியிலுள்ள நான்கு மேகங்களையும் பார்த்து, ''நீங்கள் சென்று இம் மதுரையம்பதியின் நான்கு எல்லைகளையும் சூழ்ந்து கொள்ளுங்கள். நான்கு மாடங்களைப் போல் அமைந்து ஏழு



மேகங்களையும் விலக்கி விடுங்கள்,'' என்று ஆணை யிட்டருளினார்.

நான்கு மேகங்களும் இறைவன் திருவாணை தாங்கி உடனே புறப்பட்டன. மதுரையின் நான்கு திசைகளிலும் சூழ்ந்து வளைந்து கொண்டன. இடைச் சந்து தெரியா வண்ணம், ஊரிலுள்ள மாடங்களையும் கோபுரங்களையும் தூண்களாகக் கொண்டு, ஒன்று சேர்ந்து, மதுரை மாநகரத்தை ஒரு பெரிய கூடாரத்தைப் போல் மூடிக் கொண்டு விட்டன.

பாண்டியனும் மக்களும் பெரிய சந்தோஷம் கொண்டனர். மலையுச்சியிலே பெய்யும் மழைத் துளிகள் உடைபட்டுச் சிதறிப் போவது போல, சிவபெருமான் அனுப்பிய மேகங்கள் சேர்ந்து செய்த மாடத்தின் மீது மழைத்துளிகள் உடைந்து சிதறின. வருணன் விடுத்த மேகங்கள் வறண்டு விட்டன. வருண தேவன் தோல்வியடைந்து நிரம்ப வெட்கமடைந்தான்.

வெட்கம் அடைந்து நின்ற வருணன் பயத்தால் மிகவும் நடுநடுங்கினான். அவனது மானம் ஒடுங்கி விட்டது. ஆனாலும் அவனது மனத்துக்குள்ளே உள்ளூர ஒரு சந்தோஷம் ஏற்பட்டது. பொற்றாமரைத் தீர்த்தக் கரையை அடைந்தான். அதை அடைவதற்கு முன்பாகவே அவனுடைய வயிற்று நீர் வியாதி நீங்கி விட்டது.

வருணன் பொற்றாமரைக் குளத்திலே ஸ்நானம் செய்து முடித்துச் சோமசுந்தரக் கடவுளைப் பூசிக்க எண்ணினான். மிகுந்த ப்யபக்தியோடு விபூதி, உருத்திராட்ச மாலை எல்லாம் போட்டுக் கொண்டான். கங்கை முதலான மாதர்கள் தங்கக் குடங்களிலே வாசனை கலந்த திருமஞ்சன நீர் கொண்டு வந்து

கொடுத்தனர். கற்பகத் தரு நல்ல பூக்கள், சந்தனம், வாசனைத் திரவியங்கள், இரத்தினங்கள் பதித்த தங்கப் பாத்திரங்கள், பொன்னாடை எல்லாம் எடுத்துக் கொடுத்தது.

காமதேனு ஐந்து வகையான பழங்கள், பஞ்சாமிர்தம், பஞ்சகவ்யம், நைவேத்தியம், தூபம், தீபம் எல்லாம் எடுத்துக் கொடுத்தது.

வருணன் சோமசுந்தரப் பெருமானை முறை தவறாதபடி பூஜை செய்தான். இறைவனது ஆயிரம் திருப்பெயர்களைச் சொல்லி முத்துக்களால் திருவடிகளில் அர்ச்சனை செய்து வணங்கி நின்றான்.

வருணனது வழிபாட்டிலே கடவுள் திருவுளம் மகிழ்ந்தார். ''வருணா! உனக்கு என்ன வேண்டும்?'' என்று வினவி யருளினார்.

வருணன், ''மணி மந்திர ஔஷதங்களால் போகாத எனது வியாதி தங்களது திவ்ய தீர்த்தத்திலே நீராடுவதற்கு முன்பே போய் விட்டது. தங்கள் அருமை பெருமைகளை அறியாத பேதை நான் தங்களைச் சோதனை செய்யத் துணிவு கொண்டேன். குணங்கெட்டவனான என்னிடமும் கருணை காட்டினீர்கள். இந்த அறிவு கெட்டவன் சோதனை செய்ததெல்லாம் நோய்க்கு மருந்தாகி விட்டது. எனது ஆணவம் நீங்கி விட்டது. தங்கள் திருவருளால் எனக்கு உரிய காலத்தில் மோட்சம் கிடைத்து விடும். எனக்கு இனி எதுவும் வேண்டாம். இந்தப் பொற்றாமரைத் தீர்த்தத்தில் ஸ்நானம் செய்தாலே எல்லா வியாதிகளும் நீங்கி விடும். எளியேன் செய்த பிழைகளைப் பொறுத்தருள வேண்டும்,'' என்று கூறிப் பலமுறை வணங்கி வரங்கள் வாங்கிச் சென்றான்.

நான்கு மேகங்கள் மலைபோல உயர்ந்து நான்கு மாடங்களாகக் கூடியதால் மதுரையம்பதி அன்றிலிருந்து 'நான்மாடக் கூடல்' என்று பெயர் பெற்றது.


20. எல்லாம் வல்ல சித்தர் ஆனது

நவரத்தினங்கள் பதித்த மணிமுடி சூடிய அபிஷேக பாண்டியனும், பாண்டிய நாட்டில் இருப்பவர்களும் இகத்திலும் பரத்திலும் எல்லா வகையான நன்மைகளையும் அடைய வேண்டும் என்று சோமசுந்தரப் பெருமான் திருவுள்ளம் கொண்டார். ஆதலால், சித்த புருஷரைப் போலத் திருவுருவங் கொண்டருளினார்.

நீண்ட சடை முடியும், நெற்றியிலே திருநீறும், புலித் தோல் உடையும், தங்கம் கட்டிய பிரம்பு ஏந்திய திருக்கரமும்- விபூதிப் பையும் விளங்க, நல்ல அழகும் இள வயதும் கொண்ட சித்த புருஷராகத் தோன்றியருளினார் பெருமான்.

மதுரை மாநகரக் கடைவீதி, சித்திரக்கூடம், நாற்சந்தி, நிலா முற்றம், மாளிகை, மாடம், திண்ணை ஆகிய எல்லா இடங்களிலும் தோன்றினார். தெற்கே இருப்பார் போலக் காட்டி வடக்கே இருப்பார். கிழக்கே தோன்றியிருந்து மேற்கே காட்சி தந்திடுவார். தேடத் தேடக் காணாதவராகித் திடீரென்று இந்திர ஜாலம் போல மறைவார்.

வெகு தூரத்திலுள்ள மலையை வெகு அருகில் வரவழைப்பார். வயதானவர்களை வாலிபர்கள் ஆக்குவார். சிறியவர்களைக் கிழவராக்குவார். ஆண்களைப் பெண்களாக்குவார். பெண்களை ஆண்களாக்குவார்.



கூனர்கள், குருடர்கள், செவிடர்கள், ஊமைகள், முடவர்கள் எல்லாருடைய உடல் குறைகளையும் போக்கிச் சரியாக்கி விடுவார். இரும்பு, ஈயம், தாமிரம், வெள்ளி என்னும் நான்கு உலோகங்களையும் பொன்னாக மாற்றிவிடுவார்.

சித்தர் புரிந்து காட்டிய விளையாடல்கள் பல வகையானவை. ஆகர்ஷணம், அதிரிச்சியம், அஞ்சனம், வசியம், வாதம் புயஸ்தம்பம் ஆகியவற்றைச் செய்து காட்டினார். படிப்பே இல்லாதவருக்கு வாயிலே விபூதியைப் போட்டுப் பண்டிதராக்கி விடுவார். சகல லோகத்திலுள்ள பொருள்களை யெல்லாம் மதுரைக்குக் கொண்டு வருவார். இப்படியாக அளவிட முடியாத சித்து வித்தைகளை மதுரையம்பதியிலே புரிந்தருளினார். ஆணழகனான சோமசுந்தர சித்தமூர்த்தியின் திருவிளையாடல்களைக் கண்ட மதுரை மக்கள் பெரும் திகைப்பு அடைந்திருந்தார்கள்.

இந்தச் சித்து நிகழ்ச்சிகளையும் சித்தர் வல்லமையையும் தெரிந்து கொண்டான் அபிஷேக பாண்டியன். அருகேயிருந்த சேவகர்களை நோக்கி, ''வித்தகம் நிரம்பிய சித்தப் பெருமானை இங்கு அழைத்து வாருங்கள்!'' என்று ஆணையிட்டான்.

ஆணைபெற்ற ஏவலாளர்கள் சித்தரிடம் சென்றார்கள். ஆனால், அங்கே சென்று அவர் செய்த திருவிளையாடலைப் பார்த்து ஆச்சரியம் அடைந்து தங்களையும் மறந்து அங்கேயே இருந்து விட்டார்கள்.

வேலைக்காரர்கள் வராததைக் கண்ட பாண்டிய மன்னன், தன்னுடைய மந்திரிகளை அனுப்பி வைத்தான். மந்திரிமார் சித்தரைக் கண்டு வணங்கினார்கள்.

''சித்தர் பெருமானே! தாங்கள் எங்கள் அரசர் முன்பு எழுந்தருள வேண்டும்!'' என்று கெஞ்சிக் கேட்டுக் கொண்டார்கள்.

''உங்கள் மன்னனால் எனக்கு ஒரு பிரயோசனமும் இல்லை, நான் வர முடியாது!'' என்று மறுப்புச் சொல்லிவிட்டார் சித்தர். மந்திரிகளும் வணங்கி ஏமாந்த மனதுடன் வந்த வழி திரும்பினார்கள். அரசனிடம்போய்ச் சித்த மூர்த்திகளின் பதிலைச் சொன்னார்கள்.

அபிஷேக பாண்டியன் இது கேட்டான். ''கடவுளின் திருவருள் பெற்று இகபர சுகங்களை வெறுத்த சித்தர்கள் மகாவிஷ்ணு, பிரம்மா, இந்திரன் ஆகியவர்களையே மதிக்க மாட்டார்களே! பூவுலக அரசனாகிய என்னையா மதிப்பார்கள்?'' என்று மந்திரிகளிடம் சொல்லிவிட்டுச் சும்மா இருந்தான்.

காட்டுவதே என்னுடைய வேலை. மதுரை மக்களுக்குச் சித்துகள் காட்டி அவர்கள் விரும்புவதை அருள் புரிவோம். வேதம், கலைஞானங்கள் எல்லாம் எமக்குத் தெரியும். நான் உன்னிடம் பெற்றுக் கொள்ள வேண்டியது ஒன்றுமில்லை, பாண்டியா!'' என மொழிந்தார், சித்தர்- புன்னகையுடன்.

சித்தரின் கம்பீரமான பதிலைக் கேட்டு அவரது கருவத்தையும் வல்லமையையும் சோதிக்க விரும்பினான் பாண்டியன். அந்தச் சமயம் பார்த்து வேளாளன் ஒருவன் வளமாகப் பருத்து வளர்ந்திருந்த ஒரு கரும்பைக் கொணர்ந்து முன் வைத்து வணக்கம் செலுத்தினான்.

பாண்டியன் அந்தக் கரும்பைத் தன் கையில் வாங்கிக் கொண்டான். உடனே சித்த மூர்த்தியைப் பார்த்து, ''வல்லவர்களுக்கெல்லாம் வல்லவர் என்று மதித்துக் கொண்டவரே! இதோ, பக்கத்திலுள்ள கல் யானைக்கு இந்தக் கரும்பை எடுத்துத் தின்ன வைத்து விட்டீர்களானால் எல்லாம் வல்ல சித்தர் தாங்கள்தாம்; சோமசுந்தரக் கடவுளும் தாங்கள்தாம். தாங்கள் விரும்பியதைக் கொடுப்பேன்,'' என்றான்.

சித்தர் புன்னகை செய்தார். ''மன்னவா! எமக்கு உன்னால் பயன் ஒன்றும் இல்லை. எல்லா வித்தைகளையும் அறிந்துள்ள எமக்கு எதிலுமே ஆசை கிடையாது. இதோ, இந்தக் கல் யானை கரும்பைக் கடித்துத் தின்பதைப் பார்,'' என்றார். சித்தர் பெருமான் கல் யானையின் மீது கடைக்கண் பார்வை செலுத்தி அருளினார். என்ன அற்புதம்! கல் யானை கண் திறந்தது; துதிக்கையை நீட்டியது; பாண்டியன் கைக் கரும்பைப் பற்றித் தனது வாய்க்குள் செலுத்திச் சாறு ஒழுகும்படிக்குக் கடித்துத் தின்றது. துதிக்கையை இங்குமங்கும் ஆட்டிக் கொண்டு நின்றது.

மறுபடியும் சித்த மூர்த்திப் பெருமான் யானையைக் கடைக்கணித்தார். உடனே யானை தனது துதிக்கையை வீசிப் பாண்டியன் கழுத்தில் போட்டுக் கொண்டிருந்த மணிமாலையை எட்டிப் பிடித்தது. மன்னனின் மெய்க் காவலர்கள் கோபங்கொண்டு யானையை அடிப்பதற்காகப் பிரம்பை ஓங்கிக் கொண்டு வந்தனர்.

சித்தர் யானையைக் கோபத்தோடு பார்த்தார். உடனே கல் யானை மாலையை விழுங்கி விட்டது. பாண்டியன் பெருங்கோபம் கொண்டான். மெய்க் காவலர்கள் மன்னன் கோபத்தை அறிந்ததும் சித்தர் பெருமானையே அடிக்க வந்துவிட்டனர். புன்னகை மலர்ந்த திருமுகத்தோடு, ''நில்லுங்கள்!'' என்றார் சித்தர். காவலர்கள் உடனே சிலை உருவம் போல அப்படியே ஆடாமல் அசையாமல் நின்று விட்டார்கள்.

அந்த அற்புத நிகழ்ச்சியைக் கண்ட பாண்டியனுக்குக் கோபம் விலகி விட்டது. பக்தி நிரம்ப ஏற்பட்டது. சித்தமூர்த்திப் பெருமானின் திருவடிகளில் தன் முடி சேர்த்து வணங்கினான்.

''மாயையால் மயங்கிப் பாசத்தால் கட்டுப்பட்டதாலே எளியேன் செய்த அபசாரக் குற்றத்தைப் பொறுக்க வேண்டும்; மன்னித்தருள வேண்டும்,'' என்று முறையிட்டுக் கொண்டான்.

கருணைக் கடலாகிய மூர்த்திகள் சந்தோஷம் அடைந்தார். ''உனக்கு வேண்டும் வரத்தைக் கேள்; தருவோம்,'' என்றார்.

அபிஷேக பாண்டிய அரசன் உடனே வணங்கி, ''பெருமானே! எளியேனுக்கு நல்ல குமாரன் பிறக்கும்படி அருள வேண்டுகிறேன்,'' என்று விண்ணப்பித்தான்.

சித்தர் பெருமான், "அப்படியே ஆகட்டும்," என்று நல் வரம் தந்தருளினார். பின்னர் யானையின் மேலே தனது திருக்கையை வைத்துக் கடைக்கண் செலுத்தினார். யானை தனது துதிக்கையை நீட்டிப் பாண்டியனிடம் அவனது கண்ட மாலையைக் கொடுத்து விட்டது. பாண்டியன் கையேந்தி மாலையை வாங்கினான். வாங்கி நிமிர்வதற்குள்ளாகச் சித்தமூர்த்தி மறைந்து விட்டார். யானையும் தனது பழைய நிலைமையை அடைந்து மீண்டும் கல்லானையாகி விட்டது.

பேரற்புதத்தைக் கண்ட பாண்டிய மன்னன் பயந்து, இந்தத் திருவிளையாடல் சோமசுந்தரப் பெருமானுடைய திருவிளையாடல்தான் என்பதைத் தெரிந்து கொண்டு விட்டான். திருக்கோயில் கருவறைக்குள்ளே சென்று சொக்கலிங்கப் பெருமானைப் பணிந்து புகழ்ந்தான். இறைவனைச் சோதிக்கத் துணிந்த தனது புத்திக் கேட்டை எண்ணி அபராதம் செலுத்தினான்.

சித்த மூர்த்திப் பெருமான் அருளிய நல்வரத்தின் பயனாக அபிஷேக பாண்டியனுக்குப் புதல்வன் பிறந்தான். விக்கிரமன் என்று நாமகரணம் செய்து, பெருவீரனாக்கி வளர்த்தான். உரிய காலத்திலே தன் மகனுக்குப் பட்டாபிஷேகம் செய்தான். சின்னாட்கள் சென்று சிவபரஞ் ஜோதியில் இரண்டற ஐக்கியமாகி விட்டான்.


22. யானை எய்தது

விக்கிரம பாண்டியன் புவி முழுவதும் தன் புகழ் பரவும்படிக்கு நல்லாட்சி செய்து வந்தான். வேத, சிவாகம நெறியைக் கடைப்பிடித்துச் செங்கோல் செலுத்தி வந்தான். புத்தம், சமணம் ஆன புறச் சமயங்களை ஒழித்தெறிந்தான். பக்தி நெறி எங்கும் தழைத்தோங்கியது. திருக்கோயில் இந்திர விமானத்துக்குச் சற்று வடக்கே திருக்கோவில் எடுப்பித்துச் சித்த மூர்த்திகளின் திருவுருவத்தைப் பிரதிஷ்டை செய்து வழிபட்டு வந்தான்.

வீர பாண்டியனது பெருஞ் சிறப்பையும் வீர மரபையும் கண்ட சூரிய குலச் சோழனானவன் பொறாமைப்பட்டான். சமண மதத்தைச் சார்ந்திருந்ததினாலே சைவ மதத்தைச் சார்ந்த விக்கிரம பாண்டியனைப் பகைத்தான். பல முறை நேரிலே எதிர்த்துப் போராடியும், சோழ வேந்தன் தோல்வியே கண்டு ஓடினான். ஆதலால், சூழ்ச்சி செய்து பாண்டியனைக் கொல்லத் துணிந்தான்.

எண்ணியது செய்யத்-துணிந்த சோழன் அஞ்சனம் ஆகிய எட்டு மலைக் குகைகளில் வாழ்ந்த சமணக் குரவர்கள் எட்டாயிரம் பேர்களுக்கும் ஓலை எழுதி அனுப்பினான். ஓலையைப் பெற்றதும் சமணர்கள் அனைவரும் சோழனைக் காணக் காஞ்சி மாநகரத்தை நோக்கி வேகமாக வந்து சேர்ந்தனர்.

சோழவேந்தன் அந்த முனிவர்களைப் பார்த்து, ''வசியம் முதலிய அறுதொழிலில் வல்லவர்களே! நீங்கள் அபிசார ஹோமம் செய்து விக்கிரம பாண்டியனைக் கொல்ல வேண்டும். அப்படிச் செய்தால் எனது இராச்சியத்தில் பாதியை உங்களுக்குக் கொடுப்பேன்,'' என்று சொன்னான்.



சமண முனிவர்களும் சோழனது விருப்பத்திற்கு உடன்பட்டனர். பாலி என்ற ஆற்றின் கரையிலே மூன்று காதம் பரப்புக் கொண்ட பெரிய யாக சாலையை அமைத்தார்கள். அந்த நிலத்திற்கு நடுவிலே ஒரு யோசனை சதுரத்திற்கு நிலத்தைத் தோண்டினார்கள். அதற்கு நடுவிலே அஷ்ட கோணமான ஹோமகுண்டம் ஒன்றை அமைத்தனர். அகோரமான முறையிலே அபிசாரம் செய்ய ஆரம்பித்தனர். குண்டத்திலே எட்டியைப் போல விஷக் கட்டைகளை இட்டுத் தீ வளர்த்தனர். வேம்பு நெய்யுடன் விஷ ஜந்துக்களின் கொழுப்பினையும் தசையையும் கலந்து ஆகுதி செய்தனர். கொடிய நச்சு வேள்வி கோரமாக நடைபெற்றது. விஷ யாகத்தை விஷமிகள் செய்தனர்.

யாகத்தின் விளைவாகப் பெரிய கரிய யானை ஒன்று எழுந்து வெளிவந்தது. நீல நிறமான மலை யொன்றே புறப்பட்டது போலிருந்தது. யானையின் தோற்றமும் அளவும் மிகுந்த பயத்தைத் தந்தன.

அந்தக் கொல் யானையைப் பார்த்துச் சமணாகள், "நீ வேகமாகச் சென்று விக்கிரம பாண்டியனையும் அவனது மதுரை ஊரையும் அழித்து விடுவாய்!" என்று கூறித் தெற்குத் திக்கை நோக்கி அது போகும்படிக்கு ஏவினார்கள். யானை இடி முழக்கம் செய்து, நிலம் அதிர விரைந்து மதுரை நோக்கிப் புறப்பட்டது. யானையுடன் கூடவே சோழனது சைனியங்களும், சமணர்களும் சென்றனர்.

மதுரை மாநகரம் நோக்கி மாபெரும் யானையொன்று கடுகி வருவது தெரிந்த மாந்தர் மன்னன் விக்கிரமனிடம் சென்று சேதி சொல்லினர். மனம் கலங்கிய பாண்டியன் திருக்கோவில் சென்று சோமசுந்தரப் பெருமானைப்

பலமுறை வணங்கி, ''பெருமானே! யானையைக் கொன்று அடியேனைக் காத்தருள வேண்டும்,'' என்று விண்ணப்பம் செய்தான்.

''பாண்டிய! யாம் வில்லேந்திய வீரனாக வருவோம்; கொடிய யானையைக் கொல்வோம்; நகருக்குப் பக்கத்திலே கிழக்குத் திசையில் அட்டாலை மண்டபம் ஒன்று அமைத்திடுக,'' என்று ஆகாயத்திலிருந்து திருக்குரல் எழுந்தது. அதைக் கேட்ட பாண்டியன் வணங்கினான். விரைந்து சென்றான். பதினாறு தூண்கள் தாங்கிய அட்டாலை மண்டபத்தையும் அமையச் செய்தான்.

சோமசுந்தரப் பெருமான் வில் வீரனைப் போல் வெளிப்பட்டார். அவரது குடுமியிலே மயில் தோகை செருகியிருந்தது. சிவப்பு நிறமான கச்சை இடுப்பிலே இலங்கியது. பக்கத்திலே உடைவாள் விளங்கியது. முதுகிலே அம்புறைத்தூணி இருந்தது. தோளிலே நீண்ட வில் இருந்தது. கருப்பு நிறத்தோடு, யௌவனக் காமனைப் போல அழகு கொண்டு கம்பீரமாக மண்டபத்தின் மேலேறி நின்றார். அபிசார ஹோம யானையின் வருகை எதிர்பார்த்திருந்தார். கூப்பிடு தூரங்கள் ஐந்திலே அந்த யானை வருவதைக் கண்டுவிட்டார் திருவேடர்.

உடனே வில்லிலே அம்பு பொருத்தி வளைத்துவிட்டார் தெய்வ வேடர். அவர் பூட்டியது நரசிங்கக் கணை. அம்பு விரைந்து சீறிச் சென்று, மேகம் போல முழங்கிக் கொண்டு வந்த யானையின் மத்தகத்தைக் கிழித்தது. கொடிய கொல்யானை பயங்கரமாகப் பிளிறிக் கொண்டு தரையிலே சாய்ந்தது. யான்ன இறந்து போனதைக் கண்ட சமணர்கள் பெரும் துன்பத்தில் ஆழ்ந்தனர்.

சாய்ந்து கிடந்த யானை இருள் மலையை ஒத்திருந்தது. அம்பு பாய்ந்த இடத்திலிருந்தும், அதன் வாயிலிருந்தும் அருவி போல் இரத்தம் பெருக்கெடுத்து ஓடியது.

யானை இறந்து விட்டதைக் கண்ட விக்கிரம பாண்டியன் எல்லையற்ற சந்தோஷம் அடைந்தான். ஆனால், சோழனது படையினரையும், அவர்கள் பின்னே பேய்க் கூட்டம்போல வந்துகொண்டிருந்த சமண முனிவர்களையும் கண்டு பொங்கி எழுந்தான். அவர்களை யெல்லாம் பாண்டிய வீரர்கள் சரியான முறையில் தாக்கித் தண்டித்து அனுப்பி விட்டனர்.

யானையை அம்பெய்து கொன்று அட்டாலை மண்டபத்தில் வில்லேந்திய சேவகனாகி நின்ற சோமசுந்தரப் பெருமானின் இரண்டு திருவடிகளையும் தன் கைகளால் பிடித்துக் கொண்டு வணங்கினான், பாண்டியன். சில வரங்களைப் பெற்றுத் தனது அரண்மனையை அடைந்தான்.

சில நாட்களில் விக்கிரம பாண்டியனுக்கு மகன் ஒருவன் பிறந்தான். தன் அழகுக் குமாரனுக்கு இராஜசேகரன் என்று பெயரிட்டு, மிகவும் செல்வமாக வளர்த்து வந்தான். மிகுந்த பரிவுடன் புவியை ஆண்டு வந்தான்.

23. விருத்த குமார பாலர் ஆனது

விக்கிரம பாண்டியன் சிறந்த முறையில் ஆட்சி புரிந்து வந்த காலத்திலே, மதுரை மாநகரத்திலே விரூபாக்ஷன் என்ற வேதியன் ஒருவன் வாழ்ந்து வந்தான். அவனுக்குக் கற்பிலே சிறந்த சுபவிரதை என்ற மனைவி இருந்தாள். பல ஆண்டுகளாகக் குழந்தை பிறக்காததால் இருவரும் சேர்ந்து பல சிவதருமங்களைச் செய்தனர்; விரதங்களை அனுஷ்டித்தனர். இவ்வாறாக அருந்தவம் புரிந்ததாலே அவர்களுக்குப் பெண் குழந்தையொன்று பிறந்தது. குழந்தைக்குக் கௌரி என்று பெயரிட்டுப் போற்றி வளர்த்து வந்தார்கள்.

கௌரிக்கு ஐந்து வயதாயிற்று. அந்தச் சிறு வயதிலேயே அவள் பிறவி நோயைப் போக்குவதற்கான உயர்ந்த வழியை ஆராயத் தொடங்கினாள். தனது தகப்பனாரிடம் சென்று, ''தந்தையே! இந்தப் பிறவியை ஒழிக்கும் திவ்ய மந்திரம் எதுவோ?'' என்று வினாவினாள்.

விரூபாக்ஷன் வியப்படைந்தான். மிகுந்த சந்தோஷத்தோடு தன் மகளுக்குப் பராசக்தி மகா மந்திரத்தைப் பேரன்புடன் உபதேசம் செய்தான். இது கேட்டுணர்ந்த கௌரியும் மகாமந்திரத்தை மிகுந்த பயபக்தி சிரத்தையுடன் ஜபம் செய்து கொண்டு வந்தாள்.

வயது ஏறஏறக் கௌரியும் எழில் மிகுந்தவளாகிப் பூரித்து வளர்ந்து வந்தாள். கல்யாண வயதும் வந்து விட்டது. தன் அருமைக் குமாரியின் மணத்தின் பொருட்டு நல்ல வரனை எதிர் நோக்கியிருந்தான் விரூபாக்ஷன். இப்படியிருந்த காலத்தில் அயலூர்ப் பிரம்மசாரியொருவன் பிச்சையெடுத்துக் கொண்டு வந்தான். அவன் ஒரு வைஷ்ணவப் பிரம்மசாரி.



அவனுக்குத் தன்து மகளைக் கொடுக்க விருப்பங் கொண்டான் விரூபாக்ஷன். யாரையும் கலந்து ஆலோசிக்காமல் வைணவப் பிரம்மசாரிக்குத் தன் மகள் கௌரியைக் கன்யா தானம் செய்து கொடுக்கத் துணிந்து விட்டான். எதையும் ஆராய்ந்து பார்க்காமல் தன் மகள் கௌரியைத் தாரை வார்ப்பதைக் கண்ட சுபவிரதையும் சொந்தக்காரர்களும் மிகுந்த கவலை கொண்டனர். ''விதியின் செயலே!'' என்று எண்ணி வருந்தினர்.

பிரம்மசாரியின் குலம், கோத்திரம், சூத்திரம் எல்லாவற்றையும் ஆராய்ந்ததில் எல்லாம் ஒத்திருந்தன; ஆனால் மதம்தான் வைஷ்ணவமாக இருந்தது. குற்றம் என்றால் அது ஒன்றுதான் இருந்தது.

இதனைத் தெரிந்த சுபவிரதையும் சொந்தக்காரரும் ஒருவாறாக ஒப்புக் கொண்டனர். வேதநீதிக்கு உட்பட்டு விவாகம் நடந்தேறியது. பிற்பாடு பற்பல சிறந்த சீர்வரிசைகளுடன் தன் மகள் கௌரியை அவளது மணவாளனோடு அவனது ஊருக்கு அனுப்பி வைத்தான் விரூபாக்ஷன்.

வைஷ்ணவப் பிராமணன் மனைவி கௌரியுடன் வீடு சென்றான். வைஷ்ணவப் பெற்றோர் மகனின் செய்கை கண்டு வாட்டமுற்றனர். சிவக்கோலம் கொண்டு சிவ சிந்தனையுடன் துலங்கிய கௌரியின் மீது மிகுந்த வெறுப்புக் கொண்டனர். அவளை ஒதுக்கி வைத்தனர்.

ஒருநாள் அவர்கள் எல்லாரும் பக்கத்து ஊருக்கு ஒரு கல்யாணத்திற்காகச் செல்ல வேண்டி வந்தது. வீட்டிலே கௌரியைத் தனியே விட்டு விட்டுப் பூட்டிக் கொண்டு

போய்விட்டனர். தனியே விடப்பட்ட கௌரி பலவாறாக எண்ணமிட்டாள். குற்றம் நீங்குமாறு ஒரு சிவனடியாரையும் காணமுடியவில்லையே என்று ஏங்கினாள். பெருங்கவலை கொண்டிருந்தாள்.

தனது அருமைப் பக்தையின் கவலையைப் போக்கத் திருவுள்ளம் கொண்டார் சோமசுந்தரப் பெருமான். உடனே சைவக் கிழவர் போன்ற உருவம் கொண்டார். சிவச் சின்னங்கள் சிறந்து விளங்க விருத்த வேதியரான சிவபெருமான் கௌரியின் வீட்டுக்குள்ளே வந்து புகுந்தார்.

கௌரி மிகுந்த அன்புடன் அவ் வந்தண முதியவரை வரவேற்று உபசரித்தாள். வேதியர் தாம் பசியோடு வந்திருப்பதைத் தெரிவித்தார். வீடு பூட்டப் பட்டிருப்பதைப் பற்றிக் கௌரி பெரிதும் வருந்தினாள். இது கண்ட கிழவர், "நீ தொட்டால் பூட்டு திறந்து கொள்ளும்," என்று பரிவுடன் அருளினார். கிழவர் சொன்னபடியே நடந்தது. அடுக்களையில் சென்ற கௌரி அமுது சமைத்துக் கிழவருக்கு இட ஆயத்தமானாள். சைவக் கிழவருக்கு ஏற்ற சிறந்த உபசாரங்களை யெல்லாம் செய்து மிகுந்த அக்கறையுடன் அமுது படைத்தாள்.

வேதக் கிழவர் திருவமுது செய்தருளினார். அமுதுண்ட கிழவர் மூப்பு நீங்கப் பெற்றார்! என்ன விந்தை! மன்மதனைப் பழிக்கச் செய்யும் பேரழகுடன் நல்ல கட்டுடைய வாலிபனாக மாறி நின்றார். வெண்ணீறு சந்தனமாயிற்று; உருத்திராட்ச மாலை நல்ல பொன் மணி மாலையாக மாறியது. அந்த யௌவனக் கோலத்தைக் கண்ட கௌரி-கற்பிற் சிறந்தவள் ஆகையால்- திகைத்தாள். மனம் பதைக்க, உடல் வியர்க்க, மிகுந்த பயத்துடன் நடுங்கிப்போய் ஒரு பக்கமாக ஒதுங்கி நின்றாள்.

அந்தச் சமயம் பார்த்து அயலூர் சென்றிருந்த கௌரியின் மாமியும் சொந்தக்காரரும் திரும்பிவிட்டனர். பதினாறு வயதுடன் விளங்கிய அந்தணப் பெருமான் உடனே பச்சைக் குழந்தையாக மாறிவிட்டான். ஆடையின் மேல் கிடந்தது சிவக் குழந்தை. குழந்தை அழத் தொடங்கியது.

பரபரப்புடன் உள்ளே புகுந்த கௌரியின் மாமி குழந்தையைக் கண்டாள்; திகைப்புக் கொண்டாள். தன் மருமகளைப் பார்த்து, "ஏது இந்தக் குழந்தை?" என்று சினத்துடன் வினவினாள்.

அதற்குக் கௌரி, "தேவதத்தன் என்னும் அந்தணன் தனது மனைவியோடு இங்கே வந்தான். குழந்தையைப் பார்த்துக் கொள்ளுமாறு சொல்லிவிட்டுப் போனான்," என்றாள்.

இதனைக் கேட்ட வைணவராகிய மாமியும் மாமனும் பொறுமையும் கருணையும் இழந்தவர்களானார்கள். "சைவக் குழந்தையின் மேல் அன்பு கொண்டவளே! நீ எங்களுக்கு வேண்டாதவள் இந்தக் குழந்தையையும் எடுத்துக் கொண்டு வீட்டை விட்டு வெளியேறி விடு," என்று கோபத்துடன் சொல்லி அவளைக் குழந்தையும் கையுமாகத் துரத்தி விட்டனர்.

வெளியேறிய கௌரி ஒன்றும் தெரியாதவளாகி மனம் கலங்கினாள். தாயற்ற குழந்தையின் திருமுகம் பார்த்துத் தளர்ந்தாள். சோமசுந்தரப் பெருமானை இடைவிடாது தியானம் செய்து கொண்டே உமா மகா மந்திரத்தை உச்சரித்தாள். என்ன ஆச்சரியம்! கையிலிருந்த குழந்தையைக் காணோம். உடனே ஆகாயத்திலே சிவபெருமான் உமாதேவியாருடன் ரிஷப வாகனத்திலே திருக்காட்சி தந்தருளினார். தேவக் காட்சி கண்ட கௌரி சிவானந்தக் கடலில் மூழ்கினாள்.

உமாதேவியின் திருமந்திரத்தை உச்சரித்து வந்த கௌரிக்குச் சாரூபம் அளித்தருளினார், சிவபெருமான். கௌரியையும் உமையின் திருவடிவாக்கித் தன்னிடம் ஐக்கியமாக்கிக் கொண்டார். கண்ட யாவரும் வணங்கினர். தேவர்கள் மலர்மாரி பொழிந்தனர். ரிஷப வாகனம் கௌரி சுந்தரரைத் தாங்கி விண்ணேறிச் சென்றது.

24. கால் மாறி ஆடியது

உரிய காலத்தில் விக்கிரம பாண்டியன் தனது ஆட்சிப் பொறுப்பை மகன் இராஜசேகரனிடம் தந்துவிட்டுச் சில நாட்கள் சென்ற பின் சிவலோகம் சென்றான். மகுடம் சூடிய இராஜசேகர பாண்டியன் செம்மையாகக் கோல் நடத்தி உலகைப் பாதுகாத்து வந்தான். மொத்தம் உள்ள அறுபத்து நான்கு கலைகளில் அறுபத்து மூன்று கலைகளையும் கற்றுத் தேர்ந்து அவற்றில் வல்லவன் ஆனான். அறுபத்து நான்கு கலைகளுள் ஒன்றான பரத சாஸ்திரம் மாத்திரம் கற்றுக் கொள்ளவில்லை. ஏனென்றால், வெள்ளியம்பல நடராஜப் பெருமானுக்குப் பாண்டியன் காட்டி வந்த பக்தியே காரணம்.

இராஜசேகர பாண்டியன் காலத்திலே சோழ நாட்டைக் கரிகால் பெருவளத்தான் என்ற புகழ் பெற்ற மன்னவன் ஆண்டுவந்தான். அறுபத்து நான்கு கலைகளையும் தெள்ளத் தெளியக் கற்று அறிவில் சிறந்து விளங்கினான்.

ஒருமுறை சோழனது ஆஸ்தான வித்வான் ஒருவன் பாண்டியனைக் காண வந்தான். பேச்சோடு பேச்சாக, ''தென்னவரே! எமது சோழ மன்னர் அறுபத்து நான்கு கலைகளிலும் வல்லவர். தங்களுக்குப் பரதம் வராது.



ஆதலால் தாங்கள் சகலகலா வல்லவர் அல்லர்!'' என்று சொன்னான். சோழப் புலவன் கூறிய சொற்கள் பாண்டியன் உளத்தைப் புண் படுத்தின. ''சிவபெருமானது திருநடனத்தைச் சிறியேனும் ஆடிப் பயிலவேண்டுமோ? சொக்கநாதர் திருவுள்ளம் இதுவே போலும்!'' என எண்ணலானான்.

ஆடலில் ஆசை கொண்ட பாண்டியன் பரத நாட்டிய சாஸ்திரத்திலே மிகவும் தேர்ச்சியும் அனுபவமும் கொண்ட தக்க ஆசிரியர்களை வரவழைத்தான். அவர்கள் மனம் மகிழும்படிக்கு ஆடை, ஆபரணம், பொன், மணி முதலிய வற்றைக் கொடுத்தான். சாஸ்திரத்தை வரன்முறையாக நிரம்ப அக்கறையுடன் கற்றுக் கொண்டான். நவரஸங்களையும், மெய்ப்பாடுகள் பத்தினையும், அபிநய வகை இருபத்து நான்கையும், எல்லா வகையான ராகங்களையும், ஏழு வகைத் தானங்களையும் நன்றாகக் கற்றுத் தேர்ந்து விட்டான் இராஜசேகர பாண்டியன்.

பரதநாட்டியப் பயிற்சி செய்யும்போது தனது உடலிலே வலியும் சோர்வும் ஏற்படுவதை உணர்ந்தான். உடனே அவனது சிந்தை வெள்ளியம்பலத்துள்ளே திருக்கூத்தாடும் நடராஜப் பெருமான் பால் சென்றது. ''ஆஹா! இப்படிப் பட்ட வலியும் அயர்ச்சியும் நடராஜப் பெருமானுக்கும் ஏற்படுமே! பெருமானின் திருவடிகளுள் ஒன்றுதானே பல நாட்களாக ஆடியபடி நின்று கொண்டிருக்கிறது. நான் இதைப் பொறுத்துக் கொண்டிருப்பதா? அவருடைய திருவடி வருந்துமே!'' என்று பல வகையாக எண்ணிக் கவலைப்பட்டான்.

துணிந்த மனம் உடையவனாகி எழுந்து சென்று திருக்கோயிலினை அடைந்தான். அன்று சிவராத்திரிப் புனித

நன்னாள். சோமசுந்தரப் பெருமானுக்குச் சிவாகம விதிப்படி நான்கு ஜாமங்களிலும் பூஜை செய்தான். பின்னர் வெள்ளியம்பலத்திலே நடராஜப் பெருமானது திரு நடனத்தைத் தரிசனம் செய்து மகிழ்ந்து வணங்கினான்.

ஆனந்த பாஷ்யம் பெருகக் கைகளைச் சிரமேல் கூப்பி, "நடராஜப் பெருமானே! பதித்த திருவடியை மேலே தூக்கியருள வேண்டும்; எடுத்த திருவடியை நிலத்தின் மேல் பதித்தருள வேண்டும்; எளியேன் காணும்படிக்குக் கால் மாறி நடனம் புரிய வேண்டும்; அடியேனது வருத்தத்தைப் போக்கி அருள வேண்டும். இல்லையேல் இறப்பேன்!" என்று விண்ணப்பித்தான். பிறகு சிவ சந்நிதானத்திலே தனது வாளை நாட்டி அதன் மேலே விழ ஆயத்தமானான்.

பாண்டியனது சங்கல்பத்தை உணர்ந்த நடராஜப் பெருமான், அன்பெனும் பிடியுள் அகப்படும் மலையாம் கூத்தப்பன், மனம் கனிந்தார். உடனே தமது இடது பாதத்தை நிலத்திலே பதித்து, வலது பாதத்தை மேலே எடுத்துக் கால் மாற்றி நடனம் செய்து அருளினார்.

பாண்டியனது கவலை வருத்தம் ஆனவற்றையும், ஆணவம், கன்மம், மாயை ஆன மும்மலங்களையும் போக்கி, அவனைப் பேரின்ப வாரிதியில் முழுக்காட்டினார். தனது உளம், சொல், உடம்பு மூன்றையும் சிவனாருக்கே உரிமைப்படுத்தி, பக்திமயமாகித் தோத்திரம் செய்யலானான் இராஜசேகரன்.

"வெள்ளிமன்றப் பெருமானே! கால் மாறி ஆடிய இந்த அற்புதத் திருநடனத்தை எல்லாரும் கண்டு தரிசனம் செய்யும்படி, எம்பெருமான் இப்படியே நின்றிருந்து அருள்

புரிய வேண்டும்!'' என்று வேண்டிக் கொண்டான். பாண்டியன் வேண்டியபடியே நடராஜப் பெருமான் வெள்ளி மன்றிலே கால் மாறி ஆடிய திவ்ய கோலம் காட்டி அருள்வாரானார்.

25. பழி அஞ்சியது

காலம் சென்றது. இராஜசேகரன் தனது அருமருந்தன்ன குமாரன் குலோத்துங்கனுக்குப் பட்டங் கட்டி விட்டுச் சோமசுந்தரக் கடவுளின் திருவடி நிழல் சேர்ந்தான். குலோத்துங்க பாண்டியன் ஒவ்வொரு நாளும் சோமசுந்தரப் பெருமானைப் பக்தியுடன் வழிபடும் நியமத்தை மேற்கொண்டான்.

பாண்டியன் குலோத்துங்கன் அரசு புரிந்து வருகின்ற நாளிலே திருப்புத்தூரிலிருந்து ஒரு பிராமணன் தனது மனைவியுடனும் கைக் குழந்தையுடனும் வந்து கொண்டிருந்தான். தனது மாமன் வீடு மதுரையிலே இருந்ததால் காட்டு வழியே வந்து கொண்டிருந்தான். வழியிலே அவனது மனைவிக்குத் தாகம் கண்டது. ஆதலால் தனது மனைவியைக் குழந்தையுடன் பெரிய ஆலமரத்தின் நிழலிலே அமர்த்தி விட்டுத் தண்ணீரைத் தேடிச் சென்றான். இதற்கிடையே அந்த அம்மாள் குழந்தையைப் பக்கத்தில் வைத்துக் கொண்டு அயர்ச்சியினால் படுத்துக் கொண்டாள்.

ஆலமரத்தின் அடர்ந்த இலைகளுக்கு நடுவே கூர்மையான அம்பு ஒன்று சிக்கிக் கிடந்தது. என்றோ ஒரு நாள் யாரோ ஒரு வேடனால் எய்யப்பட்ட அம்பு அது. காற்று வீசியது. அதனால் மரத்தின் கிளைகளும், இலைகளும் அசைந்தாடின. அசைவினால் அந்தப் பழைய அம்பு கீழே விழுந்தது.



விழுந்த அம்பு மல்லாந்து படுத்திருந்த பார்ப்பனியின் வயிற்றிலே பாய்ந்து ஊடுருவியது.

விதிப்பயன் காரணமாகப் பார்ப்பனி இறந்து போனாள். அந்த நேரம் பார்த்து இயல்பாக வேட்டையாட வந்த வேடன் ஒருவனும் வில்லும் கையுமாக மரத்தின் அப்புறத்திலே நின்று கொண்டிருந்தான்.

பிராமணன் தண்ணீர் கொண்டு திரும்பி விட்டான். பக்கத்தில் குழந்தை கிடக்க, இரத்த வெள்ளத்திலே தனது மனைவி இறந்து கிடப்பதைக் கண்டான். அவள் வயிற்றிலே அம்பு பாய்ந்துள்ளதையும் பார்த்தான். கலங்கிய அறிவால் மனம் வதங்கினான்.

பின்னர், 'இந்த ஸ்திரீ ஹத்தியைச் செய்தது யார்?' என்று ஆராய்பவனாகி, ஆலமரத்தைச் சுற்றி வந்து பார்த்தான். பார்த்து வருகையில் வில்லுடன் வேடன் தென்பட்டான். அந்த வேடன்தான் அம்பெய்தித் தன் மனைவியைக் கொன்று விட்டிருக்க வேண்டும் என்று பார்ப்பனன் நினைத்தான்.

"ஏ வேடனே! என் மனைவியைக் கொலை செய்தவன் நீயே; பாண்டிய மன்னன்மேல் ஆணை!" என்று கூறி, வேடனைத் தன்னுடன் இழுத்துச் சென்றான். இறந்த தன் மனைவியைத் தோளிலே தூக்கிக் கொண்டான். குழந்தையைத் தன் இடுப்பிலே அணைத்துக் கொண்டான். அழுத கண்ணும் விம்மிய நெஞ்சமும் கொண்டு வேகமாக நடந்து மதுரையைச் சேர்ந்தான்.

குலோத்துங்க பாண்டியனது அரண்மனையை அடைந்து, வாசலில் தனது இறந்த மனைவியைக் கிடத்தி முறையிட்டு அழுது நின்றான். "இந்தப் பொல்லாத வேடன் என்

மனைவியைக் கொலை செய்து விட்டானே!'' என்று ஏங்கிக் கதறினான். வாயில் காப்பவர்கள் உடனே விரைந்து சென்று மன்னனிடம் சொல்லினர். நிலை குலைந்த மன்னன் மிகவும் பயந்து தன்னையே வெறுத்துக் கொண்டு வெளிவந்தான்.

அந்தணனது அவல நிலையைக் கண்ட அரசனின் மனம் பெரிதும் இரங்கியது. வந்து குறை கேட்டான் வேந்தன். ''புகழ்ப் பாண்டிய! மனைவிக்காகத் தண்ணீர் கொண்டு வருவதற்காகச் சென்றபோது இவ்வேடன் அவளைக் கொன்று விட்டான்!'' என்று குற்றம் சாட்டினான் பார்ப்பனன். வேடன் வேந்தனை நோக்கினான். ''அரசர் பெருமானே! இளைப்பாறுவதற்காகத்தான் நான் மரத்தடியில் நின்று கொண்டிருந்தேன்; நான் கொலை செய்தவன் அல்லன்; கொலை செய்தவனையும் பார்க்கவில்லை; நான் ஒரு பாவமும் அறியாதவன்!'' என்று பணிந்து கெஞ்சினான்.

உடனே மந்திரிகள், ''அப்படியானால் அம்மாளின் உடலிலே அம்பு பாய்ந்தது எப்படி?'' என்று கேட்டனர்.

அதற்கு வேடன், ''ஐயன்மீர்! இதைப் பற்றி உண்மையாக எனக்கொன்றும் தெரியாது,'' என்றான்.

மந்திரிகளின் யோசனையின்படி மன்னன் வேடனைப் பல் வகையான தண்டனைக்கு உட்படுத்தினான். வேடன் உறுதியான உள்ளத்தோடு ஒரே மாதிரியான பதிலையே சொல்லிக் கொண்டிருந்தான். அரசனும் பலபடியாக ஆராய்ந்து பார்த்தான். ஏதும் புலப்படவில்லை.

''இந்த விஷயம் மனித ஆராய்ச்சிக்கு உட்பட்டதன்று; தெய்வம்தான் தெளிவாக்க வேண்டும்,'' என்று கருதினான். ஆதலால் பார்ப்பனனை அவனது மனைவிக்கு ஈமக்கடன் செய்யுமாறு அனுப்பி விட்டு வேடனைச் சிறையிலிட்டான்.

ஈமக்கடன் முடித்துத் திரும்பிய பார்ப்பனனை அரண்மனை வாசலிலே இருக்கச் செய்து விட்டுக் குலசேகர பாண்டியன் திருக்கோவில் சென்றான். சோமசுந்தரப் பெருமான் முன்பு நின்று, ''பெருமானே! தெளியாத மனத்தோடு வந்துள்ளேன். பார்ப்பனியைக் கொன்றது வேடனா? அன்றி வேறு யாரேனுமா? காரணம் தெரியவில்லை. சாஸ்திரங்கள் இது விஷயத்தில் துணை செய்யவில்லை. எம் பெருமானே அருள் புரிந்து எளியேனது குறை தீரத் தெளிவாக்கி அருள வேண்டும்!'' என்று வணங்கி விண்ணப்பித்துக் கொண்டான்.

அது சமயம் ஆகாசத்திலிருந்து, ''பாண்டிய! கேள். இத் திருநகரின் வெளியே செட்டித் தெருவிலுள்ள ஒரு வீட்டிலே இன்றிரவு விவாகம் நடக்கும். பிராமணனையும் அழைத்துக் கொண்டு அங்கே செல். அவ்விடத்திலே உனது மனம் தெளிவடையுமாறு செய்வோம்!'' என்று ஆகாசவாணி எழுந்தது. அமைதி அடைந்த உள்ளத்தோடு பாண்டியன் திரும்பினான்.

மாலை நேரம் சென்றதும், மாறு வேஷம் கொண்ட மன்னன், தன்னோடு பார்ப்பனனையும் அழைத்துக் கொண்டு, விவாக வீட்டுக்குச் சென்று ஒருபுறமாக அமர்ந்திருந்தான். மன்னவனுக்கும் மறையவனுக்கும் பக்கத்திலே இரண்டு பேர் பேசிக் கொண்டிருந்தனர். அவர்கள் இருவரும் யம தூதர்கள். கடவுள் அருளால் அவர்கள் பேசியது இந்த இரண்டு பேருக்கு மட்டுமே கேட்டது.

''இப்பொழுது இங்கேயே மணமகன் உயிரை வாங்கி வரும்படி நமது யமதர்ம ராஜா ஆணையிட்டிருக்கிறாரே,

அவரது ஆணையை எப்படி நிறைவேற்றுவது? மணமகன் ஆரோக்கியமாக இருக்கிறானே, என்ன செய்வது?'' என்று ஒரு தூதன் சொன்னான்.

அதற்கு மற்றொரு தூதன், ''இதில் என்ன கஷ்டம் இருக்கிறது? இன்று பகலிலே, ஆலமர இலைகளில் சிக்கியிருந்த பழைய அம்பைக் காற்றினால் விழச் செய்து கீழே கிடந்த பார்ப்பனியைக் கொன்று அவள் உயிரை வாங்க வில்லையா? அதைப் போலவே இப்பொழுதும் செய்து விடுவோம். இவ்வீட்டிற்கு வெளியே ஒரு மாடு நின்று கொண்டிருக்கிறது. கெட்டிமேளம் கொட்டி ஆரவாரம் செய்யும் நேரத்திலே அந்த மாட்டை மருண்டு ஓடச் செய்வோம். மாட்டின் மூலமாகவே மணமகனின் உயிரை வாங்குவோம்!'' என்று யுக்தி சொன்னான்.

வேந்தன் வேதியனைப் பார்த்தான். விவரம் தெளிந்த வேதியனும் வேந்தனுடன் இருந்து மேலை விளைவுகள் தெரிய அமர்ந்திருந்தான்.

மணவீட்டிலே ஏகப்பட்ட ஆரவாரம். நல்ல நிமித்தம் நெருங்கியதும் மங்கையர் மங்கலம் முழங்கினர்; பல வாத்தியங்கள் முழங்கின. பேரொலி கேட்டுப் பசுமாடு வெருண்டது. தானும் அலறிக்கொண்டு கட்டிய கயிற்றை அறுத்துக் கொண்டது. உள்ளே ஓடிச் சென்று மணமகனைத் தன் கொம்புகளால் முட்டிக் கொன்று விட்டது.

மணமகன் பிணமகனானான்; மணப் பறையே பிணப் பறை ஆயிற்று. மங்கையர் வாழ்த்து அழுகையாயிற்று. என்ன செய்யலாம்? விதியே வென்றது.

இந்த நிகழ்ச்சியைக் கண்ட பார்ப்பனன் மிக மிக வருந்தினான். குற்றமற்ற வேடனைத் துன்பத்துக்

குள்ளாக்கியதை எண்ணி எண்ணி மனம் புழுங்கினான். பின்னர் மன்னனோடு அரண்மனைக்குத் திரும்பினான். அரண்மனை சேர்ந்த பாண்டியன் நடந்த எல்லாவற்றையும் தனது மந்திரிகளிடமும் மற்றவர்களிடமும் கூறினான்.


குலோத்துங்க பாண்டியன் பின் அந்தணனைப் பார்த்து, ''நீ வேறொரு விவாகம் செய்துகொள்,'' என்று சொல்லி, நிரம்பப் பொருள் கொடுத்து அனுப்பினான். சிறை கிடந்த வேடனையும் உடனடியாக விடுவித்து, அவனிடம் மன்னிப்புக் கோரினான். அவனுக்கும் வேண்டியது வழங்கிச் செல்லச் செய்தான்.

பாண்டியன் பின்னர் திருக்கோவில் சென்று, சோமசுந்தரப் பெருமானை வணங்கி, ''பெருமானே! எளியேன் பொருட்டுத் தேவரீர் பழியஞ்சு நாதராய் இருந்தீர்!'' என்று வியந்து போற்றி விசேஷ பூஜை செய்தான்.

26. மாபாதகம் தீர்த்தது

பாண்டியன் குலோத்துங்கன் ஆட்சி புரிந்து வந்த நாளிலே அவந்தி என்ற நகரத்திலே ஒரு மறைக்குலத்தான் வசித்து வந்தான். அவனுக்கு மனைவியொருத்தி இருந்தாள். அவள் நிரம்ப அழகைப் பெற்றிருந்தாள். அவர்களுக்குக் கால காலத்திலேயே மகன் ஒருவன் பிறந்தான்.

அந்த மகன் இளமை கொழிக்க வளர்ந்து வந்தான். வயது ஏற ஏறப் பல கொடிய செய்கைகளையும் செய்து வந்தான். நல்ல காளைப் பருவம் வந்தது அவனுக்கு. அதன் காரணமாகக் காமம் மிகுந்தது. கருத்திழந்த பாவியும் ஆனான். காம வெறி கண்ணை மறைத்து அறிவை அழித்தது.



கட்டுக்குலையாத பேரழகியான தனது அன்னையாரையே தனது இச்சைக்குரிய பொருளாகக் கோரினான். குணங்கெட்டு இழிந்த அவனது அன்னையும் மகனது தகாத விருப்பத்திற்கு இணங்கி விட்டாள். பெண் குலத்திற்கே உரிய அச்சம், நாணம், மடம், பயிர்ப்பு என்ற நான்கு சிறந்த குணங்களையும் நீக்கி மிருகமாகி விட்டாள், தாயும்.

காமத்து இன்பம் சிறிதேயானாலும், துன்பம் பெரிதே வரும். தீவினை மகனை மேலும் வாட்டியது. காமப் பாம்பு அறிவுத் திங்களை விழுங்கியது. அந்தக் கடை மகன் அன்னையுடன் கூடி ஒழுகுதலை அவன் தந்தை அறிந்திருந்தாலும் விஷயம் வெளிப்படாதபடி சும்மாயிருந்தான். ஒரு நாள் நேரடியாகப் பார்த்தபோதும்கூட ஏதும் சொல்லாமல் சென்று விட்டான்.

மகனுக்குத் தந்தையின் மேல் கோபம் வந்தது. தந்தை இருப்பதே பெரிய இடைஞ்சலாகப் பட்டது. ஆதலால், 'தந்தையைக் கொன்று விடுகிறேன்!' என்று கிளம்பினான்.

அதைக் கண்ட மனைவித் தாய், ''அன்னையிடம் காமக் களியாட்டம் புரியும் பாவியான நீ அப்பனைக் கொன்றாயானால் பெரும் பாவி ஆவாய்!'' என்றாள்.

பாவி மகன் செவி சாய்க்கவில்லை. ஒரு மண்வெட்டியை எடுத்துக் கொண்டு சென்று, தனது தந்தையைத் துண்டு துண்டாக வெட்டிக் கொன்று விட்டான். பின்னர் அந்த மகாபாதக மகன் அன்று இரவே தந்தையின் உடலைக் கொளுத்திவிட்டுத் தனது தாய் மனைவியுடன் சுமக்கக்கூடிய அளவு பொருள்களையும் எடுத்துக் கொண்டு காட்டு வழி நடந்து நெடும் தொலை சென்று விட்டான்.

செல்கின்ற வழியிலே வழிப்பறி வேடர் சிலர் இருவரையும் வளைத்துப் பிடித்துக் கொண்டனர். அவன் கையிலிருந்த அத்தனை பொருள்களையும் பிடுங்கிக் கொண்டனர். அவனது தாயையும் இழுத்துச் சென்று விட்டனர். எல்லாப் பொருள்களையும் ஒருங்கே ஒரே சமயத்தில் இழந்த இழிந்த மகன் தனியன் ஆனான்.

மண்வெட்டியால் வெட்டப்பட்டு இறந்து போன தந்தை, இப்போது பிராமணக் கொலையும் தந்தைக் கொலையும் ஒன்று சேர, ஒரு மகாபாதக உருவமாய் வந்து, தன் மகனைப் பிடித்துக் கொண்டான். கொலைப் பழி மகனைப் படாதபாடு படுத்தி வைத்தது. அவனை முன்னும் பின்னும் சூழ்ந்து அல்லும் பகலும் அனவரதமும் தொந்தரவு செய்து கொண்டே யிருந்தது. ''ஐயோ! நான் என்ன செய்வேன்?'' என்று புலம்பிக் கடும் துன்பம் அடைந்து பல நாட்கள் நாடெங்கும் பயந்து வருந்தித் திரிந்தான். திரிந்து கொண்டிருந்த மாபாதக மகன் மதுரையம்பதிக்கு வந்து சேர்ந்தான்.

அச்சமயம் மீனாட்சியம்மையும் சோமசுந்தரக் கடவுளும் முறையாக வேடுவச்சியாகவும் வேடுவனாகவும் வேஷம் தாங்கிக் கோபுர வாசல் பக்கத்திலே அமர்ந்தருளிச் சொக்கட்டான் விளையாடிக் கொண்டிருந்தனர். அப்போது அங்கு வந்து கொண்டிருந்த மாபாதக மகனைக் கண்டு, கடவுள், 'எவரும் மனத்தாலும் நினைத்துப் பார்க்க முடியாத பெரிய படுபாவி வருவதைப் பார். காமவெறியால் குணம் கெட்டவன்; குலம் கெடுத்தவன்; பெரும்பழி பூண்டவன்; கொலைகாரன். இத்தகைய இழியவனுக்கு நரகமே கிடைக்கும்!'' என்றார். நெருங்கி வந்த மாபாதகனைப் பார்த்து, ''நீ ஏன் துன்பத்தால் அலைந்து வாடுகிறாய்?'' என்று வினாவினார்.

முன் பிறப்பில் தான் செய்த பாவ முதிர்வாலே, தான் காமவெறியடைந்து தன் தாயையே கூடியதையும், தந்தையைக் கொன்றதையும், தன்னைப் பிரம்மஹத்தி பிடித்து வருத்துவதையும் எடுத்து விளக்கி அழுது கொண்டு நின்றான் மாபாதகன்.

அவனது பேரவல நிலையைக் கண்ட பரம்பொருள் உள்ளத்திலே கருணை கொண்டார். "உனது கொடிய பாவம் இந்த நகரத்தில்தான் விலகும்; வேறெங்கும் விலகாது. ஆதலால், நீ இவ்வூரிலேயே பிச்சை எடுத்து ஒரு வேளை உண்பாய். சிவனடியார்களுக்குத் தொண்டு புரிவாய். சூரியோதயத்துக்கு முன்பே எழுந்து அறுகம்புல்லைப் பசுக்களுக்குக் கொடுக்க வேண்டும். ஒவ்வொரு நாளும் மூன்றுவேளைகளிலும் திருக்கோவிலில் உள்ள புறத் தொட்டித் தீர்த்தத்தில் ஸ்நானம் செய்து விட்டுச் சிவ பெருமானை நூற்றெட்டுத் தடவை அங்கப் பிரதட்சிணம் செய்யக் கடவாய். இத்தகைய தவநெறியைக் கைக் கொண்டால் உனது பிரம்மஹத்தி தோஷம் நீங்க வழியுண்டு," என்று பரிகார மொழி பகர்ந்தருளினார்.

சிவபெருமான் மொழிந்தவற்றைக் கேட்ட வேடுவச்சி யான மீனாட்சியம்மையார் மிகவும் வியப்படைந்தார். "பெருமானே! என்ன விந்தை! கடு நரகத்திலே கோடி வருஷங்கள் கிடந்து வருந்த வேண்டியவனுக்கு உய்யும் வழிகாட்டி அருளியது என்னவோ?" என்றார்.

"அத்தகைய கொடும்பாவிகளைக் காப்பதுதானே எமது தருமம்," என்று திருவாய் மலர்ந்தருளினார் வேடர் சிவனார்.

"எல்லாம் வல்ல எம்பெருமானே! தாங்கள் திருவுளம் வைத்தால் கொடும் பாவிகளும் உய்ந்து விடுவார்களே!


தேவரீர் திருவிளையாடல்களை அறிய வல்லவர் யார்?'' என்று கூறி மகிழ்ந்தார் மீனாட்சியம்மையார். இருவரும் பின்னர் மறைந்தருளினர்.

அதைக்கண்ட மகாபாதகனும் பேராச்சரியம் அடைந்தான். மதுரைத் தெய்வம் அருளிய வண்ணமே செய்து வந்தான் பழிகாரப் பார்ப்பான். நல் விரதங்களையும், தவ நெறியையும் கைக்கொண்டு மூன்று மாதங்களிலேயே தனது மாபாதகம் நீங்கப் பெற்றான். திவ்யமான பிராமண உருவம் அடைந்தான். வாசாமகோசரனாகிய சோமசுந்தரப் பெருமான் மீது பல வடமொழித் துதிப் பாடல்களைப் பக்தியுடன் பாடி, அவரது திருவடிகளில் சூட்டினான். பின்னர், சச்சிதானந்த ஸ்வரூபமாகிய சிவபெருமானின் சேவடிகளிலே கலந்து கொண்டான்.

27. அங்கம் வெட்டியது

குலோத்துங்க பாண்டியனது ஆட்சிக் காலத்திலே வேற்று நாட்டைச் சேர்ந்த முதியவன் ஒருவன் மதுரையில் வந்து குடியேறினான். அவன் வாள்வித்தையைச் சொல்லிக் கொடுத்து வாழ்ந்து வந்தான். சோமசுந்தரப் பெருமானைத் தினந்தோறும் வழிபடும் குணவானாக இருந்தான்.

வாள் வித்தையிலே சிறந்து விளங்கிய அப் பெரியவனைப் பல இளைஞர்கள் சார்ந்து அவ் வித்தையைக் கற்றுக் கொண்டனர். அத்தகைய சிஷ்யர்களுள் சித்தன் என்பவனும் ஒருவன். அக்கறையோடு வாள் வித்தை கற்று அதிலே மிகுந்த வல்லமை பெற்று விட்டான். பலர் அவனை மதித்ததனால் மிகவும் கர்வங் கொண்டான். தவிர, தன்னுடைய



ஆசிரியனுக்கு எதிரிடையாகத் தானும் ஒரு வாட்பயிற்சிக் கூடத்தை நிறுவினான். சித்தனிடமும் பலர் வந்து பயிற்சி பெற்றனர். ஆசிரியனைக் காட்டிலும் அவனுக்கு வரும்படி அதிகம் கிடைத்தது.

செல்வம் பெருகியதால், சித்தனது கர்வமும் பெருகியது. தானிருக்கும்போது மற்றொரு ஆசிரியர் எதற்கு என்று கருதினான். எல்லா ஊதியமும் தனக்கே கிடைத்தால் என்ன என்றும் எண்ணினான். எல்லாவற்றுக்கும் மேலாகத் தனது ஆசிரியனையே ஊரைவிட்டு வெளியேற்றிவிடக் கருத்து வைத்தான். நாள்தோறும் தனது ஆசிரியனுக்கு இன்னல் விளைவிக்க முயன்றான்.

அம்மட்டோடு அவன் நிற்கவில்லை. தனது ஆசிரியன் இல்லாத நேரம் பார்த்து அவர் வீடு சென்று அவரது துணைவியைப் பார்த்து, "இடம் உண்டா? இடம் உண்டா?" என்று துணிந்து கேட்டுத் துன்புறுத்தினான்.

ஆசிரியன் மனைவி சும்மா இருந்தாள். சித்தன் ஒரு நாள் அவள் கையைப் பிடித்து இழுத்தான். வெளியே தள்ளிக் கதவைத் தாழிட்டுக் கொண்டு தனது கற்பைக் காத்துக் கொண்டாள் அவ்வம்மை. சித்தனிடம் காமத் தீ கொழுந்து விட்டெரியத் தொடங்கியது. ஆசிரியனின் மனைவி எல்லாவற்றையும் பொறுமையுடன் சகித்துக் கொண்டு சோமசுந்தரக் கடவுளை நினைத்தவாறு வருந்திக் கொண்டிருந்தாள்.

தனது பக்தையின் பொறுமையையும், அவள் மௌனமாக அனைத்தையும் ஏற்று வருந்துவதையும், தன்னையே நம்பியிருப்பதையும் நன்குணர்ந்தார் சோமசுந்தரப்

பெருமான். சித்தனைத் தண்டிக்கத் திருவுளம் கொண்டார். வாளாசிரியனைப் போல வேடம் புனைந்து கொண்டார்.

சித்தனிடம் போய், ''சித்தா! இளைஞனாகிய நீயும் முதியவனாகிய நானும் வாட்போர் செய்யலாம். இருவரும் திறமையை நன்கு காட்டுவோம். நாளைக்கு நீ ஊருக்கு வெளியே வா. நானும் வருகிறேன்,'' என்று கூறினார். ''நல்லது,'' என்று சொல்லிச் சம்மதம் தெரிவித்தான் சித்தன்.

மறுநாள் செய்ந்நன்றி கொன்ற சித்தன் போர்க்கோலம் பூண்டான். வாளாயுதத்தையும் கேடயத்தையும் கைகளில் ஏந்தி, வாளாசிரியர் சொன்ன களத்தை அடைந்தான். வாளாசிரியர் கோலம் தரித்த சிவபெருமானும் போருக்கு ஆயத்தமாகிக் களத்திலே நின்று கொண்டிருந்தார், சித்தனின் வருகையை எதிர்பார்த்து.

ஆசிரியப் பிரானும் சித்தனும் போர் தொடங்கினர். தாக்குதல், எதிர்த்தாக்குதல், முறியடித்தல், வெட்டுதல், மறைதல், பாய்தல் என்று மாறி மாறிச் சுற்றிச் சுற்றி வந்து போராடினர். இந்த வெம்போர் இருபது நாழிகை நேரம் நடைபெற்றது. போர் உச்ச நிலை அடைந்தது.

வாளாசிரியப் பெருமான் யாவரும் கேட்குமாறு, ''சித்தா! நீ உன் குரு பத்தினியை விரும்பினாய்; அவளை நோக்கித் தகாத வார்த்தைகள் பேசினாய்; அவளைத் தொட்டு இழுத்தாய்; காமத்தோடு பார்த்தாய். ஆதலால் உன்னைக் காத்துக் கொள்வாய். உனது நெஞ்சைப் பிளப்பேன்; நாக்கைத் துண்டிப்பேன்; கையை வெட்டுவேன்; கண்களைப் பிடுங்குவேன்!'' என்று கூறினார். கூறிய படியே சித்தனது அங்கங்களை வெட்டி வெட்டி எறிந்தார். இறுதியிலே அவனது தலையையும் வெட்டி வீழ்த்தி விட்டு மறைந்தருளினார்.

தமது வாளாசிரியருடன் வந்திருந்த மாணவர் பலரும் ஆசான் இல்லாததைக் கண்டு அவர் வீடு சென்று தேடினர். ஆசிரியர் கோவிலுக்குச் சென்றிருப்பது தெரிந்தது. உடனடியாக ஆசிரியனும் திரும்பி வந்து விட்டான். தமது ஆசிரியரைக் கண்ட மாணவர் பலவாறாக வியந்து போற்றி வினவினார்கள்.

ஆசிரியனுக்கு உண்மையாக எதுவுமே விளங்கவில்லை. ஆதலால் மிகுந்த வியப்புடன், ''நான் சித்தனோடு போராடவுமில்லை; அவனது அங்கங்களை வெட்டவும் இல்லை. என்னைப் போல் வந்தவர் வேறு யாரோ?'' என்றான். ''இது மதுரைச் சோமசுந்தரப் பெருமானது திருவிளையாடலாகத்தான் இருக்க வேண்டும்!'' என விளக்கினான்.

அவனது மனைவியும் நடந்ததையெல்லாம் ஒளிவின்றி மொழிந்தாள். குரு பத்தினி சொன்னதிலும் சித்தனோடு போரிட்டவர் சொன்னதிலும் ஒற்றுமை கண்டனர் கேட்டவர்கள் எல்லாரும். அப்போது நடந்த போராட்டம் சொக்கநாதப் பெருமான் திருவிளையாடலே என்று நன்றாகத் தெரிந்து கொண்டனர். அனைவருமாகத் திருக்கோவிலை அடைந்து சோமசுந்தரக் கடவுளைத் தரிசித்து மகிழ்ந்தனர்.

இது தெரிந்து மகிழ்ச்சியுற்ற பாண்டியன் குலோத்துங்கன் திருக்கோவில் சென்று சிவபெருமானை வழிபட்டு, ''அடியாருக்கு எளியவரான சொக்கநாதர் 'பரதேசிக் காவலர்' என்பதில் ஐயமில்லை!'' என்று கூறி வணங்கினான்.

பின்னர் வாளாசிரியனையும் அவனது மனைவி மாணிக்க மாலையையும் யானை மேல் ஏற்றி வைத்து ஊர்வலம் செய்வித்துச் சிறப்பித்தான்.


பல நாட்கள் சென்றன. குலோத்துங்க பாண்டியன் தனது தவக் குமாரன் அனந்த குணபாண்டியனுக்கு உரிய பிராயத்தில் முடிசூட்டி வைத்துவிட்டுச் சிவபெருமான் திருவடி சேர்ந்தான்.

28. நாகம் எய்தது

பாண்டியன் அனந்தகுணன் சிறந்த பண்பாளன். சிவச் சின்னங்களின் மெய்ப் பொருள் தெரிந்து எல்லையற்ற பக்தி கொண்டு சிவநேசச் செல்வனாக விளங்கினான். நாடெங்கும் சைவ மணம் நன்கு பரவியது. பாண்டித் திருநாடே சிவவேடம் கொண்டு சிறந்து விளங்கியது.

பாண்டிப் பெருநாடு சிவத்திருநாடாகப் பொலிவதைக் கண்ட சமணக்குரவர் எட்டாயிரம் பேர்களுக்கும் பொறாமை உண்டாயிற்று. பொறாமையின் காரணமாகச் சிவபக்த சிகாமணியாம் அனந்தகுணபாண்டியனைக் கொல்ல வழி தேடினர்.

ஒரு காத அளவிற்கு யாகசாலை அமைத்தனர். அதிலே நெருப்பு வளர்க்கும் குண்டமும் அமைத்தனர். மிகவும் கோரமாக நாடு நடுங்கும் முறையில் யாகத்தைச் செய்தனர். யாகத்தின் விளைவாகக் குண்டத்திலிருந்து அரக்கன் ஒருவன் திடீரெனத் தோன்றினான். தலை படங்காட்டியது; வாய் இருள் காட்டியது; வளைந்த விஷப்பற்கள் வாய்க்கு வெளியே தெரிந்தன. கண்கள் தீக் கக்கின. அவ் அவுணன் வெளிப்பட்டது ஒரு பெரிய மலையே பெயர்ந்து வந்தது போல இருந்தது. சினம் பொங்கச் சமணர்களைப் பார்த்து, ''எனக்குப் பசியும் தாகமும் அதிகமாக இருக்கின்றன.



உடனே சொல்லுங்கள். நான் என்ன செய்ய வேண்டும்?'' என்று வினவி இடிமுழக்கம் செய்தான்.

சமணர்களும், ''நீ வேகமாகச் சென்று பாண்டியனையும் அவனது ஊரையும் அழித்து விட்டு வா,'' என்று ஏவி விட்டனர்.

பசியாலும் கோபத்தாலும் தூண்டப் பெற்ற அரக்கன், பெரும் பாம்பின் உருவம் எடுத்துக் கொண்டு மதுரை மாநகரத்தை நோக்கிப் புறப்பட்டான். பாம்பரக்கன் செல்லும் வழியெல்லாம் பாழ் ஆயிற்று. பசுமை கருகியது. நீர் வற்றியது. அதிவேகமாக வந்த பாம்பன் மதுரைக்கு அருகே மேற்குத் திசையில் வந்துவிட்டான்.

இதனை அறிந்த மக்கள் ஓடிச்சென்று பாண்டியனை அடிபணிந்து நாகத்தின் வருகையைப் பற்றி முறையிட்டனர். உடனே பாண்டியன், முன்பு யானையைக் கொன்று, மதுரையைக் காத்த பெருவள்ளலாகிய சுந்தரேசப் பெருமானை நினைத்தான். இம்முறையும் அவரே காக்கவல்லர் என்று கருதிக் கடவுள் முன்பு சென்று, ''பெருமானே! சமணர்கள் ஏவிய பெரிய நாகப் பாம்பொன்று ஊரை அழிக்க வருகிறது. எளியேனுக்குக் கருணை காட்டியருள்க!'' என மனமுருகி வேண்டினான்.

சிவபெருமானிடம் விடைபெற்றுச் சென்றான், பாண்டியன். பின்பு பெருமானது திருவடிகளையே சிந்தித்த வண்ணம் வில்லையும் அம்பையும் எடுத்துக் கொண்டு ஊரின் மேற்கு வாசலை அடைந்தான். பாம்பினைக் கண்டான் அனந்தகுணன். பெரிய ஆரவாரம் செய்தான். கையில் வில்லை எடுத்து நாண் பூட்டினான். பல வகையான அம்புகளையும், நெருப்புக் கணையையும் விடுத்தான்.

பாம்பு அத்தனை அம்புகளையும் கடித்து உமிழ்ந்து நாசம் செய்தது. பாண்டியனுக்குப் பொறுக்கவில்லை. சோமசுந்தரப் பெருமானின் திருவடிகளை உளமாரச் சிந்தனை செய்து அர்த்த சந்திர பாணம் ஒன்றைப் பிரயோகம் செய்தான். பாணம் பெரும் பாம்பின் உடலைச் சின்னா பின்னப்படுத்தியது. பாம்பரக்கன் பெரிய ஓசை செய்து கொண்டு அலறி விழுந்தான். மரண வேதனையில் கொடிய விஷத்தைக் கக்கினான்.

கொடிய கருநாக விஷம் ஊர் முழுதும் பரவியது. நகர மாந்தர் விஷத்தின் கடுமையால் மயங்கி வாடினர். நச்சு வாயு நகரை நரகம் ஆக்கிக் கொண்டிருந்தது. இது கண்ட பாண்டியன் அஞ்சினான், வருந்தினான், நேரே திருக்கோயில் சென்றான். அண்ணலைப் பார்த்து, ''ஆதி தேவர்கள் வேண்ட நஞ்சினை அமுதாய் உண்டாய்! மதுரை மூதூர் விஷத்தால் வருந்துகிறது, விஷத்தைப் போக்கி மதுரையைக் காத்தருளும்,'' என்று வேண்டினான்.

அன்பருக்கு எளியவரான சோமசுந்தரப் பெருமான் கருணை கொண்டார். தமது ஜடா மகுடத்திலே உள்ள பிறைச் சந்திரனிடமிருந்து அமுதத்தைச் சிறிதே சிந்தினார். பெருமான் அருளிச் சிந்திய அமுதத் துளி நகர் முழுவதும் பரவியது; நஞ்சின் கடுமையையும், கொடுமையையும் போக்கி, மதுரத்தை அளித்தது. மீண்டும் மதுரை மாநகரம் இனிமையும் தூய்மையும் பெற்றது. மக்கள் மகிழ்ந்தனர்; இன்பம் கொண்டாடினர்.

அனந்தகுண பாண்டியன் நாகாபரணரும், சந்திர சேகரருமான பெருமானுக்கு ஆளாகி ஆண்டு வரலானான்.

29. மாயப் பசுவை வதைத்தது

அனந்தகுண பாண்டியனால் அபிசார ஹோமப் பாம்பு துண்டிக்கப்பட்டதும், அதனைத் தொடர்ந்து வந்த சமணர்கள் எல்லாரும் மனம் கவன்று ஓடினர். ஓடிச் சென்ற சமணர்கள் எல்லாரும் ஒரு இடத்திலே மறுபடியும் கூடினர். ஆலோசிக்க ஆரம்பித்தனர்.


நாம் முன்பு அனுப்பிய யானையைப் போலவேதான் இந்த நாகமும் நாசமாயிற்று. இனி எதனை ஏவலாம் என்று சிந்தித்தனர்.

''நாம் இந்த முறை பசு மாட்டை ஏவி விடுவோம்; பசுவை யாரும் வதை செய்ய மாட்டார்கள். ஆதலால் பசுவை ஏவி விடுவதே சிறந்த உபாயமாகும். அப்படியே செய்வோம்,'' என்று முடிவு செய்தார்கள், பாவகாரிகளாகிய சமணர்கள்.

மறுபடியும் முன் போலவே ஒரு கொடிய ஹோமத்தைச் செய்தார்கள். அதன் விளைவாக ஹோமகுண்டத்திலிருந்து பசுவின் உருவம் தாங்கிய அரக்கன் ஒருவன் தோன்றினான். அரக்கப் பசுவை மதுரையின் மீது ஏவி விட்டார்கள் சமணக் குரவர்கள்.

ஏவப்பட்ட பசு காற்றினைக் காட்டிலும் அதி வேகமாக மதுரையை நோக்கி வந்து கொண்டிருந்தது. வரும் வழியிலெல்லாம் நாசம் செய்தது. பல உயிர்களைக் கொன்று குவித்தது. வெறியுடனும் வெற்றியுடனும் மதுரை நகருக்கருகே வந்தது.

பாண்டியனும் மதுரை நகரச் சான்றோர்களும் திருக்கோயிலை அடைந்தார்கள். ''சோமசுந்தரேசா!



அனாதரட்சகா! ஆபத்பாந்தவா! இது முறையோ? இது தகுமோ? இது அழகோ?'' என்று கதறி முறை செய்தார்கள்.

கடவுள் பக்தர்களின் உள்ளக் கிடக்கையை உணர்ந்தார். உடனே திருவருள் பெருகத் தமது ரிஷப நந்தியை அழைத்தார். ''ஏ, ரிஷபமே! நீ சென்று சமணர்கள் ஏவிய கோரப் பசுவைக் கொன்று வருவாயாக!'' என்று ஆணையிட்டருளினார்.

ரிஷப நந்தியும் யமனே பயப்படும் வண்ணம் கோபம் கொண்டு எழுந்தது. அதன் கண்கள் தழல் தெறித்தன. காலடிகளிலே புழுதி கிளம்பியது. பேராரவாரம் செய்து கொண்டு மாயப் பசுவைத் தாக்க விரைந்து நடந்தது.

பசுவைக் கண்டதும் உக்கிரமாக அதனை முட்டி வெருட்டியது. எல்லாத் திசைகளிலும் பசுவை விரட்டி அலைக்கழித்தது. களைத்துப் போன அப் பசுவைத் தனது கொம்புகளால் வயிற்றிலே குத்தியது; கொம்புகளிலே ஏந்தி வீசியது. ரிஷபம் பலபடியாக வீரப் போர் புரிந்தது. பெருந் தாக்குதலுக்குட்பட்ட பசு பலமிழந்து விழுந்து, தன் உயிரை விட்டது. பசுவின் உடல் விழுந்த இடத்திலேயே ஒரு மலை உருவம் பெற்று விட்டது.

அதனைக் கண்ட மதுரை மக்கள் அனைவரும் பெருமகிழ்ச்சி அடைந்தனர். பாண்டியனின் தோள்கள் பூரித்தன. மதி கெட்ட சமணர்கள் அனைவரும் பெருத்த வெட்கமடைந்து புறங்காட்டி ஓடினர்.

உலக மக்கள் தெரிந்து கொள்ள நல்ல சான்றாக விளங்குமாறு ரிஷப நந்தி தனது ஸ்தூல சரீரத்தை அங்கேயே விட்டு விட்டது. அந்த உடல் ரிஷப மலையாகி விட்டது.

பின்னர் தனது சூக்கும சரீரத்துடன் சொக்கநாதரிடம் சென்றது. பெருமான் அருள் புரிந்து அதற்கு முன்னைய வடிவத்தை அருளினார்.

நகர மாந்தரும் அனந்தகுண பாண்டியனும் மிகுந்த சந்தோஷம் அடைந்து, சிவ சன்னிதானத்தில் இருந்த நந்திகேசுவரரை வணங்கிச் சென்றனர்.

சோமசுந்தரப் பெருமானும் நந்தியாரின் வீரத்தையும் வெற்றியையும் பற்றி மீனாட்சியம்மையாரிடம் இனிதே சொல்லி வீற்றிருந்தார்.

நாட்கள் சென்றன. அனந்தகுண பாண்டியனுக்குக் குல பூஷணன் தோன்றினான். அரசாட்சிப் பொறுப்பைத் தன் மைந்தனிடத்திலே தந்து விட்டு அனந்தகுணன் சிவபுரம் சென்றான்.

30. மெய் காட்டியது

குலபூஷண பாண்டியன் தருமவழி நின்று சிறப்பான முறையில் அரசு செலுத்தி வந்தான். சுந்தரசாமந்தன் என்பவன் பாண்டியனது சேனாதிபதியாக இருந்தான். சாமந்தன் சிவனடியார்களையே சிவனாகப் பாவித்தவன். இம்மை மறுமை இரண்டுக்குமே மன்னனது உறுதுணையாக நின்றவன்.

அக் காலத்தில் சேதிராயன் என்ற குறுநில மன்னன் பல வெற்றிகள் பெற்று விளங்கினான். அதனால் கர்வம் மிகுந்தவனாகிப் பாண்டிய மன்னனையே பகைத்தான். பாண்டிய நாட்டின் மீது படையெடுக்கவும் எண்ணினான்.



சேதிராயன் படையெடுப்புக் கருத்தை அறிந்தான் குலபூஷணன். தனது சேனாபதி சுந்தரசாமந்தனைக் கூப்பிட்டு, "நமது பொக்கிஷசாலையைத் திறந்து கொண்டு வேண்டிய அளவு பொருளை எடுத்துக் கொள். மேற்கொண்டு புதிய சேனைகளைச் சேர்த்துப் பதிவு செய்து கொள்," என்றான்.

சாமந்தன் பொக்கிஷசாலையை நோக்கிச் சென்றான். சிவபெருமான் திருவருள் முன்னுக்கு இழுத்தது; மன்னவன் கட்டளை பின்னுக்கு இருந்து தள்ளியது. பொக்கிஷ சாலையைத் திறந்தான், வேண்டிய அளவு பொன்னையும் மணியையும் வாரி எடுத்துக் கொண்டான். அளவற்ற சந்தோஷத்தோடு திருக்கோவிலுக்குப் போனான். பொற்றாமரைக் குளத்தில் நீராடினான். சோமசுந்தரப் பெருமானைத் துதித்து வணங்கினான்.

"வேத முதல்வா! அடியார்கள் கருத்தறிந்து முடிப்பவனே! இப்பொருள்களெல்லாம் தேவரீருக்கும் தங்கள் அடியவருக்கும் அர்ப்பணம்!" என்று வேண்டிக் கொண்டான்.

பிற்பாடு அந்தப் பொருள் முழுவதையுமே சிவ சம்பந்த மான திருப்பணிகளில் ஈடுபடுத்தினான். திருக்கோவிலுக்குப் பணி பல புரிந்தான். தான தருமங்கள் பல செய்தான். சிவக்கோலம் பூண்டவருக்கெல்லாம் அறுசுவையுடன் அமுது படைத்தான். இவ்வாறாகச் சுந்தரசாமந்தன் நாள்தோறும் செய்து வருவதை ஒற்றர்கள் மூலமாகக் கேள்விப்பட்டான் பாண்டியன்.

ஆனால், சேனாதிபதி சுந்தரனோ ராஜ சபையில் தோன்றும்போதெல்லாம் ராஜ காரியம் பார்ப்பவன்

போலவே பாவனை செய்து வந்தான். பொய்யாக ஓலைகளைப் பல நாடுகளுக்கு அனுப்புவது போலவும் பாவனை செய்தான். ஆனால் எங்கிருந்தும் எவரும் வந்து சேனையில் புதிதாகச் சேர்ந்தவர்களாகத் தெரியவில்லை. ஆறு மாத காலம் ஆகிவிட்டது. ஆதலால் ஒரு நாள் குலபூஷண பாண்டியன் சுந்தரசாமந்தனை அழைத்து, "நாளை சாயந்திரத்திற்குள்ளாக ஓலை விடுத்துச் சேனா வீரர்கள் அனைவரையும் அழைத்துக் காட்டுவாய்," என்றார்.

சுந்தரனும் அதற்கு உடன்பட்டான். நேராகத் திருக்கோவிலை அடைந்து, சோமசுந்தரக் கடவுளின் திருவடியில் விழுந்து வணங்கினான். "மதுரேசா! மன்னன் அளித்த மலையளவு பொருள்கள் அனைத்தையும் ஏற்றுக் கொண்டு அடியேனைப் பணி கொண்டு அருளினீர். இனி நான் சேனைகளை எவ்வாறு திரட்டுவது?" என்று வினவி ஏங்கினான்.

"யாம் நாளைக்குச் சேனா வீரர்களோடு உரிய காலத்தில் வந்துதோன்றுவோம். நீயும் படைஞர் வரவை எதிர்பார்த்துப் பாண்டியன் சபையில் இருப்பாயாக!" என்று ஆகாசவாணி சொல்லியது. சோமசுந்தரக் கடவுளின் திருவருளால், சுந்தரன் ஆனந்த சாகரத்தில் மூழ்கினான்.

'எப்போது விடியும்?' என்ற நினைவோடு இரவைப் போக்கினான் சாமந்தன்.

சோமசுந்தரப் பெருமான் தனது கணங்களை வில் வீரர்களாகச் செய்தார். தாமும் குதிரை வீரனைப் போலக் கோலம் பூண்டார். விடியலாயிற்று. சுந்தர சாமந்தன் திருக்கோயில் சேர்ந்து பொற்றாமரைக் குளத்தில் ஸ்நானம்

செய்து, சொக்கேசரைப் பணிந்து போற்றித் தனது குறையிரந்து பின்னர் ராஜசபையை அடைந்தான்.

சங்கு முதலிட்ட பிரதம சிவகணங்களும், குண்டோதரன் முதலிட்ட பூதவீரர்களும் சேனாவீரர் வடிவம் கொண்டனர். வில், வாள், வேல் ஆகிய பலவகை ஆயுதங்களையும் ஏந்தி விரைந்து வந்தனர். நந்தி, மாகாளன், பிருங்கி, நிகும்பன், கும்போதரன் ஆகிய சிவகணத் தலைவர்கள் எல்லாரும் போர்க் கோலம் பூண்டு குதிரை வீரர்களாகச் சூழ்ந்து வந்தனர். சிவபெருமான் தனது ரிஷப வாகனத்தையே குதிரையாக மாற்றிக் கொண்டார். அதன் மேல் அமர்ந்து கொண்டு ஒற்றைச் சேவகராய்க் காட்சி தந்தருளினார். பேரிரைச்சல் செய்து கொண்டு சேனையானது மதுரையை நோக்கி வந்தது.

சேனையின் வரவு தெரிந்த சுந்தரசாமந்தன் குலபூஷண பாண்டியன் முன்னால் சென்று வணங்கி விண்ணப்பம் செய்தான். பாண்டியன் உளம் மகிழ்ந்தான். கடை வாசலுக்கு வந்து அங்கிருந்த மண்டபத்திலே வந்து அமர்ந்தான். சேனைப் பெருக்கத்தின் சிறப்பை நோக்கினான். சேதிராயனைக் கொல்லப்போகும் மகிழ்ச்சி ஏற்பட்டது பாண்டியனுக்கு.

எதிரே அணிவகுத்து நின்ற சேனை வீரர்களையெல்லாம் இனம் தெரிந்து காட்டி அவர்கள் எந்த எந்த நாட்டிலிருந்து வந்தவர்கள் என்பதை முறையாக அறிமுகப்படுத்தினான் சாமந்தன்- மன்னனுக்கு. கொங்கம் தொடங்கிச் சோழம் ஈறாகப் பதினாறு நாட்டவர் சேனையை அவரவர் மெய்யினைக் காட்டித் தெரிவித்தான்.

'எவ்வளவோ தூரத்திலிருந்தெல்லாம் வீரர்களை வரவழைத்திருக்கிறாயே! என்னே உனது சாமர்த்தியம் என்று

என்னைக் கேட்டு விடாதீர்கள். மன்னவரே! தங்கள் பொருள் அனைத்தையும் கட்டுப்பாடின்றிச் செலவழித்ததால் இவர்கள் எல்லாரும் இங்கே வந்திருக்கிறார்கள்!'' என்று கூறினான்.

பாண்டியன் பிரமித்து விட்டான். அந்தச் சேனா சமுத்திரத்திலே சற்றுத் தொலைவில் ஒற்றைச் சேவகர் குதிரை மீது ஆரோகணித்திருப்பதைக் கண்டான் பாண்டியன். மனம் அவர்பால் சென்றது. உடனே சாமந்தனை நோக்கி, ''அவர் யார்?'' என்று வினவி, ''அவரை எம்மிடம் அழைத்து வருக,'' என்று பணித்தான். இதனை யறிந்த ஒற்றைச் சேவகரும் குலபூஷணன் முன்னே வந்தருளினார். பாண்டியன் மிக மிக மகிழ்ந்தான். நவரத்தின மாலைகளையும், பொன்னாடை களையும் கொடுத்தான். சுந்தரனைத் திருப்திப்படுத்த வேண்டிச் சோமசுந்தரப் பெருமானும் அவற்றையெல்லாம் ஏற்றுத் தமது பரிவாரங்களுக்கு ஈந்தருளினார். தமது குதிர்ரையைத் தூண்டி ஐந்து வகைக் கதிகளிலும் நடாத்திக் காண்பித்தார். பின்னர் தமது சேனைக்குள்ளே புகுந்து கொண்டார்.

அது சமயம் ஒற்றன் ஒருவன் ஓடிவந்தான். பாண்டியனை வணங்கி நின்று, ''சேதிராயன் வேட்டையாடச் சென்றிருந்த போது புலியினால் கொல்லப்பட்டு விட்டானாம்!'' என்ற சேதியைச் சொன்னான். தன் எதிரே போர் முரசு முழங்கும் சேனையைக் கண்டு மகிழ்ச்சி கொண்ட பாண்டியன் சேனாதிபதியான சுந்தர சாமந்தனுக்குச் சிறப்பான தலைமைப் பதவி அளித்ததுடன், வரிசைகளையும் ஏராளமாகத் தந்தான். ''இந்தப் படைவீரர்களையெல்லாம் அவரவர் நாட்டுக்குப் போகுமாறு விடையளித்து அனுப்பிடுக,'' என்றான் பாண்டியன்.

சுந்தர சாமந்தனும் சேனைகளை அனுப்பி வைப்பது போலப் பாவனை காட்டினான். சோமசுந்தரக் கடவுள் அங்கிருந்தபடியே மனித வேஷங் கொண்ட சேனையராகிய சிவ கணங்களோடு. திடீரென மறைந்து அருளினார். அதனைக் கண்டு பேராச்சரியம் கொண்டான் பாண்டியன். எண்ணத்தில் தோன்றிய சந்தேகத்தைத் தானே உணர்ந்து தெளிவாக்கிக் கொண்டான்.

''சோமசுந்தரப் பெருமான் செய்தருளிய திருவிளையாடலே இது!'' என்று தேர்ந்து ஆனந்த பாஷ்பம் பெருக்கினான். தனது இன்னுயிர்த் துணையான சாமந்தனைப் பார்த்து, ''சோம சுந்தரப் பெருமான் உனக்காக ஏன் வந்தார் என்றால், எனக்கு அக்கடவுளே நீதான்!'' என்று புகழ்ந்து கூறி அவனுக்குப் பலவகைச் சிறப்புகளை வழங்கினான்.

பின்னர் உள்ளத்திலே சற்றேனும் கவலையின்றி அரசு செய்து வாழ்ந்து வந்தான் குலபூஷண பாண்டியன்.

31. உலவாக் கிழி அருளியது

பாண்டியன் குலபூஷணன் பெரிய வள்ளலாக விளங்கினான். சோமவார, அஷ்டமி, சதுர்த்தசி என்னும் விரதங்களை மிகுந்த சிரத்தையுடன் அனுஷ்டித்து வந்தான். அதனாலே, அவனுக்கு மிகவும் கர்வம் உண்டாயிற்று.

கர்வம் மிகுந்து விட்டதாலே பாண்டியன் நாட்டிலுள்ள மறையவர்களை மதிக்காமல் அலட்சியம் செய்து வந்தான். அதனால் மழை பெய்யவில்லை; மறையவர் வறுமையால் வாடியதால் வேதம் ஓதுவதைக் கைவிட்டனர். யாக யஞ்ஞங்கள் நின்று விட்டன. நாட்டிலே எங்கும் வறுமை தாண்டவம் ஆடியது. இதை உணர்ந்த குலபூஷணன் உளம் வருந்தினான்.

ஒரு சோமவாரத்தன்று திருக்கோவிலுக்குச் சென்றான். பொற்றாமரைத் திருநீரிலே நீராடிவிட்டுச் சித்தி விநாயகரை வணங்கிய பின்னர், மீனாட்சியம்மையையும் வணங்கிய பிறகு, சோமசுந்தரப் பெருமான் முன்பு அஞ்சலி செய்து நின்று, "பெருமானே! உயிர்களுக்கெல்லாம் உயிரானவரே! பாண்டிய நாட்டு உயிர்களெல்லாம் பசியால் வருந்துவது ஏனோ? அடியேனது பொருள்களெல்லாம் சிவ புண்ணிய கைங்கரியங்களிலேயே சென்றன. எளியேனது துன்பம் நீங்குமாறு திருவருள் புரிய வேண்டும்!" என்று இறைஞ்சினான். இறைவர் பாண்டியனது பிழையை உணர்ந்ததால் செவி சாய்க்காதது போலிருந்தார்.

பாண்டியன் அரண்மனை சேர்ந்தான். சிவபெருமானைச் சிந்தித்த வண்ணம் தரையிலே கிடந்து நித்திரை போனான்.



கனவிலே சிவபெருமான் சித்த மூர்த்தியாய் எழுந்தருளினார். ''பாண்டியனே! என்பால் சிறந்த பக்தி பூண்டவன் நீ. செங்கோலாட்சி புரிபவன். இருந்தும் உன்னிடம் ஒரு குறை இருக்கிறது. நீ மறை ஓதும் வேதியர்களை மதிக்காமல் இருந்து விட்டாய். ஆகையால், நாட்டிலே வேள்விச் செல்வம் குறைந்து விட்டது. வேதமே நமது இருக்கை, வாகனம், கண், வாக்கு, சக்தி, வடிவம் எல்லாம். இப் பெரும் சிறப்புடைய வேதம் ஓதுபவர்கள் அந்தணர்கள். வேதியர் செய்யும் வேள்வியே மழைக்குக் காரணம். வேதத்தவர்களை நீ நிரம்பவும் அலட்சியம் செய்து விட்டாயே. இனி நீ அந்தணர்களைப் போற்றி வருவாயாக. யாம் உனக்கென ஓர் உலவாக் கிழி அருள்கின்றோம். இவ்வுலவாக்கிழியிலிருந்து எவ்வளவு பொன்னை எடுத்துச் செலவழித்தாலும், அது குறையாமலிருக்கும். இதனை வைத்துக் கொண்டு நாட்டில் உள்ள வறுமையைப் போக்குவாய்!'' என்று திருவாய் மலர்ந்தருளிப், பாண்டியன் கையிலே உலவாக்கிழியை ஈந்து, நெற்றியிலே விபூதியை இட்டு மறைந்தருளினார்.

குலபூஷண பாண்டியன் உடனே விழித்தெழுந்தான். தன் கனவு நினைவாகி யிருப்பதைக் கண்டான். சோமசுந்தரக் கடவுளின் திருவடியே என்று கருதிப் பொற்பையைத் தனது தலையிலே வைத்துக் கொண்டு ஆனந்தத் தாண்டவம் செய்தான். பின்னர் மந்திரிகளிடத்திலும் சேனாபதிகளிடத் திலும் கிழியைக் காண்பித்துக் கனவு நிகழ்ச்சிகளைச் செப்பினான்.

குலபூஷணன் உலவாப் பொற்கிழியைஅரியணையின் மேல் வைத்துக் கோலாகலமாகப் பூசை செய்தான். சோமசுந்தரக் கடவுளாகவே மதித்துக் கிழியினை

வழிபட்டான். பிறகு அந்தப் பையின் கட்டை அவிழ்த்து, அதிலிருந்து பொன்னை எடுத்து மறையவர்களுக்கும், யாக யஞ்ஞங்களுக்கும், ஏனைய நற்காரியங்களுக்கும் அளவற்ற படி வாரி வாரி வழங்கினான். பாண்டியனும் ஏனையோரும் ஆச்சரியப்படுமாறு கிழியில் இருந்த பொன் அளவு குறையாமலிருந்தது.

உலவாக்கிழியிலிருந்து விளைந்த பொன்னைக் கொண்டு குலபூஷண பாண்டியன் சோமசுந்தரக் கடவுளது திரு விமானத்தைப் பொன் கொண்டு இழைத்தான். மீனாட்சி யம்மையின் திருக் கோவிலையும், அறுகால் பீடத்தையும், கோபுர வாசலையும் அழகுறப் பணி செய்தான்.

பாண்டிய நாடு செல்வச் சிறப்பால் தழைத்தோங்கியது. வேதியரும், வேதாந்தியரும் வையாகரணரும், நியாயிகளும், சிவவிரதிகளும், சிவாகமியரும், துறவிகளும் வறுமையால் வாடாது, செழிப்போடு வாழ்ந்து வந்தனர்.

32. வளையல் விற்றது


தாருக வனத்தில் இருந்த ரிஷி பத்தினிகளின் கற்பு நிலையை அளந்து காட்டும் பொருட்டு முன்பொருக்கால் சிவபெருமான் பிட்சாடனர் திருக்கோலம் பூண்டருளினார். மன்மதனே தவக்கோலம் கொண்டு வந்தது போலிருந்தது.

அவரது திருவுருவத்தையும் அமுத கீதத்தையும் கண்டு கேட்ட ரிஷி பத்தினிகள் தங்கள் நிறையழிந்தனர். பிச்சையிட வந்த பத்தினிமார் தவமூர்த்தியைக் கண்டு காமத்தால் மதிமயங்கி அவரது பாத்திரத்திலே பிச்சையுடன் தங்கள் வளையல்களையும் போட்டு விட்டனர். நாணம் இழந்ததோடு நில்லாமல் இடுப்பிலே அணிந்திருந்த மேகலையையும் இழந்தனர். அவர்களது ஆடைகள் நெகிழ்ந்தன.

தாருக வன ரிஷி பத்தினிகள் பிட்சாடனப் பெருமானை நெருங்கி வந்து நின்று இமை கொட்டாமல் பார்த்தனர். அவர்கள் அனைவரும் கரம் குவித்துப் பிச்சைப் பெருமானின் திருவடியில் விழுந்து, ''எமக்குத் துணை நீரே!'' என்று சொல்லி அவரைத் தழுவ நெருங்கினர். இறைவன் விலகி விலகிச் சென்றான்.

அப்போது அம் மாதர்கள், ''எம்மைத் தழுவாது போனால் அவிழ்ந்து போன ஆடையையாவது உடுத்தி விடுங்கள்; கைகளை விட்டுக் கழற்றிய வளையல்களை எங்கள் கைகளில் இட்டு விடுங்கள்!'' என்று பரிதாபகரமாக வேண்டினர்.

''நாளை வந்து இடுவோம்!'' என்று கூறிப் பிட்சாடன மூர்த்தி மறைந்தருளினார்.



தாருக வனத்துப் பத்தினிகள் பிச்சை மூர்த்தி கவர்ந்து சென்ற நாணத்தையும் மனத்தையும் மீட்க முடியவில்லை. ஆடைகளும் வளையல்களும் ஒழியப் பசலை படர நின்றிருந்தனர். தமது பத்தினியரின் அலங்கோல நிலையைக் கண்டனர் கணவர்களாகிய ரிஷிகள். சோமசுந்தரப் பெருமானே இவ்வாறு வந்து திருவிளையாடல் புரிந்தார் என்பதைத் தமது ஞான திருஷ்டியால் தெரிந்து கொண்டனர்.

ரிஷிகள், கற்பு நிலையில் மாறிய தமது மனைவிகளைப் பார்த்து, ''நீங்கள் மதி மயங்கினீர்கள்; ஆதலால், மதுரை மாநகரத்தில் வசிக்கும் வணிகர் குல மகளிராகப் பிறப்பீர்கள்; செல்லுங்கள்,'' என்று சாபம் ஈந்தனர்.

மனைவிமார், ''எங்களுக்குச் சாப விமோசனம் எப்படி, எப்போது?'' என்று வேண்டி வினவினர்.

''மதுரை மாநகருக்கு இறைவனாகிய சோமசுந்தரப் பெருமான் உங்களுடைய கைகளைத் தொடும்போது சாபம் விலகும்!'' என்றனர் ரிஷிகள்.

ரிஷி பத்தினிகள் அனைவரும் சாபத்தால் சிந்தை தளர்ந்தார்கள். மதுரை மாநகரத்திலே வணிகர் குலத்திலே பெண்டிராக வந்து தோன்றினார்கள். வளர்ந்து மங்கைப் பருவம் அடைந்து அழகும் இளமையும் பொங்க விளங்கினார்கள். அக் காலம் குலபூஷண பாண்டியன் செங்கோல் செலுத்தி வந்தான்.

சிவபெருமான் பண்டைய ரிஷி பத்தினியர்பால் கருணை காட்டத் திருவுளம் கொண்டார். தனது திவ்ய மேனியை மறைத்துக் கொண்டு வளையல் விற்கும் வணிகர் போல வேஷம் புனைந்தார். தான் முன்பு ரிஷி பத்தினியரிடம்

கவர்ந்து வந்த அதே வளையல்களைப் பட்டுக் கயிற்றிலே கோத்துக் கொண்டு வந்தார். அவற்றையே திரும்ப அவர்களுக்கு இடுவோம் என்று திருவுள்ளம் கொண்டார்.

மதுரை மாநகரப் பெருவீதிகளிலே, வேதமுரைக்கும் தம் திருவாயினால், "வளையல் வாங்குவீர், வளையல் வாங்குவீர்!" என்று இயம்பிச் சென்றார்.

வணிகர் குல மங்கையர் அனைவரும் திவ்யக் குரல் கேட்டுச் சிந்தை தளர்ந்தவராய் வீதிக்கு ஓடிவந்து வளையல்காரர் முன்பு நின்றார்கள். மன்மதனை நிகர்த்த எழிலுருவத்தைக் கண்டு காமுற்றனர்.

முதலில் அச்சம் முதலான நால்வகைக் குணங்களும் தடை செய்து நிறுத்தின. மனம் தடுமாறிய வணிகர்குல மகளிர் நிலை குலைய வளையல் விற்பவரைச் சூழ்ந்து நின்றனர். தங்களது மங்கலக் கைகளுக்கு வளையல் இடுமாறு வணிகரைக் கெஞ்சிக் கரங்களை அவர் முன்னே நீட்டினர்.

வணிகப் பெருமானும் தம் திருக்கரத்தால் மங்கையரின் கைகளைப் பற்றி முகிழ்ப்பித்துப் பல வகையான நல்ல வளையல்களை இட்டுக் காதலைப் பெருக்கினார்.

மங்கையரும் மனம் இழந்தவராகித் திரும்பத் திரும்ப ஏதேனும் ஒரு காரணத்தை வைத்துக் கொண்டு தேவ வணிகர் முன்னே வந்து நின்றனர். அவர்கள் மனமும் நெகிழத் தொடங்கியது.

"வணிகரே! இம்மாதிரியான சிறந்த வளையல்களை நாங்கள் எங்கும் இதற்கு முன்பு பார்த்தது கிடையாது. இவ்வளையல்களெல்லாம் எங்களைப் புளகாங்கிதம்

அடையச் செய்தன. நாளைக்கும் வளையல் போட வர வேண்டும்; சற்றே இருங்கள்; வளையல்களுக்கான விலையைத் தருகிறோம்,'' என்று சொல்லினர்.

''அதற்கென்ன? விலையை நாளைக்கு வாங்கிக் கொள்கிறேன்,'' என்று கூறிவிட்டு மறைந்தருளினார், வணிகத் தேவர்.

மதுரை மக்கள் அனைவரும் வளையல் வணிகராக வந்து வணிக குல மகளிரின் சிந்தை கவர்ந்து சென்றவர் சிவ பெருமானே என்பதைத் தெரிந்து ஆச்சரியம் அடைந்தனர். பெரு மகிழ்ச்சி அடைந்தனர்.

சோமசுந்தரப் பெருமானே தமது திருக்கரத்தால் தொட்டு வளையல் அணிவித்த பாங்கினால் வணிகர் குல மங்கையர் எல்லாரும் கருவுற்றனர். முருகப் பெருமானை நிகர்த்த அளவற்ற புத்திரர்களைப் பெற்றனர்.

அந்தத் திருக்குமாரர்கள் எல்லாரும் பெருமையும் வீரமும், வெற்றியும் களிப்பும் கொண்டு வாழ்ந்து வந்தனர்.

வணிக மாதர் அனைவரும் சிவபெருமான் திருவருளால் சில நாட்கள் இருந்து வாழ்ந்து பின்னர்ச் சிவலோகம் சென்றனர்.

33. அட்டமா சித்தி உபதேசித்தது

முன்னொரு காலத்தில் திருக்கயிலாயத்திலே கல்லால மரத்தின் கீழே சிவபெருமான் அமர்ந்திருந்தார். அருகே இருந்த உமாதேவியார் தமது திவ்ய கரங்களாலே வெற்றிலைச் சுருளை மடித்துக் கொடுத்துக் கொண்டிருந்தார். அன்பும் அருளும் பெருகிய போக குரு மூர்த்தியான சிவபெருமான் அண்டியிருந்த சிவகணத் தலைவர்கட்கும் சனகாதி முனிவர்கட்கும் அமுத நல்லுரைகளை வழங்கிக் கொண்டிருந்தார்.

அந்தப் புனிதமான சூழ்நிலையிலே முருகப் பெருமானுக்குப் பாலூட்டிய கார்த்திகைப் பெண்களான யக்ஷமாதர் ஆறு பேர்களும் சிவச் சின்னங்கள் துலங்கச் சிவபெருமான் திருமுன்னர் வந்து பணிந்து நின்றனர். பின்னர் பெருமானின் சேவடி வணங்கி, ''கருணைக் கடலான எந்தையீர்! எளியவர்களாகிய எங்களுக்கு அஷ்டமாசித்தியை உபதேசித்தருள வேண்டும்,'' என்று விண்ணப்பம் செய்து கொண்டார்கள்.

கைலாசபதி தமது இடம் கொண்ட உமாதேவியாரைச் சுட்டிக்காட்டி விட்டு, ''உமாதேவியே பராசக்தி, மகேஸ்வரி, அணிமா முதலான அஷ்டமா சித்திகளும் பணிப் பெண் களாகத் தன்னைச் சுற்றிலும் குற்றவேல் புரிய அமர்ந் திருப்பவள். ஆதலால், உமாதேவியை நீங்கள் உள்ளத்தில் இருத்தித் தியானம் செய்தால் உங்கள் வினைகளைப் போக்கி அஷ்டமா சித்திகளையும் தந்தருளுவாள்,'' என்று திருவாய் மலர்ந்தருளினார். பின்னர் அஷ்டமாசித்திகளையும் யக்ஷமாதர் அறுவருக்கும் உபதேசம் செய்தருளினார்.



அவர்கள் அறுவரும் உமாதேவியாரைத் தியானிக்காது இருந்து விட்டதனால் உபதேசத்தையே மறந்து விட்டனர்.

சிவபெருமான் அறுவரது குற்றத்தையும் மன்னிக்க முடியாதபடி கோபம் கொண்டார். "நீங்கள் அறுவரும் பட்டமங்கை என்னும் ஸ்தலத்திலுள்ள ஆலமரத்தின் கீழே கற்பாறையாய்க் கிடக்கக் கடவீர்கள்!" என்று சாபம் கொடுத்தார்.

சாபம் பெற்ற அறுவரும் மனக் கவலை மிகுந்தவர்களாகி, "விமோசனம் எப்படிக் கிடைக்குமோ?" என்று ஏக்கத்தோடு கேட்டனர்.

"ஆயிரம் ஆண்டுகள் பாறையாகக் கிடக்க வேண்டும். அப்பால் யாம் மதுரையிலிருந்து அங்கே வந்து உங்களது சாபத்தைப் போக்குவோம்; உங்களுடைய பழைய வடிவத்தையும் ஈந்து அஷ்டமா சித்திகளையும் விளக்கிக் காட்டுவோம்," என்று மாற்றுரை மொழிந்தார்.

யக்ஷ மாதர் அறுவரும் பட்டமங்கை ஸ்தலத்திலிருந்த ஆல மரத்தடியிலே கற்பாறையாகிக் கிடந்தனர். ஆயிரம் ஆண்டுகளும் கழிந்தன. எண் குணம் தங்கிய ஒரு பெருந் தலைவனாகிய சிவபெருமான் தனது இச்சையினால் ஞானாசார்ய வடிவம் கொண்டார். கற்பாறையாகக் கிடக்கும் கார்த்திகைப் பெண்கள் அறுவரின் முன்பு வந்து தோன்றினார். அவர்களது வினை கெடுமாறு திருப்பார்வை செய்தருளினார்.

உடனே கிருபா கடாக்ஷம் பெற்ற அறுவரும் பாறை உருவம் நீங்கப் பெற்றவர்களாகித் தங்கள் சுய ரூபத்தை அடைந்தனர். அறுவரும் பக்தி பெருகச் சிவபெருமான் திருவடியிலே வீழ்ந்து வணங்கினர். பின்பு சிவபெருமான் பெருங் கருணை கொண்டு அவர்கள் சிரங்களின் மீது தமது

திருக்கரத்தை வைத்து அஷ்டமாசித்திகளையும் தெள்ளத் தெளிய உபதேசித்தருளினார்.

''அணிமா, மகிமா, லகிமா, கரிமா, பிராப்தி, பிராகாம்யம், ஈசத்வம், வசித்வம் எனச் சித்திகள் எட்டு வகைப்படும். இவை அனைத்தும் ஒப்பற்ற மெய் ஞானிகளின் விளையாட்டின் வகைகளாகும். பரமாணுவாய்த் தங்கும் தன்மையே அணிமா. எங்கும் நிறைந்திருக்கும் பெருமையே மகிமா. பாரமற்று இருப்பது லகிமா. கனமற்று இருப்பது கரிமா. எல்லா உலகும் சென்று வரும் தன்மை பிராப்தி. வேறு உடம்புக்குள் புகுதல், வான சஞ்சாரம் செய்தல், நினைத்த இடத்திலே நினைந்தபடி செய்தல், உலகப் பொருள்களனைத்தையும், மூன்று காலங்களையும், வானுலகப் பொருள்களையும் தன் உடலிலே உள்ள ஒளியால் விளங்கச் செய்தல், இருந்த இடத்தில் உள்ளவாறே அனைத்தும் அறிதல், பிராகாம்யம். சிவபெருமானை நிகர்த்து முத்தொழில்களும் செய்து நவகிரகங்களையும் தன் கட்டளைக் கிணங்கச் செய்வது ஈசத்வம். எல்லாவகை உயிர்களையும், இந்திராதி திக்குபாலகர்களையும் த்ன் வசமாகச் செய்து கொள்வது வசித்வம். ஆனால், எம்மையறிந்த சிவஞான யோகிகள் இந்தச் சித்திகளை விரும்ப மாட்டார்கள். இருந்த போதிலும் இச் சித்திகள் யோகியர் பெருமையை உலகிற்கு உணர்த்தும் பாங்குடையன,'' என்று திருவாய் மொழிந்தருளினார் யோகராஜாவான சிவபெருமான்.

சிவபெருமான் தெளிவாக உபதேசம் செய்தருளிய அஷ்டமா சித்திகளையும் யக்ஷ மாதர் ஆறு பேர்களும் உமா தேவியாரின் தியானத்தின் மகிமையாலே நன்றாகப் பயின்றனர். பிறகு ஆகாச மார்க்கமாகச் சென்று கைலாச மலையை அடைந்தனர்.

34. விடை இலச்சினை இட்டது

குலபூஷண பாண்டியன் மதுரையை ஆண்டு வந்த காலத்திலே காஞ்சிமா நகரத்தைக் காடுவெட்டிய சோழன் என்ற மன்னன் ஆண்டு வந்தான். அவன் காஞ்சிப்புறமுள்ள காடுகளை வெட்டித் திருத்தி நகரம் கண்டதால் அப்பெயர் பெற்றான். அச்சோழ மன்னன் உத்தம சிவ பக்தர்களுக்குள்ளே உத்தமமான சிவ பக்தன். திருநீறும், உருத்திராட்ச மாலையும் இலங்கிய மேனியான். சிவபெருமானே எல்லாவற்றுக்கும் மேலான பொருள் என்பதைத் தெரிந்து உறுதி கொண்டவன். வேத வேதாந்தங்களை நன்றாக ஓதி உணர்ந்தவன். சிவ புண்ணியக் கதைகளை நாள்தோறும் செவிமடுப்பவன். சிவ லீலைகளைக் கேட்டு உளம் களி கூர்பவன்.

சோமசுந்தரப் பெருமானை மதுரை சேர்ந்து தொழ வேண்டுமென்று பெருங்காதல் கொண்டான், காடு வெட்டிய சோழன். நாளாக நாளாக மதுரைச் சொக்கநாதர்பால் கொண்ட பக்தி முறுகியது. ''எப்போது நான் மதுரைப் பெருமானின் சேவடி காண்பேன்?'' என்ற சிந்தனையோடு ஓர் இரவிலே நித்திரை செய்தான்.

மதுரைப் பெருமான் சோழனது கனவிலே சித்த மூர்த்தியாகத் தோன்றி, ''சோழனே! நீ பயம் கொள்ள வேண்டாம். மாறு வேஷம் போட்டுக் கொண்டு நீ தன்னந் தனியனாய் இன்றே புறப்பட்டு மதுரைக்கு வா; வந்து எம்மைத் தரிசனம் செய்து திரும்பலாம்,'' என்று திருவாய் மலர்ந்தருளி மறைந்தார்.



காடுவெட்டிய சோழனும் சித்தப் பெருமானையும் அவர் திருமொழியையும் சிந்தித்தபடியே விழித்துணர்ந்தான். பெரிதும் வியப்படைந்தான். தன்னந்தனியாக அவ்விரவு நேரத்திலேயே தன் நகர் நீங்கி மதுரை நோக்கிப் புறப்பட ஆயத்தமானான். சிவ பக்தியைக் குதிரையாகக் கொண்டான்; பஞ்சாட்சர மகா மந்திரத்தையே தனது உடைவாளாகக் கொண்டான். மதுரையை நோக்கித் தனி வழி ஏகினான்.

பலவகை நிலங்களையும், மலைகளையும், ஆறுகளையும் கடந்து, வையை நதியின் கரையை வந்தடைந்தான். வையை நதியிலே வெள்ளம் பெருக்கெடுத்து ஓடிக் கொண்டிருந்தது. ஆற்றின் கரையிலே நின்று வெள்ளப் பெருக்கினைக் கண்டு கவலையோடு நின்றான் சோழன்.

''சோமசுந்தரப் பெருமானைத் தரிசிக்க வந்த தருணம் பார்த்து இவ் வெள்ளப் பெருக்கு இடையூறாக வந்ததே! கைக்கெட்டியது வாய்க் கெட்டாது போய்விடுமோ? சூரியோதயம் ஆகிவிட்டால் பகைவனான பாண்டியன் எனக்குத் துன்பம் இழைப்பான். பாண்டியனை மட்டுமே பகையாளி என்று எண்ணினேன். இந்த ஆறும் பகையாகி விட்டதே,'' என்று கருதி மனம் நைந்தான்.

சோழனது பெருங் கவலையை நன்குணர்ந்த சிவ பெருமான் கருணை கொண்டு சித்தமூர்த்திக் கோலம் தரித்து அவன் பக்கத்திலே வந்து நின்றார். வையை யாற்றிலே நீர் வற்றிப் போகும்படி கடாக்ஷம் செய்தார். வெள்ளம் வற்றியது.

சோழ மன்னனைத் தன்னுடன் அழைத்துக் கொண்டு சித்தப் பெருமான் வையை நதியைக் கடந்து சென்றார்.

மதுரைக் கோட்டையை அடைந்து அதன் வடக்கு வாசலைத் தன் திருவருளால் திறந்தார். உள்ளே புகுந்து கட்டுக்காவல் எல்லாம் மீறிப் பல வீதிகள் கடந்து திருக்கோவில் புகுந்தார். கோவிலிலுள்ள பொற்றாமரைத் தீர்த்தத்திலே சோழனை நீராடச் செய்தார். பிறகு உள்ளே சென்று சொக்கநாதரையும் மீனாட்சியம்மையாரையும் தரிசிக்கச் செய்தார். சித்த மூர்த்திகளின் திருவருளால் அம்மையாரைக் கண்ட சோழன், தூய்மையும், இன்பமும் நிரம்பப் பெற்றான். சுந்தரப் பெருமானையும், மீனாட்சி யம்மையாரையும் உளமாரத் தரிசனம் செய்த சோழன் பேரின்பத்திலே மூழ்கியவனாகி, "முதல்வா போற்றி! அடியவர்க் கெளியவனே, போற்றி! எளியவர்கள் எண்ணிய எண்ணியாங்கு எய்துமாறு அருள் புரியும் தனிப்பெரும் பொருளே, போற்றி!" என்று பல தோத்திரம் கூறித் துதித்தான். பல நல் வரங்களையும் வேண்டிப் பெற்றுக் கொண்டான்.

பின்னர் சித்தர் பெருமான் சோழனைப் பார்த்து, "மன்னவனே, நீ இங்கு வந்துள்ள செய்தியைத் தெரிந்தால் பாண்டியன் உனக்கு இன்னல் செய்ய நேரிடலாம்," என்று சொன்னார். பிறகு, அவனை வந்தவாறே அழைத்துச் சென்று வடக்கு வாசல் வழியிலே இட்டுச் சென்று வையையின் வடகரையிலே சேர்த்தருளினார். அவனது நெற்றியிலே திருநீற்றைச் சாத்தி, "உள்ளம் நிறைவு பெற்ற உனக்கு நல்ல துணை கிடைக்கும்!" என்று ஆசி கூறி வழியனுப்பினார். சித்த மூர்த்தி திரும்பி வந்து தான் முன்பு திறந்து கொண்டு வந்த வடக்கு வாசற் கதவுகளை மூடி, அதனிடத்தே ரிஷப மூர்த்தியை வைத்துத் தான் விமானத்துள் மறைந்தருளினார்.

விடிந்தது. மதுரைக் கோட்டையின் நான்கு வாசல்களும் திறக்கப்பட்டன. வடக்கு வாசலிலே ரிஷபக் குறி இருந்ததைக் காவலாளிகள் கண்டனர். மற்ற வாசற் கதவுகளிலே மீனக்குறி இலங்கி நின்றபோது வடக்குப் புறக் கதவுகளிலே புதுக்குறி எப்படி வந்தது என்பது எவருக்குமே புரியவில்லை.

"இந்த நிகழ்ச்சி எதிலே சென்று முடியுமோ?" என்று அஞ்சிய காவலாளிகள், ஓடோடியும் சென்று பாண்டியனை வணங்கி, "மாமன்னரே! நமது வடக்கு வாசற் கதவிலே இருந்த மீன் குறியை முற்றிலும் மாற்றி ரிஷபக் குறி இடப்பெற்றுள்ளது. இப்படித் துணிந்து செய்தது யார் என்பது எங்களுக்குத் தெரியாது; மன்னிக்க வேண்டும்!" என்று சொல்லினர்.

பாண்டியனும் சென்று வடக்குப்புறக் கதவிலே விடை இலச்சினை இடப்பட்டிருப்பதைக் கண்டான். "ஏதோ அற்புதம் அல்லவா நிகழ்ந்துள்ளது! இந்த மாயத்தைச் செய்தது யார்? ஏதும் விளங்கவில்லையே," என்று சந்தேகப்பட்ட மனத்தவனாய் அரண்மனைக்குச் சென்றான்.

அன்று பகலில் பாண்டியன் உணவு கொள்ளவில்லை. இரவிலும் உணவு கொள்ளாமல் படுக்கையை வெறுத்து நிலத்திலே நித்திரை போனான். சிவபெருமான் கனவிலே தோற்றம் காட்டியருளினார். "குலபூஷணா! காஞ்சிப் பதியிலுள்ள காடுவெட்டிய சோழன் நம்பால் நிரம்பப் பக்தியுடையவன். அவன் மதுரைக்கு வந்து நம்மைத் தரிசித்து வணங்க விரும்பினான். நாம் அவனை வடக்கு வாசலைத் திறந்து உள்ளே கூட்டி வந்து தரிசனம் செய்வித்தோம். அவனை மீண்டும் வெளியே அனுப்பிவிட்டுக் கதவினைத்

தாழிட்டு நமது விடை இலட்சினையை இட்டோம்!'' என்று திருமொழி பகர்ந்தருளினார்.

குலபூஷண பாண்டியன் விழித்தெழுந்தான். அவனது சந்தேகம் விலகியது. அஞ்சினான், வியர்த்தான். பூரிப்படைந்து பலவகைப் பாடல்களாலே சோமசுந்தரப் பெருமானைத் துதித்தான். பக்தனுக்காக எளிமையுற்று வந்த பெருமானின் பெருந்தன்மையை எண்ணி எண்ணிச் சிவானந்தத்திலே மூழ்கினான். சோமசுந்தரப் பெருமானின் திருச் சன்னதியை அடைந்து துதி செய்தான். எல்லாரிடத்தி லும் எம்பெருமானது திவ்ய திருவிளையாடலைச் சொல்லிச் சொல்லி மகிழ்ந்தான்.

பல நாட்கள் சென்றன. குலபூஷண பாண்டியன் தனது குமாரன் இராஜேந்திர பாண்டியன் வசத்திலே தனது கொற்றக் குடையையும், செங்கோலையும், மகுடத்தையும் அளித்து விட்டுப் பேரமைதி கொண்ட உள்ளத்தோடு சிவலோகம் சேர்ந்தான்.

35. தண்ணீர்ப் பந்தல் வைத்தது

இராஜேந்திர பாண்டியன் அரசாட்சி செய்து வந்த காலத்திலே காடுவெட்டிய காஞ்சிச் சோழன் எல்லாரும் அறியும்படி மதுரைக்குப் பலமுறை வந்து சொக்கநாதரைத் தரிசனம் செய்ய விரும்பினான். அதே நோக்கத்தோடு பாண்டியனை நேசம் கொள்ளும் பொருட்டு அவ்வப் பொழுது காணிக்கைப் பொருள்களை அனுப்பி வந்தான்.

சோழன் அனுப்பிய சுகர்ணாபரணம் பொன்னாடை முதலியவற்றைப் பாண்டியன் ஏற்று மகிழ்ந்தான். எதிர் சீராகப் பாண்டியனும் பல சிறந்த காணிக்கைகளை அனுப்பி வைத்தான். சோழன் மிகவும் மனம் மகிழ்ந்தவனாகித் தனது குமாரியைப் பாண்டியனுக்குக் கொடுக்க முன் வந்தான்.

அந்த விவாகம் பற்றிய செய்தியை அறிந்தான் பாண்டிய மன்னனின் தம்பி இராஜசிம்மன். தம்பி பழிக்கும் பாவத்துக்கும் பயந்தவனல்லன். பெரும் வஞ்சனைக்காரன். தானே சோழ மன்னனின் மகளைக் கல்யாணம் செய்து கொள்ள விரும்பினான்.

இந்த எண்ணத்தோடு அவன் காஞ்சிபுரம் போய்ச் சேர்ந்தான். தன் நகருக்கு வந்து சேர்ந்த இராஜசிம்மனைச் சோழன் தனது பரிவாரங்களுடன் எதிர் கொண்டு வரவேற்றான். தவிரவும் அண்ணனுக்கு மணம் செய்விக்க நினைத்த தனது குமாரியைத் தன்னை நாடிவந்த தம்பிக்குக் கொடுத்து விட்டான்.

இராஜசிம்மன் தனது மருமகன் ஆனதும், சோழனின் சிந்தை திரிந்தது. பாண்டியனது ஆட்சியையே பிடுங்கித் தன்



மருமகனுக்குக் கொடுத்துவிடக் கருதினான். இராஜேந்திர பாண்டிய மன்னனைப் பிடித்துத் தன் வசமாக்கும் எண்ணத்தோடு, தனது மருமகனுடன் சதுரங்க சேனைகளையும் கூட்டிக் கொண்டு பாண்டிய நாடு நோக்கிச் சென்றான். யுத்த பேரிகை முழங்கச் சேனைகள் சென்றன. மதுரைமா நகரத்திற்கு இரண்டு யோசனை அளவு தூரத்திலே நெருங்கி வந்து விட்டான் சோழன்.

அந்தச் சேதியை ஒற்றர்கள் மூலம் தெரிந்தான் பாண்டியன். உடனே சோமசுந்தரக் கடவுளின் சன்னதிக்குச் சென்று முறையிட்டான். "எம்பெருமானே! அன்றொரு இரவு தேவரீரைத் தரிசிக்க வந்த அதே காடு வெட்டிய சோழன் இன்றும் வந்துள்ளான். உள்ளொன்று வைத்துப் புறமொன்று செய்கின்றவனாகிப் போர்க்கோலம் பூண்டு வந்திருக்கிறான். அன்று அவனது பக்திக்கு ஈடு செய்த பெருமானாகிய தாங்களேதான் இப்போது அவனது பகைமைக்கும் ஈடு செய்தருள வேண்டும். எளியேன் வெற்றி கொள்ளும்படி செய்தருள வேண்டும்!" என்று விண்ணப்பித்துக் கொண்டான்.

பெருமான் திருவருளாலே அசரீரி எழுந்தது. "பாண்டியனே! பயப்படாதே. உனது சேனையுடன் சென்று எதிர்த்துப் போராடு. உனக்கே வெற்றி உண்டாகும்படி யாம் செய்வோம்!" என்றது. அசரீரி கேட்ட அரசன் இறைவன் திருவடியில் விழுந்து ஆனந்தம் அடைந்தான். பின்னர்த் தன் அரண்மனை சேர்ந்தான்.

சூரியோதயத்துக்கு முன்பே எழுந்தான். சந்தியா வந்தனாதிகள் செய்து சிவபூஜை முடித்துக் கொண்டான். தனது சேனைகளைக் கூட்டிக் கொண்டு சோழனை எதிர்த்துப் போரிடச் சென்றான். பாண்டிய சேனை ஓர் ஆறு போல

இருந்தது; சோழ சேனை கடல் போல் இருந்தது. போர் தொடங்கியது. மிகவும் கடுமையாக நடந்து கொண்டிருந்தது. இடி முழக்கம் போல ஒலியும் சண்டமாருதம் போன்ற வேகமும் உண்டாயின.

சோமசுந்தரப் பெருமான் திருவருளாலே பாண்டிய சேனா வீரன் ஒவ்வொருவனும் சோழ வீரர் கண்களுக்குப் பல பேர்களாகத் தோன்றினார்கள். தாக்குதல்- எதிர்த்தாக்குதல், பிரயோகம்- எதிர்ப் பிரயோகம் என்று போர் வெகு மும்முரமாக நடைபெற்றது. காலையிலே தொடங்கிய வெம்போர் நண்பகல் முடியக் கோரமாக நடைபெற்றுக் கொண்டிருந்தது. உச்சி வெயில் உக்கிரமாக எரித்ததால் வீரர்கள் அனைவரும் நீர் கிடைக்காமல் பெருந் தாகத்தால் பரிதவித்தனர்.

பாண்டியர் சேனை வாடி வருந்துவதைக் கண்ட சிவபெருமான் அந்தச் சேனையின் நடுவாக நான்கு கால்கள் கொண்ட தண்ணீர்ப் பந்தல் ஒன்று அமைத்தார். பந்தலின் நடுவே விபூதி தரித்துத் தவக்கோலம் கொண்டு நீராளாக நின்றிருந்தார். பந்தலின் உள்ளே பெரும் பானைகளிலே ஆற்று நீர் நிரம்பியிருந்தது. ஒரு கமண்டலத்திலே நீரை முகந்து கொண்டு தன்னை நாடி வந்த வீரர் அனைவருக்கும் சலியாது நன்னீர் வார்த்தார் பக்தர்ப் பெருமான்.

விடாய் தீர்ந்த பாண்டிய வீரர்கள் புத்துணர்ச்சியும் பலமும் பெற்றவராகிச் சோழ சேனையைப் பன்மடங்கு உக்கிரத்தோடு எதிர்த்தனர். சோழர் சேனை சின்னாபின்னப் பட்டுச் சிதைந்தோடியது. வெற்றிவாகை சூடிய பாண்டிய சேனா வீரர்கள் காடுவெட்டிய சோழ வேந்தனையும் அவனது மருமகனாகிய இராஜசிம்மனையும் சிறைப்பிடித்தனர்.

அவர்கள் இருவரையும் இராஜேந்திர பாண்டியன் முன்பு கொண்டு வந்து நிறுத்தினர்.

பாண்டியன் தன்முன்னே சிறைப்பட்டு நின்ற சோழனையும் தன் தம்பியையும் கொண்டுபோய்ச் சோமசுந்தரப் பெருமானின் திருமுன் நிறுத்தி, "எம்பெருமானே! தேவரீர் திருவுள்ளம் எதுவோ?" என்று வணங்கி வேண்டினான்.

அதுகேட்ட பெருமானும், "பாண்டிய! நீ அறநெறி தெரிந்தவன்; உன் இஷ்டப் படியே செய்யலாம்," என்று அசரீரியாக மொழிந்தருளினார்.

அசரீரி வாக்கைத் தெய்வ வாக்கென்று உணர்ந்த பாண்டியன், தரும சாஸ்திரப்படி சோழனுக்குச் சில தேர்கள், யானைகள், குதிரைகள், வீரர்கள் முதலியவற்றைக் கொடுத்துச் சில ஆபரணங்களையும் தந்து அனுப்பினான். தனது தம்பி இராஜசிம்மனுக்குத் தனது அரசிலே சிறிது பங்கு கொடுத்து அவனைத் தனியாக ஒதுக்கி விட்டான்.

எல்லா உயிர்களையும் காப்பவனாகிக் கடவுள் அருளாலே பல்வளம் பெருக அரசு செய்து இனிதே வாழ்ந்திருந்தான் இராஜேந்திர பாண்டியன்.

36. இரசவாதம் செய்தது

பாண்டிய வளநாட்டிலே, மதுரைமா நகருக்குக் கிழக்கே, வையை ஆற்றின் தென் கரையிலே திருப்பூவனம் என்ற சிவக்ஷேத்திரம் உண்டு. பூவணநாதப் பெருமான் திருக்கோவில் தொண்டர்களும், தாசிகளும், மற்றவர்களும் செய்த தவப்பயன் போல அவ்வூரில் பொன்னனையாள் என்ற பெண்மணி யொருத்தி தோன்றினாள்.

அவள் பெண்டிரில் சிறந்தவள்; தேவரும் கண்டு மோகம் கொள்ளத்தக்க பேரழகு உடையவள்; அமுதச் சாயல் பெற்றவள். வீணை இசைப்பதிலே, இனிமையாகப் பாடுவதிலே, அருமையாக ஆடுவதிலே, தேவமாதரை நிகர்த்திருந்தாள். அறநெறி தவறாமல் நடக்கும் தகுதி கொண்டவள்.

ஒவ்வொரு நாளும் விடிவதற்கு முன்னதாகவே தனது தோழிமாருடனே எழுந்து, வைகையாற்றிலே நீராடிச் சிவபூஜை செய்து, பின்பு திருக்கோவில் சேர்ந்து, சிவ சன்னதி யடைந்து, பூவணநாதரை வணங்குவாள். அங்கே தெய்வத் திருமுன் நாட்டியம் ஆடுவாள். சிவனடியார்களையே பெரும் பொருளாக மதித்து, அவர்களை வணங்கி, அவர்களை அறுசுவை உண்டி புசிக்கச் செய்வதையே தனது பெரும் கடமையாகக் கொண்டு, பின்னர் தான் உணவு கொள்வதையே நியமமாகக் கொண்டு ஒழுகி வரலானாள்.

அத்தகைய நாட்களில் பொன்னனையாளின் பக்தியின் திறத்தை உலகுக்கு எடுத்துக் காட்ட வேண்டி, பூவண நாதர் தமது திருப்படிவத்தைப் புதிதாகப் பிரதிஷ்டை செய்ய வேண்டுமென்ற எண்ணத்தை அவளுக்கு ஈந்தருளினார். அந்த நற்கருத்தோடு பொன்னனையாள் இருந்து வந்தாள்.



ஆனால், தனக்கு அன்றன்று கிடைக்கும் பொருளை யெல்லாம் சிவனடியார் பூசைக்கே செலவழித்து வந்ததால் ஏதும் மிஞ்சவில்லை. 'இறைவன் திருவுருவத்தைக் காண்பது எப்படி?' என்று ஏங்கியிருந்தாள். பாண்டிய மன்னனுக்கு அன்றொருக்கால் உலவாப் பொற்கிழி அருளிய சோமசுந்தரப் பெருமானையே தியானம் செய்து கொண்டிருந்தாள்.

எப்போதும் தன்னையே சிந்தை செய்துகொண்டிருக்கும் பொன்னனையாளுக்கு அருள் புரியத் திருவுளம் கொண்ட சிவபெருமான் சித்தர் உருவம் கொண்டார். திருநீறு பூசிய திருமேனியும், யோக பட்டம் கட்டிய இடுப்பும், யோக உடையும், செஞ்சடையும் கொண்டு விளங்கினார்.

சித்தர் பெருமான் ஒவ்வொரு நாளும் பொன்னனையாள் வீட்டிற்குச் சிவனடியார்களோடு சேர்ந்து வருவார். ஆனால் உணவு எதுவும் கொள்ளாமல் ஒரு பக்கத்திலே ஒதுங்கி யிருப்பார். சிவனடியார்கள் எல்லாரும் திருவமுது செய்து கொண்டிருந்தபோது ஒருவர் மாத்திரம் உண்வருந்தாமல் ஒருபுறமாக இருப்பதை வேலைக்காரிகள் கண்டார்கள். உடனே அவர்கள், "சுவாமி! தாங்கள் உள்ளே எழுந்தருள வேண்டும்!" என்று வேண்டினர்.

சித்தர் பெருமானும், "நல்லது, உங்களது தலைவியை இங்கே வரச்சொல்லுங்கள்," என்றார்.

வேலைக்காரிகள் அகத்தே சென்று பொன்னனையாளைக் கண்டு, "அம்மா! வந்த சிவனடியார்கள் எல்லாரும் அமுது செய்தார்கள். ஒரு அடியார் மட்டும் அரிய குணம் உள்ளவராகப் புன்னகை பூத்த முகத்தோடு விளங்குகிறார். அவர் உங்களைத் தம்மிடத்தே வரும்படிக்கு அழைக்கின்றார்," என்று சொல்லினர்.

ஊழியர் சொன்னதைக் கேட்டாள், பொன்னனையாள். நகைபூத்துக் குலுங்கும் எழிற் கொடிபோலச் சிவனடியார் பக்கம் வந்து, "தேவரீர் வரவு நல்வரவாகுக!" என்று கூறினாள். பின்னர் எல்லா வகையான உபசாரங்களையும் செய்தாள். சித்தருக்காகத் தன்னால் முடிந்த எதையும் செய்யச் சித்தமானாள். அதுகண்ட சித்தர் தமக்குள்ளே சிரித்துக் கொண்டு, "பெண்ணே, யாது காரணத்தால் நீ மிகவும் மெலிந்திருக்கிறாய்?" என்று வினவியருளினார்.

அது கேட்ட பொன்னனையாள், "சுவாமி! அடியவளுக்கு யாதொரு வருத்தமும் கிடையாது. ஆனால், பூவணநாத சுவாமியின் திருஉருவத்தைப் பிரதிஷ்டை செய்ய எண்ணி னேன். கிடைக்கின்ற பொருள் எல்லாம் சிவனடியார்க்கு அமுது படைப்பதிலே சென்று விடுகிறது. ஏதும் மிஞ்சுவதில்லை, நான் என்ன செய்வது?" என்று நோக்கம் தெரிவித்தாள்.

சித்தர் பெருமான், "மாதே, தருமமே நிலையானது. சிவ தருமமே சிறந்தது. சிவனடியார்க்கு அமுதூட்டுதலே மிகச் சிறந்தது என்று கருதித் திருப்பணி செய்து வருகிறாய். இம்மைக்கும் மறுமைக்கும் நன்மை கண்டாய். நீ கோரியபடியே, உன் நற்பெயர் விளங்குமாறு, சுவர்ணமூர்த்தி யொன்று பிரதிஷ்டை செய்வதும் சித்தியாகி விடும். ஐயமில்லை. ஆதலால் நீ உனது வீட்டிலுள்ள இரும்பு, செம்பு, ஈயம், பித்தளை முதலியவற்றால் ஆகிய பாத்திரங்களையெல்லாம் கொண்டு வா," என்று அருளினார்.

உடனே, பொன்னனையாளும் வீட்டிலிருந்த அத்தகைய பாத்திரங்களை எல்லாம் கொணர்ந்து சித்தர் முன்னே குவித்தாள். சித்தர் பெருமான் அவைமீது விபூதியைத் தெளித்தார்.

பின்பு, ''மகளே! இன்று இரவு முழுவதும் இந்தப் புாத்திரங்கள் எல்லாம் நெருப்பிலே புடமிடப்பட்டிருக் கட்டும், காலையிலே இவையெல்லாம் பொன்மயமாக மாறியிருக்கும். அந்தப் பொன்னைக் கொண்டு நீ உனது பக்திக்குகந்த பூவணநாதரின் திருவுருவத்தைப் பொன்னால் அமைக்கலாம்!'' என்று திருவருள் புரிந்தார். பின்னர் மதுரைச் சித்தர் மறைந்தருளினார்.

சித்தர் பெருமான் மறைந்தருளியதும், அவ்வாறு வந்தவர் அன்று உலவாக் கிழியருளிய சோமசுந்தரப் பெருமானே என்பதைத் தெரிந்து கொண்டாள், பொன்னனையாள். பெருமகிழ்வு கொண்டவளாகித் திருவருளைச் சிந்தித்த படியே அந்தப் பாத்திர வகைகளை யெல்லாம் நெருப்பி லிட்டாள். புடமிடப்பட்ட கீழ்வகை உலோகங்களெல்லாம் தமது மாசும், களிம்பும், இயல்பும் நீங்கப் பெற்றனவாகிப் பசும்பொன்னாய்த் திகழ்ந்தன.

அந்தப் பொன்னை யெல்லாம் கொண்டு பொன்னனை யாள் பூவணநாதரது திவ்ய உருவத்தைச் சமைத்தாள். நல்ல நாள் ஒன்றிலே பிரதிஷ்டை செய்து தேர்த் திருவிழா முதலியன சிறப்பாக நடத்தினாள். தினந்தோறும் சுவர்ண மேனிப் பூவண நாதரைக் கண்டு தரிசித்துப் பேரானந்தம் அடைந்தாள். சிலநாள் கழித்து முக்தியடைந்தாள்.

பூவணநாதரும் காலத்திற்கேற்ற கோலம் கொண்டு, தனது பொன்மேனி மறைத்து இருந்தருள்வாராயினார்.

37. சோழனை மடுவில் வீழ்த்தியது

இராஜேந்திர பாண்டியன் வமிசத்திலே வந்த சுந்தரேச பாதசேகர பாண்டியன் சிவநேசச் செல்வனாக விளங்கி ஆண்டு வந்தான். குறுநில மன்னர்களையெல்லாம் தனது திறமையால் அடக்கினான். அவனுக்குத் தனது படை பலத்தைப் பெருக்குவதிலே மனம் இல்லை. ஆதலால், பத்துத் தேர்கள், நூறு யானைகள், ஆயிரம் குதிரைகள், பத்தாயிரம் வீரர்கள் என்று எண்ணிக்கையை அளவு கட்டிக் குறைத்து அவர்கட்கெல்லாம் தக்கபடி ஊதியம் கொடுத்தான்.

அவ்வாறு செய்ததாலே பொருள் மிஞ்சியது. மிஞ்சிய பொருளை யெல்லாம் சிவத் திருப்பணிக்கே செலவிட்டான் சுந்தரேச பாதசேகர பாண்டியன். சிவபெருமானுக்குக் கண்டிகை, மகுடம் முதலான திருவாபரணங்களைச் செய்தான். கோபுரம், மண்டபம் முதலியவற்றைச் செப்பம் செய்து, திருத்திப் புதுப்பித்தான்.

திருப்பணியிலே நாட்டங் கொண்டு சேனையைச் சுருக்கிய பாண்டியனது நிலையைக் கண்டான் சோழ மன்னன். அவன் பாண்டியனை வெல்லக் கருதி வஞ்சி மாலை அணிந்து ஆயிரக் கணக்கான சதுரங்க சைனியத்துடன் பாண்டிய நாட்டின் மேல் படையெடுத்து வந்தான்.

அதனை அறியப் பெற்ற சுந்தரேச பாதசேகர பாண்டியன் திருக்கோவில் சென்று, "எம்பெருமானே! தேவரீரது திருவருளாலே அடியேன் ஆட்சி செய்து வருவதைத் தெரிந்து கொள்ளாமல், எளியேனது சேனையின் குறைந்த எண்ணிக்கையைக் கண்டு காவிரிச் சோழன் தனது சேனைக் கடலோடு படையெடுத்து வருகிறான். இதற்கு நான் என்ன



செய்வது?'' என்று வருந்தினான். விண்ணொலி எழுந்தது. 'பாண்டியா! கொஞ்சமும் நீ அஞ்ச வேண்டாம். நாமே சென்று போர் செய்து நீ வெற்றியடையுமாறு செய்கிறோம்!'' என்றது. பாண்டியன் பேருவகையடைந்து திருவருளைச் சிந்தை செய்தவண்ணம் மனை சேர்ந்தான்.

பின்னர்ப் போர்ப்பறைகளும் பல கருவிகளும் முழங்கத் தனது சிறிய படைகளோடு சோழனது சேனா சமுத்திரத்தை எதிர்க்கச் சென்றான். ஆனாலும், இறைவன் திருவருளால் சோழநாட்டவர் கண்களுக்குப் பாண்டியப் படை பல மடங்காகப் பெருகித் தெரிந்தது. சோமசுந்தரப் பெருமானே தனது வேதப் பரி மேல் ஏறிக் கொண்டு, பாண்டியன் சேனைக்கு முன்னதாகச் சென்றார். பெருமான் வேட வடிவாகிக் காட்சியளித்தார். காதிலே தந்தக் குழை, கழுத்திலே முத்து மாலை, வெட்சி மாலை, கொண்டையிலே மயிலிறகு, கைகளிலே தந்தக் கடகங்கள் முதலியன விளங்கின. கறுநிறங் கொண்ட திருமேனி கொண்டிருந்தார். அவரது திருக்கரத்திலே கொலைவேல் மின்னியது.

வேடப் பெருமானைச் சோழன் கண்டான். "ஆயிரம் குதிரைகளுக்கொரு தனிப்பெரு வீரன் நான்! நீ எவ்வளவு?'' என்று கர்வத்தோடு வினவினான்.

"இவ்வளவுதானே நீ! நான் அளவில்லாத குதிரைகளுக்கு ஒரு சேவகன், காண்பாய்,'' என்று விடையிறுத்தார், கடவுள் வேடனார்.

அதைக் கேட்ட சோழன் பெரிதும் பயந்து விட்டான். பயந்து நின்ற சோழனை நோக்கி வேடர் பிரான் தனது கைவேலை மின்னல்போல் சுழற்றிக் கொண்டு சினந்து அதிர்ந்து சீறி வந்தார்.

சோழன் பெரும் பயமடைந்தான். 'இவன் கைவேலால் நாம் இறப்பதற்குக் கொஞ்சமும் சந்தேகம் கிடையாது!' என்று பதறி ஓடினான். அது சமயம் இறைவனாகிய வேடன் மறைந்தருளினார்.

அது கண்ட பாண்டியன் குதிரையுடன் ஓடுகிற சோழனைத் துரத்திக் கொண்டு சென்றான். சோழன் திரும்பிப் பார்த்தான். தன்னைத் துரத்தி வருவது வேடனல்ல, பாண்டியனே என்று கண்டான். உடனே சோழன் திரும்பிப் பாண்டியனைத் துரத்த ஆரம்பித்தான். பாண்டியன் மதுரையை நோக்கி விரைந் தோடினான். ஓடுகின்ற வேகத்தில் தவறி ஆழ்ந்தவோர் கிடங்கிலே விழுந்து விட்டான். பாண்டியன் விழுந்த மேற்றிசை மடுவிலே துரத்தி வந்த சோழனும் தன் குதிரையுடன் விழுந்தான்.

விழுந்துபட்ட இருவருள் சோமசுந்தரப் பெருமான் திருவருளால் சுந்தரேசபாதசேகர பாண்டியன் மடுவிலிருந்து எழுந்து வந்து கரையேறினான். சோழன் மடுவிலே அழுந்தி இறந்தான். இறந்த சோழனது ஆடையாபரணங்கள் சதுரங்க சேனைகள் எல்லாவற்றையும் கவர்ந்து கொண்டான் பாண்டியன்.

பின்னர்ச் சோமசுந்தரப் பெருமானுக்குத் தொண்டுகள் பல செய்து நல்லாட்சி செய்து வாழ்ந்தான் சுந்தரேசபாதசேகர பாண்டியன்.


38. உலவாக் கோட்டை அருளியது

அதிராச் சிறப்புக் கொண்ட மதுரை மூதூரிலே அடியார்க்கு நல்லான் என்ற வேளாளன் ஒருவன் வாழ்ந்து வந்தான். தருமத்திற்கும், தருமத்தால் வரும் கீர்த்திக்கும் பாத்திரமாக இருந்தான். அவனது தரும காரியங்களுக்கு உறுதுணையாக நின்றாள் அவனது மனைவி தருமசீலை. அவள் அன்பிலும் அருளிலும் கற்பிலும் சிறந்தவள். சிறந்த ஒழுக்கமுடையவள்.

அடியார்க்கு நல்லான் நிலம்பல உடையவனாகி உழவுத் தொழிலைச் சிறப்புறச் செய்து வந்தான். நல்ல விளைச்சல் கண்டது. ஆறில் ஒரு பங்கை அரசனுக்குக் கொடுத்து விட்டு, எஞ்சியதை யெல்லாம் சிவனடியார்களுக்குத் திருவமுது படைப்பதிலே செலவு செய்தான். ஏராளமான அடியார்கள் நல்லான் அளித்த நல்விருந்தினை உண்டு சென்றனர். நல்லானது செல்வமும் மேலும் மேலும் பெருகி வந்தது.

அந்த நிலையிலே சோமசுந்தரப் பெருமான் உலகினுக்கு ஒன்றை உணர்த்தத் திருவுள்ளம் கொண்டார். தனது மிகுந்த செல்வம் குறைந்துவிட்டாலும் தனது அன்புக்குரிய இனிய பண்பினின்று அடியார்க்கு நல்லான் சிறிதும் வழுவ மாட்டான் என்ற தன்மையை உலகிற்கு உணர்த்த விரும்பினார். நீர்வளம் மிகுந்த அவனது நன்செய்களிலே விளைவு குறையும்படி செய்தார்.

அடியார்க்கு நல்லான் அதைப் பற்றிச் சற்றேனும் சிந்தை செய்யவில்லை. கடும் வட்டி கொடுத்தும், வட்டிக்கும் வட்டி கொடுத்தும் பணம் கடனாகப் பெற்றுச் சிவனடியார்களுக்கு அமுதூட்டி வந்தான்.



சிறிது நாட்களில் கடன் பெறவும் இயலாது போயிற்று. தனது கொள்கையை நிறைவேற்ற நல்லானால் இப்போது முடியவில்லை. சிவனடியார்கட்கு அமுது படைக்க முடியாது போனதால் தானும் எதுவும் உண்பதில்லை என்று உபவாசம் இருந்தான். அவனது மனைவியும் கணவனுடன் சேர்ந்து உபவாசம் இருந்தாள். பட்டினியிருந்த இருவரும் நெஞ்சம் புண்ணாகினர். பசியால் உடல் வாடினர்.

பின்னர் அறக்குன்றென விளங்கிய அடியார்க்கு நல்லான் சிந்திக்கலானான். 'இவ்வுடம்பு என்றாவது ஒரு நாள் அழிய வேண்டியதுதான். இவ்வுடம்பிலிருந்து தரும காரியம் செய்ய முடியவில்லை. இந்த உடம்பு இருந்தென்ன, போயென்ன! மனைவியோடும் சென்று சோமசுந்தரப் பெருமானிடம் விண்ணப்பித்து விட்டு உயிர் விடுதலே நன்று!' என்ற உறுதி பூண்டான்.

அதன்படியே தனது மனைவி தருமசீலையை அழைத்துக் கொண்டு திருக்கோவில் சென்றான். ''விஷத்தை அமுதம் போல உண்டு தேவர்களைக் காப்பாற்றிய பெருமானே! உன்னுடைய மெய்யடியார்கள் அன்னம் பாலிப்பு வழிபாடு தடைப்படுமாறு எளியேனது நிலங்கள் எல்லாம் விளைச்சல் குறைந்துவிட்டன. கடன் தருவதற்கும் யாரையும் காணோம். கடன் தரவல்லவர்களைத் தேவரீரே எனக்குக் காட்டியருள வேண்டும். இல்லாவிட்டால் இந்த உடலைத் திருச் சன்னதிமுன் கட்டையாகக் கிடத்திடுவேன்,'' என்று தனது மனந் திறந்து சொன்னான்.

அப்பொழுது மதுரைப் பெருமான் திருவருளால், ''வேளாளப் பெருந்தகையே! அஞ்ச வேண்டாம். உனது வீட்டிலே நாம் அரிசிக் கோட்டை யொன்று சேர்த்துள்ளோம்.

அது எப்போதும் எடுக்க எடுக்கக் குறைவுபடாத உலவாக் கோட்டை. அதிலிருந்து வேண்டிய அளவு அரிசியை நீ எடுத்துக் கொள்ளலாம். சிவநேசம் குன்றாத அடியார்களுக்கு அமுதளிப்பதோடு, ஏனைய தருமங்களையும் நீ செய்யக் கடவாய். முடிவில் உனக்கு மோட்சம் தருவோம்,'' என்று ஆகாசவாணி கூறியது.

வானொலி கேட்டுச் சந்தோஷமும் ஆச்சரியமும் கொண்டான், அடியார்க்கு நல்லான். சோமசுந்தரப் பெருமானைப் பல முறை வணங்கினான். பின்னர் இல்லாளுடன் இல்லம் சேர்ந்தான். அங்கே தனது தவத்தின் பயனைக் கண்டான். எடுக்கும்போதெல்லாம் குறையா திருக்குமாறு இறைவன் அருளிய அரிசிக்கோட்டையைக் கண்டு மிகமிக அகமகிழ்ந்தான்.

பெருமான் அருளிய உலவாக் கோட்டையை அனுதினமும் புஷ்பம், சந்தனம், தூபதீபம் முதலியவற்றால் வழிபட்டுப் பின்னர் அன்னம் ஆக்கும் பொருட்டும் காய்கறிகள் வாங்கும் பொருட்டும் வேண்டிய அளவே அரிசியை எடுத்துக் கொள்வான். அதனால், சிவனடியார்க்கும், அந்தணருக்கும், தென்புலத்தவர்களுக்கும், தெய்வங்களுக்கும், உறவினர்களுக்கும், விருந்தினர் களுக்கும், நட்புடையவர்களுக்கும் மாரி போல வரையாது வாரி வழங்கினான். எந்நாளும் வறுமை இல்லாமல் குபேரனைப் போல வாழ்ந்து வந்தான்.

அடியார்க்கு நல்லான் இவ்வாறே பலப்பல ஆண்டுகள் தருமம் செய்து வாழ்ந்தான். பிற்பாடு தனது மனைவியோடும் உறவினர்களோடும் சிவரூபம் பெற்றுச் சிவபுரம் சேர்ந்தான்.

39. மாமனாக வந்து வழக்குரைத்தது

மதுரைமா நகரத்திலே தனபதி என்பவன் வாழ்ந்து வந்தான். அவன் வணிகர் குலத்திலே தோன்றியவன். குபேர சம்பத்து உடையவன். அவனது மனைவி சுசீலை அழகிலும் கற்பிலும் சிறந்து விளங்கினாள். செல்வம் சிறந்த அவர்கள் இருவரும் நெடுங்காலம் குழந்தைப் பேறு இல்லாமல் வருந்தினார்கள். ஆதலால், தனபதி தனது தங்கையின் மகனையே தனது அபிமான புத்திரனாக ஏற்றுக் கொண்டு உள்ளம் மகிழ்ந்தான். அவனது மனைவியும் மகனை ஏற்றுப் பரிவுடன் போற்றி வந்தாள். பலவகையான ஆபரணங்களை அவனுக்கு அணிவித்து அழகுறச் செய்தாள்.

தனபதி தனது தங்கையிடம் நன்றி மறந்தவனாக நடந்து கொண்டான். தன் மனைவியின்பால் கொண்ட காதல் மயக்கத்தாலே தன் தங்கையோடு அடிக்கடி கடுமையாகச் சண்டையிட்டு வந்தான்..

தங்கை ஒரு நாள் கோபம் கொண்டு, "உனக்குக் கருவம் எதற்கு? குழந்தை யில்லாத பாவி நீ! என்னுடைய அருமைக் குமாரனாலல்லவோ நீ இருமைப் பயன்களை அடைவாய்!" என்று கூறினாள்.

அச்சொல் கேட்ட தனபதி மிகவும் ரோஷமும் வெட்கமும் அடைந்தான். 'அடுத்த பிறவியிலாயினும் குழந்தைப் பேறு கிடைக்கத் தவம் செய்ய வேண்டும்,' என்று விரும்பினான். ஆதலால் தனது செல்வம் முழுவதையும் தனது மருமகனுக்கே உரிமை செய்துவிட்டுத் தனது மனைவியோடு வானப்பிரஸ்த நெறியைக் கடைப்பிடிக்கச் சென்றான்.



தவ வழி சென்ற தனபதி வருவதற்கு நாளாயிற்று. அதற்கிடையே அவனுடைய தாயாதிக்காரர்கள் வல்லடி வழக்குச் செய்து, மருமகனிடமிருந்த எல்லாச் செல்வத்தை யும் பறித்துக் கொண்டார்கள். நன்செய்கள், நகைகள், பல பொருள்கள், அடிமையாட்கள், பசு மாடுகள் அனைத்தையும் தாயாதிக்காரர்கள் கவர்ந்து கொண்டனர். செய்வது இன்னதென்று அறியாத தாயும் மகனும் கவலைகொண்டு வருத்தப்பட்டார்கள்.

திக்கற்றவருக்குத் தெய்வமே துணை. திருக்கோவில் சேர்ந்து சோமசுந்தரப் பெருமானை வணங்கி, "எவருக்கும் அம்மையப்பர் ஆனவரே! எங்களது அவல நிலை தாங்கள் அறியாததல்லவே! எல்லாவற்றையும் பறி கொடுத்து விட்டு உமது திருமுன் வந்து நிற்கிறோம். நானோ தமியள். எனக்கோ ஒரே மகன்; அவனும் விவரம் தெரியாத சிறுவன். எளியவர்களாகிய எங்களைக் காக்க வேண்டியது தேவரீர் கடன்!" என்று கூறி அழுது நிலத்திலே விழுந்தாள் தனபதியின் தங்கை.

விழுந்தவள் சிறிது உறக்கம் கொண்டாள். சிவபெருமான் திருவருளாலே, அப்போது கனவொன்று கண்டாள். அதிலே சிவபெருமான் அந்தண உருவத்தோடு எழுந்தருளி, "பெண்ணே! பொழுது விடிந்ததும் தாயாதிக்காரர்களை யெல்லாம் அரசன் மீது ஆணை கூறித் தருமசபைக்குக் கொண்டுவந்து விடு. யாமே வருவோம். அறிவில் சிறந்த பெரியவர்கள் ஒப்புக் கொள்ளும்படி, பொய் வழக்கைத் தீர்த்துப் பொருள்கள் எல்லாவற்றையும் உனக்கு மீட்டுத் தருவோம்!" என்று அருளிச் செய்தார்.

விழிப்புற்ற மாது வியப்பும் உவகையும் கொண்டாள். சோமசுந்தரப் பெருமானை வாழ்த்திக் கொண்டே தன் மகனோடு வீடு திரும்பினாள்.

மறுநாள் விடிந்தது. திருக்கோவில் சென்று அம்பல வாணரை வணங்கி வந்து தாயாதிக்காரர் இருப்பிடம் சென்று, பலர் கேட்கும்படி, "தரும நெறி தவறிய பொய் வழக்கிலே நீங்கள் வெற்றி பெற அனுமதிக்க மாட்டேன். இங்குள்ள எல்லாரும் சாட்சியாக அரசன்மீது ஆணையிட்டேன். தரும சபைக்கு வாருங்கள். பெரியவர்கள் ஆராய்ந்து சொல்லும் தீர்ப்பைக் கேளுங்கள். எங்களது உரிமைப் பொருளைத் தந்துவிட்டுச் செல்லுங்கள்," என்று கூறி மறித்தாள்.

தாயாதிக்காரர்கள் வலிமை யுடைய முரடர்கள். அவர்கள் அவளை வைது அடித்தார்கள். அவள் உடனே தன் மகனோடு, "இது முறையோ?" என்று கத்திக் கொண்டே தரும சபைக்குச் சென்று தனது வழக்கைக் கூறி முறையிட்டாள். விவரம் அறிந்து கொண்ட சபையோர் ஏவலர்களை அனுப்பி வைத்தனர். தனபதியின் தங்கை அப்போது ஏவலர்களோடு சென்று தாயாதிக்காரர்களை நியாயசபைக்கு இழுத்து வந்தாள்.

சோமசுந்தரப் பெருமானும் வானப்பிரஸ்தம் செய்யச் சென்றிருந்த தனபதியைப் போலவே உருவம் கொண்டு சபையில் எழுந்தருளினார். அவர் கண்களிலே கோபம் வீசியது. தாயாதிக்காரர்களைப் பார்க்கும்போது முகம் வாடியது. மகனை நோக்கும்போது முகம் மலர்ந்தது. "மன்னன் இல்லையா? பெரியோர்கள் இல்லையா? கடவுள் இல்லையா? தருமமும் நியாயமும் ஒளிந்து கொண்டு விட்டனவோ?" என்று முறையிட்டார் தனபதிப் பெருமான்.

தனபதியே நேரடியாக வந்து தோன்றியதைக் கண்ட தாயாதிக்காரர்கள் பேராச்சரியம் அடைந்ததோடு, மனம் தளர்ந்து விட்டனர். மன வலிமையை இழந்து, "வெல்ல

மாட்டோம்'' என்ற எண்ணமும் கொண்டனர். தங்களது தகாத செயலை உணர்ந்து வெட்கமும் பயமும் கொண்டனர்.

மாமனாகி வந்த சிவபெருமான் தனது மருமகனையும் தங்கையையும் அணைத்துக் கொண்டார். ''ஐயோ! நீங்கள் பரம ஏழைகள் ஆகிவிட்டீர்களா?'' என்று கூறி வருந்தினார். தாயும் மகனும் தனபதிப் பெருமான் காலில் விழுந்து கண்ணீர் விட்டனர்.

வணிகப் பெருமான் மருமகனை அன்போடு எடுத்துத் தழுவி அவன் முன்பு அணிந்திருந்த ஒவ்வொரு நகையாகப் பெயர் சொல்லி எல்லாரும் மனம் இரங்கும்படி வாய்விட்டு அழுதார். பிறகு சோமசுந்தரப் பெருமான் இருந்தருளும் திக்கு நோக்கி வணங்கி, ''மாணிக்கம் விற்றருளிய எங்கள் குலத் தலைவா! வழக்கைத் தீர்த்துப் பொருளைத் தருவாய்!'' என்று முறை செய்தார். தாயாதிக்காரரை வெகுண்டு பார்த்துவிட்டுச் சபையை நோக்கி, ''நியாயம் வழங்குங்கள்,'' என்று விண்ணப்பித்துக் கொண்டார்.

இருதிறத்தாரின் வழக்குகளை யெல்லாம் நன்கு கேட்டு ஆராய்ந்து சீர்தூக்கிய நீதிநூல் வல்ல அறவோர், ''தாயாதிக் காரர்கள் வழக்குப் பொய்யானது!'' என்று தீர்ப்புக் கூறினர்.

அதனைக் கேட்ட தாயாதிக்காரர்கள் வேறு வழியிலே தமது வழக்கைத் திரித்துக் கூற முயன்றார்கள். 'வழக்காட வந்தவர் தனபதி வணிகர் அல்ல' என்று எதிர்வாதம் செய்தனர். அது சமயம் தனபதிப் பெருமான் தமது கைகொட்டிச் சிரித்து, தாயாதிக்காரர் ஒவ்வொருவரையும் விளித்து, அவரவர் குடிப்பெயர், பட்டம், காணி, தாய், தந்தை, உடன் பிறந்தவர்கள், சொந்தக்காரர்கள், அவரவர்

குண வேறுபாடுகள், செய்கின்ற தொழில்கள் எல்லாவற்றை யும் சிறிதும் பிழை யில்லாமல் முறையாகச் சொல்லிக் காட்டினார்.

அது கேட்ட நீதிப் பெரியோர், "இவர் தனபதிச் செட்டியாரே!" என்று முடிவாகக் கூறிவிட்டனர்.

"நம்முடைய வழக்கு தோற்றுவிட்டது; பாண்டிய மன்னன் அறிந்தால் நம்மைத் தண்டிப்பானே!" என்று பயந்து ஏதேதோ காரணங்களைக் கூறிக் கொண்டு, பல இடங்களுக்குச் சிதறி ஓடினார்கள், தாயாதிக்காரர்கள்.

தாயாதிகள் ஓடிச் சென்றதும் நீதிமான்கள், 'தனபதி வணிகர் முன்பு தந்திருந்த பொருள்கள் அனைத்தும் தத்துப் புத்திரனுக்கே உரியவை' என்று முடிவு கூறிச் சாசனம் செய்தனர். சாசனத்தை வணிகத் தந்தையிடம் தந்தனர். தனபதியாகத் தோன்றிய சிவபெருமான் அனைவரும் காண மறைந்தருளினார்.

சுந்தரேச பாதசேகர பாண்டியன் அந்த வழக்கைப் பற்றிக் கேள்விப்பட்டான். தனபதி வணிகனாகத் தோன்றி மறைந்தவர் சிவபெருமானே என்பதைத் தெரிந்து மிகுந்த அதிசயம் கொண்டான். தனபதியின் தத்துப் புத்திரனுக்கு வரிசைகள் பல வழங்கினான். சிவபெருமான் திருக் கோவிலைப் பொன்னால் புதுப்பித்தான். சிறிதுகாலம் சென்றபின் தனது அருமைக் குமாரன் வரகுணனுக்கு முடிசூட்டித் தனது அரசியலைத் தந்துவிட்டுச் சிவலோகம் புகுந்தான்.

40. வரகுணனுக்குச் சிவலோகம் காட்டியது

பாண்டியன் வரகுணன் திரிகரண சுத்தியோடு சோமசுந்தரப் பெருமானை வழிபடும் பண்புடையவன். சிறந்த அழகையும் பெருஞ் சிறப்பையும் உடையவன். வேத வேதாந்தங்களையும் ஆராய்ந்து, அவற்றின் கொள்கைகளை நிலைபெறச் செய்தவன். குணத்தின் குன்று; பக்தியின் பொக்கிஷம்.

வரகுணபாண்டியன் ஒருநாள் வேட்டையாடச் சென்றான். காடு மலை எங்கும் திரிந்து புலி, யானை, பன்றி ஆகிய பல விலங்குகளை வேட்டையாடிக் கொன்றான். மாலை நேரம் வந்தது. ஆதலால், மதுரைமா நகரத்தை நோக்கித் தனது கனவட்டம் என்ற குதிரை மேலேறி அதிவேகமாக வந்துகொண்டிருந்தான். வழியிலே அந்தணன் ஒருவன் தூக்க மயக்கத்திலே சோர்ந்து கிடந்தான். வேகமாக வந்த குதிரை தன் காலை அந்த அந்தணன்மேல் வைத்து மிதித்துவிட்டது. அவன் இறந்து போனான். விவரம் ஏதும் அறியாத வரகுணன் அரண்மனை சேர்ந்தான்.

அது சமயம் குதிரையின் கால் பட்டிறந்த அந்தணனது உறவினர்கள் அவனது சவத்தை அரண்மனை வாசலிலே கொண்டு வந்து கிடத்தி நடந்ததைக் கூறினர். அது கேட்டுப் பாண்டியன் பெரிதும் வருந்தினான். உறவினர் கையில் நிரம்பப் பொருள் தந்து இறந்தவனுக்கு இறுதிக் கடனாற்றுமாறு பணித்தனன். இருந்தாலும், கொலைப்பழி பிரம்மஹத்தியாக வந்து பாண்டியனைப் பிடித்துக் கொண்டது.



தன்னைப் பற்றிய தோஷம் விலகுமாறு பாண்டியன் பல பிராயச் சித்தங்களைச் செய்தான். மறையவர் மொழிந்தபடி நடந்தான்: ஐவகை உண்டிகளை ஆற்றின் கரையிலே வேதியருக்குக் கொடுத்தான். திருமூர்த்திகளின் வடிவமாகி நிற்கும் அரசமரத்தினை வலம் வந்தான். இன்னும் பலவகையான தானங்களைச் செய்தான்.

எவ்வளவு செய்தபோதிலும் தோஷம் விலகாமல் கண்ணுக்குத் தெரியும் வண்ணம் பாண்டியனைச் சூழ்ந்து கொண்டது. கொலைப் பழி மன்னனைப் பெரும்பாடு படுத்தி வைத்தது. பாண்டியனது தேசுமங்கியது. மனம் நைந்தது.

தோஷம் பெருகி வருவதைக் கண்ட வேதியர்களும் கவலை கொண்டு, ''வேந்தனே! நீ நாள்தோறும் நியம விரதத்தோடு சோமசுந்தரப் பெருமானை ஆயிரத்தெட்டு முறை பிரட்சிணம் செய்வாயாக. இப்படிப் பத்து நாட்கள் செய்து வந்தால் பிரம்ம ஹத்தி தோஷம் விலகும்படிக்கு எல்லாம் வல்ல பிரானே வழிகாட்டி அருள்வார்,'' என்று மொழிந்தனர்.

பாண்டியன் திருக்கோயில் சென்று சோமசுந்தரப் பெருமானை வணங்கி, ''கங்காதரரே! இந்திரன் பழி தீர்த்தருளினீர்! மாபாதகம் தீர்த்தருளினீர்! எளியேனது தோஷத்தையும் விலக்கியருள வேண்டும்!'' என்று விண்ணப்பித்துக் கொண்டு தரையில் விழுந்து பணிந்தான். பின்னர் மறையவர்கள் கூறியவாறே ஆயிரத்தெட்டு முறை வலம் வந்து தோத்திரம் செய்தான். இவ்வாறாகப் பத்து நாட்களும் பயபக்தியுடன் பாண்டியன் வலம் புரிந்து துதி செய்தான்.

இறுதி நாளிலே சொக்கேசர் அருளால் வானொலி எழுந்தது. சொல்லியது: "மாறனே! நீ செய்த பிரதட்சிணம் பெரும் பயன் கொடுக்க வல்லது. உனது செய்கையால் மிகவும் உள்ளம் பூரித்தோம். எதற்கும் நீ பயப்பட வேண்டாம். காவிரிச் சோழன் உன்னோடு சமர் செய்ய வருவான். நீயும் எதிர்ப்பாய். போரிலே தோற்கும் சோழன் புற முதுகு காட்டி ஓடுவான். நீ அவனைத் துரத்திச் செல்வாய். அப்படிச் செல்லும்போது திருவிடைமருதூர் என்னும் திவ்ய க்ஷேத்திரத்தை அடைவாய். அத்தலம் நாமே நம்மைப் பூசை செய்து கொள்ளும் பெருமை உடையது. அங்கே உனது தோஷத்தைப் போக்கி அருளுவோம்!" என்று சொல்லியது. பாண்டியன் பேருவகை கொண்டான். மதுரேசனைப் போற்றிக் கொண்டே அரண்மனை சேர்ந்தான்.

சில நாட்கள் சென்றன. காவிரிச் சோழ வேந்தன் புலிக்கொடி உயர்த்திப் போர் முரசு கொட்டிப் பெருஞ் சேனையுடன் படையெடுத்து வந்தான். பாண்டிய நாட்டினைச் சுற்றி வளைத்துக் கொண்டான். பாண்டியன் எதிர்த்துக் கடும் போர் புரிந்தான். போரின் விளைவாகச் சோழன் தோற்று ஓடினான். மீனக்கொடி தூக்கிய பாண்டியன் அவனைத் துரத்திக் கொண்டு போனான்.

வரகுணபாண்டியன் காவிரிக் கரையை அடைந்தான். திவ்ய க்ஷேத்திரத்தினருகே பூசத்துறை சேர்ந்து நீராடினான். பின்னர்த் திருவிடைமருதூரிலே எழுந்தருளிய மகாலிங்கக் கடவுளை வணங்கும் பொருட்டுத் திருக்கோவிலின் கிழக்கு வாசலைக் கடந்து உள்ளே சென்றான். அப்போது அந்த இடத்திலேயே, கிழக்கு வாசலுக்கு வெளியே, பிரம்ம ஹத்தி தோஷம் பாண்டியனைத் தொடராது நின்று விட்டது. பழி

நீங்கிய பாண்டியன் பரவசமானான். பக்தி யுணர்ச்சி பொங்க நெடுநேரம் உருகி நின்றான். மகாலிங்க மூர்த்தியைப் பலவாறாகத் துதி புரிந்தான்.

அப்போது பெருமான், ''பாண்டிய! உன்னைப் பிடித்திருந்த பிரம்மஹத்தி கிழக்கு வாசலிலே நின்று கொண்டிருப்பதால் நீ அந்த வாசல் வழியாகச் செல்ல வேண்டாம். மேற்கு வாசல் வழியாக நமது மதுரையம் பதிக்குச் செல்வாயாக!'' என்று பணித்தருளினார்.

வரகுணபாண்டியன் திருவிடைமருதூரிலே சில நாட்கள் தங்கினான். பல திருப்பணிகளைக் கோவிலுக்குச் செய்தான். திருக்கோவிலின் மேலைக் கோபுரத்தைத் தன் பெயரால் கட்டி முடித்தான். பின்னர் மதுரை நோக்கித் திரும்பினான். திரும்பும் வழியிலே பல சிவ க்ஷேத்திரங்களிலே தரிசனம் செய்துகொண்டே வந்தான்.

வரகுணபாண்டியன் சோமசுந்தரக் கடவுளைத் தினந் தோறும் தரிசனம் செய்து மகிழ்ந்தான். பல பெரியவர்களின் மூலமாகச் சிவபரமான விஷயங்களைக் கேட்டு உவகை கொண்டான். அவ்வாறு கேட்டு வரும்போது, வேதம், ஆகமம், புராணம், ஸ்மிருதிகள் எல்லாவற்றிலுமே, 'உலகங்களில் எல்லாம் மிக உயர்ந்தது சிவலோகம்!' என்று உணர்த்தப்பட்டிருப்பதை மனத்தில் கொண்டான். ஆதலால் பாண்டியனுக்குச் சிவலோகம் காண வேண்டுமென்றே எண்ணம் மேலோங்கியது.

ஆசை மேலிட்டதால் மகாசிவராத்திரியிலே திருக் கோவிலை அடைந்தான். சோமசுந்தரப் பெருமானைத் துதித்து, ''எம்பெருமானே! மெய்யடியார்கள் சூழத் தேவரீர்

சிவலோகத்தில் எழுந்தருளியிருக்கும் திவ்யமான திருக் காட்சியை அடியேன் தரிசனம் செய்து வணங்க ஆவல் கொண்டுள்ளேன்!'' என்று விண்ணப்பித்துக் கொண்டான்.

பக்திக்கு எளியவரான சிவபெருமானும் பாண்டியனுக் காக இப் பூலோகத்திலேயே சிவலோகத்தைக் காட்டியருளத் திருவுளம் கொண்டார். சோமசுந்தரப் பெருமானின் திருவுளக் குறிப்பை உணர்ந்த அச் சிவலோகம் வானத்திலிருந்து இறங்கியது. எங்கும் தேவப் பேரொளி வீசியது. சிவ பெருமான் நந்திகேசுவரரை அழைத்துத் தமது மெய்யன் பனாம் பாண்டியனுக்குச் சிவலோகத்தைக் காட்டி வரும்படி பணித்தார். நந்தி தேவரும், ''வழுதியே! வருக. சிவலோகம் இதுவே! காண வருவாயாக,'' என்று கூறியருளினார்.

வரகுணன் கண்ட சிவலோகப் பெருந்திருக் காட்சி உரை கடந்த ஒன்று; கற்பனைக் கெட்டாத வண்ணக் கோலம். தென்றல் காற்று வீசியது; அதிலே கருப்பூர மணம் கமழ்ந்தது. எங்கு பார்த்தாலும் தேவகானமும் இன்னிசைக் கருவி முழக்கமும்தான். காண்பதற்கரிய காட்சிகளைக் கண்டு பேரானந்தமடைந்தான் வரகுணபாண்டியன்.

நந்திகேசுவரர் பாண்டியனை எங்கும் இட்டுச் சென்று நான்முகன் வாழும் பதம், திருமாலின் பதி, உருத்திரர்களின் நகரங்கள், அஷ்டதிக்குப் பாலர்கள், இந்திரன் ஆனோர் வாழும் இடங்கள் எல்லாவற்றையும் காண்பித்தார்.

பிறகு சிவசாலோக்ய பதத்திலே வாழும் தாசமார்க்கி களையும், சிவசாமீப்பிய பதத்திலே வாழும் புத்திர மார்க்கிகளையும், சிவசாரூப்ய பதத்திலே வாழும் சக மார்க்கிகளையும் காட்டிக் கொடுத்தார். அறநெறி நின்று

சிவனடியார்க்கு அமுது படைத்துச் சிறந்தவர்களையும், சிவபதம் அடைந்த பாண்டிய மன்னர் பலரையும் காண்பித்தார் நந்தீசர். வரகுண பாண்டியன் ஒவ்வோர் இடத்திலும் நின்று பல தரம் வணங்கிக் கை குவித்து வந்தான். இறுதியில் நந்திகேசுவரர் பாண்டியனை அழைத்துக் கொண்டு வந்து சிவசன்னிதானத்திலே கொணர்ந்து நிறுத்தினார்.

சிவபெருமான் எழுந்தருளியிருக்கும் காட்சியைக் கண்டான், பாண்டியன். என்ன கோலாகலம்! என்ன குதூகலம்! வேதங்களும் ஆகமங்களும் திருவுருவம் எடுத்து இரு பக்கங்களிலும் நின்று வாழ்த்திக் கொண்டிருந்தன. தும்புருவும் நாரதரும் யாழ்மீட்டித் தேவகானம் பொழிந்தனர். தேவ மங்கையர் திருநடனம் ஆடினர். விநாயகப் பெருமான், முருகக் கடவுள், வீரபத்திரர் மூவரும் சிவபெருமானை வணங்கி, ஏவல் ஏற்றுப் பணி செய்து நின்றனர். மஹாவிஷ்ணுவும் பிரம்மாவும் மரியாதையுடன் ஒதுங்கி நின்றனர். தேவேந்திரனும் எண்டிசைக் காவலரும் நடுநடுங்கி விண்ணப்பம் செய்தபடி இருந்தனர்.

அடியவர் எல்லாரும் அருள் கனிந்த சிவானந்தப் பேரமுதினைப் பருகி, "சங்கரா! சிவ, சிவ!" என்று முழக்கிக் கை குவித்து நின்றனர். அவரவர்கள் தகுதிக்கு ஏற்றபடி வரங்களை அருள் புரிந்து கொண்டிருந்தார் சிவபெருமான். உமாதேவியார் புன்னகை பூத்த வண்ணம் தேஜோமயமாகத் திகழ்ந்தார். அரியணையிலே அமர்ந்திருந்த சோமசுந்தரப் பெருமானைத் தரிசனம் செய்து வணங்கினான் பாண்டியன். வாய்ச் சொற்கள் குழறின; புளகாங்கிதம் ஏற்பட்டது. கருணைப் பெருங்கடலிலே மிதந்து சென்ற பாண்டியன் பரமானந்தம் என்ற தேவாமிர்தத்தைப் பருகினான்.

பக்திமயமாக நின்ற வரகுண பாண்டியனின் எதிரே அருள்மயமாகத் துலங்கிய சிவலோகம் மறைந்தது. பழைய மதுரை தோன்றியது. சோமசுந்தரப் பெருமானும் உமையம்மையும் எழுந்தருளி இருந்தனர்.

வரகுண பாண்டியன் எம்பெருமான் முன்பு நின்று, கண்ணீர் சொரிய, நாக்குழறத் துதிக்கலானான். "நாயினை நிகர்த்த எளியேனது கொலை பாதகம் போக்கியருளிய தாயாகிய தயாபரனே! அடியவருள் கடையவனாகிய நானும் கண்டு மகிழும் வண்ணம் சிவலோகம் காட்டியருளிய தேவ தேவனே! பாழ்பட்ட என்னையும் ஆட்கொண்ட பெரு வள்ளலே! பக்தி செய்பவர்களுக்குச் சிவலோகம் உண்டு என்று சாஸ்திரம் மொழிவதை மெய்யென்று எளியேனுக்குக் காட்டி அருளிய பெருங்கடவுளே! தேவரீரது திருவடிகட்கு வணக்கம்! வணக்கம்! வணக்கம்!" என்று பலவாறாகப் போற்றித் துதி செய்தான். சோமசுந்தரப் பெருமானுக்குப் பூஜை முதலான விசேஷங்களைச் சிறப்புடன் செய்து செங்கோல் செலுத்தி வாழ்ந்து வந்தான்.

ஒப்பும் உயர்வும் இல்லாத அம்மதுரையம்பதி அன்றிலிருந்து பூலோக சிவலோகம் என்று பெயர் பூண்டு புகழுடன் விளங்குவதாயிற்று.

41. விறகு விற்றது

வரகுண பாண்டியன் பெருஞ் சிறப்புடன் மதுரைப் பதியை ஆண்டு வருகின்ற நாளிலே ஏமநாதன் என்ற யாழ்ப்பாணன் வடநாட்டிலிருந்து மதுரைக்கு வந்து சேர்ந்தான். அவன் பல வெற்றி விருதுகள் பெற்றவன். வரகுண பாண்டியனது சபையை அடைந்து மன்னனைப் பலபடியாகப் புகழ்ந்து போற்றினான். பிறகு தனது யாழைச் சுருதி சுத்தமாகக் கூட்டி இன்னிசை பாடினான்.

இன்ப கீதம் கேட்ட வேந்தன் உவகை மிகவும் கொண்டான். ஏமநாதனுக்குப் பல ஆடைகளையும் பொன்னணிகளையும் வழங்கினான். உணவுக்கு வேண்டிய பல பொருள்களைக் கொடுத்து உதவியதோடு, பெரிய வீடொன்றையும் அவன் தங்குவதற்காக அளித்தான். தனக்கென்று அமைந்த வீட்டிற்கு மிகுந்த சந்தோஷத்தோடு சென்றான் ஏமநாதன்.

சீர்வரிசை பெற்ற ஏமநாதனுக்குக் கருவம் தலைக்கேறி விட்டது. ஏற்கனவே பல வெற்றிகள் கண்டவனுக்குப் பாண்டியன் பரிசிலும் சேரவே தனக்கு ஒப்பானவரும் மேற்போனவரும் யாரும் இல்லை என்று எண்ணி இறுமாந்திருந்தான்.

அதனை உணர்ந்த பாண்டியன் ஏவலாளர்களை விளித்துப் பாணபத்திரனை அவைக்கு அழைத்து வருமாறு பணித்தான். ஏவலர் பாணபத்திரனை இட்டு வந்தனர்.

''பாணபத்திரா! இசை வல்லானாகிய ஏமநாதனோடு நீ பாட வல்லவனோ?'' எனக் கேட்டான் பாண்டியன்.



"தென்னவரே! அடியேன் உமது திருவுளத்தின் பலத்தாலும் சிவபெருமானது அருள் வலிமையாலும் பாட வல்லமை பெறுவேன். சிறப்பாகப் பாடி ஏமநாதனது வெற்றி விருதுகளை யெல்லாம் பறித்து அவனது கருவத்தையும் போக்குவேன்!" என்று சொன்னான் பாணபத்திரன்.

"நல்லது, நீ நாளை வந்து அவனோடு பாடுக! இப்போது போகலாம்," என்று சொல்லிப் பாணபத்திரனை அனுப்பி வைத்தான் பாண்டியன்.

பாணபத்திரன் தனது இல்லம் சென்றிருந்தான். ஊரின் பல பாகங்களிலே ஏமநாதனது சிஷ்யர்கள் சென்று நல்லிசை பரப்பினார்கள். பாணபத்திரனும் அவர்கள் பாடுவதைக் கேட்டு மெச்சினான். வியப்போடு, 'ஏமநாதனிடம் இசை கற்றுக் கொள்பவர்களே இப்படிப் பாடினால், ஏமநாதன் எப்படிப் பாடுவானோ? நாளை நான் பாட்டுப் பாடி அவனை வெற்றி கொள்வது எப்படி?' என்று கவலை கொண்டான். திருக்கோவிலை அடைந்து, சிவபெருமானை வணங்கி, "ஐயனே! மெய்யனே! அடியேனுக்குத் தேவரீரது திருவருள்தான் துணைபுரிய வேண்டும்!' என்று வேண்டிக்கொண்டு தனது வீடுசென்று கவலையை ஒழித்துச் சுகமே இருந்தான்.

சச்சிதானந்த வடிவமான சோமசுந்தரப் பெருமான், பக்தன் பாணபத்திரனது பகைவனான ஏமநாதனை ஓட்டத் திருவுளம் கொண்டார். ஆதலால், வயது முதிர்ந்து இளைத்துப் போன ஒரு விறகாளைப் போலத் தமது இச்சாமாத்திரத்திலே தம்மை மாற்றிக் கொண்டார். இடையிலே கந்தைத் துணியை உடுத்தியிருந்தார். வலப் பக்கத்திலே கொடுவாளைச் செருகியிருந்தார். திருவடிகளிலே தேய்ந்த பழைய

செருப்புகளை அணிந்திருந்தார். பழைய உறையிலே போட்டிருந்த யாழைத் தோளிலே தொங்கவிட்டுக் கொண்டிருந்தார். தலையிலே விறகுச்சுமையை விலை கூறிச் சென்றார். விறகின் விலையைக் கேட்டவருக்கு உயர்ந்த விலையைச் சொல்லிப் பல தெருக்களைக் கடந்து வந்தார். பகற் பொழுது சென்று விட்டது. ஏமநாதனது வீட்டுக்கருகே வந்து சேர்ந்தார். தாம் தலையிலே தாங்கி வந்த விறகுச் சுமையை ஒருபுறத்திலே வைத்துவிட்டு, ஏமநாதனது வீட்டின் புறத் திண்ணையிலே உட்கார்ந்து இளைப்பாறினார். அப்போது இனிமையான கானத்தைக் கொஞ்சம் பாடினார்.

உள்ளே யிருந்த ஏமநாதன் இன்னிசையைக் கேட்டான். இசையின் நயம் இசை வல்லானாகிய அவனையும் இழுத்தது. வெளியே வந்து இளைப்பாற அமர்ந்த விறகோனைக் கண்டான்.

''நீ யாரப்பா?'' என்று வினவினான்.

''நான் யாழிலே வல்லமை பெற்ற பாணபத்திரனது அடிமை. பாணபத்திரனுக்கு எத்தனையோ சிஷ்யர்கள் உண்டு. நானும் கீதம் கற்றுக் கொள்ள விரும்பினேன். என் வயது முதிர்ச்சி காரணமாக என்னைத் தகுதியற்றவனாகக் கருதி என்னை ஒதுக்கி விட்டான். அதனால்தான் நான் விறகு விற்றுப் பிழைக்கிறேன்,'' என்றார் தேவ விறகாள்.

அது கேட்ட ஏமநாதன், ''அப்பனே! நீ பாடிய அதே இசையை மற்றும் ஒரு முறை பாடு, கேட்போம்,'' என்றான்.

விறகாளப் பெருமான் தனது யாழை உறையிலிருந்து பரிவுடன் எடுத்து, நரம்பு முடுக்கிச் சுருதி சேர்த்துக் கொண்டார். விரல் பரிமாறிச் சுநாதம் எழுப்பினார்.

இனிமையான ராகங்களுள் ஒன்றான சாதாரிப் பண்ணை அசை, வீதிப் போக்கு, வண்ணம், திறம் ஆகியவற்றால் யாவரும் விரும்பும் நல்லிசை எழுப்பினார். யாழின் கீதமும் குரலின் இசையும் ஒன்றுகூடி இழைந்தன. குற்றமற்ற முறையில் பண் எழுந்து சிறந்து விளங்கியது. பாடலின் பல்வகைக் குணங்கள் மேலோங்கி விளங்கின. இன்னொலி கூடிய நல்லிசைத் தேவகாந்தாரி ராகம் எங்கணும் பரவியது.

ஏமநாதனது உடலிலே, நாடி நரம்பிலே, மயிர்க் கால்களிலே, உள்ளத்திலே, ஆவியிலே கலந்து கிளர்ச்சி செய்தது தேவப்பண்.

ஏமநாதன் பேராச்சரியம் அடைந்தவனாகி, "இது நானறிந்த சாதாரிப் பண் அன்று. இது தேவகானமேயாகும். என்ன விந்தை! பாணபத்திரனால் ஒதுக்கித் தள்ளப்பட்ட கிழவனின் இசையே இப்படியிருக்குமானால், அந்தப் பாணபத்திரனது இசை எப்படியிருக்குமோ?" என்று கருதிக் கவலை கொண்டான். உடனே அங்கிருந்து எழுந்தான். தன்னுடைய மாணவர்கள் நிலை குலைந்து செல்ல, இரவோடு இரவாக ஓடிப்போக முற்பட்டான். எல்லாவற்றை யும் அவையவை கிடந்த இடத்திலேயே போட்டுவிட்டு ஏமநாதன் வடக்குத் திசையை நோக்கி விரைந்தோடினான்.

சோமசுந்தரப் பெருமான் அன்றிரவே பாணபத்திரனது கனவிலே தோன்றியருளினார். "பாணபத்திர! நீ வேண்டிக்கொண்டபடி நாம் இன்று விறகாளாகச் சென்று ஏமநாதனைக் கண்டோம். யாம் பாணபத்திரனது அடிமை என்று கூறிச் சாதாரிப்பண் பாடி வென்று உன்னைக் காத்தோம்!" என்று இயம்பியருளினார். உள்ளத்தாலும் நினைப்பதற்கரிய மொழிகளைக் கேட்ட பாணபத்திரன் நடுக்கம் கொண்டு கண் விழித்து எழுந்தான்.

உவகையும் பக்தியும் பொங்கிய உள்ளத்தோடு சூரியோதயத்திற்கு முன்னதாகவே திருக்கோவில் சென்று சோமசுந்தரப் பெருமானை வணங்கினான். ''எம் பெருமானே! நான் என்ன அபசாரம் செய்து விட்டேன். தேவர்கோன் அறியாத தேவதேவனை விறகாளாகச் செய்து விட்டேனே! மகாதேவனை மனிதனாக்கி விட்டேனே! மன்னிக்கக் கூடாத எவ்வளவு பெரிய பிழை செய்து விட்டேன் நான்! அபசாரம் செய்த என்னை மன்னித்தருள வேண்டும் பெருமானெ!'' என்று கூறி இரங்கி வணங்கி வலம் வந்து வெளிவந்தான்.

பின்னர்ப் பாணபத்திரன் அரசருக்கரசனான பாண்டியன் முன்னிலை சேர்ந்து பணிந்து நின்றான். பாண்டியனும் உடனடியாக வடபுல வல்லுநனாகிய ஏமநாதனை அழைத்து வருமாறு ஏவலர்களைப் பணித்தான்.

ஏவலர் சென்று தேடினர். ஏமநாதனைக் காணோம். அதைக் கண்டு அக்கம் பக்கத்து வீட்டில் இருந்தோர் சிலர் அவர்களைப் பார்த்து, ''சேவகர்களே! ஏமநாதன் நேற்றுவரை இங்கேதான் இருந்தான். நேற்று அந்தி சாயும் வேளையிலே கிழட்டு விறகு வெட்டி ஒருவன் வந்தான். அவன் தன்னைப் பாணபத்திரனது அடிமை என்று கூறிக் கொண்டான். இனிதே கீதம் பாடினான். பிற்பாடு என்ன நடந்ததோ எங்களுக்குத் தெரியாது. ஆனால் ஏமநாதன் நடுராத்திரியிலே ஓடி விட்டான்,'' என்று சொன்னார்கள். ஏவலாளர்கள் வேகமாகச் சென்று, பாண்டிய மன்னனிடம் இச் செய்தியைத் தெரிவித்தார்கள்.

பாண்டியன் வரகுணன் பெரும் வியப்படைந்தான். சந்தேகம் அடைந்து, பாணபத்திரனைப் பார்த்து, ''ஏமநாதன் ஏன் ஓடிப்போனான்? இங்கிருந்து சென்ற பிற்பாடு நீ என்ன

செய்தாய்?'' என்று வினவினான். அதற்கு விடையாகப் பாணபத்திரன் தான் சோமசுந்தரப் பெருமானிடம் விண்ணப்பித்துக் கொண்டதையும், பெருமான் தன் கனவிலே தோன்றித் திருவாய் மலர்ந்தருளியதையும் சொன்னான்.

ஏவலர்கள் வந்து கூறியதும், பாணபத்திரன் கூறியதும் ஒன்றாக இருந்தது கண்ட பாண்டியன், "இது சோமசுந்தரப் பெருமானின் திருவிளையாடலே!'' என்று தெளிந்தான். இறைவன் திருவருளின் திறத்தையும் பாணபத்திரனது பக்தியின் பெருமையையும் நன்கு உணர்ந்து கொண்டான். திருக்கோவில் சென்று சிவபெருமானை வணங்கிய பின்னர், பாணபத்திரனை யானை மேல் அமர்த்தி ஊர்வலம் செய்வித்தான்.

தனது இசைப் புலவன் மகிழும்படிக்கு ஏராளமான வரிசைச் சிறப்புகள் செய்து, "இசை வேந்தரே! சிவ பெருமானே உமக்காகக் குற்றேவல் புரிந்தார் என்றால், நாங்கள் எல்லாரும் உம்முடைய ஏவலர்கள் அல்லவா! ஆதலால் நீங்கள் எம்முடைய தலைவர். நாங்கள் உமது அடிமை. இன்று முதல் நீங்கள் சோமசுந்தரப் பெருமானைப் பாடுவதையே கடமையாகக் கொள்ள வேண்டுகிறோம்,'' என்று நயந்து விடை கொடுத்தனுப்பினான் வேந்தன்.

வரகுண பாண்டியன் கொடுத்த செல்வம், ஆடை, ஆபரணம் எல்லாவற்றையும் புலவர்களுக்கும் சிஷ்யர்களுக்கும் உறவினர்களுக்கும் பங்கிட்டுக் கொடுத்து இனிது வாழ்ந்து வந்தான் பாணபத்திரன். சோமசுந்தரப் பெருமானது திருவடிகளை மறவாத நெஞ்சினனாகித் திருப்பாடல்கள் பல பாடி இசையோடு வாழ்ந்து வரலானான்.

42. திருமுகம் கொடுத்தது


பாணபத்திரன் பாண்டியனது அவைக் களத்திலே பாடுகின்ற உரிமை நீங்கியவனாகித் தினந்தோறும் சோமசுந்தரப் பெருமான் சன்னிதானத்தை யடைந்து முக்காலங்களிலும் பக்தி ரசம் பொருந்திய தெய்வத் தமிழ்ப் பாடல்களைப் பாடும் நியமத்தை மேற்கொண்டான். பெருமான் திருவடி முன் பாடுவதைத் தவிர வேறெதுவும் செய்யாத பாணபத்திரன் வறுமையில் ஆழ்ந்து வருந்தினான்.

பக்தனது ஏழ்மை நிலையைக் கண்ட இறைவன் அன்றாடம் பாண்டியனது பொக்கிஷத்திலிருந்து செல்வத்தைக் கவர்ந்து கொணர்ந்து பாணபத்திரனது முன்பு வைக்கலானார். பொற்காசுகள், மணிகள், நகைகள், பொன் ஆடைகள், சாமரங்களின் பொற்பிடிகள், ஆசனத்தின் பொன் தகடுகள் என்று பல வகைப் பொருள்களைப் பாணபத்திரன் பெற்றுச் செல்வானானான்.

இவ்வாறு நடைபெற்றது இறைவனாகிய கள்வனுக்கும் பக்தனாகிய பாணபத்திரனுக்குந்தான் தெரியும். பத்திரனும் அவற்றை யெல்லாம் உருக்கி, உருமாற்றி விற்று வந்த பொருளைக் கொண்டு, தன்னை அண்டியவர்கட்கும், யாசகர்களுக்கும் வேண்டியது அளித்து வாழ்ந்து வந்தான்.

இப்படியாக ஒவ்வொரு நாளும் ஏதேனும் ஒரு செல்வம் அளித்து வந்த சிவபெருமான் சில நாட்கள் சென்ற பின் எதுவும் ஈயாமல் இருந்து விட்டார்.

பாணபத்திரன் ஒவ்வொரு நாளும் திருக்கோயில் சென்று சோமசுந்தரப் பெருமானை உளமார வணங்கி ஒன்றும்



பெறாமல் வெறும் கையோடு திரும்பி வந்து கொண்டிருந்தான். வறுமையால் மிகவும் வாடினான். ஓர் இரவு வருந்திய உள்ளத்தோடு பசியானது எரிக்கத் தூங்கிப் போனான். அப்போது கனவொன்று கண்டான்.

சோமசுந்தரக் கடவுள் தோன்றினார். ''பாண! பாண்டியனது பொக்கிஷத்திலிருந்து அவ்வப்போது பல பொருள்களைக் கவர்ந்து அளித்து விட்டோம். பாண்டியனும் என்னுடைய பக்தன். பொக்கிஷத்தை வெறுமை ஆக்குவதும் நியாயமில்லை. தவிர, இதைப் பாண்டியன் தெரிந்து கொண்டால் விபரீதம் விளையும். களவுபோனது தெரிந்தால் காவலாளிகளுக்குக் கடுமையான தண்டனை கிடைக்கும். ஆதலால், யாம் உன்னிடம் திருமுகம் ஒன்று எழுதிக் கொடுப்போம். அந்தத் திருமுகம் ஒன்று எமது பக்தனான சேரமானுக்கு எழுதப்பட்டிருக்கும். நீ அதனை எடுத்துக் கொண்டு சேர நாட்டுக்குச் செல்லக் கடவாய்!'' என்று திருவாய் மலர்ந்தருளினார்.

விழித்தெழுந்த பாணபத்திரன், அருகே ஓலைச் சுருள் ஒன்று இருப்பதைக் கண்டெடுத்தான். ஆடினான்; பாடினான்; மகிழ்ச்சிக் கடலில் திளைத்தான். இறைவன் அருளிய திருமுகப் பாசுரம் இவ்வாறு அமைந்திருந்தது.

"மதிமலி புரிசை மாடக் கூடற்
பதிமிசை நிலவும் பானிற வரிச்சிற
கன்னம் பயிற்பொழி லால வாயில்
மன்னிய சிவனியான் மொழிதரு மாற்றம்
பருவக் கொண்மூப் படியெனப் பாவலர்க்
குரிமையி னுரிமையி னுதவி யொளி திகழ்
குருமா மதிபுரை குலவிய குடைக்கீழ்ச்

செருமா வுகைக்குஞ் சேரலன் காண்க
பண்பால் யாழ்பயிற் பாண பத்திரன்,
றன்போ லென்பா லன்பன் றன்பால்
காண்பது கருதிப் போந்தனன்
மாண்பொருள் கொடுத்து வரவிடுப் பதுவே''

திருமுகப் பாசுரம் பெற்ற பாணபத்திரன், அதனை வெகு பத்திரமாக ஒரு பட்டாடையிலே சுற்றி வைத்துக் கொண்டு, இறைவன் சேவடி வணங்கினான். பின்னர்த் திருக்கோவில் சென்று சோமசுந்தரப் பெருமானை வணங்கி விடை பெற்றுக் கொண்டு, சேர நாட்டை நோக்கி மேற்குத் திசையில் பயணமானான். பல வகையான நிலங்களைக் கடந்து சென்று நல்ல வளம் பொருந்திய மலை நாட்டை அடைந்தான்.

மலை நாட்டின் திலகம் போல விளங்கி நின்றது திருவஞ்சைக்களம் என்ற திருப்பதி. அப்பதியிலே தருமதேவதை வாசம் செய்தாள். இலக்குமிதேவி திருநடம் புரிந்தாள். வீரமகள் நன்னடம் செய்தாள். வடமொழியும் தென்மொழியும் சிறந்து விளங்கின. கீர்த்தி பெற்ற அந்த நல்லூரின் திருவீதிகள் ஒன்றிலே யிருந்த தண்ணீர்ப் பந்தலில் சென்று தங்கினான், பாணபத்திரன்.

அப்போது சேர நன்னாட்டைச் சீருடன் ஆண்டு வந்தவன் சேரமான் பெருமான் எனும் வேந்தனாவான். சிவபெருமான் அன்றிரவு சேரமானது கனவிலே தோன்றினார். ''சேர மன்னா! யாம் மதுரைச் சித்தராவோம். உன்னை அண்டி நல்ல பொருள் பெறுவதற்காக எம்முடைய திருமுகம் பெற்றுக் கொண்டு பாணபத்திரன் என்னும் எம் பக்தனொருவன் வந்துள்ளான். அரிய பொருள் அவனுக்கு அளித்து விரைவாக அனுப்புக!'' என்று மொழிந்து மறைந்தருளினார்.

வியப்புற்று விழித்தெழுந்த சேரமான் பெருமான் தாம் கண்ட நற்கனவைத் தமது மந்திரிகளிடம் சொன்னார். "உமையம்மை பங்கரான சுந்தரப் பெருமானிடம் ஸ்ரீமுகம் பெற்று வந்த பாணபத்திரனைத் தேடிக் கொணர்க!" என்று சேவகர்களுக்குக் கட்டளையிட்டார்.

பல இடங்களிலும் தேடிச் சென்ற ஏவலர்கள் முடிவாகப் பாணபத்திரனைத் தண்ணீர்ப் பந்தலில் கண்டு கொண்டனர். விரைவாகச் சென்று அரசனிடம் செய்தி சொல்லினர்.

விவரம் தெரிந்த சேரமானும் தனது பரிவாரங்களுடன் புறப்பட்டுச் சென்று பாணபத்திரனைக் கண்டு மகிழ்ந்தார். சிரமேல் கைகூப்பி ஆனந்தத் தாண்டவம் ஆடினார். ஈனக்கெனச் சொக்கேசர் அருளி விடுத்த திருமுக ஓலையை வாங்கித் தமது கண்களிலே ஒற்றிக் கொண்டு ஆனந்தக் கண்ணீர் சொரிந்தார். பாசுரத்தைப் பல முறை படித்துப் படித்துப் புளகாங்கிதம் அடைந்தார். எல்லையற்ற உவகையில் முக்குளித்தார். தெய்வத் திருமுகத்தைப் பொன்னாசனத்திலே வைத்து, யானை மேலேற்றி எடுத்துச் சென்றார். தக்க மரியாதைகளுடன் பாணபத்திரனை உடனழைத்துக் கொண்டு, தமது திருமாளிகைக்குப் போனார்.

அரண்மனை சேர்ந்ததும், பாணபத்திரனுக்குப் பதினாறு வகையான உபசாரங்களைச் செய்து மகிழ்வித்தார் சேர வேந்தன்.

சோமசுந்தரப் பெருமான் அருளிய திருமுகப் பாசுரத்திலே, "மாண்பொருள் கொடுத்து வரவிடுப்பதுவே" என்ற கட்டளையை நன்கு உணர்ந்து கொண்டவராகையால், காலந் தாழ்த்த விரும்பவில்லை சேரமான். தம்முடைய பொக்கிஷ -

சாலைக்குக் கூட்டிச் சென்று, ''சிவநேசச் செல்வரே, இங்குள்ள ஐசுவரியங்கள் எல்லாவற்றையுமே நீர் கொண்டு செல்லலாம்!'' என்று வேண்டினார்.

''தாங்கள் தருவதே போதும்,'' என்று பணிவுடன் மொழிந்தான், பாணபத்திரன். எல்லாச் செல்வமும் அவன் அருளியது எனக் கருதிய சேரமானும் ஏராளமான செல்வத்தை வாரிக் கொடுத்தார். ஆனால், பாணபத்திரன் தனக்கு வேண்டிய அளவு பொன்னணிகள், காசுகள், ஆடைகள், சிவிகை, யானை, குதிரை முதலியவற்றை ஏற்றுக் கொண்டு புறப்பட்டான். சேரமான் பெருமானும் நெடுந்தொலை சென்று பத்திரனை வழியனுப்பித் திரும்பினார்.

வறுமையில் வாடிய கலைஞனாகச் சேர நாடு சென்ற பாணபத்திரன் குபேரனை நிகர்த்து மதுரை மாநகருக்குத் திரும்பினான். ஊர் சேர்ந்ததும் முதல் காரியமாகச் சோமசுந்தரப் பெருமானைத் தரிசித்து வணங்கினான். பின்னர், மதுரை மாந்தர் யாவரும் அறியுமாறு வேதியர், விறற்பன்னர், வறியோர் முதலான எல்லார்க்கும் தான தருமம் வழங்கி இனிதே வாழ்ந்திருந்தான்.

43. பலகை இட்டது

சோமசுந்தரப் பெருமானின் முன்னிலையில் முன்பு முப்பொழுது சென்று தெய்வத் தமிழ் பாடிவந்த பாணபத்திரன் சேரமான் பெருமானிடம் பெரும் பொருள் பெற்று வந்த பின்பு அர்த்த ஜாமத்திலும் சென்று வணங்கி ஏழிசை பாடி வரும் நியமம் மேற்கொண்டான். நியமம் தவறாத திருத் தொண்டன் பாணபத்திரன் என்பதை உலகுக்குக் காட்டத் திருவுள்ளம் கொண்டார் சோமசுந்தரப் பெருமான்.

எவ்வித இன்னலையும் கடந்து தனது இசைத் தொண்டைச் செய்ய வல்லவன் என்பதை நிரூபிக்க விரும்பினார் சொக்கேசர்.

ஆதலால் ஓர் இரவு இறைவன் திருவிளையாடலினால் எங்கும் கார்மேகங்கள் சூழ்ந்துகொண்டு இடித்து முழங்கி மின் வெட்டின. பெரிய மழை தாரை தாரையாகப் பொழிந்தது. அந்த மாமழையிலே நனைந்து கொண்டே திருக்கோவிலை அடைந்தான் பாணபத்திரன். சோமசுந்தரக் கடவுளைப் பணிந்து நின்றான்.

பின்னர் நந்திகேசுவரருக்குப் பின்னால் சென்று யாழ் வாசித்துப் பாட விரும்பினான். மழையிலே நன்றாக நனைந்து விட்டதால் யாழ் நரம்பு இசை மழுங்கியது. உடம்பும் மழைப் பொழிவிலே நனைந்து விட்டதால் நடுக்கமுற்றது; அதனால் குரல் நடுங்கியது; விரல்கள் வலியெடுத்தன. சேற்றிலே புதைந்த கால்கள் விரைத்தன. இருந்தபோதிலும் செந்தமிழ் கனிந்த அமுத கீதப் பாடல்களைப் பாடிப் பெருமானுக்கு இசைத் தொண்டு செய்தான்.



பாணபத்திரனது நல்லிசைத் தொண்டை நன்குணர்ந்த சோமசுந்தரப் பெருமான் அருள்கூர்ந்து, ''பாணபத்திரா! இந்தப் பலகை உனக்கே உரிமையாவது! இதன் மேலே நின்று இசை பாடுக!'' என்று ஆகாசவாணியாகி இயம்பினார்.

உடனே பாணபத்திரன் அருகிலே நவரத்தினங்கள் இழைத்த பொன்னாலான பலகை ஒன்று தோன்றியது. பெருமானது ஆணையை மறுக்க அஞ்சிய பாணபத்திரனும் அந்தப் பொற் பலகையின் மீதேறி நின்று கொண்டு, இசையமுதம் பொழிந்தான்.

பின்னர்ச் சோமசுந்தரப் பெருமான் திருவடிகளை அகத்தே கொண்ட கலைஞன் பொன்மணிப் பலகையைத் தன் கையிலே பக்தியுடன் எடுத்துக் கொண்டு வீடு சென்றான். வீடு திரும்பியபோது மழையும் நின்று விட்டது. இல்லத்திலே பாணபத்திரன் நன்கு நித்திரை செய்தான்.

மறுநாள் பொழுது விடிந்தது. சோமசுந்தரப் பெருமான் பாணபத்திரனுக்கு நவரத்னம் பதித்த பொற்பலகையை அருட் கொடையாகத் தந்ததைக் கேட்டறிந்தான், வரகுண பாண்டியன். பாணபத்திரனைப் பரிவுடன் அழைத்து வந்து, அப்பொற்பலகையின் மீது இருக்கச் செய்தான். ''எங்கள் மதுரை நாயகன் இவனே!'' என்று கருதிப் பொன்னும் மணியும், கலன்களும் அளித்தான். நன்செய்களையும் பெரு நிதியங்களையும் நிரம்பக் கொடுத்து முறையாகப் பன்னாட்கள் நடத்தி வந்தான்.

பாண்டியன் வரகுணன் கொடுத்த பரிசில் வரிசைகளை ஏற்ற பாணபத்திரனும் தேவாலயத்திற்கு நாள் தோறும் நான்கு ஜாமங்களிலும் சென்று சோமசுந்தரப் பெருமானுக்கு இசை வழிபாடு செய்து வந்தான்.

சில நாட்கள் கழித்துப் பாண்டியன் வரகுணன் சாரூப்யம் பெற்றுச் சிவலோகம் சேர்ந்தான்.

44. இசை வாது வென்றது

பாண்டியன் வரகுணன் சிவலோகம் சேர்ந்த பின், அவனது குமாரன் இராஜராஜ பாண்டியன் சிம்மாசனம் ஏறினான். நாட்டை நல்ல முறையில் ஆண்டு வந்தான். அவனுக்கு அரச குலத்தைச் சேர்ந்த மனைவிமார் பலரும், காமக்கிழத்தியர் பலரும் இருந்து வந்தனர். காமக் கிழத்திகளுள் ஒருத்தியிடம் பாண்டியன் தன் உயிரையே வைத்திருந்தான்.

அவள் கீதம் பாடுவதிலே வல்லவளாக விளங்கினாள். அவளுக்கும் பாணபத்திரனுடைய மனைவிக்குமிடையே இசைக் கலைத் துறையிலே பகைமை ஏற்பட்டது. பாண்டியனது காமக் கிழத்திக்கு அது பொறுக்கவில்லை. ஆதலால் பாணபத்திரனின் மனைவிக்கு எதிராக ஒரு பாண் மகளைப் பாடவிட்டு அவளது கருவத்தை அடக்க வேண்டும் என்று கருதினாள். தன் கருத்தைப் பாண்டியனிடம் தெரிவித்தாள்.

தனது காமக் கிழத்தி சொல்லிய வண்ணம் செய்யும் இயல்புடையவன், பாண்டியன். ஆதலால், அவள் கருத்துக்கு இசைந்தான். இசைப் போட்டியிலே பாணபத்திரனது மனைவியை வெல்லும் தகுதியுடைய பாடினி ஒருத்தியை ஈழ தேசத்திலிருந்து வருமாறு அழைத்தான்.

ஈழப் பாடினியும் பாண்டியன் சபைக்குப் பாண்மாணவி யர் பலர் சூழ வந்து சேர்ந்தாள். அவள் கின்னரமாதர் போல



நல்லிசை நயமுடன் பொழிந்தாள். பாண்டியன் மகிழ்ந்தான். காமக் கிழத்தியிடம் கொண்ட மோகத்தால் வரவிருக்கும் பழியைக் கவனிக்க மாட்டாத பாண்டியன், "பாடினியே! நாளை நீ பாணபத்திரன் மனைவியை எமக்கு முன்னால் பாடுவதற்கு அழைப்பாய். அவள் மறுத்தாலும், நான் உன்னைத் தடுத்தாலும், நீ அவளைப் போக விடாதே. அவள் வெட்கமடையும்படி, நீ 'போகாதே, நில்,' என்று வஞ்சினம் கூறித் தடுத்துவிடு," என்று கூறி, அவளுக்கு வேண்டியதெல்லாம் வழங்கி, "நாளை வருவாயாக," என்று அனுப்பி வைத்தான்.

பின்னர்ப் பாண்டியன் பாணபத்திரனது மனைவியைத் தனது அரண்மனைக்கு அழைத்து வரச் செய்தான். தனது உள்ளும் புறமும் வேறுபட்ட நிலையிலிருந்து, "பாடினியே! ஈழத்திலிருந்து இசையிலே வல்லவள் ஒருத்தி வந்திருக்கிறாள். தன்னோடு பாட யாராலும் முடியாது என்று கருவப்பட்டுக் கொண்டிருக்கிறாள். அவளுக்கு இணையாக நீ பாட முடியுமா? சொல்," என்று கேட்டான்.

"அரசே! சோமசுந்தரப் பெருமானின் திருவருளாலும் எனது கற்பின் திறத்தினாலும் அவளோடு போட்டியிட்டுப் பாடி வெல்வேன் என்ற நம்பிக்கை உள்ளது. தோற்றுப் போனாலும் மனம் கலங்க மாட்டேன்!" என்று சொன்னாள். பாண்டியன் அவளையும் மறுநாள் வரும்படி பணித்தனுப்பி விட்டான்.

மறுநாள், இராஜராஜ பாண்டியன் ஈழத்துப் பாடினியையும் பாணபத்திரன் மனைவியையும் தனது சபைக்கு வரவழைத்தான். ஒருவரை யொருவர் எதிர்த்து இருக்குமாறு நேர் நேராக அமர்த்தினான். பாண்டியன் அவர்களைப்

பார்த்து யாழ் வாசிக்குமாறு கேட்பதற்கு முன்னதாகவே, ஈழப் பாடினி பாணபத்திரன் மனைவியை இழிவாகப் பேசினாள். மேலும், "இசைக் குற்றங்கள் எத்தனை? குணங்கள் எத்தனை? யாழுக்குரிய தெய்வம் யாது?" என்றெல்லாம் பலவாறான வினாக்களை அடுக்கிக் கொண்டிருந்தாள். தன் வினாக்களுக்கெல்லாம் பத்திரன் மனைவி விடை தந்த பின்புதான் இசை வாதுக்கு வர வேண்டும் என்று வற்புறுத்தினாள்.

பாணபத்திரன் மனைவி கற்பில் சிறந்தவள். ஆகையால், "பெண்ணே! நீ உனது கல்விப் பெருமையையும், வாதம் செய்யும் ஊக்கத்தையும், பலர் காமுறுகின்ற பெண்ணலச் செருக்கையும் பாண்டியன் அவையிலுள்ளோர் தெரிந்து கொள்ளும் பொருட்டு வாய் திறந்தாய் போலும்! நான் உன்னோடு இசை வாதுக்கு வந்திருக்கிறேனே யல்லாமல், வாய் திறந்து பேசும் போருக்காக அல்ல. உன் போன்ற மானம் விற்கும் பெண்தான் உனக்குச் சரி!" என்று கூறினாள்.

பாண்டியன் இடைபுகுந்து அவர்கள் இருவரையும் விலக்குபவன் போல நடித்து, "பெண்டிரே! வீண் பேச்சு எதற்கு? பாடத் தொடங்குங்கள். தோற்றுப் போனவர் வெற்றி பெற்றவருக்கு அடிமையாக வேண்டும்," என்று சொன்னான்.

ஈழ நாட்டுக்காரி யாழைத் தனது இடது தோளிலே சாய்த்துக் கொண்டு மீட்டிச் சுருதி கூட்டி ஏழிசையைப் பாண்டியன் செவிகளிலே பெய்தாள். அவ்விசை பாண்டியனுக்குத் தன் காமக் கிழத்தியின் பேச்சுக்கு நிகராக இனித்தது.

பாணபத்திரனுடைய மனைவியும் யாழ் கூட்டி இன்னிசை வெள்ளம் பொழிந்து சபையோர் செவிகளிலே கானாமுதம் செய்தாள். மன்னனது உள்ளக் கருத்தை அறிய மாட்டாத

சபையோர் எல்லாம் பத்திரன் மனைவி பாடியதையே பாராட்டினார்கள். பாண்டியனோ ஈழமகளின் பாடலைத் தான் மெச்சினான். உடனே சபையோர் தங்கள் கருத்தை மாற்றிக் கொண்டனர். மன்னவனோடு சேர்ந்து கொண்டு ஈழத்தவளின் கீதத்தையே மெச்சினர்.

மையலில் வீழ்ந்த பாண்டியன் நன்றும் தீதும் தெரியாத அறிவிலியானான். "இந்த ஒரே நாளில் இசைவாதின் முடிவை அறிவது முடியாத காரியம்", என்று கூறிப் பாடினியையும் பத்திரன் மனைவியையும் போக விடுத்தான்.

தனது மாணவிகள் புகழ்பாடிச் சூழ்ந்து வர ஈழப் பாடினி தன் இருக்கை சேர்ந்தாள். தன் இசை கேட்டுப் பாண்டியன் வியந்ததையே புகழ்ச்சி யெனக் கருதிக் கருவமும் களிப்பும் பொங்கக் கவலையின்றிப் படுக்கையின் மீது அமர்ந்தாள்.

பாணபத்திரன் மனைவியோ மிகுந்த கலக்கம் அடைந்திருந்தாள். திருக்கோவில் சென்று சோமசுந்தரப் பெருமானின் சேவடி வணங்கிக் கண்ணீர் சொரிய வாடி நின்றாள். "கடவுளே! இராஜராஜ பாண்டியன் பாரபட்சம் செய்கிறான். அவனது எண்ணத்தை ஒட்டியே அவையினரும் இருக்கின்றனர். நடுநிலை காண்பார் யாரும் இல்லையே, இறைவனே! நான் என்ன செய்வேன்? தமியள் துன்பத்தைத் தேவரீர்தான் போக்க வேண்டும்!" என்று மனமுருகி வேண்டினாள்.

அப்போது; "மகளே! பயப்பட வேண்டாம்! நாளைக்கு நீயே வெற்றியடையும்படி செய்வோம்," என அசரீரி வாக்கு எழுந்தது. அதைக் கேட்டு அமைதியும் உவகையும் கொண்ட

பத்திரன் மனைவி தனது இல்லம் சென்று மகிழ்ச்சியோடு இருக்கலானாள்.

மறுநாள் வந்தது. பாண்டியன் தனது சபைக்கு இசை வாதுக்கான இருவரையும் அழைப்பித்தான். அவர்கள் இருவரும் பாடுவதைக் கேட்டபின் முதல்நாள்தான் கூறியது போலவே அன்றும் கூறினான். அது கேட்ட அவையினரும் பாண்டிய மன்னன் கருத்துக் கிணங்கியே ஓரவஞ்சனையாகக் கூறினர். பாணபத்திரன் மனைவி அதைக் கேட்டு மனம் புழுங்கி நின்றாள்.

ராஜராஜ பாண்டியனைப் பார்த்து, "இராஜ சிங்கமே! மனு நீதி தெரிந்த மன்னர் பெருமானே! நீவிர் ஒரு தலைப் பட்சமாகப் பேசுவது கேட்ட சபையோரும் அப்படியே சொல்வதற்குத் துணிந்தார்கள். ஆதலால் நடுநிலை கொண்ட சோமசுந்தரப் பெருமானின் சன்னதி சேர்ந்து நாங்கள் இருவரும் பாடுவோம். இருவர் பாடுவதையும் எல்லாரும் கேட்கட்டும். யாராவது ஒருவர் மனம் துணிந்து 'இவள் வென்றாள்' என்று சொன்னாலும் போதும்," என்று செப்பினாள்.

அது கேட்ட பாண்டியன், "நீங்கள் அவ்வாறே செய்யலாம்," என்று சொல்லி விட்டான். சபை கலைந்தது. ஈழத்துப் பாடினியும் பாணபத்திரன் மனைவியும் தங்கள் தங்கள் வீடு சென்றனர்.

மூன்றாம் நாள் கீத ஞானம், இலக்கிய ஞானம், சுருதி ஞானம், தாள ஞானம் முதலிய கொண்ட இசைப் புலவர்களும் மந்திரிகளும் புடைசூழப் பாண்டியன் சோமசுந்தரப் பெருமான் திருச்சன்னதியை அடைந்தான். இசை வாதிடும் இருவரையும் அங்கே வரவழைத்தான்.

"இன்று பத்திரன் மனைவி எனக்கு அடிமையாகி விடுவாள். இதிலே ஐயமில்லை!" என்று எண்ணி மிகுந்த கருவத்தோடு வந்தாள் ஈழமகள். தெய்வ பக்தியும், கற்பும், கல்வியும் நிறைந்த பத்திரன் மனைவியோ அமைதியுடன் வந்தாள். சோமசுந்தரப் பெருமானும் இசைப் பெரும் புலவர் போல ஆபரணங்கள் பூண்டு கலைஞர் நடுவிலே எழுந்தருளியிருந்தார்.

முதன் முதலாக ஈழப் பாடினி வேத்திசை பாடினாள். கூட்டத்திலே அமர்ந்திருந்த பெரியோர் எவரும் எதுவும் கூறாமல் இருந்தனர். அடுத்துப் பாணபத்திரன் மனைவி பதுமாசனத்தமர்ந்து வீணை மீட்டி இன்னிசையை ஆராய்ந்து எழுப்பிப் பாடினாள். சொக்கநாதப் பெருமானுக்கு அர்ப்பணம் செய்து பெருந்தேவபாணி பாடினாள். மனங் கனிந்த முறையிலே முதல் தொழில் எட்டும் இசைக் கரணம் எட்டும் பொருந்திய யாழிசையோடு பாடலின்னமுத கீதம் பொழிந்தாள். உள்ளான கீதத்தை அமைதியுடன் தெளிவாகப் பாடினாள். இசையினைச் செவிமடுத்த அனைவரும் பேரானந்தம் அடைந்தனர்.

இராஜராஜ பாண்டியன் இம்முறை முன் போல முடிவு சொல்வதற்குத் துணிச்சல் கொள்ளவில்லை. சோமசுந்தரப் பெருமானின் திருவருளால் உளக்கொடுமை நீங்கியது. இருவர் கானத்தையும் சீர்தூக்கி ஆராய்ந்து பார்த்தான். நடுநிலைமை கொண்ட மனத்தோடு, "பாணபத்திரன் மனைவியே வென்றவள்!" என்று தீர்ப்புக் கூறினான்.

அப்படியே அரசன் வழிமொழிந்தனர் சபையினரும். இசை வாதிலே அறுதியிட்டுக் கூறப்பட்ட முடிவினை எல்லாரும் ஏற்று மகிழ்ந்தனர். இசைப் புலவர்களோடு

புலவராய் வீற்றிருந்த சோமசுந்தரப் பெருமானும், "ஆகா, இது அற்புதம்!" என்று சபையிலுள்ளோர் அனைவரும் கேட்கும் வண்ணம் மொழிந்து மறைந்தருளினார். பார்த்தோர் அனைவரும் பேராச்சரியம் அடைந்தனர். இராஜராஜ பாண்டியன் பயத்தினால் நடுநடுங்கிப் போனான்.

சோமசுந்தரப் பெருமானின் திருவிளையாடலே இது என்று எல்லாரும் நன்கு புரிந்து கொண்டனர். சிவ பெருமானின் திருவருளையும் பாணபத்திரன் மனைவியது பக்திச் சிறப்பையும் அனைவரும் எண்ணி எண்ணி இன்பம் எய்தினர்.

பாண்டியன் பின்னர் இசை வாதிலே வெற்றி பெற்ற பத்திரன் மனைவிக்கு முத்தாரங்களையும், பொற்கலங்களை யும், பொன்னாடைகளையும் வரிசையாக வழங்கிப் பல சிறப்புகள் செய்தான். தன்னாலே வரவழைக்கப்பட்டவள் ஆகையால், தோல்வியுற்ற ஈழப் பாடினிக்கும் பரிசுகள் பல வழங்கிச் செல்ல விடுத்தான்.

இராஜராஜபாண்டியன், குழுமியிருந்த அனைவருடனும் சென்று, திருக்கோவிலில் எழுந்தருளிய சோமசுந்தரக் கடவுளுக்கும் அரிய இரத்தினாபரணங்களைக் காணிக்கை யாகக் கொடுத்தான். உளமார வழிபாடு செய்து, "மன்னவர் வலிமை தெய்வங்களின் வலிமை முன் நிற்க மாட்டா. தெய்வங்களின் வலிமை யெல்லாம் சிவபெருமான் வலிமை முன் நிற்கமாட்டா!" என்று கூறி வியந்து போற்றினான். இறைவனைப் பிரதட்சிணம் செய்து பின்னர் அரண்மனை சேர்ந்தான்.

இராஜராஜ பாண்டியன் சுகுணன் என்ற நல்ல மைந்தனைப் பெற்று வாழ்ந்திருந்தான்.

45. பன்றிக் குட்டிகளுக்குப் பால் கொடுத்தது

மதுரைமா நகரத்துக்கு மேற்கே சிறிது தூரத்திலே வையை யாற்றின் தென்கரையிலே குருவிருந்துறை என்னும் ஊர் இருந்தது. தேவ குருவாகிய வியாழ பகவானே அவ்விடம் இருந்து சிவபெருமானை நோக்கித் தவமிருந்ததால் அப்பெயர் பெற்றதாயிற்று.

அவ்வூரிலே சுகலன் என்ற வேளாளன் ஒருவன் வாழ்ந்து வந்தான். அவனது மனைவி சுகலை என்பவள். சுகலை பன்னிரண்டு புத்திரர்களுக்குத் தாயாக இருந்தாள். மிகுந்த செல்லத்தோடு தமது மக்களை அவர்கள் வளர்த்து வந்ததால், அவர்களும் செருக்கு மிகுந்து வழி தவறிச் செல்லலாயினர். மக்களின் வயது ஏறியதே தவிர, ஒழுக்கம் ஏற்படவில்லை.

இப்படி வளர்ந்து வருகின்றபோது பெற்றோர் இறந்து விட்டனர். பன்னிரண்டு புத்திரர்களும் காட்டிற்குச் சென்று வேடர்களோடு கூடி வேட்டையாடும் தொழிலை மேற்கொண்டனர்.

ஒருநாள் சுகல மக்கள் வேட்டையாடித் திரிந்தபோது தவம் புரிந்து கொண்டிருந்த பிரகஸ்பதியைக் கண்டனர். அவரைக் கண்டு அவர்கள் கைகொட்டி ஆரவாரம் செய்து சிரித்தனர். அவர் மீது கல்லையும் மண்ணையும் வாரி வீசினர்.

தனது தவத்திற்கு இடையூறு ஏற்படுவதை அறிந்த பிரகஸ்பதி மனம் வாடிக் கோபங் கொண்டார். அவர்களைப் பார்த்து, ''பெரியவரைக் கண்டு வணங்கத் தெரியாத மூடர்களே! உங்கள் குலத் தொழில் நிலத்தை உழுவதேயான தால் நீங்கள் எல்லாரும் பன்றிக் குட்டிகளாகப் பிறந்து பெற்றோரையும் இழந்து வருந்துவீர்களாக!'' என்று கடுமையான சாபம் ஈந்தார்.



பாவப் பிள்ளைகள் பயந்தனர். சாபம் ஏற்றனர். "இந்தச் சாபம் எப்போது விலகும்?" என்று வேண்டிப் பணிந்தனர். சினம் தணிந்த தேவகுருவும் சிவபெருமானைச் சிந்தித்தவராய், "சோமசுந்தரப் பெருமானே உங்களுக்குத் தாயாக வந்து பால் கொடுத்து உங்களைக் காப்பார். பாண்டிய மன்னனுக்கு உங்களை மந்திரிகளாகச் செய்தருளுவார். அதன்பின் முக்தியும் வழங்கியருளுவார்!" என்று கூறினார்.

சுகலப் பாவப் பிள்ளைகள் பன்னிரண்டு பேர்களும், குருவிருந்த துறைப் புறத்திலே இருந்த காடுகளில் திரியும் பன்றிகளுக்கெல்லாம் தலைவனான பன்றியினது பெட்டையின் வயிற்றிலே சேர்ந்து குட்டிகளாகப் பிறந்தார்கள்.

சுகலனது மக்கள் பன்றிக் குட்டிகளாக இருந்து வரும் நாட்களிலே அந்தக் காட்டிலே வேட்டையாடுவதற்காக இராஜராஜபாண்டியன் தனது சேனா பரிவாரங்களோடு வந்து சேர்ந்தான். வேட்டை வெகு மும்முரமாக நடைபெற்றது. பறை, உடுக்கை, கொம்பு முதலிய பல கருவிகள் ஒலித்தன. புலிகளும், யானைகளும், மான்களும் வெருண்டு ஓடின. பாண்டியனும் அவனது வீரர்களும் அம்பு தொடுத்தும், வேல் எறிந்தும், விலங்குகளைத் தாக்கினர். பல காட்டு விலங்குகள் அவர்களது வேட்டைக்கு இலக்காகின. மான்கள், கரடிகள், யானைகள், புலிகள் எல்லாம் அம்பு பட்டு விழுந்தன. பன்றிகள் பல வலைகளில் விழுந்தன.

இவ்வாறாகப் பலவகையான விலங்குகளை வேட்டையாடிக் கொண்டே இராஜராஜ பாண்டியன் மேற்கு நோக்கிச் சென்று கொண்டிருந்தான். இதனைக் கண்ட பன்றியொன்று பன்றியரசன் இருக்கும் காட்டுக்குச் சென்று, "எம் அரசே! இக்காட்டிலுள்ள மிருகங்களை யெல்லாம் பாண்டிய மன்னன் வேட்டையாடிக் கொன்று வருகிறான்," என்று கூறியது.

அதைக் கேட்ட அரசப் பன்றியும் மிகவும் மகிழ்ச்சி கொண்டு உடனே போருக்குப் புறப்பட ஆயத்தமானது. செல்லும் காலத்திலே தனது உயிர் நிகர்த்த பெண் பன்றியைப் பார்த்து, ''இன்று நான் பாண்டியனை எதிர்த்துப் போர் செய்யப் போகிறேன். வெற்றியுடன் திரும்புவேனோ அல்லது இறப்பேனோ தெரியாது. ஆதலால், நீ இங்கேயே இருந்து நம் குழந்தைகளைக் காப்பாயாக!'' என்று சொல்லியது.

அது கேட்ட பெண் பன்றி, ''பிரணாபதி! உம்மை விட்டு நான் பிரிந்திருக்க மாட்டேன். உம்முடனேயே வருவேன். நீர் வெற்றியுடன் திரும்பினால் நானும் உடன் திரும்புவேன். நீர் இறந்தால் உடனே நானும் இறப்பேன்!'' என்று உரைத்து உடன் புறப்பட்டு விட்டது. தனது குட்டிகளையும் உதறித் தள்ளிவிட்டுச் சென்றது. பன்றியரசன் கடுகிச் சென்றது. பலவகை இனத்தைச் சேர்ந்த பன்றிக் கூட்டங்கள் பெருகி வந்தன. பன்றிப் படைவீரர் சூழ, அவற்றின் அரசனும் கோபம் கொண்டு முன்னேறியது. அரசப் பன்றி இடிபோல உறுமியது.

பன்றிப்படை பாண்டியன் படையைக் கடுமையாகத் தாக்கியது. காட்டுப் பன்றிகளின் கடுமையான தாக்குதலைச் சமாளிப்பது சிரமமாகத்தானிருந்தது, பாண்டிய வீரர்களுக்கு. அந்தக் கடும் போரின் விளைவாகப் பல பன்றிகள் உயிரிழந்தன.

அந்த அவல அலங்கோலத்தைக் கண்ட பெண் பன்றி தனது அரசனைப் பார்த்து, ''நம் சேனைகள் அழிந்தன. இனி நம்மால் என்ன செய்ய முடியும்? ஆதலால், நாம் இருவரும் உயிர் தப்பி ஓடிவிடலாம்,'' என்று கூறியது.

அதனைக் கேட்ட பன்றி வேந்தன் மானம் மிகவும் கொண்டு, ''வீரக் குடியில் தோன்றிய நான் பின்வாங்க மாட்டேன். வீரம் விளைத்தே தீருவேன். பேதையே! இங்கேயே நிற்கலாம்,'' என்றது. பின்னர்ப் பாண்டிய மன்னனை எதிர்த்துப் போரிடத் தொடங்கியது. பெரிய ஆரவாரம் செய்து கொண்டு சினத்தோடு நிலம் கீறிப் பாண்டியன் மேல் பாய்ந்தது.

பாண்டியன் கடுமையான அம்புகளை அதன் மேல் எய்தான். பன்றியரசனும் மிகவும் கடுமையான போர் செய்தது. பாண்டியனது யானையையும், தேரையும், குதிரையையும் அழித்து விட்டது. இதனைக் கண்டு கடுஞ்சினம் கொண்ட பாண்டியன் பெரிய இரும்பு உலக்கையைக் கொண்டு பன்றியின் தலையிலே பலமாக அடித்தான். உடனே, இரத்தம் வெள்ளமாகப் பெருகப் பன்றியரசு இறந்து வீர சுவர்க்கம் புகுந்தது.

தன் துணைவனை இழந்து நின்ற பெண் பன்றி வேகமாகத் தாக்கி வெம்போர் செய்தது. அதை எதிர்த்து வெகு நேரம் போர் புரிந்தான் பாண்டியனது வேடர் தலைவன். அவனைத் தாக்கி வீழ்த்தியது பெண் பன்றி. அவனும் தன் கையிலிருந்த இரும்புத் தண்டால் அப் பன்றியைக் கொன்றுவிட்டுத் தானும் இறந்தான். ஒருவாறாக வேட்டையை முடித்துக் கொண்ட பாண்டியன் இராஜராஜன் மதுரை சேர்ந்தான்.

பன்றிகள் விழுந்து இறந்த இடம் மலையாகி விட்டது. அம்மலை பன்றி மலை என்று வழங்குவதாயிற்று. முன்பிறப்பிலே புலத்திய முனிவரது தவத்துக்கு இடைஞ்சல் செய்த அரங்க வித்தியாதரன் என்ற ஒரு யட்சனே சாபம் பெற்றுக் காட்டுப் பன்றியாக வந்து பிறந்தான். சாப விமோசனமாகத்தான் பாண்டியன் கையால் மாண்டான்.

தமது தாய் தந்தையரை இழந்த பன்றிக் குட்டிகள் பன்னிரண்டும் அவற்றைத் தேடித் தேடித் திகைத்தன. அலைந்து வாடின. தாய்ப் பாலுக்கு ஏங்கித் தவித்தன. தாகம் அவற்றைப் பெரிதும் வருத்தியது. வெயிலின் கடுமை பொறுக்காமல் வெதும்பின.

இப்படியாகப் பன்றிக்குட்டிகள் துன்பப்படும்போது சோமசுந்தரப் பெருமான் மீனாக்ஷியம்மையுடன் வானத்திலே இருந்து கண்டு கொண்டிருந்தார். அந்த நிலையில் பெருமான் பன்றிக்குட்டிகளின் இன்னல் கண்டு இரங்கியருளினார். உடனே, அவற்றினுடைய தாய்ப் பன்றியின் உருவம் எடுத்துக் கொண்டு பசியாலும் தாகத்தாலும் வாடிய குட்டிகளின் முன்பு நின்றருளினார்.

தாயின் வரவைக் கண்ட சேய்கள் குதூகலம் அடைந்தன. வேகமாக ஓடிவந்து முட்டின. மோந்து கண்டன; முதுகிலே தாவி எட்டிப் பார்த்தன; துள்ளின, ஓடின, மீண்டும் வந்தன. தாய்ப் பன்றியும் தன் குட்டிகளை நெருங்கி நின்று மோந்து கொடுத்தது. கருணைப் பெருக்கினால் ஊறிய பாலைக் குட்டிகளுக்கு ஊட்டியது. மிகச் சிறந்த சிவதேவப் பால் அல்லவா? வலிமையும் வெற்றியும் அறிவும் தகைமையும் ஏற்படுமாறு அருளியது.

பின்பு அந்தக் குட்டிகளுக்கு முகத்தை மட்டும் பன்றியினதாக அமைத்து, உடலிலுள்ள மற்ற அங்கங்களை மனிதர்களுடையது போல அமைத்தது தாய்ப் பன்றி. அப்படிச் செய்தருளிய சோமசுந்தரப் பெருமான் தாம் ஏற்ற பன்றி வடிவத்தை விட்டு மறைந்தருளினார்.

தாய்ப் பன்றியாக வந்த தயாபரன், தாயற்ற பன்றிகட்குப் பாலூட்டி அறிவில்லாத அவற்றுக்கு அறிவு தந்து இனிமேல் வரும் பிறவியையும் தூய்மையாக்கினார்.

46. பன்றிக் குட்டிகளை மந்திரிகள் ஆக்கியது

தாய்ப் பன்றியாக வந்த சிவபெருமான் மறைந்தருளிய பின், பன்றி முகம் கொண்ட குமாரர்கள் பன்னிருவரும் இளங் கதிரவனைப் போல விளங்கினார்கள். பல கலைகளிலும் வல்லவர்களாகத் திகழ்ந்தார்கள். எல்லாரும் ஒன்று சேர்ந்து பன்றி மலையில் இருந்தார்கள்.

அந்த நாளிலே மீனாட்சியம்மை சோமசுந்தரப் பெருமானைப் பார்த்து, ''இறைவ! அறிவில்லாக் கொடிய விலங்குகளான பன்றிக் குட்டிகளுக்குப் பால் ஊட்டத் தாங்கள் பரிவெய்தியது ஏனோ?'' என்று நயந்து வினவினார்.

அப்போது சோமசுந்தரப் பெருமான் தேவியாரை நோக்கி, ''வேதங்களும் ஆகமங்களும் எம்மைச் சகல ஜீவதயாபரன் என்று மொழிகின்றன. சேதனம் அசேதனம் இரண்டும் எமக்கு ஒன்றுதான். ஆதலால்தான் தாயிழந்த பன்றிக் குட்டிகளுக்கு மனம் இரங்கித் தாயாகிப் பாலூட்டி அருளினோம். அதனாலே பன்றிக் குட்டிகளும் வலிமையும் வெற்றியும் கல்வி முதிர்ச்சியும் ஞானமும் பெற்றன. இனி அப் பன்றி முகக் குமாரர்கள் இராஜராஜ பாண்டியனுக்கு அமைச்சர்களாக இருந்து பல வகை வளங்களையும் பெருக்குவார்கள். பின் பாசங்களை ஒழித்துப் பதவி பெற்று எம்முடைய பெருங்கணத்தவர் ஆவார்கள்!'' என்று விடை பகர்ந்தருளினார்.

சோமசுந்தரக் கடவுள் அன்று இரவிலேயே இராஜராஜ பாண்டியனது கனவிலே தோன்றினார். ''பாண்டியனே! பன்றி மலையிலே பன்றி முகத்தோடு பன்னிரு குமாரர்கள் வாழ்கின்றனர். அவர்கள் பேரறிவுடையவர்கள். அவர்களை



உனது சபையிலே அமைச்சர்களாக அமர்த்திக் கொள்வாய்!'' என்று திருவாய் மலர்ந்து பின் மறைந்தருளினார். பாண்டியன் பெருமகிழ்ச்சியுடனும் பெரு வியப்புடனும் விழித்தெழுந் தான்.

விடிந்ததும் தனது அமைச்சர்களை அழைத்துத் தனது விந்தைக் கனவினைச் சொன்னான். பன்றிமலைப் பன்றி முகப் பன்னிரண்டு வீரர்களையும் அழைத்து வருமாறு பணித்தான். மந்திரியர் பன்றி மலை சேர்ந்தனர். பன்றி முகத்தோரையும் கண்டனர். இராஜராஜ பாண்டியனது விருப்பத்தைத் தெரிவித்து அவர்களை மதுரைக்கு வருமாறு வேண்டிக் கொண்டனர்.

பாண்டியன் விருப்பத்தை அமைச்சர்கள் மூலம் கேட்ட அப்பன்னிருவரும் மனமிசைந்து புறப்பட்டு மதுரை வந்தடைந்தனர். பாண்டிய வேந்தன் திருமுன் சென்று வணங்கி நின்றனர்.

பாண்டியன் அவர்களை மிகுந்த மகிழ்வுடனும் பரிவுடனும் வரவேற்றான். அவர்களுக்கு மந்திரி பதவியைக் கொடுத்துப் பல்வேறு சிறப்பான வரிசைகளையும் வழங்கினான். தவிர, தனது பழைய மந்திரிமார் மகளிரையும் அவர்களுக்கு வேத விதிப்படி விவாகம் செய்வித்தான்.

பன்றி முக அமைச்சர்கள் பன்னிரண்டு பேர்களும் பாண்டியனைக் காக்கின்ற கவசம் போலவும், வழிகாட்டும் கண்கள் போலவும் பழகி வந்தார்கள். ''உடல்கள் பன்னிரண்டு, ஆனால் உயிர் ஒன்று!'' என்று கூறும்படிக்கு, அவ்வளவு ஒற்றுமையாக வாழ்ந்து வந்தார்கள். தங்களுக்கு உரிய கடமைகளை ஏற்றுச் செவ்வையாகப் புரிந்து வந்தனர். உளம் பொருந்திய உவகையோடு செயல் ஆற்றினர். பாலும்

தேனும் கலந்தாற்போலக் கல்வியும் அறிவும் சேர்ந்து விளங்கினர். இனிய மொழிகளே பேசி யாவருக்கும் இங்கிதமாக நடந்தனர். தமக்குக் கிடைத்த பதவியினால் கருவம் கொண்டு விடாமல் ஒரு நிலையிலே நின்று ஒழுகினர். அரசனை அனல் போல எண்ணி நெருங்கியும் நெருங்காமலும் தீக்காய்பவர் போலத் தம்மைக் கட்டுப் படுத்திக் கொண்டு பழகினர். வேந்தன் விரும்பிய பொருள் எதையும் தாம் வேம்பு எனக் கொண்டனர்.

பன்றி முக மந்திரிகளுடைய திறமையான நல்லாட்சி யிலே குடிமக்கள் நல்வழியிலே சென்று சிறந்தனர். பாண்டியனது கொள்கைகளை நன்றாக ஆராய்ந்து தருமமார்க்கத்திலே நடந்தனர். இவ்வாறாகப் பன்னிருவரும் தருமம், நியாயம், நீதி, யோக்கியம், யுக்தம் முதலியன காட்டும் நேரிய வழியிலே சென்றனர். அவர்களால் பாண்டியன் ஈகையிலே, தருமத்திலே, கீர்த்தியிலே பெருகி விளங்கினான்.

சில காலம் கழிந்ததும், பன்றி முகத்தார் பன்னிருவரும் சிவலோகம் சேர்ந்து, சிவகணத் தலைவர்கள் ஆயினர்.

இராஜராஜ பாண்டியனும் இந்திர பதவி பெற்றான்.

47. கரிக் குருவிக்கு உபதேசம் செய்தது

பாண்டியன் இராஜராஜன் இந்திர பதவியைப் பெற்ற பின்னர், அவனது திருக்குமாரனாகிய சுகுணன் பாண்டியன் ஆனான். அவன் சிங்க ஏற்றினைப் போல விளங்கி உயிர்களின் துன்பங்களைப் போக்கி நல்லாட்சி செய்து வந்தான்.

அந்த நாளிலே வலிமை மிகுந்த ஒருவன், தனது பூர்வஜன்மத்திலே எல்லா வழிகளிலும் தருமமே புரிந்து, கொஞ்சம் பாவமும் செய்ததால், இந்தப் பிறவியிலே கரிக்குருவியாக வந்து பிறந்தான். அந்தக் கரிக் குருவிக்குக் காக்கை முதலான வேறு பறவைகள் பகையாகித் துன்பம் கொடுத்தன. பல பறவைகளால் கொத்தப்பட்ட அக் குருவியின் தலையில் இரத்தம் ஒழுகிக் கொண்டே இருந்தது.

அதனால் பயமடைந்து நகரத்திலே சில நாட்கள் வாசம் செய்தது. பின்னர் ஒரு காட்டுக்குச் சென்றது. பூத்துக் குலுங்கிய மரக் கிளை யொன்றின் மேல் சென்று இருந்தது. வெட்கத்தோடும் சோர்வோடும் பெருமூச்சு விட்டுக் கொண்டிருந்தது.

அப்போது அந்த மர நிழலில் தங்கும் பொருட்டுச் சிவபக்தர் ஒருவர் வந்து அமர்ந்தார். விபூதியும், உருத்திராட்சமும் அணிந்திருந்த அப்பெரியவர் தீர்த்த யாத்திரை செய்து வருபவர். அவர் அங்கு இருந்தபடியே அங்கிருந்த சில பேர்களைப் பார்த்து, ''எவருக்கும் நல்ல பலனைத் தரும் ஸ்தலம் மதுரை; தீர்த்தம் பொற்றாமரைக் குளம்; மூர்த்தி சோமசுந்தரப் பெருமான். ஒரே இடத்தில் இந்த மூன்று வகைச் சிறப்புக்களையும் ஒருங்கே பெற்ற



இடம் உலகத்திலே வேறெங்கும் கிடையாது. ஆதலால் மதுரையம்பதிக்கு இணையான ஸ்தலம் வேறில்லை. சோமசுந்தரப் பெருமான் தம்மை வணங்கி வழிபடும் அடியவர்களுக்கு எளியவர். கோரிய வரங்களை இந்தப் பிறவியிலேயே அருளுவார். ஆதலால், விசேஷமான மூர்த்தி சோமசுந்தரக் கடவுளேயாவார்!'' என்று நல்லுபதேசம் செய்து கொண்டிருந்தார்.

சிவபக்தர் போதித்ததைச் சோர்ந்து கிடந்த கரிக்குருவியும் கேட்டது. உடனே அதற்கும் ஞானம் பிறந்து விட்டது. அதனால், தான் பறவையாகப் பிறந்த காரணம் தெரிந்தது. ''நான் இந்தப் பிறவியை ஒழிக்க வேண்டுமானால், இச் சிவ பக்தர் சொன்னபடிக்கே செய்ய வேண்டும்,'' என்று உறுதி கொண்டு, காட்டை விட்டுப் பறந்து சென்று, மதுரை யம்பதியை அடைந்தது.

திருக்கோவிலைச் சார்ந்த பொற்றாமரைக் குளத்திலே தீர்த்தம் ஆடியது. சோமசுந்தரப் பெருமானைப் பிரதட்சிணம் செய்தது. மனமார்ந்த பக்தியுடன் மானசீக பூஜை செய்தது.

இவ்வாறாக மூன்று நாட்கள் கழிந்து விட்டன.

மீனாக்ஷியம்மையார் சோமசுந்தரப் பெருமானைப் பார்த்து, ''தேவதேவா! கரிக்குருவி எதற்காக வழிபாடு செய்கிறது? இது இங்கு வந்த காரணம் என்ன?'' என்று வினவினார். மதுரேசரும் அக்கரிக் குருவியின் வரலாற்றை முறையாக மொழிந்தருளினார். பின்னர்க் கரிக்குருவியின் மேலே திருவருள் நோக்கம் பாலித்து மிருத்தியுஞ்சய மந்திரத்தை உபதேசித்தருளினார்.

மதுராபுரி நாதர் அருளிய மிருத்தியுஞ்சய மந்திரம் செவியில் பட்டவுடனே, அதனுடைய பிறவித் துன்பம் ஒழிந்தது. அதனது சிற்றறிவு நீங்கிப் பேரறிவு சித்தியாகி விட்டது.

சிவபெருமானின் திருவடிகளை உளத்தில் தியானம் செய்து கொண்டு, ''அண்ணலே! அடியேனை ஆளவும் வேண்டுமோ? எளியவர்களைத் தேடிச் சென்று அருள் புரிவதே தேவரீரது தன்மை போலும்! எளியேன் முற் பிறப்பிலே செய்த தருமத்தால்தான் இப் பிறப்பிலே எம்பெருமான் வாயிலாக மந்திரோபதேசம் பெற்றேன். மறுமையில் சிவபக்தி பெறவும் இது காரணமாயிற்று. ஆயினும், அடியேனுக்குக் குறையொன்று உள்ளது. ஐயனே! கொடிய பறவைகள் எளியேனைத் துன்புறுத்துகின்றன. என் கதி அனைவரும் பார்த்துச் சிரிக்கும்படி ஆயிற்று!'' என்று விண்ணப்பித்துக் கொண்டது.

அப்போது கடவுள், ''அந்தக் கொடிய பறவைகளுக் கெல்லாம் நீ வலியான் ஆகக்கடவாய்!'' என்று திருவாய் மொழிந்தருளினார்.

பிற்பாடும் அந்தக் கரிக்குருவி, ''பெருமானே! எளியேனுக்கு இன்னும் ஒரு வரம் தந்தருள வேண்டும். தேவரீர் திருவாய் மலர்ந்தருளிய வலியான் எனும் பெயர் அடியேனது மரபிலே வருகின்ற பறவைகளுக்கெல்லாம் விளங்க வேண்டும். அப் பறவைகளும் தாங்கள் உபதேசித்த மந்திரத்தை ஓதியோதி உய்ய வேண்டும். அருள்புரிவீராக!'' என்று இறைஞ்சியது.

சோமசுந்தரப் பெருமானும், ''அவ்வாறே ஆகட்டும்!'' என்று உறுதி கூறியருளினார். பின்னர்த் திரியம்பகம் என்னும்

அவ் வேத மந்திரத்தைத் தெய்வம், ரிஷி, சந்தம் என்பனவற்றோடு, உதாத்தம் அனுதாத்தம் சொரிதம் என்னும் மூவகைப்பட்ட ஓசையுடன் தெரிவித்தருளினார்.

கரிக் குருவியும் இறைவன் அருளிய திருமந்திரத்தை இடைவிடாது பயின்று வந்தது. அதனுடைய சாதிப் பறவைகளும் சிவபெருமான் அருள் வலிமையால் பறவைகளுக்கெல்லாம் வலிமை பெற்றனவாகி வலியான் என்னும் காரணப் பெயர் பெற்றுப் பறவை உலகிலே சிறப்புற்று வாழ்ந்தன.

பின்னர்க் கரிக்குருவி சிவபெருமானுடைய திருவடி நிழலை அடைந்து ஆனந்த நிலை எய்தியது.

48. நாரைக்கு முக்தி கொடுத்தது

பாண்டிய நாட்டின் தெற்குப் பகுதியிலே மாடங்கள் நிறைந்த ஊர் ஒன்று இருந்தது. அங்கே அழகான தாமரைக் குளம் ஒன்று இருந்தது. அக் குளத்தில் வாழும் மீன்களைக் கொத்தியுண்டு ஒரு நாரை வாழ்ந்து வந்தது.

சில நாட்கள் மழை பெய்யாததால் அந்தத் தாமரைக் குளத்திலே நீர் வற்றிப் போயிற்று. தனக்கு இரை கிடைக்க வழியில்லாமல் போனதால், நாரை ஒரு காட்டுக்குச் சென்று சோர்ந்து விழுந்தது.

அந்தக் காட்டிலே ஜீவன் முக்தர்களான ரிஷிகள் பலர் வசித்து வந்தார்கள். அம் முனிவர் கூட்டத்திலே சிவானந்தமயமாகிய சத்தியன் என்ற தவசிரேஷ்டர் இருந்தார்.



அதே கானகத்தில் சதுரமாக அமைந்து படித்துறைகள் அமைக்கப்பட்ட தடாகம் ஒன்று இருந்தது. அதன் கரையிலே சந்தியா மடம் இருந்தது. அந்தத் தடாகம் அதோ தீர்த்தம் என்று சொல்லப்பட்டது. அந்தக் குளத்தைச் சுற்றிலும் நன்மணம் வீசும் இனமலர்கள் பூக்கும் பாதிரி, வேங்கை, வஞ்சி, குரா, மரா, முருக்கு, மருது முதலிய மரங்கள் வளர்ந்திருந்தன.

ரிஷிகள் அந்தத் தடாகத்திலே நீராடும்பொழுது மூழ்கி எழுந்தனர். அப்போது அவர்களது புறத்திலே சாய்ந்து கிடந்த சடைக் கற்றையிலே மீன்கள் பாய்ந்து புரண்டன. நாரை அம் மீன்களைப் பார்த்தது. ஆனால், 'இந்தத் தவமுனிவோரின் உடம்பைத் தீண்டுவதற்கு இந்த மீன்கள் என்ன தவம் செய்தனவோ! நான் இவற்றைத் தின்னக் கூடாது!' என்று எண்ணி இரையை வெறுத்திருந்தது.

நீராடிக் கரையேறிய முனிவர்கள் எல்லாரும் தங்கள் நித்திய கர்மாவை முடித்துவிட்டுச் சந்தியா மடத்திலே அமர்ந்து சோமசுந்தரப் பெருமானின் மதுரைப் புராணத்தை ஓதி வந்தனர். அப்போது சொக்கலிங்க மூர்த்தியின் சிறப்பையும், மதுரையின் பெருமையையும், பொற்றாமரைக் குளத் தீர்த்தத்தின் மகிமையையும், பெருமானின் திருவிளையாடல்களையும், அம் மூர்த்தி, ஸ்தலம், தீர்த்தங்களை அடைந்தவருக்குச் சோமசுந்தரப் பெருமான் எழுந்தருளி வந்து அருள்புரிவர் என்னும் பாங்கினையும் எடுத்துச் சொல்லிக் கொண்டிருந்தனர்.

இந்தப் புனிதமான விஷயங்களையெல்லாம் நாரையும் நன்றாகக் கேட்டுக் கொண்டது. உடனே நாரைக்கு அறியாமை நீங்கியது; வினைத் தொடர்பு அறுந்தது;

மெய்யுணர்வு தோன்றியது. சிவபக்தி இழுத்துச் செல்லப் பறவை மதுரையம்பதி சேர்ந்தது. பொற்றாமரைக் குளத்திலே நீராடியது; சோமசுந்தரப் பெருமானை வணங்கி விமானப் பிரதட்சிணம் செய்தது. பெருமான் தனது அருள் திருக் கண்ணால் நோக்கினார். நாரையும் கருணாமூர்த்தியின் திவ்ய ரூபத்தைத் தியானம் செய்தது.

நாரை இவ்வாறாகப் பதினைந்து நாட்கள் நியமம் தவறாமல் வழிபாடு செய்து வந்தது. பதினாறாவது நாள் பொற்றாமரைத் தீர்த்தத்திலே நீராடச் சென்றபோது அதிலே துள்ளிய மீன்களை இரை கொள்ள நினைத்தது. உடனே பெருமான் அருளால் அறிவு பெற்றது.

''அந்தோ! இத் திருக்குளத்தில் வாழும் மீன்களைத் தின்னும் எண்ணம் எனக்கு உண்டாயிற்றே! என்ன பரிதாபம்! இப்படி யிருந்தால் என்னுடைய பிறவித் துன்பம் எப்போது ஒழியும்?'' என்று கருதி மிகவும் வருத்தப்பட்டது.

இவ்வாறு நினைத்த நாரை மீன்களை உண்ணாது அங்கேயே இருந்துவிட்டது.

அதனது கடுமையான விரதத்தைக் கண்டு மகிழ்ந்த சோமசுந்தரப் பெருமான், நாரை எவ்வாறு தன்னை அதன் மனதில் தியானித்ததோ, அதே உருவத்தில் அதன் முன்பு தோன்றினார். ''எனது அன்புக்குகந்த பறவையே! வேண்டும் வரம் யாது? சொல்வாய்,'' என்று திருவாய் மலர்ந்தருளினார்.

செங்கால் நாரையும் பெருமான் திருமுன்பு விழுந்து வணங்கி, ''அண்ணலே! இந்தப் பிறவியைப் போக்கி அடியேனையும் சிவலோகத்திலே சேர்த்துக் கொண்டருள வேண்டும். மற்றுமொரு விண்ணப்பம். எனது இனத்தைச்

சேர்ந்த பறவைகளும் வேறு பறவைகளும் இந்தத் தீர்த்தத்திலே மீன்களை இரையெடுத்தால் அவற்றுக்குப் பெரும் பாவம் வந்து சேரும். ஆதலால், இத்திருக்குள நீரில் எப்போதும் மீன்கள் இல்லாதபடி அருள வேண்டும்!'' என்று வேண்டிக் கொண்டது. சொக்கநாதப் பெருமானும் அவ்வாறே வரம் வழங்கி மறைந்தருளினார்.

நாரையும் நான்கு புறங்களும் மூன்று கண்களும் கொண்ட சிவரூபம் பெற்று, தேவர்கள் மலர் மாரி பொழிய, விமானத்தில் ஏறியது. தேவ துந்துபிகள் முழக்கம் செய்யச் சிவலோகத்தை அடைந்து, நந்தி கணங்களுள் ஒன்றாகத் திகழ்ந்தது.

பொற்றாமரைத் திருக்குளம் அன்றிலிருந்து மீன்கள் ஒழியப் பெற்று விளங்கியது.

சுகுண பாண்டியன் தனது பாண்டித் திருநாட்டிலே தருமமெனும் பயிரை நன்கு வளர்த்து அதன் பயனை அனுபவிக்கும் பொருட்டுச் சுவர்க்க லோகம் சேர்ந்தான்.

கூடற் காண்டம் முற்றிற்று

49. திரு ஆலவாய் ஆனது

சுகுண பாண்டியனுக்குப் பின்பு, சித்திரவிரதன் முதலாகத் தொடங்கி, அதுலகீர்த்தி என்பவன் முடிய, இருபத்திரண்டு பாண்டிய இராஜ குமாரர்கள் வழிவழியாகத் தோன்றி, உலகைச் செவ்வனே ஆண்டனர்.

அதுல கீர்த்தி என்ற பாண்டிய மன்னனுக்குப் பின், அவனது மைந்தனாகிய கீர்த்திபூஷண பாண்டியன் அரசு புரிந்து வந்தான். அவனது ஆட்சிக் காலத்திலேதான் பிரளய காலம் வந்தது. கருங்கடல்கள் ஏழும் பொங்கி யெழுந்தன. உலகம் அழிந்தது. ஏழு தீவுகளும் அழிந்து விட்டன. அவற்றிலே வாழ்ந்த பொருள்கள் அனைத்தும் அழிந்தொழிந்தன.

உலகம் முழுவதுமே அழிவுற்ற போதிலும், மீனாக்ஷி யம்மையின் திருக்கோவிலும், விமானமும், பொற்றாமரைத் திருக்குளமும், ரிஷப மலையும், யானை மலையும், நாகமலையும், பசுமலையும், பன்றி மலையும் அழியாதிருந்தன.

பிரளய நீர் வற்றி விட்டது. சிவபெருமான் முன்னைப் போலவே உலகத்தையும் தேவர்களையும் மக்களையும் பறவைகளையும் மிருகங்களையும் சிருஷ்டி செய்தார். சந்திர, சூரிய, அக்னி என்னும் குலத்திலே முன்னைப் போலவே பாண்டிய சோழ சேரத் தமிழக வேந்தரையும் படைத்து அருளினார்.

சந்திர குலமாகிய பாண்டிய மரபிலே வங்கிய சேகரன் என்ற மன்னன் தோன்றினான். அவன் சோமசுந்தரப்



பெருமானது திருக்கோவிலைச் சுற்றிலுமாக அழகான சிறிய ஊர் ஒன்றைக் கண்டு ராஜ்ய பாரம் புரிந்து வந்தான். சேகரன் மனுதர்ம சாஸ்திர நெறி நின்று நல்லாட்சி புரிந்து வந்தபடியால் கலிப் பகை யொழிந்தது. நாடு பல வளம் சுரந்தது. மக்கள் இனம் பெருகியது. மனிதர்கள் எண்ணிக்கை அதிகமானதாலே வசிப்பதற்கு இடம் போதவில்லை.

அதனைக் கண்ட வங்கிய சேகர பாண்டியன் திருக் கோவிலை யடைந்து, சோமசுந்தரப் பெருமானை வணங்கி, ''எம்பெருமானே! தேவரீரது அருள் வலிமையினால் எளியேன் ராஜ்ய பாரம் புரிந்து வருகிறேன். அடியேனுக்கு ஒரு குறை ஏற்பட்டுள்ளது. என்னுடைய குடிமக்கள் அனைவரும் இருப்பதற்குத் தகுந்த பெரிய நகரம் ஒன்றினை அமைக்க வேண்டும். இந்த நகரத்திற்கு ஆதியிலே ஏற்பட்ட எல்லையைத் தெரிந்து கொள்ள முடியவில்லை. ஆதலால் எளியேன் அதனைத் தெரிந்து கொள்ளும் வண்ணம் அருள் புரிய வேண்டும்,'' என்று வேண்டினான்.

உடனே சோமசுந்தரப் பெருமான் பாண்டியனது அன்புக்கு எளியவராகி, அறமும் அருளும் சேர்ந்த இன்னுருவமான சித்த மூர்த்தியாகி எழுந்தருளினார். சித்தர் பெருமான் பாம்பலங்காரப் பெருமானாக விளங்கினார். அவருடைய அரைஞாண், பூ நூல், வெற்றிமாலை, பாதகிங்கிணி, கங்கணம் எல்லாம் பாம்புகளாகவே யிருந்தன.

அந்தத் திருக்கோலம் பூண்டு மகாமண்டபத்தின் அருகே நின்றார். தனது திருக்கரத்திலே கங்கணமாகத் துலங்கிய பாம்பைப் பார்த்து, ''ஏ, நாகமே! பாண்டியனுக்கு இந்த நகர எல்லையைக் காட்டுவாயாக!'' என்று பணித் தருளினார்.

நாகப் பாம்பு, சித்தர் பெருமானது அடிபணிந்து, ''இறைவரே! இந்த நகரம் அடியேனது பெயரால் விளங்கும்படி அருள் புரிய வேண்டும்,'' என்று பிரார்த்தித்துக் கொண்டது. பெருங் கருணைத் தடங்கடலாக விளங்கும் பிரான், ''அவ்வாறே ஆகுக!'' என்று மொழிந்தருளினார்.

பெருமானது கங்கணப் பாம்பு உடனே இறங்கிச் சென்றது. நீண்ட உருவம் எடுத்துக் கொண்டது. கிழக்குத் திசைக்குச் சென்று தனது வாலை நகருக்கு வலமாக நிலத்திலே படிய வைத்து வளைத்துக் கொண்டு வந்தது. முடிவில் தனது வாலைத் தனது வாயிலே கவ்விக் கொண்டு பெரிய வளையமிட்டுப் பாண்டிய மன்னனுக்கு மதுரைமா நகரத்தின் பழைய எல்லையினைக் காட்டிக் கொடுத்தது. பின்னர்த் திரும்பிச் சென்று சித்த மூர்த்திகளின் திருக்கரத்திலே கங்கணமாகி விட்டது. சித்த மூர்த்தியும் மறைந்தருளினார்.

அதன் பின்னர் வங்கியசேகர பாண்டியன், பாம்பு வளைந்து சென்று வரம்பு காட்டியபடியே, சுவர் எடுத்தான். சக்கரவாளகிரி என்ற நெடும் பெருமதில் கட்டுவித்தான். தெற்கு வாசலுக்குத் திருப்பரங்குன்றம், வடக்கு வாசலுக்கு ரிஷப மலை, மேற்கு வாசலுக்குத் திருவேடகம், கிழக்கு வாசலுக்குத் திருப்பூவனம் எல்லையென அமைத்தான் பாண்டியன்.

பாண்டியன் எழுப்பிய புதுப் பெருமதில் ஆலவாய் மதில் என்று அழைக்கப்பட்டது. அந்தப் புதுநகரம் ஆலவாய் என்னும் பெயர் கொண்டு நிலைப்பதாயிற்று.

வங்கிய சேகர பாண்டியன் ஆலவாய்ப் புதூரை முன்போல ஒழுங்கு செய்தான். கொடிகள் இலங்கிய நீண்ட திருமதிலும், திருமண்டபமும், திருக்கோபுரமும், திருவீதியும், பொழில்

களும் மற்றும் பலவும் பாங்குற அமைத்தான். சோமசுந்தரப் பெருமானுக்கு நவமான இரத்தினக் கவசமும், இரத்தின மகுடமும், பல்வேறு வகையான இரத்தினாபரணங்களும் செய்து கொடுத்தான்.

அந்த ஆலவாய்த் திருநகரத்திலே குடியேறிய மக்கள் எல்லாரும் மிகவும் சுகமாக வாழ்க்கை நடத்தினர். நகரத்திலே வளம் கொழித்தது.


வங்கிய சேகர பாண்டியன் மிகுந்த புகழ் பெற்று நல்லரசு செய்து கொண்டிருந்தான்.

50. சுந்தரப் பேரம்பு எய்தது

வங்கிய சேகர பாண்டியனது செங்கோல் ஆட்சியினாலே நாட்டிலே நிலமகளும், திருமகளும், கலைமகளும் மங்கலமான வாழ்வு பெற்று விளங்கினர்.

அதே நாட்களில் சோழ நாட்டை விக்கிரம சோழன் என்பவன் ஆண்டு வந்தான். அவன் வாகை மாலை சூடிய வெற்றிப் பெருவீரன். வங்கிய சேகரனோடு சமர் புரிய எண்ணிப் பெரிய படையுடன் கிளம்பினான். வடதிசை வேந்தர் பலரும் அவனுக்குத் துணை தந்தனர். பலவகைக் கருவிகள் இடி முழக்கம் செய்யத் தனது காவிரிப் பதியிலிருந்து புறப்பட்டுப் பாண்டிய நாட்டை வந்தடைந்தான்.

சோழ நாட்டுப் படைகள் பாண்டி நாட்டுக்குள் புகுந்ததும், பசுக் கூட்டங்களைக் கவர்ந்தும், மலர் வாவிகளைப் பாழாக்கியும், ஏரிகளை உடைத்தும், வழிப்பறிக் கொள்ளை செய்தும், போர் புரிவதற்கான வகைகளைக் கையாண்டனர்.



வங்கியன் அதனை அறிந்தான். ''நான் என்ன செய்ய முடியும்? சோழர் படையோ சமுத்திரம் போலப் பெருகி யுள்ளது. அதை எதிர்த்து எவ்வாறு சண்டை செய்யக் கூடும்? சோமசுந்தரப் பெருமானை அண்டிக் குறையிரப்பதைத் தவிர வேறு வழியில்லை!'' என்று எண்ணியவனாகித் திருக் கோவில் அடைந்தான்.

சிவபெருமானை வணங்கி, ''வேண்டியதருளும் பெருமானே! விக்கிரம சோழன் எளியேனோடு சமர் செய்யும் பொருட்டுத் தனது பெருஞ்சேனையோடும், பிறநாட்டு வேந்தர்களோடும் வந்து தங்கியுள்ளான். எதிர்த்துப் போராட எளியேனிடத்திலே போதிய அளவு பெருத்த சைனியம் இல்லை. எனக்கு வேறு கதியில்லை. எம்பெருமானே! அடியேனைக் காத்து அருள் புரிவது தேவரீர் கடமை!'' என்று விண்ணப்பம் செய்தான்.

அது சமயம் சோமசுந்தரப் பெருமான் ஆகாசவாணியாக, ''பாண்டிய! நீ சென்று சோழனோடு போர் செய். நாமும் அங்கே வருவோம். உனக்குத் துணையாகி நின்று வெற்றி பெறும்படி செய்வோம்!'' என்று மொழிந்தருளினார்.

அம்மொழிகளைக் கேட்டான் பாண்டியன்; அளவிலாத மகிழ்ச்சியடைந்தான். சிவபெருமானைப் பணிந்து ஏத்திய வண்ணம் திருக்கோவிலை விட்டு வெளியே வந்தான். அந்தச் சமயம் ஓர் ஒற்றன் ஓடோடியும் வந்து, ''விக்கிரம சோழனது சேனை ரிஷப மலைக்குப் பக்கத்திலே வந்து விட்டது,'' என்று சொன்னான்.

வங்கிய சேகர பாண்டியனும் பல கருவிகள் முழங்கத் தனது சதுரங்க சேனைகள் புடைசூழப் போர் செய்யச் சென்றான். சோழனது பெருஞ்சேனை ஆலவாய் மதிலுக்கு

வெளியே வளைத்துக் கொண்டு நின்றது. வஞ்சி மாலை சூடிய பாண்டிய சேனா வீரர்கள் ஆர்ப்பரித்து நெருங்கினர். இரண்டு பக்கத்துப் படை வீரர்களும் வஞ்சினம் கூறிக் கடும்போர் விளைக்கலாயினர்.

தேருக்குத் தேர், யானைக்கு யானை, குதிரைக்குக் குதிரை, வீரருக்கு வீரர், வாளுக்கு வாள், வேலுக்கு வேல் என்று எதிர் எதிர் நின்று தாக்கி வெம்போர் புரிந்தனர். பாண்டியன் தனது தேரில் ஏறிக் கொண்டு சென்று சோழனை எதிர்த்தான். பல வகையான பேரொலிகளும் பெருங்கூச்சல்களும் எழுந்தன.

இப்படியாக இரு பக்கத்துப் படைகளும் பின்னடை யாமல் சண்டை செய்து கொண்டிருந்தன.

அந்த நேரத்திலே சோழன் வடவர் படையோடு கடுமையுடன் எதிர்த்து வந்தான். அது கண்டு ஆற்ற மாட்டாத பாண்டிய சேனை மருண்டு ஓடிச் சிதைந்தது. எல்லா வற்றையும் அப்படி அப்படியே போட்டு விட்டுச் சென்றனர் வீரர்கள். அதைப் பார்த்துச் சோழன் பாண்டியன் தோற்று விட்டதாகவே எண்ணினான். கருவம் மிகுந்ததால் தனது வெற்றிச் சங்கை எடுத்து ஊதி முழக்கம் செய்தான்.

சோமசுந்தரப் பெருமான் அப்போதுதான் பாண்டியனுக்கு அருள் புரியத் திருவுள்ளம் கொண்டார். முன்பொருக்கால் தண்ணீர்ப் பந்தல் வைத்தும், சோழனை மடுவில் வீழ்த்தியும் பாண்டியனுக்கு அருள்பாலித்த பெருந்தகையான சிவபெருமான் வேட மன்னராக உருவம் ஏற்று வந்து பாண்டியன் படைக்குத் தலைவராக ஆனார்.

சிவவேடப் பெருமான் தமது வில்லை வளைத்துக் கூரிய அம்புகளைச் சோழ சேனையர் மேல் விடுத்தார். அந்த

அம்புகளிலெல்லாம் 'சுந்தரேச' என்ற அருமைத் திருப்பெயர் பொறிக்கப்பட்டிருந்தது. வெற்றிச் சங்கு ஊதிய சோழனது சேனா வீரர்களில் பதினாயிரம் பேர்களது உயிர்களைச் சுந்தரப் பேரம்பு ஒவ்வொன்றும் குடித்தது.

சோழன் அது கண்டு பெருந்திகைப்புக் கொண்டான். ''ஓர் அம்புக்கு இவ்வளவு ஆற்றல் ஏது?'' என்று சந்தேகப்பட்டு ஆச்சரியமடைந்தான். அக் கணைகளுள் ஒன்றைக் கொணரச் சொல்லிப் பார்த்தான், அதிலே 'சுந்தரேச' என்று தீட்டியிருப்பதைக் கண்டான். ''ஆகா! இது பாண்டிய மன்னனுக்கு ஆலவாய் அண்ணல் துணை தரும் செயல்!'' என்று எண்ணினான், பயமடைந்து தனது சேனைகளுடன் திரும்பச் செல்வதானான்.

திரும்பிச் செல்லும் சோழ வேந்தனைப் பார்த்து வடநாட்டு வேந்தர் வியந்தனர். சோழனைத் தடுத்து நிறுத்தினர். அவனைக் கோபித்துத் திட்டி, 'நீ தோற்று ஓடலாமா? உனது வீரம் என்ன! பெருமை என்ன!'' என்று கூறி மறித்தனர்.

மறுபடியும் சோழன் வடவர் துணை கொண்டு பாண்டியன் சேனை மீது மிகவும் கடுமையுடன் தாக்கினான். பல அம்புகளைத் தொடுத்தனர் சோழ வீரரும் பிறரும்.

வேடச் சிவனார் அது கண்டார். தனது பெருவில்லை வளைத்து ஓர் அம்பினை விடுத்தார். சோழ வீரரும் வேறு வீரரும் விடுத்த கணைகளை யெல்லாம் அது கண்டித்தது. பின்னர்ப் பத்துப் பத்துக் கணைகளாக எய்து ஆயிரம் ஆயிரந் தேர்களையும், யானைகளையும், குதிரைகளையும் வீரர்களையும் வீழ்த்தினார்.

அதன் பின்னர் நூறு நூறு அம்புகளை விடுத்துப் பதினாயிரம் பதினாயிரம் தேர்களையும், யானைகளையும் வீரர்களையும் அழித்தார்.

அதற்கும் பின்னர் ஆயிரமாயிரம் கணைகள் தொடுத்து இலட்சோப லட்சமாக எல்லாவற்றையும் அழித்தார்.

போர்க்களம் எங்கும் பிணக்குவியல். இரத்த வெள்ளம் ஆறாகிப் பெருகி ஓடியது. கழுகுகள், காக்கைகள், நரிகள் எல்லாம் பெரு விருந்து கொண்டாடின. கூளிப் பேய்கள் களிநடம் புரிந்தன.

சோழ வேந்தனுக்குத் துணையாகச் சார்ந்து நின்ற அயல் நாட்டு அரசர் எல்லாரும் சுந்தரப் பேரம்பு பட்டு மடிந்தனர். இதனை யெல்லாம் கண்டு மயங்கிய சோழன் எஞ்சிய வீரர்களுடன் இகழ்ச்சியும் அச்சமும் தன்னைச் சூழ்ந்து வர ஓட்டம் பிடித்தான்.

வங்கிய சேகர பாண்டியனது வெற்றி முகம் கண்ட சிவவேடப் பெருமான் அருள் நகை சிறிதே புரிந்து மறைந்தருளினார்.

பின்னர்ப் பாண்டியன் வெற்றிச் சங்கை முழக்கினான். தனது பட்டத்து யானை மீதமர்ந்து ஆலவாய்ப் பதியை அடைந்தான். அங்கே மங்கல மடந்தையர் அஷ்டமங்கலங் கள் ஏந்தி எதிர்கொளப் பெருமிதத்தோடு அரண்மனை புகுந்தான்.

சோமசுந்தரப் பெருமானுக்கு நிலையான பூசைப் பொருள்களைக் கொடுத்தான். நவரத்தினங்கள் பதிக்கப் பட்ட ஆபரணங்களையும் ஒளி தெறிக்கும் மாணிக்கம்

இழைத்த பொன்னாலான வில்லையும், சுந்தரப் பேர் எழுதிய அம்பையும் செய்து சாத்தினான் பாண்டியன்.

அறநெறி வழுவாமல் நீதியுடன் செங்கோல் செலுத்தி வாழ்ந்து வந்தான் வங்கியசேகர பாண்டியன்.

51. சங்கப் பலகை தந்தது

ஆலவாயில் வங்கிய சேகர பாண்டியன் ஆட்சி புரிந்து வருகின்ற நாளிலே காசி க்ஷேத்திரத்திலே பிரம்மா பத்து அசுவமேத யாகங்களை வேத முறைப்படி புரிந்தார். மறுநாள் நீராடுவதற்காக, கங்கா நதியை நோக்கித் தமது மூன்று மனைவிகளான சரஸ்வதி, சாவித்திரி, காயத்திரியுடன் சென்றார். அப்படிச் செல்லும் வழியிலே, வான வீதியிலே வித்தியாதர மாதொருத்தி கானம் பாடுவதைக் கேட்டு அதிலே மனதைச் செலுத்தியதாலே, சற்றே தயங்கி நின்றாள், சரசுவதி. அதற்குள்ளாகக் கங்கைக் கரையை அடைந்து விட்டார், பிரம்ம தேவர். வாணி வரக் காலம் தாழ்ந்ததாலே தமது இரு மனைவிகளோடு நீராடிக் கரையேறினார்.

''என்னை விட்டு விட்டு நீராடியது எப்படி?'' என்று வினவிக் கொண்டே வந்தாள் கோபமடைந்த சரசுவதி தேவி.

''குற்றம் உன் மேல் உள்ளபோது எம்மை எதற்காகக் கோபிக்கிறாய்? வீணாக என்னைக் கோபித்த குற்றத்தாலே நீ எண்ணற்ற மனிதப் பிறவி எடுத்துக் குற்றம் நீங்குவாய்!'' என்று சாபமிட்டார் பிரம்மா.

சாபம் பெற்ற சரசுவதி பெரிதும் பயந்தாள். ''மனிதப் பிறப்பின் துன்பங்களுக்கு ஆளாகாத தேவரீரது மனைவியான



எனக்கு எண்ணற்ற பிறவியா வேண்டும்?'' என்று பணிவோடு வினவினாள்.

சினம் தணிந்த பிரம்ம தேவரும் சிந்தித்தார். ''வாணி! உன்னுடைய வடிவமாகிய முதலெழுத்து ஐம்பத்து ஒன்றினுள்ளே விளங்குகிற ஆகாரம் முதலாக ஹாகாரம் ஈறாக நாற்பத்தெட்டு எழுத்துக்களும் நாற்பத்தெட்டுப் புலவர்களாகிப் பல்வேறு வருணங்களிலே தோன்றக் கடவனவாக. அவ்வெழுத்துக்குள் எல்லாவற்றிலும் உயர்ந்து நின்று உயிர் தரும் தனி முதலான அகரத்திற்குத் தலைமையான கடவுள் சோமசுந்தரப் பெருமானேயாவார்! ஆதலால் அவரும் ஒரு புலவராகிப் புலவர் கூட்டத்தை நாற்பத்தொன்பதாக ஆக்கி விடுவார். அந்தப் புலவர்களது உள்ளத்திலே புகுந்து கொண்டு அறிவைத் தோற்றுவித்து அருள்வார்!'' என்று கூறினார்.

நான்முகனாரின் ஆணையின் வண்ணம் அகார முதலிட்ட நாற்பத்தெட்டெழுத்துக்களும் வெவ்வேறு இனத்திலே மக்களாகப் பிறந்தன. பிறந்த அக்ஷரக் குழந்தைகள் வயதிலே வளர்ந்தன. வயது ஏற ஏற அறிவும் புலமையும் பெருகின.

பல கலைகளின் வகைகளை அவர்கள் தெரிந்து கொண்டார்கள். சமஸ்கிருத பாஷையையும், மற்றும் பதினெட்டுப் பாஷைகளையும் ஆராய்ந்து அறிந்தனர். தமிழ் மொழியிலே தலைமைப் புலமையைப் பெற்றனர். பொன்மாலை இரத்தின மாலைகள் தவிர்த்து உருத்திராட்ச மாலை தரித்தனர். வெள்ளிய திருநீறு அணிந்தனர். சிவபூஜை செய்யும்போது பாமாலையும் பூமாலையும் சூட்டி மகிழ்ந்தனர்.

பெருந் தகுதியும், தகைமையும், தன்மையும் ஒருங்கே பெற்றுத் துலங்கிய புலவர் நாற்பத்தெட்டுப் பேர்களும் நாடு முழுவதும் சுற்றி வந்தனர். தங்கள் புலமையின் வலிமையால் அங்கங்கே இருந்தவர்களை வென்றனர். பின்னர்த் தண் பொருநையாற்றால் வளம் கொழிக்கும் பாண்டி நன்னாட்டிற்கு வந்து சேர்ந்தனர். பாண்டிய ராஜதானியாகிய ஆலவாயம்பதியை நோக்கி வந்து கொண்டிருந்தனர்.

அச் சமயம் கலாந்தமும் ஞானமூர்த்தியும் ஆலவாயப் பனுமாகிய சோமசுந்தரப் பெருமான் தமது இச்சா சக்தியால் ஒரு புலவர் வேடம் கொண்டருளினார். நாற்பத்தெட்டுப் புலவர்களின் முன்னே சென்று, ''நீங்கள் யார்? எங்கிருந்து வருகிறீர்கள்?'' என்று கேட்டருளினார்.

''நாங்கள் புலவர்கள். தன்னை வந்தடைந்தவரது பாபம் போக்கும் தண்பொருநைப் பாண்டிப் பகுதியிலிருந்து வருகிறோம்,'' என்றார்கள் புலவர்கள்.

அதுகேட்ட புலவர் பெருமான், ''இனிய தமிழ் மொழி பயிலும் ஆலவாய்ப் பதியிலுறையும் சோமசுந்தரப் பெருமானைக் கண்டு வணங்க வேண்டும். இப்பொழுதே வருவீர்களாக!'' என்று பணித்தருளினார்.

புலவர்கள் அனைவரும் சோமசுந்தரக் கடவுளை நேரிலே தரிசித்தவர் போல மட்டற்ற மகிழ்ச்சி கொண்டனர். கடவுட் புலவரும் அவர்களை யெல்லாம் ஆலவாயம்பதிக்கு அழைத்துச் சென்றார். திருக்கோவிலடைந்து பெருமானை வழிபடச் செய்து, தான் மறைந்தருளினார். புலவர்கள் அனைவரும் வியப்பெய்தி, ''இது சிவபெருமானின் அருட்செயலே!'' என்று தெளிவடைந்து, சோமசுந்தரப் பெருமானை வகை வகையான செய்யுட்களாலே தோத்திரம் செய்து வணங்கினர்.

பின்னர் வங்கியசேகர பாண்டியனது சபையை அடைந்து அவனைக் கண்டனர். தன்னிடம் வந்த நாற்பத்தெட்டுப் புலவர்களையும் கண்ட வழுதியும் அவர்களது அற வொழுக்கத்தையும் கல்வியின் மேம்பாட்டையும் புலமை யின் உயர்வையும் ஓர்ந்து, ''இவர்களே ஆன்றவிந்தடங்கிய கொள்கைச் சான்றோர்; அன்பு, நாண், ஒப்புரவு, கண்ணோட்டம், வாய்மை என்பன பொருந்திய ஆன்றோர்!'' என்று தெரிந்தான். அவர்கள் அனைவரையும் ஏற்று உபசரித்து வரிசைகள் பல வழங்கினான். சோமசுந்தரப் பெருமானின் திருக்கோவிலுக்கு வடமேற்கே சங்க மண்டபம் என ஒன்று நிறுவி, அதிலே புலவர்களை இருக்கச் செய்தான்.

புதுப் புலவர்கள் பெற்ற சிறப்புகளைக் கண்டு பழைய புலவர்கள் மனம் புழுங்கினர். சங்கப் புலவர்களோடு வாதமிட்டுத் தங்கள் ஆற்றலும் செருக்கும் கெட அவமான மடைந்து சென்றனர். அயல் நாட்டிலிருந்து வந்த புலவர் பலரும் வாதமிட்டுத் தோற்றுப் போயினர்; சங்கப் புலவர்கள் வெற்றி பெற்று விளங்கினர்.

சங்கப் புலவர்கள் அனைவரும் சேர்ந்து ஒரு நாள் திருக்கோயில் சென்று சோமசுந்தரப் பெருமானை முறைப்படி துதித்து வணங்கினர். ''எம்பெருமானே! பலர் தொடர்ந்தாற் போல வந்து வந்து எங்களோடு வாதம் புரிகின்றனர். ஆதலால், அவர்களது புலமையைச் சீர்தூக்கி அளக்கும் கருவியாகச் சங்கப் பலகை யொன்று எங்களுக்குத் தந்தருள வேண்டும்,'' என்று விண்ணப்பம் செய்தனர்.

தாமே வலிய வந்து பாணபத்திரனுக்குப் பொற்பலகை ஈந்த பெருவள்ளலான சிவபெருமான் புலவர்கள் வலிய வந்து வேண்டும்போது அருளாமல் இருப்பாரா? ஆதலால் பெருமானே புலவர் உருவம் கொண்டு, ஒரு பலகையையும் கைக்கொண்டு எழுந்தருளினார்.

''புலவர்களே! இந்தப் பலகை இரண்டு சாண் சதுர அளவுள்ளது; சந்திரனைக் காட்டிலும் வெண்மையானது; அறிவைக் காட்டிலும் தூய்மையானது; மந்திர சக்தி கொண்டது. உம்மைப் போன்ற அறிவிலே சிறந்தவர்கள் வந்தால், ஒவ்வொரு முழமாக வளர்ந்து இடம் தரும் ஆற்றல் உடையது; இப்பலகை உங்களுக்குப் பிறர் திறமை அளக்கும் கருவியாக அமையும்,'' என்று இயம்பி, அருமைப் பலகை தந்தருளினார்.

இறைவன் அருளிய அப்பலகையைப் பரிவுடன் பெற்றுக் கொண்ட சங்கப் புலவர்கள் திருக்கோவிலைப் பிரதட்சிணம் செய்து கொண்டு, தமது மண்டபம் சேர்ந்தனர். திருப் பலகையைப் பாங்கான இடத்திலே அமைத்துப் பூமாலை சூட்டினர். பன்னீர் தெளித்துச் சந்தனம் குங்குமம் சாத்தினர். தூப தீபம் காட்டிப் பூசனை செய்து வணங்கினார்கள்.

பின்னர்ச் சங்கப் பலகையின் மேல் முதல் முதலாக நக்கீரன் ஏறினார். அடுத்துக் கபிலனும் பாணனும் ஏறினர். ஏனைய புலவர்களும் ஒருவர் பின் ஒருவராகச் சங்கப் பலகை ஏறி ஒன்றாக அமர்ந்தனர். சோமசுந்தரப் பெருமான் அருளிய சிறு பலகையொன்றே ஒவ்வொரு புலவருக்கும் ஒவ்வொரு முழமாகப் பெருகி வளர்ந்து எல்லாருக்கும் இடம் அளித்தது.

தெய்வப் பலகை பெற்ற சங்கப் புலவர்கள் பெருமை யிலே சிறந்து விளங்கினர். நாற்பத்தெட்டுப் புலவர்களும் தமது சிறந்த புலமையினாலே கணக்கில் அடங்காத தூய தமிழ்ப் பாடல்களை இயற்றித் தத்தம் போக்குப்படி இனிதே இருந்தனர். சொல்வளம், பொருளழகு கொண்ட அந்தப் பாடல்கள் எல்லாம் ஏறக் குறையக் குறித்துக் காட்டிய பொருள்களிலே ஒற்றுமை உடையனவாகியிருந்தன. அதன்

காரணமாக எந்தப் பாடலை யார் பாடியது என்று தெளிய வகையில்லாமல் இருந்தது. புலவர்கள் தமக்குள் ஆச்சரியமடைந்து, "இது என் பாடல், அது உமது பாடல்!" என்று மாறுபாடு கொண்டு மயங்கினர்.

அது சமயம் சோமசுந்தரப் பெருமான் புலவர் வடிவம் கொண்டு அவர்கள் முன்பு தோன்றினார். அந்த அருட் பெரும் தெய்வப் புலவரைச் சங்கப் புலவர்கள் வரவேற்றார்கள்.

புலவர் பெருமான் அவர்களைப் பார்த்து, "புலவீர்! மயக்கம் தரும் உங்களது செய்யுட்களைக் கொண்டு வருவீர்களாக!" என்று அருளிச் சொன்னார்.

புலவர்களும் தம்மை மயக்கிய பாக்களைக் கொணர்ந்து தேவப் புலவர் திருமுன் வைத்து நின்றனர். அப்புலவரும் ஒவ்வொரு பாடலாகப் படித்துப் பார்த்து ஆராய்ந்து, "இது உம்முடையது! இது உம்முடையது!" என்று சொல்லி, அவரவர்கள் ஏற்று மகிழ்ந்து கொள்ளும் வண்ணம் ஈந்தருளினார்.

தங்கள் தங்கட்குரிய பாடல்களைப் பெற்ற புலவர் நாற்பத்தெட்டுப் பேர்களும் புலவர் பெருமானின் தன்மையைக் கண்டு வியந்து களிகூர்ந்து போற்றினர். "புலவர் பெருந்தகையே! தாங்களும் எங்களோடு ஒரு புலவராய் இருந்தருள்க!" என்று வேண்டினர். சங்கப் பலகையில் அவரையும் அமர்த்தினர். தெய்வப் புலவரும் தலைமை ஏற்று நடுநாயகமாக வீற்றிருந்து அருளினார்.

சங்கமிருந்த தமிழனாகிய சிவபெருமானைத் தலைவராகக் கொண்ட புலவர்கள் செவ்விய மதுரம் சேர்த்த ஒண்தீந்தமிழ்ப் பாடல்கள் பல செய்து அருமை நூல்கள் பல சேர்த்தனர்.

பல நாட்கள் கழிந்தன. வங்கிய சேகர பாண்டியன் வயதிலும், அழகிலும், வீரத்திலும், அறிவிலும், ஆற்றலிலும் நன்கு விளங்கிய தனது மைந்தன் வங்கியசூடாமணிக்குக் குடை, முடி, கோல் தந்து சிவலோகம் புகுந்தான்.


52. தருமிக்குப் பொற்கிழி அருளியது

வேந்தர் வேந்தனாகிய பாண்டியன் வங்கிய சூடாமணி சோமசுந்தரப் பெருமானுக்குச் சூட்டப் பல்வகை மலர்கள் தரும் திருநந்தவனம் அமைக்கும் திருப்பணியை மேற்கொண்டான். காலை நடுப்பகல் மாலை என மூன்று காலங்களிலும் பயன்படுமாறு மலர்களைத் தந்துதவியது நந்தவனம். பாண்டியன் மேற்கொண்டு தனியாக ஒரு சண்பக நந்தவனத்தையும் அமைத்தான்.

தான் அமைத்த சண்பக நந்தவனம் அழகு பெற்று, நறுமணத்துடன் வளமுற்று வருவதைக் கண்டான், வங்கிய சூடாமணிப் பாண்டியன். இறைவன் திருவருளை எண்ணி எண்ணி மகிழ்ந்தான். சண்பக நன்மலர்களைக் கொய்து ஆய்ந்து இண்டை, தொடை, தொங்கல், தாமம், கண்ணி எனப் பலவகை மாலைகளைத் தொடுத்துச் சோமசுந்தரப் பெருமானின் திவ்ய மேனியிலே சாற்றி அணி செய்தான்.

பொன்னைப் போன்ற சண்பக மலர் மாலையணிந்த சோமசுந்தரப் பெருமானின் நற்கோலத்தைக் கண்டு ஆச்சரியமுற்றுச் ''சண்பகசுந்தரர் இவர்!'' என்று மொழிந்து வணங்கினான்.

அன்று தொட்டுத் திரு ஆலவாய் சுந்தரப் பெருமானுக்குச் 'சண்பக சுந்தரர்' என்ற திருப் பெயரும் வழங்குவதாயிற்று.



சண்பக மாலைகளைப் பெருமானுக்குச் சாற்றிய காரணத் தாலே வங்கிய சூடாமணிப் பாண்டியனும் 'சண்பக பாண்டியன்' என்ற பெயர் பெற்று விளங்கினான்.

இளவேனிற் காலம் வந்தது. வேனிற்கால வெப்பம் தாங்க முடியாததாக இருந்தது. மாமரங்கள் செந்தளிர் காட்டிச் சிவந்து நின்றன. செருந்தி, முள்முருக்கு, கடம்பு முதலான மரங்களெல்லாம் பூத்துக் குலுங்கின. குங்கும மலர்கள் மகரந்தம் சிந்தின.

அக்காலத்திலே வாடி இலை யுதிர்த்த மரங்களும் பல உண்டு. தென்றல் காற்று அங்கங்கே கலைகள் தேரும் அறிவனைப் போலத் தவழ்ந்து வந்தது. இத்தகைய இளவேனிற் காலத்திலே சண்பகமாறன் தனது தேவியோடும் சென்று, சண்பக வனத்திலே தங்கியிருந்தான். வெப்பம் தணிதலின் பொருட்டாகத் தனது தேவியும் தானுமாகத் தனியாயிருந்தபோது அவனுக்கு நேராகப் புதுமணம் தோன்றும்படி தென்றல் வீசியது. சண்பகமாறன் அந்தப் புது நறுமணத்தை மோந்து மகிழ்ந்தான்.

''இது திவ்யமானதொரு நவகந்தம்; சோலையிலுள்ள மணம் அல்ல; காற்றுக்கு இயற்கையாக எந்த மணமும் கிடையாது; இந்த வாசனை எதிலிருந்து எவ்வாறு வீசுகிறதோ!'' என்று வியந்தான்.

வியந்து கொண்டே தனது தேவியைத் திரும்பிப் பார்த்தான். அவளுடைய கூந்தலிலிருந்தே அப் புது மணம் வீசுகிறது என்பதைத் தேர்ந்தான். ''ஆகா! பூ வண்டுகளுக்கும் தெரியாத மணம் அல்லவா இது!'' என்று கருதி வியப்படைந்து, ''இத்தகைய வாசனை கூந்தலுக்கு இருப்பது இயற்கையாலா அல்லது செயற்கையாலா?'' என்று சந்தேகம் கொண்டான்.

பாண்டியன் அரண்மனை வந்து சேர்ந்தான்.

"நான் சந்தேகப்பட்ட கருத்தை யாராவது அறிந்து செய்யுள் செய்வார்களானால், அவருக்கே ஆயிரம் பொன் அடங்கிய இந்த முடிப்பு உரியதாகும்," என்று சொல்லிப் பொற்கிழி யொன்றை ஏவலர் கையிலே கொடுத்தான்.

அவர்கள் பொற்கிழியைக் கொண்டு போய்ச் சங்க மண்டபத்தின் முன்னால் தொங்க விட்டனர். சங்கப் புலவர்களெல்லாம் தத்தமக்குள்ளே பல்வேறு விதமாகப் பாண்டியனது உள்ளத்திலிருந்த ஐயப்பாட்டைப் பற்றி நினைத்துக் கொண்டிருந்தனர். அவர்கள் அதுபற்றி ஒன்றுகூடி ஆராய்ந்தார்கள்; தனித்தனியே ஆராய்ந்தார்கள். ஆனால் மாறனது மனத்திருந்த சந்தேகத்தைப் புரிந்து கொள்ள மாட்டாமல் மனம் உளைந்தனர்.

அந்தச் சமயத்திலே ஆதிசைவக் குலத்தில் பிறந்தவனும், மாணவனும், பெற்றோரை இழந்தவனும், பிரம்மசாரி யுமாகிய தருமி என்பவன், திருக்கோவில் சென்று சோமசுந்தரப் பெருமானைத் தரிசனம் செய்து வணங்கினான்.

"கடவுளே! அடியேன் பெற்றோர் இல்லாதவன்; கதியில்லாதவன்; விவாகம் செய்து கொள்ள விரும்புகிறேன். ஆனால் அவ்வாறு செய்து கொள்ளப் பொருள் இல்லை. எவ்வளவுதான் வேதகர்மங்களையெல்லாம் ஓதியவனாக இருந்தாலும், இல்வாழ்க்கை இல்லாது போனால், பெருமானை அருச்சிக்க உரியவன் ஆவேனோ? ஆதலால் தேவரீர்! எல்லாம் உணர்ந்து எல்லாம் வல்ல தாம் பாண்டிய மன்னனது உள்ளாழ்ந்த கருத்தை யமைத்து எளியேன் உய்க்கும்படிக்குச் செய்யுள் ஒன்று அருள வேண்டும்," என்று குறையிரந்தான்.

உடனே ஆலவாய்ச் சோமசுந்தரக் கடவுள்,

"கொங்குதேர் வாழ்க்கை யஞ்சிறைத் தும்பி
காமஞ் செப்பாது கண்டது மொழிமோ
பயிலியது கெழீஇய நட்பின் மயிலியற்
செறியெயிற் றரிவை கூந்தலி
னறியவு முளவோ நீயறியும் பூவே!"

என்ற சொன்னயம் மிகுந்த செந்தமிழ்ச் செய்யு ளொன்றைப் பாடித் தருமியின் கையிலே ஈந்தருளினார். புதையல் கண்டவன் போலப் பெருமகிழ்வெய்திய தருமியும் பாடல் பெற்றுச் சோமசுந்தரப் பெருமானை வணங்கினான்.

பின்னர் அந்தச் செய்யுளை எடுத்துக் கொண்டு கற்றுத் தேர்ந்த புலவர் இருக்கும் சங்க மண்டபத்தை அடைந்து அதனை அவர்கள் கையிலே கொடுத்தான். சங்கப் புலவர்கள் எல்லாரும் தருமி தந்த செய்யுளை விரைவாக வாங்கிப் படித்தனர். செய்யுளுடைய அமைப்பையும் போக்கையும் சொல்லழகையும், பொருளாழத்தையும் சீர்தூக்கிப் பார்த்து வியந்து பாராட்டினர். சண்பக மாறன் முன்னிலை சேர்ந்து அந்தப் பாடலைச் சொல்லிப் பொருள் விளக்கம் செய்தனர். தன்னுடைய மனக் கருத்தோடு அந்தச் செய்யுளின் கருத்தும் ஒத்திருந்ததால் பாண்டியன் மகிழ்ந்து வியந்தான். "இப் பாடல் கொணர்ந்த அந்தணன் இப்போதே இப்புலவர் களுடன் சென்று ஆயிரம் செம்பொன்னையும் பெற்றுக் கொள்வானாக!" என்று பணித்தான்.

மாறன் மகிழ்ந்து கூறியபடியே தருமியும் புலவர்களுடன் சங்க மண்டபம் சென்றான். மண்டபத்தின் முன்னே தொங்கிக் கொண்டிருந்த பொற்பையை அறுக்கத்

தொடங்கினான். உடனே, அங்கே விரைந்து வந்த நக்கீரன் அவனைத் தடுத்து நிறுத்தி, ''இந்தச் செய்யுளிலே குற்றம் உள்ளது!'' என்றான்.

தருமியோ தமிழ்ப் புலமையில்லாதவன். கைக்கெட்டியது வாய்க்கெட்டாதவனைப் போல ஏமாந்து ஏங்கி வாடினான். செய்யுள் தீட்டிய திருவோலையை எடுத்துக் கொண்டு திருக்கோவில் சென்றான். சோமசுந்தரப் பெருமான் திருமுன் அதனை வைத்து, ''ஆலவாய் அண்ணலே! குற்றமுள்ள பாடலை ஏன் தந்தீர்? வறுமையால் வாடுகின்ற நான் பெறுகின்ற பொன்னை இழந்தேன் என்று கூற வரவில்லை. இறைவா! தேவரீர் பாடியருளிய செய்யுளிலும் மனிதப் புலவர் குற்றம் காண்பது என்று வந்தால் தங்கள் மதிப்பு என்னாவது? இகழ்ச்சியானது எம்பெருமானையல்லவா சார்கிறது!'' என்று கூறிக் கவலையால் வருந்தினான்.

தருமியின் இரங்கு சொல் கேட்ட இறையனார், புலவர் வடிவம் கொண்டு, வெளியே வந்தார். புலவர் பெருமான் மகரகண்டிகை, பதக்கம், குண்டலம், மோதிரம் முதலிய ஆபரணங்களை அணிந்து விளங்கினார். விபூதிப் பூச்சு திருமேனியில் துலங்கியது. முத்தமிழ் வல்லோன் தான் என்பதை நன்கு எடுத்துக் காட்டும்படி அமைந்திருந்தது அவரது திருக்கோலம். திருவடிகளிலே பாதுகை திகழ்ந்தது. முத்துக் குடை நிழல் தர, வெண்சாமரை வீச, இளைஞர்கள் அடப்பை, காளாஞ்சி, பூத்தட்டு முதலியன ஏந்தி உடன்வர, கற்றுச் சொல்லிகள் பின்வரச் சங்க மண்டபம் சென்றார்.

சென்றவுடனே சோமசுந்தரப் புலவர், அங்கிருந்த புலவர்களைப் பார்த்து, ''எமது கவிக்கும் குற்றம் சொன்னவர் யார்?'' என்று வினவினார்.

உடனே நக்கீரன் சிறிதும் பயப்படாமல் முன்வந்து, "குற்றம் சொன்னது நானே!" என்றான்.

புலவர், "என்ன குற்றமோ?" என்று கேட்க, நக்கீரன், "சொற் குற்றமில்லை; பொருட்குற்றம்!" என்றான்.

புலவர், "அந்தப் பொருட் குற்றம்தான் என்ன?" என்று வினாவினார்.

நக்கீரன் தனக்குக் குற்றம் ஏற்படுவதை உணரவில்லை. ஆதலால், "பூக்கள் வைத்துக் கொள்வதால்தான் கூந்தலுக்கு மணம் ஏற்படுகிறதே அல்லாமல், கூந்தலுக்கு இயற்கையான மணம் எதுவும் கிடையாது!" என்று கூறினான்.

"பத்மினி ஜாதிப் பெண்களுடைய கூந்தலோ?' என வினாவினார் புலவர்.

"அதுவும் அத்தன்மையுடையதுதான்!" என்றான் கீரன்.

"தேவமாதரின் கூந்தலோ?" என்று கேட்டார் புலவர்.

"மந்தார மலர் சூடுவதால் அதுவும் செயற்கை மணமுடையதுவே!" என்றான் கீரன்.

"நீ துதித்து வழிபடும் காளத்தி நாதருடைய சக்தியாகிய ஞானப் பூங்கோதையம்மையாரின் கூந்தலும் அப்படிப் பட்டதுதானோ?" என்று இறுதியாக வினவினார் தெய்வப் புலவர்.

"அதுவும் அத்தன்மையானதே!" என்று உறுதியாகக் கூறினான் கீரன்.

கீரனது சலஞ்சாதிக்கும் தன்மையைக் கண்ட சிவ பெருமானுக்குக் கோபம் வந்தது. உடனே தனது நெற்றிக்

கண்ணைச் சிறிது காட்டினார். நக்கீரன் அதற்கும் அஞ்ச வில்லை, "இந்திரனைப் போல உடம்பு முழுதும் கண்களை நீர் உடையவரானாலும், உமது பாடலிலுள்ள குற்றம் குற்றமே!" என்று சாதித்து விட்டான்.

சிவபெருமான் உக்கிர மூர்த்தியானார். அவரது நெற்றிக் கண்ணிலிருந்து செந்தழல் பாய்ந்தது. அதன் வெப்பத்தைப் பொறுக்க முடியாத நக்கீரன் ஓடோடியும் சென்று பொற்றாமரைக் குளத்திலே விழுந்து மூழ்கினான்.

புலவர் உருவம் கொண்டு வந்தருளியசோமசுந்தரக் கடவுளும் மறைந்தருளினார்.

53. கீரனைக் கரை ஏற்றியது

சோமசுந்தரப் பெருமானின் நெற்றிக் கண்ணின் நெருப்பாலே தாக்குண்ட நக்கீரன் பொற்றாமரைக் குளத்துள் விழுந்து பெரிதும் துன்பப்பட்டான். கபில பாணராகிய புலவர்களெல்லாம் அதைக் கண்டு பொறுக்கமாட்டாமல் நடுங்கினார்கள். "நக்கீரன் இல்லாது ஏனைய புலவர் சேர்ந்த இச்சங்கம் வேந்தன் இல்லாத குடியும், நடுநாயக மணியில்லாத மாலையும், ஞானம் இல்லாதார் கல்வியும் போன்றது. சொல்லுக்கும் பொருளுக்கும் சொரூபமாக விளங்கும் சோமநாதப் பெருமானுடன் வாது செய்த பிழை பெரும்பிழை; ஐயோ! இப்பிழை தீர்வது எப்படி? இனி நாம் உய்வது அரிது!" என்று எண்ணிய புலவர் எல்லாரும் மனம் மருகினர்.

"சிவபெருமான் தமது திருக்கைலாச மலையைப் பெயர்த்த இராவணனும் தன் கையிலே வீணையேந்தி இனிய



இசை பாடத் திருவுளம் கனிந்து, அவன் இழைத்த பிழையை மன்னித்ததோடல்லாமல், அவனுக்குத் தேரும் வாளும் ஈந்தருளினாரல்லவா? ஆதலால் சிவபெருமான் இரங்கினால் நக்கீரன் செய்த பிழையும் நீங்குவது உறுதியே!'' என்று தங்களுக்குள் சொல்லி அமைதியுற்றனர்.

உடனே, சோமசுந்தரக் கடவுளின் திருவடிகளில் விழுந்து துதி செய்தனர். ''சிவபெருமானே! மால்விடை யேறிய அருளாளனே! எவ்வுயிர்க்கும் அம்மையப்பனாய் விளங்கும் தண்ணியனே! நக்கீரன் வித்தியா கருவத்தினால் மதியிழந்து தேவரீரது திருப்பாடலைப் பிழை என்று கூறி விதண்டாவாதம் செய்தான். அதனால் தங்கள் திருக்கண் தீக்கு இலக்கானான். வாவியுள் விழுந்து அல்லற் படுகிறான். இனித் தேவரீரே பெருங்கருணை காட்டிக் கீரனது பிழையை மறந்து மன்னித்தருள் புரிய வேண்டும்!'' என்று வெகுவாகக் கெஞ்சி முறையீடு செய்தனர்.

புலவர்களின் கூட்டு விண்ணப்பத்திற்குப் பெருமான் செவி சாய்த்தார். திருவருள் தண்ணளி காட்டத் திருவுளம் கொண்டார். தனது தேவி மீனாட்சியம்மையாருடன் எழுந் தருளி வந்தார். நக்கீரன் அழுந்திக் கிடந்த பொற்றாமரைத் தடாகத்தருகே சென்று, புலவர் கூட்டத்துடன் சேர்ந்து கொண்டார். இப்போது தனது குளிர்மையான அருட் கண்ணால் நோக்கியருளினார்.

உடனே நீருக்குள் மூழ்கியிருந்த கீரன் தனது கருவிகரண இந்திரியங்களெல்லாம் சிவபெருமானுடையன ஆனான். சிவபெருமானது பெருங்கருணைத் தடங்கடலில் ஆழ்ந்து பக்திமயமானான்.

"ஜகன் மாதாவாகிய ஞானப் பூங்கோதையம்மையாரின் கூந்தலுக்கும் பழுது சாற்றிய எனது கொடிய குற்றத்தை அந்தக் கடவுளைத் தவிர வேறு யார் பொறுப்பார்கள்!" என்று கருதி வியந்தான்.

உடனே திருக்காளத்தியப்பர் மீது 'கைலைபாதி காளத்தி பாதி அந்தாதி' என்னும் பாமாலை தொடுத்துச் சூட்டினான், நீரிலிருந்த கீரன். அடியவர்க்கெல்லாம் திருவடிப் புணை தந்தருளும் தயாபரனான சிவபெருமான் அவ்வந்தாதி மாலையைத் திருச்செவி சாற்றி நேரே நெருங்கி வந்து நக்கீரனுடைய கையைப் பிடித்துக் கரையேற்றியருளினார்.

தனக்குக் கைதந்து கரையேற்றியருளிய கருணாநிதியான சோமசுந்தரப் பெருமானையும் மீனாக்ஷியம்மையாரையும் உளமார வணங்கினான் கீரன். தீமை செய்தவருக்குக் கோபத்தையும் நன்மை செய்தவருக்கு அருளையும் காட்டுவது என்ற இறைவன் தன்மையைப் பொருளாக அமைத்துச் செய்யுள் மாலை கோத்தான். 'ஐயோ! வருந்தினேன், எளியேனுக்கு அருள் புரிக!" என்று வேண்டினான். இறைவனது கோபத்தையும் பிரசாதத்தையும் குறித்துக் 'கோபப் பிரசாதம்' என்ற வசந்த மாலை சூட்டி அம்மையப்பரைப் போற்றினான். பின்பு சிவ பரம் பொருளைப் புகழ்ந்து, 'பெருந்தேவபாணி', 'திருவெழு கூற்றிருக்கை' என்னும் செய்யுள் மாலைகளால் போற்றிப் பலமுறை விழுந்து வணங்கினான்.

சோமசுந்தரப் பெருமான் தம்மைத் துதித்த நக்கீரனுக்குத் திருவருள்புரிந்து, 'முன்னைப் போலவே நீ உன்னை நன்கு மதித்த புலவர் கூட்டத்தில் இடம் பெறுவாயாக!" என்று அருளிச் செய்து மீனாக்ஷி யம்மையாரோடு மறைந்து திருக்கோவிலுள் அமைந்திருந்தார்.

நக்கீரனும் ஏனைய புலவர்களும் சங்க மண்டபம் சேர்ந்தனர். அங்கு தொங்கிக் கொண்டிருந்த செம்பொற் கிழியை அறுத்தெடுத்துத் தருமியான ஆதிசைவ அந்தணனுக்குக் கொடுத்தனர். மற்றும் மேற்கொண்டு பாண்டிய வேந்தனைக் கொண்டும் வரிசைகள் கொடுக்கச் செய்து அனுப்பினர். புலவர்கள் அனைவரும் பின்னர்க் கல்விச் செல்வர்களாகவே வாழ்ந்தனர்.

சண்பக மாறன் சோமசுந்தரப் பெருமானையும் மீனாக்ஷி யம்மையையும் அனுதினம் தரிசித்து வணங்கி வந்தான். 'சிவமே பொருள்' என்று தெளிந்த நற்றுணர்வோடு பல திருப்பணிகள் செய்து சிறப்புற வாழ்ந்து வந்தான்.

54. கீரனுக்கு இலக்கணம் உபதேசித்தது

சோமசுந்த்ரப் பெருமானது ஆணையின் வண்ணம் சங்கப் புலவர் கூட்டத்தை அடைந்து அங்கு வாழ்ந்து வந்த நக்கீரன் குற்றமெல்லாம் நீங்கியவனாகத் திகழ்ந்தான். சிவ பெருமானது திருவடிகளையே சிந்தித்த மனம் கொண்டவனாக விளங்கினான்.

''சிவபெருமானது நெற்றிக் கண் தீயால் எரிந்த மன்மதனை விஷ்ணுவோ பிரம்மாவோ காக்க இயலவில்லை. ஆனால், அதே நெருப்புக் கண் என்னைச் சுட்டபோது அந்த வெப்பத்தைத் தணித்து என்னைப் பொற்றாமரைக்குளம் காத்தது. ஆகையால் இத்தீர்த்தமே எப் பிறப்பிலும் என்னைக் காப்பாற்றும்!'' என்று நினைந்து, ஒவ்வொரு நாளும் ஒருமையுடனே திரிகாலத்திலும் அதிலே ஸ்நானம் செய்து சோமசுந்தரப் பெருமானை வழிபாடு செய்கின்ற நியமத்தை மேற்கொண்டு ஒழுகி வந்தான்.



நக்கீரன் நியமம் தவறாமல் தம்மை வந்து வழிபாடு செய்வதை உணர்ந்த ஆலவாய் அண்ணல் திருவுளம் மகிழ்ந்தார். ''கீரனுக்கு இன்னும் இலக்கணம் விளங்க வில்லை. அதனாலே, இது வழாநிலைச் சொல், இது வழூஉச் சொல் என்பதை இவன் அறியவில்லை. இவனுக்கு இலக்கணம் போதிக்கச் செய்ய வேண்டும்; குற்றமற்ற நூற் கேள்வியிலே புலமை பொருந்திய யார் ஒருவர் இதனைச் செய்ய இருக்கின்றார்?'' என்று எண்ணமிடலானார்.

இறைவனின் நிலை யுணர்ந்த அங்கையற்கண் அம்மையார், இறைவனைக் கைகூப்பி வணங்கி நின்று, ''பெருமானே! அங்கை நெல்லிக்கனி போல அனைத்தும் உணர்ந்த வாலறிவனே! அடியாள் உள்ளத்தில் தோன்றி யதைக் கூறுகின்றேன். செவி சாய்த்தருள வேண்டும். முன்பொருக்கால் மகாவிஷ்ணு, பிரம்மா, இந்திராதி தேவர்கள், சனகாதி முனிவர்கள் மற்றும் பிறரும் கைலாச மலையிலே வந்து கூடியிருந்தனர். அந்தப் பாரத்தைப் பூமி பொறுக்கவில்லை. அதனால், அதன் வடகிழக்கு எல்லை தாழ்ந்தது, தென்மேற்கு எல்லை உயர்ந்தது. அப்போது தேவரீரை அண்டிய தேவர்கள், பூமியைச் சமன் செய்தருளுமாறு தங்களைக் கேட்டுக் கொண்டனர். உடனே எம்பெருமானும், ''நம்மை நிகர்த்தவன் அகத்திய முனிவனே! நமது பார்வதியை நிகர்த்தவள் அவனது மனைவி லோபாமுத்திரையே!'' என்று கூறியருளி, அம் மாமுனியைத் தெற்கே அனுப்பியருளினீர். ''செந்தமிழ்நாடு செல்லுங்கால் அகத்திய முனிவரும் தேவரீரிடத்திலே முதல் தமிழ் இலக்கணத்தைக் கற்றுத் தெளிந்தே புறப்பட்டான். அவன் சென்று ஆண்டுகள் பலவாகி விட்டன. அவனும் தேவரீரைத் தரிசனம் செய்யும் துடிப்போடு இருக்கிறான். தங்கள்

திருவுள்ளத்திற்குச் சம்மதமானால், அகத்தியனைக் கொண்டு நக்கீரனுக்குத் தமிழ் இலக்கணத்தை உணர்வித்தருளலாம் என்பது எளியவளது உள்ளக் கிடக்கை,'' என்று விண்ணப்பித்துக் கொண்டார்.

உமையாரின் சொற்களைக் கேட்ட சிவபெருமான் மகிழ்ந்தார். ''அவ்வாறே செய்வோம்!'' என்று திருவாய் மலர்ந்தருளி, அகத்திய மகரிஷியை நினைத்தருளினார்.

எல்லாம் வல்லானின் திருவுள்ளக் குறிப்பை உணர்ந்து அகத்திய முனிவரும் தனது சிரத்தின் மீது கைகுவித்து, தவமெனும் விமானத்திலே தன் மனைவியுடன் ஏறிக் கொண்டு, வான்வழியே சென்று ஆலவாய் க்ஷேத்திரத்தை அடைந்தார். திருக்கோவில் சென்று சோமசுந்தரக் கடவுளையும் மீனாக்ஷியம்மையையும் தரிசனம் செய்து சிவானந்தத்திலே திளைத்து நின்றார்.

அப்போதுதான் பொற்றாமரைக் குளத்திலே ஸ்நானம் செய்து நக்கீரனும் நியமத்தோடு இறைவனைத் தரிசிக்க அங்கு வந்து சேர்ந்தான். காலம் கூடியது. திருவருள் கூட்டி வைத்தது. அந்த நிலையிலே சோமசுந்தரக் கடவுள் அகத்திய முனிவரைத் தமது திருமுன் வருமாறு கடைக்கணித்து, ''தவச் செல்வ! இந்த நக்கீரனுக்குத் தமிழ் இலக்கண அறிவு இன்னும் நிரம்பப் பெறவில்லை. நீ எம்மிடத்தில் கேட்டுத் தெரிந்து கொண்டபடியே அவ்விலக்கணத்தைப் பழுதற இவனுக்குக் கற்பிக்கக் கடவாய்!'' என்று ஆக்ஞாபித்தருளினார்.

சோமசுந்தரப் பெருமானின் திருவாணையைச் சிரத்திலும் உளத்திலும் தாங்கிய அகத்திய மகரிஷி தம்மை வணங்கி நின்ற நக்கீரனுக்கு நன்றாகத் தெரியும் வண்ணம் செந்தமிழ் நல்லிலக்கணத்தைக் கற்றுக் கொடுத்தார். பொதுப்பாயிரம்,

சிறப்புப்பாயிரம், உடன்படல் முதலிட்ட எழுவகை மதங்கள், நால்வகைப் பயன்கள், பத்துக் குற்றங்கள், பத்து அழகுகள், முப்பத்திரண்டு உத்திகள், காண்டிகை விருத்தி யுரைகள் என்றமைந்த எல்லாவற்றையும் ஐயந்திரிபற உபதேசித்தருளினார், அகத்தியமா முனிவர்.

நக்கீரனுக்கு அகத்திய முனிவர் தமிழ் இலக்கணம் போதித்த பாங்கினைக் கண்டு சோமசுந்தரப் பெருமானே பெரிதும் மகிழ்ந்தார். அகத்தியருக்கு வேண்டிய வரங்களெல் லாம் வழங்கி அவரது இருக்கை செல்லுமாறு விடுத் தருளினார்.

அகத்திய மாமுனிவர் விடை பெற்றுச் சென்ற பின், உமாதேவியார் சோமசுந்தரப் பெருமானைப் பார்த்து, "நக்கீரனுக்குத் தாங்களே இலக்கணம் போதித்து அருளாது, அகத்திய முனிவனைக் கொண்டு போதிக்கச் செய்த காரணம் என்ன?" என்று வினவினார். ஆலவாய் அண்ணலும், "நக்கீரன் நம்மிடத்தே பொறாமை கொண்டதாலே நாம் போதிக்காமல் அகத்தியனைக் கொண்டு போதிக்கச் செய்தோம்," என்று விடைதந்து அம்மையாரின் ஐயம் போக்கியருளினார்.

அகத்திய மகரிஷியிடம் இலக்கணம் கற்றுக் கொண்ட பின்பு நக்கீரன் தான் முன்னே செய்த செய்யுட்கள் அனைத்தையும் ஆராய்ந்து பிழைகளைத் திருத்திக் கொண்டான். தனது அறியாமையின் காரணமாக இறைவன் அருளிய திருப்பாடலிலே குற்றங் கூறியதை நினைத்துப் பெரிதும் வருந்தினான். அன்று இறைவனது நெற்றிக் கண் நெருப்பு உடலைச் சுட்டது. "அடியேனைத் தண்டித்து அறிவுறுத்திய கருணையங் கடலனைய அண்ணலுக்கு

ஏழையேன் என்ன கைம்மாறு செய்ய இயலும்?'' என்று பலவாறு திருவருள் திறனை எண்ணிக் கரைகாணாத இன்பக் கடலுள் ஆழ்ந்தான்.

அதன் பின்னர் நக்கீரன் தான் அகத்திய மகரிஷியிடம் கற்றுத் தேர்ந்த செந்தமிழ் இலக்கணத்தை ஏனைய சங்கப் புலவர்களுக்கும் அன்புடன் போதித்தான். நக்கீரன் மூலமாகப் புலவோர் அனைவரும் தொல்லிலக்கணம் தெரிந்து கொண்டனர்.

சோமசுந்தரப் பெருமானின் சேவடிகளையே அல்லும் பகலும் அனவரதமும் தனது உள்ளத்திலே பதித்த நக்கீரன் சிவபக்திச் செல்வனாகத் திகழலானான்.

55. சங்கத்தார் கலகம் தீர்த்தது

தமிழ்ச் சங்கப் புலவர் நாற்பத்தெட்டுப் பேர்களும் அளப்பரிய புலமை பெற்று விட்டனர். புலமையின் காரணமாகப் பல்வேறு செந்தமிழ்ச் செய்யுட்கள் யாத்தனர். அதனால், ஒவ்வொருவரும் தம்மைத் தாமே பெரிதாக மதித்து, தமது புலமையிலேயே மகிழ்ச்சியுற்றுக் கர்வம் அடைந்திருந்தார்கள். ஒருவருக்கொருவர் மாறுபாடு கொண்டனர்.

பின்னர்த் தமது பெருமைகளையும், சிறுமைகளையும் அளந்தறிய வல்ல முதல் நூலாசிரியரான சோமசுந்தரப் பெருமானின் திருமுன்னர்ச் சேர்ந்து வணங்கி, ''ஆலவாய் அண்ணலே! அடியார்களாகிய நாங்கள் யாத்த இந்தச் செய்யுட்களிலே நல்லதும் அல்லதும் சீர்தூக்கி அவற்றின்



பெருமை, சிறுமைகளை எடுத்துக் காட்டியருள வேண்டும். எமக்குள் தோன்றிய கர்வத்தைப் போக்கி ஐயத்தையும் நீக்கியருள வேண்டும்,'' என்று கூறி விண்ணப்பம் செய்து கொண்டனர்.

வேதத்தின் ஆதியும் அந்தமுமாகி விளங்கும் சோமசுந்தரப் பெருமான் ஒரு புலவராய்த் தோன்றி வந்தருளினார். ''சங்கப் புலவர்களே! இத் திருநகரிலே தனபதி என்னும் வணிகன் ஒருவன் இருக்கின்றான். அவனுக்குக் குணசாலினி என்னும் மனைவி உண்டு. அவர்கள் இருவரும் செய்த நற்றவத்தின் பயனாகச் சிறந்த மகன் தோன்றியுள்ளான். அவன் முருகக் கடவுளின் திருஅவதாரம். அழகிலே சிறந்தவன். ஆனால், ஊமை. அவனிடம் சென்று நீங்கள் பாடிய கவிகளைச் சொல்லுங்கள். அவனது அறிவுக்குகந்த பாடல் எதுவோ அதுவே அனைவராலும் நன்கு மதிக்கப்படும் பாடல் ஆகும்'', என்று மொழிந்தருளினார்.

''பெருமானே! ஊமையாக இருப்பதால் எங்களது செய்யுட்களை விரும்பிக் கேட்டு நல்லதும் அல்லதும் பகுத்தறிந்து தரம் குறையாமல் எவ்வாறு உரைப்பானோ?'' என்று தங்கள் ஐயப்பாட்டைக் கேட்டனர் புலவர்கள்.

''வணிக குமாரனாகிய ஊமையன் தனக்குகந்த சொல்லழகும் பொருளாழமும் கேட்டால், தனது தலையை அசைத்து, தோள் புளகாங்கிதம் கொள்ள மகிழ்ச்சி கொள்வான். உங்களிடையே எழுந்த கலகமும் தீர்ந்து விடும்,'' என்று இயம்பி மறைந்தருளினார்.

சங்கப் புலவோர் அனைவரும் ஒன்று சேர்ந்து சென்று வணிகர் குல திலகமான உருத்திர சருமனை அன்போடு அழைத்து வந்தனர். தங்கள் சங்க மண்டபத்திலே அமர்த்தி

வெண்மலர்களால் பூசித்து வணங்கினர். பின்னர் அவனது திருமுன்னர் கீழேயிருந்தவாறு தங்கள் செய்யுட்களைச் சொல்லிக் காட்டினர்.

உருத்திர சருமன் பாடல்கள் ஒவ்வொன்றையும் கேட்டான். சிலருடைய சொல்லழகு தெரிந்து மகிழ்ந்தான். சிலரது பொருளாழம் கண்டு மகிழ்ந்தான். சிலரது பாடல்களிலே குற்றம் கண்டு இகழ்ந்தான்.

அவ்வாறாகப் பலர் பாடல்கள் சென்று விட்டன. நக்கீரன், கபிலன், பரணன் என்னும் மூவருடைய பாடல்களைக் கேட்டபோது, வணிகமணி உடல் பூரித்தான். உடல் மயிர் சிலிர்த்தான்; கண்ணீர் சொரிந்தான்; தலையசைத்துப் பேருவகை தெரிவித்தான்.

நவரத்தினங்களை எடை போடுபவன் போலவே, அவ்வணிகச் சிறுவன் உருத்திர சருமன் சொல்லழகும் பொருளாழமும் தனது நுண்ணறிவென்னும் தராசினால் எடைபோட்டு அறிந்தான். அவன் சிறந்த பாடல்களைத் தேர்ந்தெடுத்த பின்னர், நன்னெறி தெரிந்த புலவர்கள் எல்லாரும் தம்முள் ஏற்பட்ட கலகத்தை ஒழித்து நட்புக் கொண்டனர்.

நக்கீரன், கபிலன், பரணன் என்ற முப்பெரும் புலவர்களின் பாடல்களும் நாட்டிலே நன்கு பரவிச் சிறந்தோங்கின.

பின்னர்த் தெய்வ அருள் பெற்ற செந்தமிழ் நாவலர்கள் குற்றமற்ற நூல்களை ஆராய்ந்து சிறப்போடு விளங்கினார்கள்.

56. இடைக்காடன் பிணக்குத் தீர்த்தது

ஆலவாய்ச் சண்பக சுந்தரருக்குச் சண்பக மாலை சூட்டி மகிழ்ந்த சண்பகமாறன் சிவபதம் பெற்ற பின்பு, பிரதாப சூரியன் தொடங்கிப் பூப சூடாமணி முடியப் பதினான்கு பாண்டிய வேந்தர்கள் பாண்டி நன்னாட்டை ஆண்டு சென்றனர். பதினைந்தாவது பாண்டியனாகக் குலேசன் என்பான் பாண்டிய நாட்டை அரசு புரிந்து வந்தான்.

குலேச பாண்டியன் அரசியலிலே சிறந்து விளங்கினான். இலக்கண இலக்கியங்களிலே மிகுந்த தேர்ச்சி பெற்றவன். பெரு நூல்களை யெல்லாம் நன்கு பயின்றவன். அதனாலே, முத்தமிழ்ப் புலவர் இருந்த சங்கப் பலகை அம்மன்னனுக்கும் இடம் அளித்தது.

குலேச வழுதி கல்வி கேள்விகளில் மிகச் சிறந்தவன் எனக் கேள்விப்பட்டுக் கபிலனது அன்பு நண்பனாகிய 'இடைக்காட்டுப் புலவன்' என்பான், 'தமிழிலே பிரபந்தம் ஒன்று இயற்றிக் கொண்டு பாண்டியனைக் காண்போம்!' என்று கருதினான். தான் எண்ணியபடியே நல்ல பிரபந்த நூல் ஒன்று செய்துகொண்டு சென்று பாண்டிய மன்னனுக்குப் படித்துக் காண்பித்தான்.

பனுவல் மிக நேர்த்தியாக அமைந்திருந்தது. சொற்சுவை யும், பொருளழகும், கருத்தாழமும் காட்டி விளங்கியது அந்த நன்னூல்.

ஆனால் அவற்றை யெல்லாம் பாகுபாடு செய்து அனுபவிக்கத் தெரிந்த குலேசபாண்டியனோ தன் உள்ளத்தில் எழுந்த பொறாமையின் காரணமாகத் தலையசைக்காமலும், அக மகிழ்ச்சியை முகமலர்ச்சியாகக் காட்டாமலும், எதுவும்



சொல்லாமலும், வறிதே இருந்தான். மன்னனது அலட்சியமான போக்கை உணர்ந்த இடைக்காடன் மனம் நொந்தான். கற்றோரால் விரும்பப்படும் தன்மையுடையவன் ஆதலால் அவனுக்கு மான உணர்ச்சி மிகுந்தது. அரசன் முன்னிலையிலிருந்து உடனே எழுந்து சென்று விரைந்து திருக்கோவிலை அடைந்தான்.

சோமசுந்தரப் பெருமான் திருமுன் வீழ்ந்து வணங்கி எழுந்து, ''மதுரை நாயகமே! பாண்டியன் சொற்சுவை தெரிந்தவன் என்று அறிந்து அவனை நாடிச் சென்றேன். எனது சுவை மலிந்த பனுவலை அவனுக்குப் படித்துக் காட்டினேன். அவன் கொஞ்சமும் தலையசைக்காமல் என் நூலையும் என்னையும் ஒருங்கே அவமதித்தான். எந்தப் பயனும் தரஇயலாத அஃறிணைப் பொருளைப் போல் வறிதே இருந்தான். பாண்டிய மன்னன் இகழ்ந்தது எனது சொல்லையோ அல்லது என்னையோ அல்ல; சொல் வடிவமான உமாதேவியாரையும், சொல்லின் பொருளான தங்களையுமே இகழ்ந்தான். அதனால் எனக்கு வந்த குறை என்ன?'' என்று விண்ணப்பம் செய்தான். பின்னர் அடங்காத சினத்தோடு வடக்குத் திசையை நோக்கிச் சென்றான்.

இடைக்காட்டுப் புலவன் கூறிய சொற்கள் சிவபெருமான் திருச்செவியில் கூரியதாகப் பாய்ந்தன. கருணாமூர்த்தியான சோமசுந்தரப் பெருமான் வெளியேறிச் சென்ற இடைக்காடனுக்கும் அவனது உயிரனைய நண்பனுமான கபிலனுக்கும் மகிழ்வு ஏற்படும் பொருட்டுத் தமது ஞானமய லிங்க ரூபத்தை மறைத்து விட்டு உமாதேவியாரோடும் கிளம்பி வெளிவந்து திருக்கோவிலுக்கு நேர் வடக்கே வையையாற்றின் தென்பாங்கிலே திருக்கோவில் ஒன்றை அமைத்துக் கொண்டு, அதிலே இனிதாக அமைந்தருளினார்.

மறுநாள் பொழுது புலர வரும் வைகறை யாமத்திலே, திருப்பள்ளி யெழுச்சி நேரத்திலே, இறைவனைத் தரிசிக்கப் பல சிவனடியார்கள் வந்தனர். அவர்கள் திருக்கோவிலிலே சிவலிங்கத் திருஉருவத்தைக் காணவில்லை. அடியார்கள் பலரும் பெரிதும் திகைத்தனர். 'இது என்ன மாயமோ? என்ன அதிசயமோ?' என்று சந்தேகமடைந்து வருத்தம் கொண்டனர். 'இதைப் பாண்டி மன்னனிடம் தெரிவிக்க வேண்டும்' என்று எண்ணி விரைந்து சென்றனர். மதுரைமா நகரமே பொலிவிழந்து நிற்பதையும் கண்டனர்.

பாண்டியனை அடைந்து, ''மன்னவா! ஒரு செய்தி சொல்ல நாங்கள் மிகவும் பயப்படுகின்றோம். சோமசுந்தரப் பெருமானின் திருப்பள்ளி யெழுச்சித் தரிசனம் செய்வதற் காகத் திருக்கோவில் சென்றிருந்தோம், இன்று. சிவலிங்க மூர்த்தியைக் கண்டோமில்லை!'' என்று நடுங்கியவாறே நாவுலரக் கூறினர்.

சிவனடியார்கள் கூறிய சொல் சுழல் வேல் போலப் பாண்டியனது செவியில் பாய்ந்தது. சிங்காதனத்திலிருந்து அப்படியே திடீரென்று விழுந்தான். உயிர் ஒடுங்கியது போலச் சிறிது நேரம் நிலத்திலே கிடந்தான். பின்னர் நினைவு வந்ததும் எழுந்து தன் இரு கைகளையும் தலையின் மேல் கூப்பிய வண்ணம் கண்ணீர் வடித்தான்.

''ஆலவாய் அண்ணலே! எம்பெருமானே! எளியேன் என்ன பிழை புரிந்தேன்? எங்கே சென்றீர்? ஐயனே! எங்கு இருக்கிறீர்? கடவுளே!'' என்று சொல்லி இரங்கி ஏங்கினான். உடலிலும் உள்ளத்திலும் ஒருங்கே தளர்வெய்தினான்.

அச்சமயம் சிலர் பாண்டியனிடம் ஓடோடி வந்தனர். ''வழுதியே! நாங்கள் அதிசயம் ஒன்று கண்டோம். வையை

யாற்றின் தென்கரையிலே இன்று வரையிலே எவரும் காணாத புதுக் காட்சியொன்று கண்டோம். சங்கப் புலவர்களோடும் மீனாட்சியம்மையாரோடும் சோமசுந்தரப் பெருமான் வந்து எழுந்தருளியிருக்கிறார்!'' என்று கூறினார்கள்.

பாண்டியன் எழுந்தான். பயத்துடன் வேகமாக நடந்து சென்றான். வையையின் தென்கரையிலே மீனாட்சி யம்மையோடு வந்து எழுந்தருளியிருக்கும் சொக்கலிங்கப் பெருமானைக் கண்டான். பேரானந்தம் கொண்டான். இறைவன் திருமுன் கண்ணீர் சொரிந்தவாறு கிடந்தான். பின்னர் எழுந்து நின்று நாத்தடுமாற, ''பெருமானே! தேவரீர் திருவடி நோவ, மாநகரம் பொலிவிழக்க, தேவியாரோடும் இங்கு வந்து எழுந்தருளிய காரணம் என்னவோ? எளியேன் ஏதேனும் தவறு செய்து விட்டேனோ? என்ன குற்றம் நேர்ந்தது? என்ன பிழை ஏற்பட்டது? ஐயனே! என்ன நிகழ்ந்தது என்பது எளியேனுக்குத் தெரியவில்லையே!'' என்று விண்ணப்பம் செய்தான். பின்னர்ப் பலவாறாகப் போற்றி செய்து துதித்துப் பணிந்தான்.

அதுசமயம் சோமசுந்தரப் பெருமானும், ''வையை வளநாடா! உன்னுடைய துதி கேட்டு உவகை கொண்டோம். உன்னுடைய உளமார்ந்த புகழ்ச்சி எமக்கு மிகவும் இனிமையாக உள்ளது. நாம் சொல்வதைக் கேட்பாயாக. ஸ்தலங்கள் அனைத்திலும் திரு ஆலவாயே சிறந்தது. இத் திருத்தலத்திலே எண்ண முடியாத சுயம்பு லிங்கங்கள் உள்ளன. அவற்றுள்ளே அறுபத்து நான்கு லிங்கங்கள் உயர்வுடையன. அவ்வறுபத்து நான்கினும், எட்டு லிங்கங்கள் பெருமையுடையன. ஏனெனில், அவற்றை அஷ்டதிக்குப் பாலர்கள் பூசித்தனர். அந்த எட்டுக் குள்ளும்

எமது நண்பனாகிய குபேரன் பூசனை புரிந்த லிங்கம் மிகவும் சிறந்ததாகும். இது எம் நண்பன் வழிபட்ட லிங்கம் ஆனபடியால் நாமும் இங்கே வந்து எழுந்தருளியுள்ளோம். ஆதலால் இந்தத் தேவஸ்தானம் 'வட திருஆலவாய்' என்ற சிறப்பினை அடையும். கடம்பவனத்தை விட்டு யாம் ஒருபோதும் நீங்கியிருக்க மாட்டோம். வேறு குற்றம் எதுவும் நீ செய்து விடவில்லை. இடைக்காட்டுப் புலவன் யாத்த செய்யுட்களை நீ இகழ்ந்தாய். அப்போதே அவனிடம் யாம் வைத்த அன்பின் காரணமாக இங்கு வந்து இருந் தருளினோம்!'' என்று ஆகாசவாணியாக மொழிந்தருளினார்.

வானொலி கேட்டான் பாண்டியன் குலேசன். ''புராதனனே! புண்ணியனே! சிறியேன் செய்த பிழையைப் பொறுத்தருள்வது தேவரீர் கடமை,'' என்று கூறி வணங்கினான். பெருமான் பாண்டியனுக்கு அருள் புரிந்தார். மீனாட்சி தேவியோடும் சங்கப் புலவர்களோடும் திருக்கோவில் சேர்ந்தருளினார்.

திருக்கோவிலுக்கு மிகுந்த பணிவுடன் நடந்து சென்ற பாண்டிய மன்னன் சோமசுந்தரப் பெருமானை வழிபட்டு விடைபெற்றான். பின்னர்ச் சங்கப் புலவர்களுடன் சென்று இடைக்காட்டுப் புலவனைத் தக்க மரியாதையுடன் வரவேற்று அழைத்துக் கொண்டு தனது அரண்மனை வந்து சேர்ந்தான்.

பின்னர் முறைப்படி நன்கு அலங்கரிக்கப்பட்ட செல்வத் திருமாளிகை ஒன்றிலே இடைக்காடனைப் பொன் னாசனத்திலே அமர்த்தினான் பாண்டியன். புலவர்கள் சூழ வீற்றிருந்து, பல வகைச் சிறப்புகளுக்கிடையே, இடைக்காடன் யாத்த செய்யுட்களைக் கேட்டு மகிழ்ந்தான். இடைக்காட்டுப் புலவனுக்கும் சங்கப் புலவர்களுக்கும்

பட்டாடைகள், முத்துமாலைகள், யானைகள், குதிரைகள், நன்செய்கள் எல்லாம் பரிசாக நிரம்பக் கொடுத்தான்.

பின்னர் அவர்களை நோக்கி, ''புலவர் பெருமக்களே! இடைக்காடனுக்கு எளியேன் செய்த குற்றத்தைப் பொறுத்தருள வேண்டும்!'' என்று வேண்டி வணங்கினான். புலவர்களும், ''சோமசுந்தரப் பெருமானின் திருவருளினாலே உனக்கு அளவில்லாத திருவும் கீர்த்தியும் உண்டாவதாக!'' என்று ஆசிமொழி இயம்பிச் சென்றனர்.

பல ஆண்டுகள் நல்லாட்சி செய்தபின் குலேச பாண்டியன் தான் செய்த தவப்பயனாக வந்து தோன்றிய தன் அருமைத் திருக்குமாரன் அரிமர்த்தனனுக்கு உலகாட்சியைத் தந்து விட்டுச் சிவபுரம் சேர்ந்தான்.

57. வலை வீசினது

சோமசுந்தரப் பெருமான் மீனாட்சியம்மையாருக்கு ஒரு நாள் தனியிடத்திலே இருந்து, மிகவும் இரகசியமான முறையிலே வேதத்தின் உட்பொருளை உபதேசித்து அருள்வாராயினர். பெருமான் அருள்கொண்டு இயம்பும் இனிய திருமொழிகளை யாது காரணத்தாலோ பயத்தோடும், கவலையோடும் விருப்பம் இல்லாமலே தேவியார் கேட்டுக் கொண்டிருந்தார்.

சோமசுந்தரப் பெருமான் தேவியாரின் அலட்சியப் போக்கைக் கண்டு, ''மாதே! நீ எம்மிடத்தே பாராமுகம் காட்டி வேத விழுப்பொருளை விருப்பம் இல்லாமல் கேட்டாய். நீ செய்தது பெருங்குற்றம். ஆதலால், எத்தகைய தருமமோ விரதமோ கொள்ளாமல் மீன் பிடித்து வாழும் இழிந்



தோராகிய வலைஞர் குலத்திலே மகளாகத் தோன்றுவாய்!'' என்று ஆணையிட்டருளினார்.

உடனே மீனாட்சியம்மையார் பயமடைந்து, ''தேவாதி தேவ! அடியாள் தங்களைப் பிரிந்து வாழ முடியுமா?'' என்று வணங்கி வினவினார்.

தேவியின் துன்பம் கண்ட பெருமானும், ''கடற்கரைச் சோலையில் வதியும் வலைஞர் மன்னனுக்கு மகளாக நீ வளர்ந்து வருகின்ற நாளிலே யாம் வந்து உன்னை மணம் புரிவோம்!'' என்று திருவாய் மலர்ந்தருளினார். அம்மையும் விடை பெற்றுச் செல்லலானார்.

விநாயகக் கடவுள் இதை அறிந்தார். தனது தந்தையாராகிய சிவபெருமான் திருமுன் வந்து, ''இதனால்தானே இப்படியெல்லாம் நடந்தது!'' என்று சொல்லிக் கொண்டே அங்கேயிருந்த வேதச் சுவடிகளைத் தனது துதிக்கையினால் வாரியெடுத்துக் கடலிலே விசி யெறிந்தார். முருகக் கடவுளும் தனது தந்தையார் திருக்கரத்தில் விளங்கிய சிவஞான போதச் சுவடியைப் பிடுங்கிக் கடலிலே எறிந்து விட்டார்.

சிவபெருமான் நந்திகேசுவரரைச் சினந்து நோக்கி, ''நாம் இருக்கின்ற நேரமும் நிலையும் தெரியாது, இவர்களை உள்ளே அனுமதித்துச் சும்மா இருந்துவிட்டாய். அதனாலே பொல்லாங்கு விளைந்தது. ஆதலால், குற்றத்துக்குக் காரணமான நீ சுறாமீனாகப் பிறந்து, கடலிலே துன்பமடையக் கடவாய்!'' என்று சபித்தருளினார். விநாயகருக்குச் சாபம் இட்டால் அது தன்னையே சாரும் என்பதால் அவருக்குச் சாபம் இடவில்லை. முருகனை நோக்கி, ''வணிகர் குலத்திலே நீ ஊமைப் பிள்ளையாகப் பிறக்கக் கடவாய்!'' என்று பணித்தருளினார்.

சிவபெருமானது ஆணையினால் உமாதேவியார் பரதவர் மகளானாள். நந்திதேவர் சுறாமீனாகிக் கடலிலே புகுந்தார். முருகப் பெருமான் உருத்திரசருமனாகப் பிறந்தார்.

பாண்டிய நாட்டின் கிழக்குக் கடற்கரையிலே பாக்கம் என்ற ஊர் ஒன்றிருந்தது. அது ஆழமான உப்பழியென்ற அகழியாலும் உயர்ந்து வளர்ந்திருந்த தாழைகளினாலான மதிலாலும் சூழப்பட்டிருந்தது. மீன் பிடிப்போரின் குடிசைகள் பல அங்கே யிருந்தன.

அத்தகைய வலைஞர் சேரியிலே ஒருவன், தான் முற்பிறப்பிலே தவம் செய்தவனாக இருந்தும், சற்றே பாவம் செய்து விட்டதாலே, வந்து தோன்றினான்.

அவன் பரதவர்கள் அனைவருக்கும் அரசனாகத் திகழ்ந்தான். வலைஞர்கள் அவனிடம் மீன்களைத் திறமையாகக் கொண்டு வந்து நிறைத்தனர். பரதவர் கோனும் சிவபெருமானிடத்திலே பக்தியுடையவனாக இருந்தான். அவன் பல ஆண்டுகளாக மகப்பேறு இல்லாமல் பெரிதும் வருந்திக் கொண்டிருந்தான்.

ஒரு தினம் அவ்வரசன் தனது உறவினர்களோடு சேர்ந்து கொண்டு, மீன் பிடிப்பதற்காகக் கடலை நோக்கிச் சென்று கொண்டிருந்தான். செல்லும் வழியிலே பனைமர மொன்றின் நிழலிலே, சிவபெருமானது திருவாணையினால் வலைஞர்கோன் செய்த தவப்பயனாக, உமாதேவியார் தமது இச்சையினால் ஒரு பசுங்குழந்தையின் உருவமேற்று அழுதுகொண்டு கிடந்தருளினார்.

பரதவர் வேந்தன் செந்திருவாய் திறந்து அழுகின்ற இன்பத் திருக் குழந்தையைக் கண்டான்; பெருமகிழ்ச்சி கொண்டான்.

''இக் குழந்தை யார் பெற்ற செல்வமோ? கடல் மகளோ? நீர் மகளோ? கான் மகளோ? மகப்பேறில்லாத எனக்குச் சோமசுந்தரப் பெருமான் அருள் கனிந்து ஈந்தருளிய குழந்தையே இது!'' என்று எண்ணித் தனது வலது புஜம் துடிக்க மிகுந்த பரிவுடன் எடுத்து வந்து தன் மனைவி கையிற் கொடுத்தான்.

பிறவிக்குருடன் கண் பெற்றது போல் மகிழ்ந்து, அவனது மனைவியும் பேரன்புடன் குழந்தையை வாங்கியணைத்துக் கொண்டாள். பரதவர் அனைவரும் கடலைப்போல் ஆரவாரம் செய்தனர். பரதவ மகளிர் அனைவரும் குதூகலித்துக் கைகொட்டிக் குரவை பாடினர்; அருந்தனமாகக் கிடைத்த குழந்தையை மிகுந்த செல்லமாக வளர்த்தனர், வலைஞர் கோவும் கோமாட்டியும். அருட்குழந்தையும் பருவத்திற்கேற்ப அறிவும் அழகும் விளையாட்டும் காட்டி நன்றாக வளர்ந்து வந்தது.

சிவபெருமான் ஆணையிட்டருளியபடியே நந்திகேசு வரரும் சுறாமீன் உருவம்கொண்டு அலைகடலிலே சென்று மூழ்கி இனிதே யிருந்தார். நந்திச் சுறாமீன், விநாயகனும் முருகனும் முன்பு கடலிலே எறிந்த ஏடுகளை யெல்லாம் தனது தலையின்மீது சுமந்து சென்றார். தன் உள்ளத்தின் உள்ளே சிவபெருமான் திருவடியைச் சிந்தித்தார்.

குறுக்கும் நெடுக்குமாகக் கடலிலே அங்குமிங்கும் அலைந்து திரிந்த வலிய சுறாமீன் பெரிய துன்பம் விளைத்தது. கடல் நீரைக் கலக்கியது. தோணி, படகு, சோங்கு ஆகியவற்றை யெல்லாம் அது நெருங்கி முட்டி மோதிக் கவிழ்க்கும். தன்னை எதிர்க்க வரும் சுறா மீன்களை யெல்லாம் தனது கொம்பில் கோத்து வீசி யெறியும். முரட்டுச்

சுறாமீன் கடலிலே எப்போது தோன்றும், என்ன செய்யும் என்பது, தெரியாதிருந்தது.

நெய்தல் தலைவன் அப்பெரு மீன் செய்யும் இன்னலைக் கண்டு பொறுக்காமல், ஒரு முறை தனது கிளைஞருடன் கடலிலே சென்று அதன் மேலே பெரிய வலையை வீசினான். பல படகுகளையும் தோணிகளையும் உடைத்தெறிந்த அந்தப் பொல்லாச் சுறாமீன் வலையுள் அகப்படாமல் தாக்குப் பிடித்துப் போக்குக் காட்டியது. இங்குமங்கும் எங்குமாகத் தோன்றிய மீன் வலைப்படவில்லை. எப்பாடு பட்டும் அதனைப் பிடிக்க மாட்டாத வலைஞர் கோன் ஏமாந்தான், நொந்தான், அயர்ந்து விட்டான். ''இனி இதனை யாரால் பிடிக்க முடியுமோ?'' என்று எண்ணி ஏங்கி மனமுடைந்தான். உடன் சென்ற வலைஞரும் ஏவலரும் கவலையுடன் கலங்கி நின்றனர்.

பின்னர்ப் பரதவர் கோமான், ''இந்தக் கடலிலே கிடந்து கலக்கும் பெரும் சுறாமீனை இங்கு வந்து எவன் பிடிக்கிறானோ, அவனே என்னுடைய மகளுக்கு மணமகன் ஆகும் தகுதி பெற்றவனாவான்!'' என்று உறுதி பூண்டான்.

உரிய பருவ காலம் வந்துற்றது. வலைஞர் கோனின் உறுதி கைகூடும் நாள் நெருங்கியது. சிவபெருமான் அருள் புரியத் திருவுளம் கொண்டார். தனது இச்சாமாத்திரத்திலே ஒரு வலைஞன் உருவம் எடுத்தருளினார். தேவ மீனவனின் உருவம் கருத்துக் காட்டியது. அரையிலே கச்சையை இறுகக் கட்டியிருந்தார். இடையிலே உடைவாள் செருகியிருந்தார். தோலில் மேலாடை தரித்திருந்தார். தேன் சொட்டும் நெய்தல் மலர்க் கண்ணியைத் தலையிலே சூட்டியிருந்தார். சிவகணத் தலைவன் ஒருவனும் வலைஞன் வேடம் புனைந்து.

தோளிலே வலை சுமந்து, மீன் கூட்டினை முதுகிலே தாங்கிய உதவியாளாகப் பெருமான் பின்னே நடந்து வந்தான். சோலை சூழ்ந்த வலைச் சேரிப் பாக்கத்தை வந்தடைந்தார், வலைஞர் பெருமான்.

தனது பாக்கத்துக்குப் புதிதாக வந்திருந்த பரதவர் குலக் காளையைப் பார்த்துப் பெருமகிழ்வும் அதிசயமும் அடைந்தான் பரதவர் கோன். அவனைப் பார்த்து, ''அழகிய நம்பியே! நீ யார்? சொல்,'' என்று கேட்டுக் கொண்டான்.

''நான் மதுரைப் பரதவரின் தந்தை போன்ற அரசனுடைய குமாரன். என்னால் படைக்கவும் காக்கவும் அழிக்கவும் முடியும். தவிர, பெரிய மீன்களெல்லாம் அகப்படுமாறு வலை வீசுவதிலே வல்லவன் யான்!'' என்று கம்பீரமாக மொழிந்தார்.

''இவன் முன்னுக்குப் பின் முரண்பாடாகப் பேசுகின்றானே. உண்மையாகவே இவன் பரதவர் மகன்தானா?'' என்று ஐயமுற்றான் தலைவன்.

பின்னர், ''அப்பனே! இந்தத் துறையிலே சுறாமீன் ஒன்று கட்டுக்கடங்காது நாசம் புரிந்து துள்ளித் திரிகின்றது. அது வலிமையும் சீற்றமும் மிகவுடையது. அதனைக் குறிவைத்துப் பிடித்து விடுவாயானால், எனது குமாரியை உனக்கு மணம் செய்து கொடுப்பேன்!'' என்று கூறினான்.

வலைஞர் பெருமான் உடனே படகிலேறி விரைந்து கடலுள் சென்றார். தன்னுடன் வந்தவனது தோளின் மேல் கிடந்த வலையை வாங்கிப் பெரிதாக விரிய வீசினார். இறைவன் வீசிய தெய்வீகத் திருவலையிலே சுறாமீன் சிக்கிக் கொண்டுவிட்டது.

வலியடங்கிய சுறாமீனை இழுத்துக் கரையிலே போட்டார் பெருமான். வலைஞர்கள் எல்லாரும் நெருங்கிக் கூடி வந்து ஆரவாரம் செய்தனர். ''நம் குலத்துக்குரிய தெய்வ மகன் இவனே யாவான்!'' என்று பாராட்டி வியப்பெய்தினர்.

நெய்தல் தலைவன் பெருமகிழ்வு எய்தினான். பறைகள் ஒலி முழக்க, வலைய மாதர் குரவை செய்ய, வலைஞர் பிரானுக்குத் தன் மகளைத் திருமணம் செய்து கொடுத்தான், வலைஞர் கோமான்.

மணக் கோலம் புனைந்த வலைஞரும், கோமகளும் மறைந்தருளினார்கள். உடனே சிவபெருமான் மீனாக்ஷி யம்மையுடன் காட்சி தந்தருளினார். நந்திகேசுவரரும் தன்னுருவம் பெற்று விளங்கினார்.

ரிஷபாரூடரான சிவபெருமான்- உமாதேவியார் இருவரது கருணா கடாக்ஷம் அடைந்ததால், வலைஞர் கோமான் தனது முன்னைய நல்லறிவைப் பெற்றான். இறைவனை மனமாரத் துதித்து வணங்கினான்.

தம்மைப் போற்றி நின்ற பரதவர் தலைவனைப் பார்த்துச் சிவபெருமான், ''அன்ப! பலவாண்டுகள் குழந்தைப் பேறில்லாமல் வருந்தியது கண்டிரங்கி, உமாதேவியாரையே உனது மகளாகத் தோன்றச் செய்தோம். முறையறிந்து வந்து மணந்து கொண்டோம். இவ்வுலகத்திலே நீ குபேர சம்பத்தினைப் பெற்றுப் பல போகங்களை அனுபவித்துப் பின்பு எமது சிவலோகம் வந்து சேர்வாயாக,'' என்று திருவருள் புரிந்தருளினார்.

பின்னர் நந்திகேசுவரரோடும் அடியவர் திருக்கூட்டத்தோடும் உத்திரகோசமங்கை என்னும் க்ஷேத்திரத்தை அடைந்தருளினார் சிவ பெருமான். அத் திருவுத்திரகோச மங்கையிலே எழுந்தருளியிருந்து உமாதேவியார் பயபக்தி சிரத்தையுடன் கேட்க, வேத ரகஸ்யப் பொருளை யெல்லாம் அமிர்தமென உபதேசம் செய்தருளினார். தம்மிடம் பக்தி கொண்ட சிவனடியார்களும் சிவயோகிகளுமான அறுபதினாயிரம் பேர்களுக்கும் வேத விழுப் பொருளை உபதேசித்தருளினார்.

பின்பு மீனாக்ஷியம்மையாரோடு மதுரை சேர்ந்தருளினார், சோமசுந்தரப் பெருமான்.

58. வாதவூர் அடிகளுக்கு உபதேசித்தது

வையை வளநதியின் கரையிலே திருவாதவூர் என்ற திருப்பதி இருந்தது. அவ்வூர் எல்லா விதமான வள நலங்கள் கொண்டு இலங்கியது. நகர் முழுதும் திருவிழாக்கள், வீடுகள் தோறும் விருந்துகள், பாடசாலைகள் தோறும் வேதங்கள், வயல்கள் தோறும் உழவுத் தொழில் மலிந்திருந்தன.

வளங் கொழிக்கும் அத் திருவூரிலே சிவபெருமான் திருவருளாலே ஒருவர் வந்தவதரித்தார். பெற்றோர் அவருக்குத் திருவாதவூரர் என்று திருப்பெயர் சூட்டினர். வேதம் விதித்தபடி வயதுக்கேற்ற சடங்குகள் எல்லாம் செய்யப் பெற்றுச் செவ்வனே வளர்ந்து வந்தார்.

வேத வேதாகமங்கள், சாஸ்திரங்கள், புராணங்கள், கலைகள் எல்லாவற்றையும் பதினாறு வயதுக்குள்ளாகக்



கற்றுத் தேர்ந்தார். இளம் பிராயத்திலே சகலாகம பண்டிதனாக, சகல கலா வல்லவனாகத் திகழ்ந்து நின்ற திருவாதவூராரது அறிவுத் திறமையை அறிந்தவர் சென்று அரிமர்த்தன பாண்டியனிடம் மொழிந்தனர்.

அது கேட்டு மகிழ்ந்த பெருவழுதி திருவாதவூரரைத் தன்பால் அழைத்துக் கொண்டு பலவகைச் சிறப்பும் செய்து மந்திரி பதவியையும் அளித்தான்.

திருவாதவூரர் போர்க்கலைப் பயிற்சியும் மனு தர்ம சாஸ்திரப் பயிற்சியும் நன்கு பெற்றுணர்ந்தார். அத் தன்மையால் எல்லா மந்திரிகளிலும் சிறந்து முதல் மந்திரியானார். கடல் கடந்த பல்வேறு நாட்டிலிருந்த வேந்தரும் பாண்டியனுடன் நட்புறவு கொள்ளச் செய்தார் வாதவூரர். பாண்டியனது கண்ணும் கவசமுமென விளங்கித் தொழில் நடத்திச் சிறப்பெய்தினார், வாதவூரர்.

வாதவூரர் செவ்வனே முதன் மந்திரி வேலை பார்த்துவரும் நாளிலே, 'உண்மைப் பொருள் இது, மெய்ம்மைப் பொருள் இது,' என்று பகுத்தறிவும் ஆற்றலை அதிவிசேஷமாகப் பெற்றார். இம்மை மறுமை என்ற இரண்டின் பயன் களிலேயும் வெறுப்புக் கொண்டவராகி, உளத்தூய்மை பெற்று மோட்சம் பெறும் வழியை ஆராயத் தொடங்கினார்.

"புறச் சமயங்களும் வேதம் தழுவிய அகச் சமயங்களும் மனமாசு போக்கி இறைவன் திருவருளைத் தெளிவுறுத்த மாட்டா. ஆணவப் பிணிப்பு நீங்காது; அதனால் மோட்சம் சித்திக்காது. பக்தி செய்து இறைவன் திருவருளைப் பெற்ற அடியார்களுக்குத்தான் மோட்சம் கிடைக்கும் என்று வேதம் சொல்லும். வேதத்தின் உண்மையான பொருட் தெளிவைச் சக்தி நிபாதம் பெற்ற பரிபக்குவருக்கே சிவாகமங்கள்

உணர்த்துமாம். வேத முடிவோ, ஆகம முடிவோ- அவை அடையும் பொருள்களிலே வித்தியாசம் கிடையாது. அவற்றுள்ளும் வேற்றுமை காட்டும் தன்மையைப் போக்கி ஆணவ மலக் கட்டுகளை யெல்லாம் விலக்கி உடையவ னாகிய தன்னையும் உடைமைப் பட்டவனாகிய என்னையும் அறிவித்திடுகின்ற ஞான ரூபமான குருநாதன் எப்போது வருவானோ? ஞானாசிரியனாகிய பெருந்தகையின் அருளால் அன்றிப் பாசக் கடலைச் சாஸ்திர ஞானத்தாலும் கேள்வி யினாலும் கடத்தல் அரிது!'' என்றிவ்வாறு பலப்பல எண்ணினார் திருவாதவூரர்.

மோட்சம் பெற வேண்டும் என்ற பேராசையினாலே வேதாகம சாஸ்திரங்களில் வல்லவர்கள் தம்மிடம் வரும் போதெல்லாம் அவர்களோடு சம்பாஷணை செய்து மெய்ப்பொருள் ஆராய்வார். ஆராய்ந்த பொருள் எதிலும் அவர் அமைதி காணவில்லை. சிவபெருமானிடத்திலே கொண்ட பெரும் பக்தி உள்ளே பதிந்து இடம் கொள்ள, அரிமர்த்தன பாண்டியனுக்கும் பேருதவியாக இருந்து, அரசியலைச் சிறப்பாக நடத்தி வந்தார்.

இவ்வாறாக ஒழுகிவரும் திருவாதவூரர் ஒரு நாள் பாண்டியன் சபையிலே சென்று நின்றார். அந்தச் சமயம் பார்த்துக் குதிரைக் காவலர்கள் அரசன் முன் வந்து வணங்கி நின்று, ''வெற்றி வேற் செழிய! நமது குதிரைகளிலே இறந்தன போக எஞ்சியவற்றுள் பல வியாதியுடையனவாயும் கிழடாகவும் உள்ளன. நல்ல குதிரையாக ஒன்றுகூட இல்லை!'' என்று விண்ணப்பித்தனர்.

அது கேட்ட அரிமர்த்தன பாண்டியன், தனது பிரதம மந்திரியான வாதவூரரை நோக்கி, ''நீர் இன்று நமது பொக்கிஷ அறையைத் திறந்து வேண்டிய பொருள்களை

எடுத்துக் கொண்டு செல்லுக. கடல் துறையில் வந்திறங்கும் குதிரைகளில் சிறந்தனவற்றைத் தேர்ந்தெடுத்து விலை கொடுத்து வாங்கி வருக!'' என்று பணித்து அனுப்பினார்.

மனம் வேறுபட்டுப் பிரதம மந்திரி அலுவல் பார்க்கும் திருவாதவூரர் பொக்கிஷத்தைத் திறந்தார். குதிரைகள் வாங்குவதற்கான பெரும் பொருளை எடுத்துக் கொண்டு, அரசனிடம் விடைபெற்றுப் புறப்பட்டார்.

பின்னர்த் திருவாதவூரர் குதிரைகள் வாங்குவதற்காக இராஜாங்கப் பொக்கிஷத்திலிருந்து எடுத்து வந்த பொன் மூட்டைகளை ஒட்டகங்களின் மேல் ஏற்றி அவற்றை முன்னே அனுப்பி வைத்தார். தான் திருக்கோவில் சென்று பொற்றாமரைத் தீர்த்தத்திலே நீராடினார். தீர்த்தக் கரையிலிருக்கும் சித்தி விநாயகரைப் பணிந்தார். பின்னர் மீனாட்சியம்மையையும் சோமசுந்தரப் பெருமானையும் வணங்கினார்.

சிவபெருமான் திருமுன் நின்று, ''ஆலவாய் அண்ணலே! அடியேனுக்கு ஒரு வரம் ஈந்தருளல் வேண்டும்! நான் கொண்டு செல்லும் பொருள் எல்லாம் தேவரீருக்கும் தேவரீரது அடியார்க்கும் பயனாக வேண்டும்,'' என்று வேண்டித் துதித்து நின்றார்.

அது சமயம் ஆதிசைவ அர்ச்சகர் ஒருவர் எதிர்வந்து விபூதி தந்தார். அதனைச் சோமசுந்தரப் பெருமானது திருவருட் பிரசாதமாகக் கருதிய திருவாதவூரரும் இருகரங்களாலும் மரியாதையுடன் வாங்கி நெற்றியிலே பூசிக் கொண்டார். பின்னர்ச் சிவபெருமானிடம் விடைபெற்றுச் சென்றார்.

இன்னிசை வாத்தியங்கள் இயம்ப வாதவூரர் பொற் சிவிகையில் அமர்ந்து புறப்பட்டார்.

சோமசுந்தரப் பெருமான் திருவாதவூரருடைய இருவினை யொப்பையும் மலபரி பாகத்தையும் உணர்ந்தார். குருவாகிச் சென்று அவரை வலிய ஆட்கொண்டு தமது திருப்பணியிலே நிறுத்தியருளத் திருவுளம் கொண்டார். உடனே, தனது அருட் திறத்தால் வேதியர் குலத்தைச் சேர்ந்த குருவாகத் திருமேனி கொண்டருளினார். தன்னை விட்டுப் பிரியாத மாணவர்கள் பலருடன் வந்து திருப் பெருந்துறையிலே திருக்கோவிலின் உள்ளே குருந்தமரமொன்றின் அடியிலே இனிது எழுந்தருளி யிருந்தார்.

திருவாதவூரரும் தனது கடல் போன்ற பெருஞ்சேனை யோடு திருப் பெருந்துறையை நெருங்கி வந்து கொண்டிருந் தார். அத்திருவூரின் எல்லையை நெருங்க நெருங்க, வாதவூரரின் உள்ளத்திலே மகிழ்ச்சி நிரம்பியது. கூப்பிய கரங்கள் சிரமேல் சென்றன. கண்களிலிருந்து ஆனந்த நீர் பெருகியது. இறைவன் திருப்பணிக்கே தம்மை உயர்த்திடும் மனத்திடையே திருவருள் விளைந்தது. ''இவர் ஒரு பித்தர்!'' என்று பலர் கூறும்படி, தன்னை மறந்த பெரும் பக்தராகி நடந்து சென்றார். அவருக்குச் சக்தி நிபாத நிலை கூடியது.

எளியேனை ஆட்கொண்டருளும் கருணைக் கடல் அமர்ந்திருக்கும் திருப்பதி இதுதான் போலும்!'' என்று எண்ணியபடியே ஊருக்குள் புகுந்தார். திருக்கோவில் சேர்ந்து, அங்குள்ள சிவ தீர்த்தத்திலே நீராடி யெழுந்து இறைவனைத் தரிசனம் செய்தார். தோத்திரம் செய்து கொண்டே திருக்கோவிலை வலம் வந்தார். அப்போது தட்சிணா மூர்த்தியின் திருக்கோலம் எழுந்தருளப் பெற்ற குருந்த மரத்தினை எதிரே கண்டார்.

வேதங்கள், சிவாகமங்கள், புராணங்கள், இசை நூல்கள், சமய சாத்திரங்கள் எல்லாம் ஒலித்துக் கொண்டிருந்தன.

வேத சாரத்தையும், மோட்ச சாதனத்தையும், ஆகம்பாதங் களையும் சிக்கலற உணர்ந்த பெரிய மாணவர் குழாம் அங்கே அமர்ந்திருந்தது. நால்வகை மார்க்கத்தினரும் அங்கே யிருந்தனர். ஞானிகளும், யோகியர்களும், சன்னியாசிகளும் அங்கே அமர்ந்திருந்தனர்.

பெருந் தகுதியுடைய தொண்டர்கள் கூட்டத்துக்கு நடுநாயகமாகி அமர்ந்திருக்கும் அருள் வடிவத்தை வாதவூரர் கண்டார். யோகாசனத்தில் வீற்றிருந்த குருநாதனின் திருக் கரத்திலே சிவஞான போதச் சுவடி இலங்குவதையும் கண்டார். சிவ பெருமானுடைய திருக் குறிப்பு உள்ளே யிருந்து உணர்த்தி யருளியது. உடனே குரு மகா சன்னிதானத்திலே வணங்கிக் கைகளைச் சிரமேற் கூப்பி உள்ளம் உருகி நின்றார் வாதவூரர். சிவபெருமானது அன்பு பின்னிய அருள்வலையிலே அகப்பட்டுக் கொண்டார்.

ஞான மார்க்கம் பற்றிய மாணவர்களது பக்குவத்தை நன்றாக அறிய வல்ல ஞானாசிரியன் சிவபெருமானே வாதவூரருக்குத் திருவடியைக் காட்டினார். அவரது ஞானபரமான ஒழுக்கத்தையும் பக்தியையும் கண்டு, அவர் தத்தம் செய்த உடல் பொருள் ஆவி மூன்றையும் ஏற்றுக் கொண்டார். தமது ஞானக் கண்ணால் மும் மலங்களையும் போக்கி யருளினார். தமது திருவடித் தாமரையைச் சூட்டினார். பின்னர்த் தமது திருக்கரத்தினை வாதவூரரின் சிரசில் வைத்துச் சூக்கும பஞ்சாட்சரத்தை உபதேசம் செய்து அவரது பாசபந்தத்தைப் போக்கிப் பேரின்பம் விளைத்துச் சிவ வடிவாகுமாறு திருவருள் புரிந்தார்.

பரமாசாரியன் தனது சட்சு தீட்சையினாலே வாதவூரரைத் தன்மயமாக்கிக் கொண்டார். அதனால் தன்னையும் மறந்த மெய்ஞ்ஞான வடிவினராகி, எதையும் மறந்தவரானார்

வாதவூரர். பரமானந்தத் தேன் உள்ளே அமுதமயமாகத் தித்தித்தது. பரமானந்தப் பெருஞ்சுடர் உள்ளே ஒளிவிட்டது.

உள்ளத்திலே உண்மை யொளி உண்டானதாலே அவரது வாக்கிலே ஒளியுண்டாயிற்று. திருவாதவூரரின் நாவினிலே ஞானக் கலைமகள் தானேவந்து களிநடம் புரியலானாள். கூப்பிய கரங்களோடு ஆனந்த பாஷ்பம் பெருக, நாத்தழுதழுக்க, உடல் சிலிர்க்கப் பரமகுருவைப் போற்றிப் பணிந்து தோத்திரம் செய்யலானார்.

அற்புதமான தெய்வத் தமிழ்ப் பாடல்கள் உள்ளத்தின் உள்ளிருந்து எழுந்தன. சிறந்த பழுத்த சொற்களாகிய மாணிக்கங்களைக் கோவைப்படுத்தி, பக்தி என்னும் சூத்திரத்தால் தொடுத்துத் தனது ஞானாசிரியனுக்கு அணிவித்தார் வாதவூரடிகள். சிவஞான குருபரன் தமது மெய்யன்பரின் திவ்யமான பாடல்களைக் கேட்டு மகிழ்ந்து அவருக்கு 'மாணிக்கவாசகன்' என்னும் திருப்பெயரைப் புனைந்தருளினார்.

ஞான பூசை புரிந்து வந்த மாணிக்கவாசகரும் அவ்விடமே தங்கி மாணவர்கள் ஓதுகின்ற ஆகம உபநிஷதப் பொருள்களை எல்லாம் கேட்டு மகிழ்வாராயினர். சிவபெருமான் தமது மெய்யன்பரான மாணிக்கவாசகரின் அமுதமயமான பாடல்களைச் சில காலம் கேட்டு மகிழ்ந்தருள விரும்பினார் போலும். தவிரத் தனது பக்தி வலைப்பட்ட அன்பரிடமிருந்து பொன்னையெல்லாம் கொள்ளை கொள்ள விரும்பினார் போலும். ஆதலால், மாணிக்கவாசகரை நோக்கி, "நீ இங்கே செய்ய வேண்டிய செயல் சிறிது உண்டு. ஆகையால் இங்கு நீ சில நாட்கள் இருப்பாயாக!" என்று இயம்பி விட்டுத் தன் அடியார்களோடு மறைந்தருளினார்.

கருணாமூர்த்தியான சிவபெருமான் தனது திருவுருவம் காட்டி மறைந்தருளியதும் மாணிக்கவாசகர் துயரக் கடலுள் ஆழ்ந்தார். பிரிவாற்றாமையால் பெரிதும் துன்பப்பட்டுப் பித்தர் போல உழன்றார். ''எந்தையே! எளியேனை இங்கு தனியே ஏங்கவிட்டு எங்கு சென்றருளினீரோ?'' என்று புலம்பிக் கதறி அழுது முறையிட்டார். இளம் கன்றினை விட்டுப் பிரிந்த தாய்ப் பசுவைப் போல மனம் உருகினார்.

பின்னர்க் கோபுர வாசலுக்கு வெளியே சென்றார். அங்கே தமது வரவை எதிர்நோக்கிக் காத்திருந்த பாண்டிய பரிவாரங்களைப் பார்த்து, ''நீங்கள் அனைவரும் திரும்பிச் செல்லலாம். குதிரைக் கூட்டங்கள் எல்லாம் ஆடி மாதத்திலே கடல் துறையிலே வந்து இறங்கும் என்னும் விவரத்தை முன்னதாகவே சென்று பாண்டிய வேந்தனுக்குச் சொல்லுங்கள்,'' என்று பணித்தனுப்பினார். பரிவாரங்களும் முன்னே சென்று பாண்டியர் பெருமானுக்கு விவரம் சொல்லினர்.

வாதவூரடிகளும், பாண்டியன் பொருட்டுக் குதிரைகள் வாங்கக் கொணர்ந்த பொற்காசுகளைப் பயன்படுத்திச் சிவபெருமானுக்குப் பூஜைகள், திருவிழாக்கள், திருக் கோயில் திருப்பணிகள் ஆகியவற்றுக்கு நிரம்பச் செலவு செய்தார். சிவனடியார்கள் விஷயத்திலும் ஏராளமாகச் செலவு செய்தார். அவாவறுத்த நிலையிலே நின்று திருப் பெருந்துறையிலே இருந்து வரலானார். நாட்கள் கடந்தன.

ஆடி மாதமும் வந்தது. ஆனால், குதிரைகளைப் பற்றிய ஒரு செய்தியும் கிடைக்கவில்லை- மதுரைப் பாண்டியனுக்கு. ஆதலால், ''குதிரைகள் இன்னும் வந்தபாடில்லை! விவரம் என்ன?'' என்று ஓலை எழுதித் தனது முதலமைச்சர்

வாதவூரருக்கு விடுத்தான். பாண்டியன் அனுப்பிய ஓலையை வாங்கிப் படித்தார் மாணிக்கவாசகர். "இனி என்ன செய்வது? வேறு என்ன வழி உள்ளது?" என்று எண்ணி வருந்தினார். பிறகு மனத்தை அமைதிப் படுத்திக் கொண்டு குருபரனாகிய சிவபெருமானது திருக்கோவிலை அடைந்தார். பெருமான் சன்னிதானத்திலே நின்று கொண்டு, "ஐயனே! சுந்தரபாண்டியனே! திருப்பெருந்துறைச் செல்வமே! பாண்டியன் என் வசம் ஒப்புவித்த செல்வத்தை யெல்லாம் நினது திருக்கோவில் திருப்பணிகளிலும் அடியார்க்கு அமுதளித்தலிலும் செலவிடுமாறு செய்தருளினீர். இனி அடியேன் செய்யக் கூடியது யாது? பாண்டிய மன்னனுக்கு எவ்வாறு குதிரைகள் வாங்கிக் கொடுப்பது?" என்று வேண்டித் துதித்தார்.

அது கேட்ட சிவபெருமானும், ஆகாசவாணியாக, "குதிரைகள் எல்லாம் வரும் என்று ஓலை எழுதிப் பாண்டியனுக்கு அனுப்புக!" என்று மொழிந்தருளினார்.

மாணிக்கவாசகரும் தெய்வத் திருவொலி கேட்டு மிகவும் அக மகிழ்ந்து அரிமர்த்தன பாண்டிய மன்னனுக்கு ஓலையொன்று விடுத்தார். வாதவூரரது திருமுகம் கண்ட வழுதியும் மிகவும் மகிழ்ந்தான். குதிரைகளின் வரவை மிகுந்த ஆவலோடு எதிர்பார்த்திருந்தான்.

அன்றிரவு மாணிக்கவாசகர் இன்பக் கனவொன்று கண்டார். அதிலே சிவபெருமான் ஞானாசிரிய வடிவம் கொண்டு எழுந்தருளினார். "மன்னன் மனத்தைக் கவரத்தக்க, வெற்றி விளைக்கத் தக்க சிறந்த குதிரைகளை வாங்கிக் கொண்டு வருவோம். இன்றே புறப்பட்டு முன்னால் போவாயாக," என்று கூறியருளினார். உடனே

மாணிக்கவாசகர் துயில் நீங்கி எழுந்து இறைவன் மொழிந்தருளியதுபற்றியே சிந்தித்துக் கொண்டிருந்தார்.

மறுநாள் பொழுது விடிந்தது. மாணிக்கவாசகர் எழுந்தார். சிவ தீர்த்தம் ஆடிப் பெருமானைத் தரிசித்து வணங்கி விடைபெற்றுப் புறப்பட்டார். மதுரைமா நகரத்தை நோக்கி நடக்கலானார். பல காத வழி கடந்து சென்று மதுரை சேர்ந்தார்.

பின்னர் அரண்மனை சென்று அரிமர்த்தன பாண்டியனைக் கண்டு வணங்கி முன் நின்றார்.

பாண்டியனும் அவரை வரவேற்று, ''செம்பொன் எவ்வளவு கொண்டு சென்றீர்? எத்தனை குதிரைகள் வாங்கினீர்?'' என்றெல்லாம் வினாவினான்.

விடையாக மாணிக்கவாசகரும், ''மன்னர் பெருமானே! யான் எடுத்துச் சென்ற பொன்னுக்கோர் அளவில்லை! வாங்கிய குதிரைகட்கும் அளவில்லை! குதிரைகள் எல்லாம் பின்னால் வந்து கொண்டிருக்கின்றன, காணலாம். இதன் காரணமாகத் தாங்கள் 'துரகபதி' என்னும் பெயர் பெற்று விளங்குவீர்,'' என்று பகன்றார்.

பாண்டியன் மகிழ்ந்தான். வளமான நற்பரிசுகள் பலவற்றை வழங்கிய பின், வாதவூரரை மனைக்கு அனுப்பி வைத்தான்

மாணிக்கவாசகர் பொற்றாமரைத் திருக்குளத்திலே ஸ்நானம் செய்து, சித்திவிநாயகரின் திருவடி பணிந்து சென்று, சோமசுந்தரப் பெருமானைத் தரிசித்து வணங்கினார். ''எம்பெருமானே! முழுமுதலே! பாண்டியன் பொன்னையும்

எளியேன் பணியையும் ஒருங்கே ஆட்கொண்டருளினீர். பாண்டியன் கோபம் கொள்ளாது, மிகவும் மகிழும்படி குதிரைகள் வரக்கூடுவது எப்படி?'' என்று விண்ணப்பித்து நின்றார்.

அதுபோது சிவபெருமான், ''உண்மைப் பக்தனே! பயப்பட வேண்டாம். மிகவும் சிறந்த குதிரைகளைக் கொண்டு வருவோம்!'' என்று ஆகாசவாணியாக இயம்பியருளினார். வானொலி கேட்டு மகிழ்ச்சி பெற்ற வாதவூரரும் சிவபெருமான் அருள் திறத்தை வியந்தவாறு தமது மனை சேர்ந்தார்.

வாதவூரர் தம் மனை சேர்ந்ததும், அவரது உறவினரும், நண்பாளரும், அன்புடைய பணியாளரும், பரிவு கொண்ட அயலாரும், ஏனையோரும் வந்து நெருங்கி இடித்துரைத்தனர். ''அரசியலும் அமைச்சும் நன்குணர்ந்த நீர் செய்யும் செயல் எதுவும் நன்றாக இல்லை. குதிரைகள் இன்று வராவிட்டால் பாண்டியன் நாளை என்ன செய்வானோ?'' என்று சொல்லினர்.

திருவாதவூரர் எல்லாவற்றையும் கேட்டார். சமநோக்குக் கொண்ட அவர், பாசம்- பந்தம், சொந்தம்- அன்னியம், விருப்பு- வெறுப்பு எல்லாம் கடந்த மிக உயர்ந்த நிலையிலே இருந்தார். ''நன்றோ தீதோ எது வந்தாலும் சரி, எல்லாம் அவன் செயல், நான் சிவனை மறவேன்!'' என்று கூறித் தம் மாளிகையில் அமைந்தார்.

59. நரியைப் பரி ஆக்கியது

சுற்றம் எனும் பாச பந்தம் நீங்கி, ஆணவம் அறுத்துச் சிவயோகம் நின்ற வாதவூரடிகளை அரிமர்த்தன பாண்டியன் மறுதினம் தன்னிடம் வரவழைத்து, ''குதிரைகள் இன்னமும் வரக் காணோமே, ஏன்?'' என்று வினவினான்.

திருவாதவூரரும் மறுமொழியாக, ''இன்று தொடங்கி மூன்று நாட்களுக்குள்ளாகக் குதிரைகளெல்லாம் வந்து விடும். குதிரைக் கூடத்தைப் பெரிதாக அமைக்கச் செய்க. பல குளங்களைத் தோண்டச் செய்க. ஊர் முழுதும் அலங்காரம் செய்விக்க!'' என்று வேண்டிக் கொண்டார். வாதவூரர் சொன்னபடியே பாண்டிய வேந்தனும் செய்வித்தான்.

மூன்று நாட்களும் போய் விட்டன. குதிரைகள்தாம் வரக் காணோம். நான்காம் நாளும் வந்தது. பாண்டியன் சிந்திக்கலானான். 'இன்னும் குதிரைகள் வந்தபாடில்லை! வாதவூரர் குதிரைகள் வாங்கிய முறைதான் என்ன? குதிரைகள் எப்போதுதான் வருமோ?' என்று கருதிச் சினமடைந்தான். தன்னெதிரே நின்ற தண்டலாளரை விளித்து, ''எம்மிடம் பொன் கவர்ந்து சென்ற வாதவூர்க் கள்வனைக் கொண்டு சென்று தண்டியுங்கள். எமது பொன் முழுவதையும் அவனிடமிருந்து திரும்பி வாங்குங்கள்,'' என்று ஆணையிட்டான்.

அரிமர்த்தனனது கடும் கோபம் கண்ட தண்டலாளர் அஞ்சினர். உடனடியாக வாதவூரரிடம் சென்று, ''பொன் கொடுப்பதற்கு இனி வகை என்ன? கூறும்,'' என்று சீறி விழுந்தனர்.



எதுவும் விடை சொல்லாது நின்ற அடிகள் மீது பாரமான கற்களைச் சுமத்தினர். கனம் பொருந்திய அடிகள் சிவ பெருமான் திருவடியைச் சிந்தை செய்திருந்தார். பாரம் அனைத்தையும் பரமன் பொறுத்தான். அடிகள் துன்பம் நீங்கி நின்றார்.

வாதவூரடிகளின் நிலையைத் தண்டலாளர் கண்டனர். ''இது மாயம்!'' என்று நினைத்து மிகுந்த கோபம் கொண்டு, அவரது கைகளிலும் கால்களிலும் கிட்டி போட்டு நெரித்தனர். அந்தக் கடுமைக்கும் அஞ்சாத அடிகளார் சிவபெருமான் சேவடியே சிந்தித்திருந்தார்.

அன்றிரவு வாதவூரடிகளை இருண்ட சிறைக்கூடத்திலே தள்ளி விலங்குகள் பூட்டித் துன்புறுத்தினர் தண்டலாளர்கள். பரமேசன் திருவடிகளையே தியானித்திருந்தார் இரவு முழுதும் வாதவூரர்.

விடிகின்ற நேரத்திலே சிவபக்தர்களின் திருப்பள்ளி யெழுச்சிப் பாடலின் ஒலியையும், சங்கு முழக்கத்தையும், வேத நாதத்தையும் தன் செவிகளாரக் கேட்டிருந்தார், வாதவூரர். சோமசுந்தரப் பெருமானது விமானமிருந்த திசை நோக்கிக் கைகூப்பித் தொழுதார். சிவபெருமானை நோக்கி, ''எந்தாய்! அனைத்துலகும் ஈன்றாய்! சிறியேற்கு இரங்காயோ? இன்றென்னைக் கைவிட்டாய்! அரசன் தமர் இழைக்கும் வன்கண்ணோய் பாராய், உன் தன்மை இதுவா?'' என்று மனங்குழைந்து முறையிட்டு அழுதார்.

மாணிக்கவாசகரது முறையீடு சிவபெருமானது திருச் செவியில் புகுந்தது. உடனே சிவபெருமான் வாதவூரரைச் சிறையிலிருந்து விடுவிக்கத் திருவுள்ளம் கொண்டார். நந்திகேசுவரர் முதலான கணநாதர்களை அழைத்தருளினார். அவர்கள் அனைவரும் வந்து பணிந்து நின்றனர்.

இறைவரும், ''ஆவணி மாத மூல நாள் முற்பட்டு வந்துவிட்டது. ஆதலால் இன்றைக்கு நான் முற்பட்டு, பாண்டியன் கோபம் கொள்வதற்கு முன்னரே சென்று, குதிரைகளைக் கொடுத்து விட வேண்டும். நீங்கள் எல்லாரும் காட்டில் திரியும் நரிகளை யெல்லாம் கொண்டு வந்து அவற்றைக் குதிரைகளாக்கி, அவற்றின் மீது குதிரைச் சேவகர்களாக ஏறிக் கொண்டு முன்னே செல்லுங்கள். நாமும் குதிரைச் சேவகர் போல வருகின்றோம்,'' என்று இயம்பி யருளினார்.

இறைவன் திருவாணைப்படியே சிவகணநாதர்கள் தாங்கள் பிடித்து வந்த நரிகள் எல்லாவற்றையும் ஓரிடத்தில் கொணர்ந்து சேர்த்தனர். பின்னர் அவற்றை யெல்லாம் நல்ல உயர் சாதிக் குதிரைகளாக்கி, அவற்றின் மேலேறிச் சேவகம் செய்தனர்.

கணநாதர்களான குதிரை வீரர்கள் பல்வகை உடையுடுத்தி, பல்வகைப் பணி பூண்டு; பல்வகை ஆயுதங்கள் தாங்கித் தங்கள் தங்கள் பரிகளின் மேல் ஏறி அமர்ந்தனர்.

சோமசுந்தரப் பெருமான் மந்திரியாகிய மாணிக்கவாசகர் பொருட்டல்லாமல், பாண்டியன் அரிமர்த்தனது பிறவி நோயைத் தீர்க்கும் பொருட்டுத் தாமும் ஒரு குதிரைச் சேவகனாக எழுந்தருளுவதானார். தமது திருவடியில் வீரக் கழலை அணிந்தார். திருக் கரத்திலே ஞான வாளை ஏந்தினார். அலங்காரமான உடைகளும் நவமணிகள் பதித்த ஆபரணங்களும் அணிந்தார். நெற்றியிலே திருநீறு துலங்கப் பூசினார். திருக்கோலம் காட்டி வேதக் குதிரையின் மீது எழுந்தருளினார்.

வேதக் குதிரையின் இலட்சணம் எத்தகையது? அறம் பொருள் இன்பம் வீடு என்பனவே அதன் கால்கள்; ஞான

காண்டம், கரும காண்டம் என்பனவே செவிகள்; பரம் அபரம் என்ற ஞானமிரண்டும் கண்கள்; விதியே முகம்; விலக்கே வால், ஆகமங்கள் புற அணிகள்; பிரணவமே கடிவாளம்; உபநிஷதமே அணை; பிரம்மாவின் முகங்களே அது தங்கும் லாயம். குதிரையின் காற்சிலம்புகள் ஒத்ததான பதினெட்டு வகை வாத்தியங்கள் முழங்கின.

மாயப் பரிக் கூட்டம் மேற்குத் திசையை நோக்கிக் கோலாகலமாக ஆரவாரம் செய்து புறப்பட்டது. சிவபெருமான் ஆரோகணித்த வேதப்பரி நடுநாயகமாகச் சென்றது. அசுவ சாஸ்திர இலட்சணங்கள் நிரம்பிய உத்தமக் குதிரைகள் செல்வதைக் கண்ட மக்களனைவரும் வியப்பெய்திப் பாராட்டினர். தமது இச்சா சக்தியாலே திருவுருவம் எடுத்த சிவபெருமான் இந்திரஜால மகேந்திர ஜாலம் புரிபவனாக யாவரையும் மயக்கி நடந்தருளினார்.

தாவிச் சென்ற பரிகள் ஐம்புலன்களையும் நிகர்த்தன. பரிகளை அடக்கியாண்ட சேவகர்கள் மனத்தை நிகர்த்தனர். மனங்களிலே பொருந்தி நின்ற உயிரை நிகர்த்தது வேதக் குதிரை நடத்திய இறை.

வாத்தியங்களின் பெரு முழக்கமும், குதிரைகளின் கனைப்பும், சேவகரின் ஆரவாரமும் ஒன்றுகூடி ஒலிக்க, வேதக் குதிரைப்பாகச் சிவனார் மதுரை மூதூருக்கு அரைக் காத தூரத்தில் வந்தருளினார்.

குதிரைகளின் வரவைத் தெரிந்தனர் மதுரை மாந்தர் பலர். சிலர் சிறைக்கூடத்துக்கு விரைந்து சென்று திருவாதவூரர் முன்பு நின்று, ''அமைந்த நெறி வழுவாத பெரியவரே! பல நிறம் கொண்ட ஏழு கடல்களும் எழுந்து வருவதைப் போலக் குதிரைப் பெருங்கூட்டம் வருகின்றது. இந்தச் சேதியைப் பாண்டிய மன்னனிடம் சொல்வீராக,'' என்றனர்.

வாதவூரரும் இறைவன் திருவருளைச் சிந்தித்தபடியே, பாண்டிய மன்னனிடம் சென்று தெரிவித்தார்.

அது கேட்ட மன்னன் அரிமர்த்தனன் உடல் பூரித்தான். வாதவூரருக்குப் பரிசாக விலையுயர்ந்த முத்து மாலைகளையும் பட்டாடைகளையும் தந்தான். மந்திரியர் முதலானோர் புடைசூழச் சென்று தலைவாசலை அடைந்தான். அருகிலிருந்த ஒரு மாடத்தில் தங்கிக் குதிரைகளின் வரவை மிகுந்த ஆவலோடு எதிர்பார்த்து வீற்றிருந்தான்.

சோமசுந்தரம் தமது திருவிளையாடலைக் காட்டும் பொருட்டுச் சற்றே காலந்தாழ்த்தினார். குதிரைகள் காணாத வேந்தன் சினந்து, 'இது பொய்' என எண்ணி, 'திருவாதவூரரைத் தண்டிக்க வேண்டும்' என்ற குறிப்போடு, தண்டலாளரைப் பார்த்தான். அவர்களும் பாண்டியன் நினைத்தபடியே, பழிபாவங்களுக்குப் பயப்படாத தன்மையராய் வாதவூரருக்குக் கடும் தண்டனை கொடுத்தனர்.

சிவஞானியாராகிய வாதவூரரும் சோமசுந்தரப் பெருமானை நினைந்து அவர்தம் சேவடிகளையே போற்றிக் கொண்டிருந்தார். "தேவ! தேவர்க்கரசே! சிறியேன் துன்பம் பொறுக்கவில்லை; அஞ்சேல் என்று அருளினீர்! ஆவியோடு உடலும் உம்முடையதே, என்னை உடையவரே!" என்று ஏங்கியிரந்து புலம்பி நின்றார்.

தண்டனை பெற்றுத் துடித்துப் புலம்பும் வாதவூரர் செவிகளிலே எக்காள ஒலிகள் கேட்டன. குதிரைகளின் குளம்படித் துகள் எங்கும் பரவியது. அரிமர்த்தனன் குதிரைகளின் வரவைத் தெரிந்தான். வாதவூரரை அழைத்து வரச் செய்தான். எல்லையற்ற பரிவு காட்டினான். "எமது இராஜாங்க காரியங்களை உம்மைப்போல ஏற்று

முடிப்பவர்கள் யார்?'' என்று கூறிப் பெருமகிழ்வுடன் அளவளாவினான். அதே சமயத்தில் குதிரைகள் எல்லாம் சிறந்த தோற்றம் காட்டிய சேவகர்களோடு வந்து சேர்ந்தன.

கம்பீரமும் எழிலும் சிறந்த தோற்றமும் காட்டி வந்து நின்ற எண்ணற்ற குதிரைகளைப் பார்த்துப் பிரமித்துப் போனான், பாண்டியன். அவற்றின் பொலிவிலே சொக்கிப் போனான். உவகை அவனை முழுக்காட்டியது. குதிரைச் சேவகரை வியப்போடு நோக்கினான்.

வாதவூரரைப் பார்த்து, ''இவர்களுள் தலைவர் யார்?'' என்று வினவினான்.

எல்லாம் தெரிந்த அமைச்சரோ, ''வேந்தே! நான் அறியேன்,'' என்றார்.

அப்போது குதிரைத் தலைவராக விளங்கிய சிவ பெருமான் தமது வேதப் புரவியை நடாத்திய வண்ணம் பாண்டியன் எதிரே சென்று நின்றார்.

''மன்னவா! எங்கள் குதிரையின் சிறப்பினைச் சற்றே காண்பாய்,'' என்று கூறியருளினார். தமது குதிரையினை மல்ல, மயூர, வானர, வல்லிய, சரகதிகளும், பதினெட்டு வகை விசித்திர நடை விகற்பங்களும் தோன்ற நடத்திக் காட்டியருளினார்.

பரம்பொருள் செய்து காட்டுவதைக் கண்ட சிவகணத் தலைவர்களும் தத்தம் குதிரைகளை நடத்திக் காட்டினர். அதனை யெல்லாம் கண்ட பாண்டியன் அவர்களை நோக்கி, ''உங்கள் தலைவன் யார்?'' என்று கேட்டான். குதிரைச் சேவகர்கள் சோமசுந்தரப் பெருமானைச் சுட்டிக்காட்டி, ''இவர்தாம்!'' என்றனர்.

அவரைக் கண்ட பாண்டியன் அரிமர்த்தனன் அருட்பார்வைக்கு இலக்கானான். தனது ஆசனத்தை விட்டு எழுந்தான். கைகளைத் தலை மேல் கூப்பிக் கொண்டு நின்றான். தன் நினைவு வந்ததும் தனது நிலைமையை நினைத்து வெட்கப்பட்டான்.

அவ்வாறு வெட்கமடைந்து நிற்கும் பாண்டியனைப் பார்த்தார் பரம்பொருள். ''மன்னவனே! உனது சொல் தவறாத வாதவூரர் உன் பொருளை யெல்லாம் கொணர்ந்து தாமாகவே எனக்கும் எனது ஆட்களுக்கும் ஏராளமாக வழங்கினார். அதன் காரணமாகத்தான் தேவர்களுக்கல்லாமல் மனிதருக்குக் கிடைப்பதற்கரியனவும், விலை குறிப்பதற்கரியனவும், அசுவ சாஸ்திர இலட்சணத்திற்கு இயைந்தனவுமான நல்ல குதிரைகள் உனக்காக வந்தன. இன்று நீ என்னிடமிருந்து கயிற்றை மாற்றிக் கொண்டு விட்டால், இக் குதிரை களெல்லாம் உன்னுடையனவாகி விடும். இதுவே முறை. நாளைக்கு எது நேர்ந்தாலும் எனக்கும் உனக்கும் அது குறித்து யாதொரு வழக்கும் கிடையாது. இதுவே குதிரை வாணிகத்துப் பழக்கம்,'' என்று மொழிந்தருளினார்.

பாண்டியன் மிக மகிழ்ந்து உடன்பாடு கொண்டான்; வாதவூரரைப் பெரிதும் பாராட்டினான்.

குதிரைச் சேவகனாகிய கடவுள் கயிறு மாறிக் கொடுப்பதற்கு முன்பு புரவி இலக்கணங்களைப் பற்றிப் பொதுப்படையாகக் கூறினார். ஓரிக்கடும் பரிகள் ஒப்பற்ற வேகமுடையன என்றும், போர் புரியும் காலம் வந்தால் மதிலையும் தாண்டிச் செல்லும் என்றும், பலகணி வாயிலும் நுழைந்து செல்லும் என்றும், கொடிய பசி வந்தபோது வைக்கோல் முதலியவற்றையும் தின்னும் என்றும் சொல்லி வைத்தார்.

பின்னர்ப் பாடலம், கோடகம், இவுளி, வன்னி, குதிரை, பரி, கந்துகம் ஆகிய துரக வகைகளையும், அவற்றின் இலக்கணங்களையும், இயல்புகளையும், போர் புரியும் தன்மைகளையும், கதிகளையும் மிகவும் விளக்கமாகப் புகன்றருளினார். இவ்வளவும் கூறிச் சிவபெருமான் தமது கணத்தாரின் முகத்தைப் பார்த்தார்.

சேவகர்கள் அனைவரும் தத்தம் குதிரைகளை வேகமாக நடத்திக் காட்டினார்கள். பாண்டிய வேந்தன் கண்டு வியந்தான். தன்னைச் சூழ்ந்தோரையும் அமைச்சரையும் பார்த்துப் பெருமகிழ்வு தெரிவித்துக் கொண்டான்.

சிவபெருமானும் தனது குதிரையை- வேதப்பரியை- இடதுசாரி வலதுசாரியாகவும், வட்டமிட்டும் வேகமாக நடத்திக் காட்டினார். எல்லாம் முடிந்ததும் பாண்டியனின் முன் தமது சேவகர்களுடன் வந்து நின்றார்.

பின்னர் வேதப் பரிவீரர் வழுதிக்குக் குதிரைகளின் நாடுகளைப் பற்றி விவரமாகக் கூறினார். பல்வேறு இருபத்தைந்து நாடுகளிலிருந்து வந்தவை என்றும் விளக்கமாக மொழிந்தார். ஒவ்வொரு இனத்தையும் சுட்டிக்காட்டி, அவற்றின் நாட்டினையும் குறிப்பிட்டுச் சொன்னார். மேற்கொண்டு குதிரைகளின் நிறங்கள் பற்றியும், அவற்றுள் அஷ்டமங்கல பஞ்சகல்யாணி வகை பற்றியும் எடுத்துரைத்ததோடு, அவற்றின் சுழிகளையும் பயனையும் பற்றி விளக்கம் செய்தார். இறுதியாக உத்தமக் குதிரையின் இலக்கணத்தையும் கூறியருளினார்.

பாண்டியன் அக் குதிரைகட்கெல்லாம் அழகான கிண்கிணி மாலை, சதங்கை, சிலம்பு முதலியன அணிவித்தான். மலர் மாலை சூட்டிச் சந்தனம் இட்டான்.

தூபதீபம் காட்டி வழிபட்டான். வேதப்பரிவீரர் சோமசுந்தரப் பெருமானை நோக்கிக் கைகூப்பி, "வழுதி வாழ்க!" என வாழ்த்தித் தாம் அமர்ந்து வந்த வேதப்புரவி தவிர ஏனைய மாயக்குதிரைகள் அனைத்தையும் கயிறு மாறிப் பாண்டியன் கையில் கொடுத்தருளினார். பாண்டியன் குதிரைகளை ஏற்றுக் கொண்டு, தனது சேவகர்கள் கையில் கொடுத்தான். அவர்களும் குதிரைகளை இட்டுச் சென்று அரண்மனையைச் சார்ந்த பெரிய புதிய குதிரைப் பந்தியிலே சேர்த்தார்கள்.

குதிரை வணிகராக வந்த இறையவருக்குப் பாண்டியன் வெண்பட்டாடை யொன்றைப் பரிசாகக் கொடுத்தான். பெருமானும் குதிரையிலிருந்து இறங்கியருளி, அப் பட்டினை ஏற்றுத் தமது திருமுடியிலே சூட்டிக் கொண்டார். சிவபெருமானது எழுந்தருளி வந்த தன்மையைக் கண்ட கணத்தார்கள் தமக்குள்ளே வெகுண்டு பேசிக் கொண்டார்கள்.

அரிமர்த்தன பாண்டியன் ஏனைய குதிரை வீரர்களுக்கும் பல்வேறு நிறங்கள் காட்டும் பட்டாடைகளைப் பரிசாக அளித்தான். ஆடைகளை அவர்கள் ஏற்றுக் கொண்ட பின்னர், சோமசுந்தரப் பெருமான் தனது வேதக் குதிரையுடன் மறைந்தருளினார். கணநாதர் சேவகர்களும் உடன் மறைந்தனர்.

தனது இருமைக்கும் துணை செய்து நின்ற திருவாத வூரருக்குப் பாண்டிய மன்னன் அருஞ்சிறப்புகள் பல செய்தான். அவருக்கு விடைகொடுத்து அனுப்பிய பின்னர் மத்தியான நேரத்தில் அரண்மனை சேர்ந்தான்.


மந்திரிகளும், குதிரைகளைக் காண வந்த ஊர் ஜனங்களும் தங்கள் தங்கள் இடம் சென்றனர்.

சோமசுந்தரப் பெருமான் தமது திருக்கோவிலை அடைந்தார். தமது திருவிளையாடல்கள் எல்லாவற்றையும் மீனாட்சியம்மையாருக்குக் கூறியருளினார்.

60. பரியை நரி ஆக்கியது

மங்கல வாத்தியங்கள் பல இயம்பின. சேனைகள் ஆரவாரித்தன. மகளிர் அஷ்ட மங்கலப் பொருள்கள் தாங்கி எதிர்வந்தனர். அரிமர்த்தன பாண்டியன் கொடுத்த பலவகைச் சிறப்புகளுடனே தனது திருமனை சேர்ந்தார் வாதவூரர். அதுசமயம் தன்னை வந்து வினாவியவர்கட்கெல்லாம் இன்மொழி புகன்றார்.

அனைவரையும் அவரவர் வீட்டிற்குச் செல்ல விடுத்த பின், தான் ஒரு தனியிடத்தே அமர்ந்து சிந்திக்கலானார். 'சோமசுந்தரப் பெருமான் நாம் வேண்டிக் கொண்டபடியே குதிரை வாங்கும் பொருட்டு நாம் கொண்டு சென்ற பொருளனைத்தையும் தமது அடியார்களும் தாமுமாகக் கைக்கொண்டார்; எளியேனையும் பணி கொண்டு, பிறவிப் பிணியைப் போக்கி அருள் செய்தார். மேற்கொண்டு பாண்டியனது உளத்திற் கிசைந்த நல்ல குதிரைகளையும் கொணர்ந்து, இனிக் கவலையே இல்லை என்று ஆகுமாறு செய்தருளினார். இனி யான் சிவானந்தானுபவத்திலே எப்போதும் நிலை நிற்குமாறு நம்மைத் தவ வழியில் செலுத்துதல் வேண்டும்,' என்ற பேரவாக் கொண்டார். இருமை இன்பங்களிலும் பற்று சிறிதேனும் இன்றிச் சோமசுந்தரப் பெருமானின் திருவடிகளையே தமது உள்ளத்தில் பதித்திருந்தார்.



பிற்பகல் சாய்ந்தது; மாலை வந்தது; மாலை மயங்கியது; இரவு வந்தது. நள்ளிரவு நேரம். அரிமர்த்தன பாண்டியனது அரண்மனைக் குதிரைப் பந்தியிலிருந்த குதிரைகள் எல்லாம் சிவபெருமான் திருவிளையாட்லால் தமது சுயமான நரி உருவத்தை எடுத்துக் கொண்டன.

நரிக் கூட்டங்கள் தப்பியோட ஆரம்பித்தன. அவை பெருத்த ஊளையிட்டுத் திரிந்தன. லாயத்திலே கட்டப் பட்டிருந்த உண்மையான குதிரைகளைக் கடித்துக் குதறி இரத்தம் குடித்தன. கடிபட்டு இன்னலுற்ற குதிரைகள் ஓலமிட்டன. நரிகளின் ஊளையும் குதிரைகளின் பயங்கரக் கனைப்பும் சேரக் காவலாளர் திடுக்கிட்டு எழுந்தனர்.

முன்தினம் உத்தமக் குதிரைகளாக வந்தவை எல்லாம் அப்போது நரிகளாகி மற்றக் குதிரைகளின் குடலைப் பிடுங்கித் தின்று கொண்டிருப்பதைப் பார்த்தனர்.

காவலர்கள் எழுந்து வருவது கண்ட நரிகள் மதில்களைத் தாண்டியோடின; சாளரத்தின் வழியே பாய்ந்தோடின; நுழை வாசல் வழியாகவும், தமக்குச் சந்து கிடைத்த இடங்கள் மூலமாகவும் ஓடிச் சென்றன. லாயத்திலே எஞ்சிக் கிடந்தவை- நொண்டி நரிகளும், நோய்கண்ட நரிகளும், குருட்டு நரிகளும் கிழட்டு நரிகளும்தான்.

குதிரைப் பந்தியிலிருந்து வெளிப்பட்ட நரிகள் எல்லாம் குளங்கள், தோட்டங்கள், தருமசாலைகள், தெருக்கள், ஆலயங்கள், சந்திகள் எல்லாவற்றிலும் பரவி ஊளையிட்டுத் திரிந்தன.

இன்னிசைக் கருவிகளின் ஒலியும், இன்பத் தமிழோசையும், வேத நாதமும் மண்டிக் கிடக்கும் மதுரையம்பதியிலே நரிகள் ஊளையிடுகின்ற அவல ஒலியே

அன்றிரவு மலிந்தது. மக்கள் அனைவரும் துயில் நீங்கி எழுந்து விட்டனர். நரிகள் செய்த இன்னலுக்கு ஓர் அளவே கிடையாது. பல தெருக்களிலுள்ள பல வீடுகளில் புகுந்து பெருந்துன்பம் விளைத்தன. பல பொருள்களை நாசம் செய்தன. புறா, கிளி, கோழி ஆகிய பறவைகள், ஆட்டுக்குட்டி, பன்றிக்குட்டி ஆகிய மிருக வகைகள் ஆனவற்றைக் கொன்று தின்றன. நள்ளிரவு நேரத்திலே எங்கும் ஒரே அமளி நிலவியது. கோட்டை வாசல்கள் திறக்கப்பட்டதும் நரிகள் எல்லாம் ஊரை விட்டோடிக் காட்டுக்குள் சென்று மறைந்தன.

ஒருவாறாக விடிந்தது. குதிரை லாயக் காவற்காரர்கள் மிகுந்த பயமடைந்து, பாண்டியனது சபையை அடைந்தனர்; மன்னனை வணங்கி நடுக்கத்துடன் பதுங்கி நின்று, "வேந்தே! நேற்று அழகான தோற்றம் கொண்டு நல்ல குதிரைகளாக வந்தனவெல்லாம் நரிகளாக மாறி ஏற்கனவே லாயத்திலுள்ள குதிரைகளுக்கு யமனாக ஆயின. ஊர் முழுதும் பெருந் தீங்கு இழைத்துவிட்டுக் காட்டுக்கு ஓடிப் போய்விட்டன!" என்று கூறினார்கள்.

பந்திக் காவலர் சொன்ன அவலச் சேதி மன்னனுக்குக் கடுங் கோபத்தை உண்டாக்கியது. அவனது கண்கள் சிவந்தன; சீறினான். அதுகண்ட மந்திரிகளும் அச்சம் கொண்டனர்.

முதல் நாளிலே குதிரைகளைக் கண்டு பேரானந்தம் எய்திய அரசன் அதே குதிரைகள் திரும்ப நரிகளாகி ஓடிவிட்டன என்பது கேட்டுத் துக்க சாகரத்துள் மூழ்கினான். பின்னர்ப் பக்கத்திலிருந்த மற்ற அமைச்சர்களைப் பார்த்து, "அமைச்சர்களே! வாதவூரன் இருள் மனம் கொண்ட கள்வன் என்பது தெளிவாகி விட்டது. நமது பொருள் எல்லாவற்றையும் கவர்ந்து கொண்டு விட்டான்; நரிகளை

யெல்லாம் பரிகளாக மாற்றி நம்மிடம் வரச்செய்தான். என்ன மாயம் செய்துவிட்டான் பார்த்தீர்களா? வாதவூரனை என்ன செய்யலாம்?'' என்று கேட்டான். மந்திரிகளோ, ''வாதவூரன் செய்தது பெரும்பாவம், கடுங்குற்றம், அவன் செய்ந்நன்றி கொன்றவன். நாங்கள் சொல்வதற்கு என்ன இருக்கிறது?'' எனக் கூறித் தலை கவிழ்ந்து நின்றனர்.

மாணிக்கவாசகரோ அப்போது ஞானப் பேரின்பக் கடலுள் மூழ்கியிருந்தார். 'மன்னன் மனத்திற்குகந்த உத்தம ஜாதிக் குதிரைகளை அளித்துக் கவலையை ஒழித்தோம்,' என்றெண்ணிக் களிப்பு மிகுந்த உள்ளத்தோடு இருந்தார். நிகழ்ந்த வினை எதுவும் தெரியாதவராகி வேந்தனிடத்தே சென்று நின்றார்.

அரிமர்த்தனன் வாதவூரரைச் சினத்துடன் பார்த்து, ''அமைச்சரே! நன்று செய்தீர்! அளவிட முடியாதபடி எனது பொருளைக் கொண்டு சென்று குதிரைகளாகக் கொணர்ந்து நேர்த்தியாகக் கொடுத்தீர்! உம்மைப் போன்று ராஜகாரியம் செய்து முடிப்பவர் யார்?'' என்று சீறினான். ''ஏன்? குதிரைகளுக்கு என்ன குற்றமோ?'' என்று வினாவினார் வாதவூரர்.

'குற்றமா? குற்றம் ஏதும் உண்டோ? நடுராத்திரியிலே அவையெல்லாம் நரிகளாக மாறியது போதாதா? குதிரைகளின் குடலைப் பிடுங்கித் தின்றது போதாதா? ஊரெங்கும் ஊறு விளைத்து ஊளையிட்டுத் திரிந்து அவலம் செய்தது போதாதா? இவ்வளவு நாட்கள் நல்லவனைப் போல நடந்துகாட்டிப் பாசாங்கு செய்ததெல்லாம் என் பொருளைக் கவர்ந்து கொள்வதற்காகத்தானா? உனது மந்திரி வேலை மிக நன்றாக இருக்கிறது! புனிதமான பிராமண

குலத்தில் தோன்றிய பெருமை வேறு உனக்கு!'' என்று கடிந்து, தண்டலாளர்களைப் பார்த்து, ''இவனைக் கொண்டு செல்லுங்கள், எங்கும் போகவிடாதீர்கள், என்ன உபாயம் செய்தேனும் நமது பொருள் அனைத்தையும் வாங்குங்கள்!'' என்று உத்தரவிட்டான்.

கால தூதரை நிகர்த்த தண்டலாளர், உடனே தரும மூர்த்தியான திருவாதவூரரைப் பிடித்திழுத்துச் சென்றனர். உச்சி வெயிலிலே சூரியனைக் காணும்படி அசையாமல் நிற்கச் செய்தனர். அவரது நெற்றியிலும் கைகளிலும் கல்லை ஏற்றித் துன்பம் செய்தனர்.

துன்பம் பொறுக்க முடியாத வாதவூரடிகள் கீழே விழுந்தார். ஞாயிறு, திங்கள், நெருப்பு என்ற மூன்று சுடர்க் கண்களுடைய சிவபெருமானை விளித்துத் துதிக்கலானார். ''நாதனே! வேதனே! காலனைக் காய்ந்தவனே! வேதப் பரியேறும் சேவகனே! என்னைக் காவாயோ?'' என்றெல்லாம் முறையீடு செய்தார்.

சோமசுந்தரப் பெருமான் திருச்செவி சாய்த்தருளினார். அவரது மனம் நெகிழ்ந்தருளியது. பரமபக்த சிகாமணியான மாணிக்கவாசகரைக் காக்கத் திருவுளம் கொண்டார்.

வையையாறு பெருவெள்ளம் கொண்டு பெருக்கெடுத்துப் பரவிவரல் வேண்டுமெனத் திருவுளம் கொண்டார் சிவபெருமான். இறைவனது திருவுளக் குறிப்பை உணர்ந்த வையையும் பெருவெள்ளம் புரட்டிப் பேரோசையுடன் வந்தது. நதி, கரைகளை யுடைத்துக் கொண்டு, பாய்ந்தது. மரங்களை வேரோடு தூரோடு பறித்து அடித்துச் சென்றது. கரும்பு, வாழை, நெல் ஆகிய பயிர்களையெல்லாம் வாரி விழுங்கிச் சென்றது. இரைச்சல் செய்து பொங்கிப் பெருகி

நுரைத்துக் கலங்கி வந்த வையையாற்று வெள்ளம் மதுரைமா நகரத்தின் மதிலுக்குப் பக்கத்திலே வந்து பல வீடுகளையும் குடிசைகளையும் புரட்டித் தள்ளிச் சென்றது. மதிற் சுவரையும் தாண்டி ஊருக்குள்ளே புகுந்து விட்டது. வெள்ளம் பல தெருக்களையும் சூழ்ந்து கொண்டது.

வையையின் செய்கை கண்ட நகரத்து மாந்தர் எல்லாரும் பயந்து நடுங்கினர். செய்வது இன்னதென்பது தெரியாமல் ஏங்கித் தவித்தனர். ''இவ்வூர் இன்னல் கடலுள் மூழ்கக் காரணம் என்ன? நேற்றிரவுதான் நரிகள் கடும் துன்பம் இழைத்தன. என்றும் இவ்வளவு பெருகாத நதி ஏன் இப்போது பெருகித் துன்பம் செய்கிறதோ? பாண்டிய மன்னன் செங்கோல் நெறி தவறி விட்டானோ? சோமசுந்தரப் பெருமானின் திருவிளையாடலா?'' என்றெல்லாம் பலபடியாகத் தமக்குள் ஐய வினாக்களை எழுப்பிக் கொண்டு, அவதிப்பட்டனர். ''சிவ பெருமான் அருள் புரிந்தாலல்லாமல் இவ்வையை யாறு அடங்கப் போவதில்லை!'' என்றே பலர் கூறினர்.

வெள்ளம் புகுந்து பெருகி வருவதைக் கண்ட தண்டலாளர்களும் தத்தம் உடைமைகளைப் பாதுகாக்க எண்ணி வாதவூரரை விட்டுச் சென்றனர். விடுதலை பெற்ற திருவாதவூரர் திருக்கோவில் சென்றார். சோமசுந்தரப் பெருமானைத் தரிசனம் செய்தார். பக்திச் சுவை நனி சொட்டச் சொட்டத் தமிழிசையால் பெருமானைத் தோத்திரம் செய்து வணங்கினார். பேரின்பக் கடலுள் மூழ்கி இருந்தார்.

61. மண் சுமந்தது

வையையாற்றின் வெள்ளப் பெரும் பரப்பிலே அகப்பட்டு மதுரை மூதூர் பெரிதும் துன்பம் அடைவதைக் கண்டான் பாண்டியன் அரிமர்த்தனன். உடனே, தனது மந்திரிகளை அழைத்தான். ''நீங்கள் சென்று வையையாற்றங் கரையைக் கட்டி வெள்ளத்தின் வேகத்தையும் போக்கையும் மட்டுப்படுத்தி வாருங்கள்,'' என்று ஆணையிட்டான்.

அமைச்சர்களும், ''அப்படியே நன்று,'' என்று சொல்லித் தொழுது சென்றனர். பல வகைப்பட்ட குடிகளைக் குறிப்பிட்டுப் பெயர்களை எழுதிக் கொண்டனர். எல்லை கோலிய பின்னர் அடைக்க வேண்டிய பங்குகளைக் குறிப்பிட்டு, ''அவரவர் பங்குகளை அடையுங்கள்,'' என்று பறைசாற்றி யழைத்தனர். வீட்டுக்கொரு கூலியாளாக வந்தவர்களை யெல்லாம் ஓரிடத்திலே கூட்டி, ''அவரவர் எல்லைக்குட்பட்ட பகுதிகளை விரைவாக அடைத்து விடுங்கள்,'' என்று ஆணையிட்டு அவரவர்களிடத்திற்கு அவரவர்களைப் போகச் சொல்லினர்.

அது சமயம் வையை யாற்றின் கரையிலே மண் வெட்டியாளரும், கூடைக்காரரும், மரங்கள் சுமந்து வருபவர்களும், தழைகள் வைக்கோல் எடுத்து வருவோரும் வந்து மண்டினர். உடைபட்ட கரையோரங்களிலே மரங்களைக் கொண்டு நிறுத்தினர்; வைக்கோல் பிரியைக் கொண்டு மரத்தடியில் கிடத்தினர்; தாழைகளிட்டு நிரப்பினர்; மண்ணை வெட்டி எடுத்துச் சென்று விரைவாகக் கொட்டி நிரப்பினர். வையை அன்னையை வேண்டிக் கொண்டு மண்ணை வெட்டினர்.



சிலர் பறையடித்தனர்; சிலர் குரவையிட்டு ஆடினர்; சிலர் வேலை செய்வோரை அதட்டித் துரிதப்படுத்தினர். இப்படியாக நகர மாந்தர் சார்பாகப் பலதிறப்பட்ட கூலியாட்கள் வந்து அவரவருக்கு உற்ற அளவு முறைப்படி தொழில் புரிந்தனர்.

மதுரையம்பதியின் தென்கிழக்குத் திசையிலே வந்தி என்ற பெயருடைய கிழவி இருந்தாள். அவள் ஆயிரம் பிறை கண்டவள்; கூனுடையவள்; நரைதிரை மூப்புக் கொண்ட பெரியவள். சிவனடியார்களைக் காட்டிலும் சிறந்த தவமுடையவள். அவள் சுவையான பிட்டு ஆக்கி விற்றுப் பிழைக்கும் பாங்கினள். உற்றாரோ உறவினரோ எவருமற்ற தனியாள். ஒவ்வொரு நாளும் தான் அவித்த பிட்டை ஆலவாய்ச் சொக்கருக்கு நிவேதனம் செய்து பின்பே விற்பனை செய்வாள்.

தனக்கென்று விடப்பட்ட பகுதியை அடைப்பதற்குக் கூலியாள் கிடைக்காமல் பெரிதும் வருந்திக் கொண்டிருந்தாள் வந்தி. ''மன்னன் தண்டனை தந்தால் நான் என்ன செய்வது?'' என்று உளம் கலங்கிச் சோமசுந்தரப் பெருமானை நினைத்து, ''ஆலவாய் அண்ணலே! பிட்டு விற்றுப் பிழைக்கும் ஏழை நான். மன்னவன் ஆணை எனக்குத் துன்பம் தருகிறது. நானோ யாருமற்ற அனாதை. எனக்குத் துணையோ, உறவோ எதுவும் கிடையாது. நான் என்ன செய்வேன்? எனக்கொரு கூலியாள் கிடைக்க மாட்டானோ?'' என்று ஏங்கி அழுது வருந்தினாள்.

வந்தியின் சோகக் குரலுக்குச் செவி சாய்த்த சோமசுந்தரப் பெருமானும் ஒரு கூலியாளாகித் தம் திருக்கோவிலை விட்டு வெளியே வந்தார். அழுக்குப் பிடித்த பழைய துணியை இடுப்பிலே அணிந்திருந்தார். சும்மாடு வைத்து அதற்கு மேல்

ஒரு கூடையைக் கவிழ்த்திருந்தார். தோளின் மீது மண்வெட்டியைச் சுமந்திருந்தார். வேதாந்தத் திருவடிகள் தரை தோய நடந்து வந்தார். ''கூலி தந்து என்னை வேலைக்கு வைத்துக் கொள்பவர் உண்டோ?'' என்று கூவிக் கொண்டே, வந்தி வாழ்ந்த வீதியிலே வந்து தோன்றினார்.

யாருமற்ற அனாதையான வந்தி, கூலிக்காரன் குரலைக் கேட்டுப் பெரிதும் மகிழ்ச்சி கொண்டாள். அருகே வந்து நின்ற தாயினும் பெரிய தயாபரனான தெய்வக் கூலியைப் பார்த்து, ''எனது பங்குக்கு விடப்பட்ட கரையை அடைத்துத் தருவாயா?'' என்று வினாவினாள்.

''அம்மையே! அடைத்துத் தருவேன். எனக்கு என்ன கூலி தருவாய்?'' என்று இறையவர் எதிர் விளம்பினார்.

''நான் விற்பனை செய்யும் பிட்டையே உனக்குக் கூலியாகத் தருவேன்,'' என்றாள், வந்திக் கிழவி.

''நிரம்ப எனக்கு இப்போது பசியாக இருக்கிறது. உதிர்ந்த பிட்டை யெல்லாம் எனக்குத் தந்துவிடு. அதை உண்டு நான் சற்று இளைப்பாறி விட்டு உனது பங்கை அடைத்துத் தீர்ப்பேன்,'' என்றார் கடவுட் கூலியாள்.

வந்தியும் உதிர்ந்த பிட்டை அள்ளிக் கொடுத்தாள். பெருமானும், ''பிட்டு நிரம்ப நன்றாக இருக்கிறது. இது சோமசுந்தரப் பெருமானுக்கே உகந்ததாகும்!'' என்று சொல்லி, அம் மூதாட்டியினது பக்தியுடன் கலந்து அதனை உண்டார். ''அப்பனும் அம்மையும் இல்லாத எனக்குப் பரிவுடன் பிட்டுண்பித்த அன்னையே! இனி நான் வேலை செய்யப் போகிறேன்,'' என்று சொல்லிச் சென்றார்.

ஆற்றங் கரையை அடைந்த திருக்கூலியாள், ''நான் வந்திக் கிழவியின் கூலி,'' என்று தம்மைக் குறித்துக் கொள்ளுமாறு செய்து, கரையை அடைக்கத் தொடங்கினார். மண்ணை வெட்டுவார். கூடையில் போட்டுத் தலைமேலே வைத்துக் கொள்வார். கனம் என்று நினைத்துக் கீழே கொட்டி மறுபடியும் குறைத்து எடுத்துக் கொள்வார். சும்மாட்டை விழச் செய்வார். அதனைத் தலையிலே இறுக்கிக் கட்டிக் கொள்வார். பிறகு விரைந்து சென்று மண்ணைக் கரையிலே கொட்டுவார்.

இப்படி இரண்டு முறை செய்ததும் களைப்பு மேலிட்டு விடும். உடனே, அருகேயிருந்த மர நிழலை யடைந்து படுத்து விடுவார். திடீரென்று தூக்கத்திலிருந்து விழித்தெழுந்தார், எழுந்ததும் கூத்தாடினார், பாட்டுப் பாடினார், மணலைக் குவியல் செய்து இங்குமங்கும் தாண்டினார். பித்துப் பிடித்தவர் போலச் சும்மா இருந்தார். மீண்டும் மீண்டும் பசி கொண்டவராகப் பிட்டு வாணிச்சியிடம் சென்று பிட்டு வாங்கி உண்டார். இடையிடையே கரையை அடைப்பதிலே அளவற்ற அக்கறை காட்டுபவர் போல நடித்தார். மண்ணைத் தொடுவதும் எடுப்பதும் கூடையில் போடுவதும் நடப்பதும் இடறுவதும், மண்ணைக் கூடையோடு தண்ணீரில் போடுவதும், கூடையை நீந்தி எடுத்து வருவதுமாக என்னவெல்லாமோ கூலிக்குப் பொருந்தாச் செய்கைகளாகச் செய்து கொண்டிருந்தார். தண்ணீரிலே நீந்துவதே ஒரு பெருவிளையாட்டாகக் கொண்டார். பெருமூச்சு விடுவார்; தள்ளாடி நின்று கலங்குவார். மடியிலுள்ள பிட்டைத் தானும் தின்று பிறருக்கும் ஈவார். அனைத்தையும் கடந்த பரம்பொருள் மிகவும் எளிமையாகி வந்த தன்மையிலே உலகத்துச் சாதாரண மக்களோடு இயைந்து பழகும் கூலியாளாகத் திருவிளையாடல் செய்தருளினார்.

வேலை வாங்குவோர் பிரம்பும் கையுமாக அகப்பட்ட கரைப் பகுதிகளைப் பார்த்துச் சென்றனர். கரையினைச் சரி பார்த்துக் கொண்டு வந்த ஏவலாளர்கள் வந்தியின் பங்கு இன்னமும் அடைபடாதிருப்பதைக் கண்டு கொண்டனர். மிகவும் கோபம் கொண்டு, ''வந்தியின் கூலியாள் யார்?'' என்று வினாவினர்.

பின்னர்த் தெய்வக் கூலியாளைப் பார்த்து, ''தம்பி! எல்லாப் பங்குகளும் அடைபட்டிருக்கின்றன. உன் பங்கு மட்டும் ஏன் இன்னமும் அடைபடவில்லை? காரணம் என்ன?'' என்று கேட்டனர்.

அதற்கு விடையாக ஆலவாய் அண்ணல் கருவத்துடன் ஏதும் பேசாமல் நின்றார். வெள்ளம் அடுத்த கரையை இடித்துத் தள்ளிச் சென்றது. அதைப் பார்த்தும் கூலியாள் ஏதும் செய்யவில்லை. கூலியாளின் கட்டழகிலே மயங்கிய பிரம்பாளர்கள் அடிக்கப் பயந்தனர்.

''இவன் என்ன பித்தனா? எத்தனா? சித்தனா? இந்தப் பேரழகன் ஏன் கூலியாளாக வந்தான்? இவனது உடலைப் பார்க்கும்போது கூலிக் குழைப்பவன் அல்ல என்றே தெரிகிறது. வேலைக்கு முன்பே கூலி வேறு வாங்கி விட்டான்! வேலையும் செய்யக் காணோம். நம்மையும் மதிக்காமல் இருக்கிறான். இவனைப் பற்றி மன்னவரிடம் விண்ணப்பம் செய்வதே முறை,'' என்று எண்ணிப்போயினர்.

பாண்டியன் முன் சென்று பணிந்து நின்று, ''வேந்தே! எல்லாரும் அவரவர் பங்குக் கரையுடைப்பை அடைத்து விட்டனர். வந்தியின் கூலியாள் மட்டும் இன்னமும் அடைக்கவில்லை. அழகிற் சிறந்த மேனியனாக அந்தக்

கூலியாள் ஒரு ராஜகுமாரனைப் போல் ஆடியும் பாடியும் ஓடியும் சாடியும் பொழுது போக்கிக் கொண்டிருக்கிறான். வேலையைப் பற்றிக் கொஞ்சமும் கவலை கொள்ளவில்லை. ஐயனே! சொக்கழகு கொண்ட அவனைக் கோலால் அடிக்க மனம் வரவில்லையே!'' என்று செப்பினர்.

பாண்டியன் விரைந்து எழுந்தான். மந்திரிமார் உடன்வர வையையின் கரையினை அடைந்தான். கரை சரியாக அடைபட்டு உயர்ந்திருக்கிறதா என்று பார்த்துக் கொண்டே வந்து மகிழ்ந்தான். பார்த்து வரும்போது இடையே வந்தியின் பங்கு அடைபடாமலிருப்பதையும் அடுத்த கரையையும் வெள்ளம் கரைத்து இடித்துச் செல்வதையும் கண்டான். கடும் கோபம் கொண்டான் பாண்டியன்.

''இக்கரையடைப்பவன் எங்கே?'' என்று சீறினான். மன்னன் சினம் கண்டு பயந்த கோலாளர் பரம்பொருட் கூலியாரின் கைகளைப் பிடித்து இழுத்துக் கொண்டு வந்தனர்.

''இவனே வந்தியின் கூலியாள்,'' என்று கூறி மன்னவன் முன்பு நிறுத்தினர்.

அரிமர்த்தன பாண்டியன் கூலியாளைக் கண்டு கோபித்தான். தனது பொற்பிரம்பைக் கையிலெடுத்து, அண்டபிண்ட சராசரங்களையும், சமஸ்தலோகங்களையும், ஸஜீவ நிர்ஜீவ வஸ்துக்களையும் தனது பெருந் திருமேனியாகக் கொண்ட இறைவனது முதுகிலே ஓங்கி அடித்தான். உடனே அனைத்துள்ளும் நிறைந்த சோமசுந்தரப் பெருமான் கூடையுடன் மண்ணைக் கரையுடைப்பிலே கொட்டி விட்டு மறைந்தருளினார்.

இறைவன் முதுகிலே பட்ட அடி எங்கும் பட்டது. பாண்டியன் முதுகிலே, மந்திரிமார் முதுகிலே, வீரர் முதுகிலே, ஏவலர் முதுகிலே, அரசியர் முதுகிலே, ராஜகுமாரர் முதுகிலே யெல்லாம் பட்டது. ஐம்பெரும் பூதங்கள் மேலும் ஈரேழு பதினாலு புவனங்கள் மீதும் பிரம்ம விஷ்ணு இந்திராதி தேவர்கள் மேலும் பட்டது. அடிபட்ட அனைத்தும் கலங்கின, மயங்கின. கூடற் பெருமானின் திருவிளையாடல் நன்கு விளங்கியது.

திருமேனியிலே பிரம்படி பட்டதும், ஒரு கூடை மண்ணைக் கொட்டி, உடைப்பை நிரப்பிக் கரையைக் கட்டி உயர்த்திய பின் மறைந்தருளிய இறைவனது அரும்பான்மையைக் கண்ட மன்னனது கோலாளர், வந்திக் கிழவியினிடம் சென்று, "வேந்தரிடம் வருக," என்று செப்பினர்.

அரசனது ஆணையாளர் சொல்கேட்ட கிழவி பயந்தாள். "பாண்டியனால் என்ன துன்பம் விளையுமோ?" என்று கவன்று, சோமசுந்தரப் பெருமானை வேண்டித் துதித்தாள்.

அதே சமயத்தில் வானத்திலிருந்து சிவகணத்தவர் ஒரு விமானத்துடன் இறங்கி வந்தனர். "அம்மையீர்! வருக!" என்று வந்தியாரை விமானத்திலே அமர்த்திக் கொண்டு சிவலோகம் சென்றனர். அப்போது தேவர்கள் பூ மழை பொழிந்தனர். இன்னிசை முழங்கியது. வேதநாதம் ஒலித்தது.

நடந்தேறிய நிகழ்ச்சிகளை யெல்லாம் கண்டு வியந்து ஓர்ந்த அரிமர்த்தன பாண்டியன் மனத்திலே சந்தேகம் கொண்டு நின்றான். அது சமயம் மண்சுமந்து கூலி கொண்டு அக்கோலால் மொத்துண்டு புண் சுமந்த பொன்மேனிப்

பிரான் வானத்திலே நின்று அனைவரும் கேட்கும் வண்ணம், ''செங்கோற் பாண்டிய! உன் பொருள்களனைத்தும் அறவழியிலே தொகுக்கப்பட்டுத் தூய்மையாக விளங்கியவை. அவையனைத்தும் நமக்கும் நம்முடைய மெய்யன்படியார்களுக்கும் திருவாதவூரன் பக்தியுடன் கொடுத்தான். அத் தன்மையை உணரமாட்டாத நீ அவனை மிகவும் துன்பப் படுத்தினாய். அதுகண்டு பொறாத நாம் நரிகளைப் பரிகளாக்கினோம்; பரிகளை மீண்டும் நரிகளாக்கினோம். மறுதினமும் வாதவூரனைக் கொடுமைப் படுத்தினாய். அது பொறுக்காத நாம் வையையிலே வெள்ளம் பெருகச் செய்தோம். வந்தியின் கூலிக்காரனாக வந்தோம், பிட்டுண்டோம்; பிரம்படி பட்டோம். இவ்வளவும் நாம் செய்தது திருவாதவூரன் பொருட்டாகத்தான். வாதவூர் வேதியன் தன்மையை நீ சற்றேனும் அறிந்து கொள்ளவில்லை. அவன் எம்மிடம் பக்தி வைத்துச் செயல் புரிந்ததாலே உனக்கு இருமையின்பத்தையும் ஒருங்கே தேடிவைத்த பெருந்தகையாவான். அவன் எல்லா வகைப் பற்றையும் விட்டொழித்தவன். வாதவூரனை அவனது விருப்பத்தின்படிக்கே நடக்குமாறு விட்டுவிடுக. நீயும் 'கனமதுர நீள் சௌக்ய சகல செல்வ யோகமிக்க பெருவாழ்வு' வாழ்ந்திருப்பாயாக!'' என்று இயம்பியருளினார்.

விண்ணிலிருந்து வந்த தெய்வத் திருமொழி கேட்ட பாண்டியன் அரிமர்த்தனன் பயமும், ஆச்சரியமும், ஆனந்தமும் கொண்டான். சோமசுந்தரப் பெருமானது மெய்யன்பரான வாதவூரர் எங்கே சென்றார் என்று பல இடங்களிலும் தானே தேடிச் சென்றான். இறுதியாக மதுரேசர் சன்னிதியிலே சிவ யோகத்திலே ஆழ்ந்திருந்த மாணிக்கவாசகப் பெருமானைக் கண்டான். அவரது அடிகளில் விழுந்து வணங்கினான்.

"பரமசிவ பக்தரே! எனது தாழ்ந்த அறிவின் காரணமாகத் தங்கள் திருமேனிக்குத் தீங்குகள் பல இழைத்தேன். தங்கள் பெருந்தகுதியையும் மிகவுயர்ந்த நிலையையும் அறியாது நான் செய்த பொல்லாங்குகளை யெல்லாம் பொறுத்தருள வேண்டும், புண்ணியனே!" என்று கூறி இரங்கி வேண்டி நின்றான்.

மாணிக்கவாசகப் பெருமானது மண்டபத்திலே அருட்சோதி தோன்றியது. புன்னகை பூத்தவாறு சிவலீலா விபூதியை விளக்கியருளினார் சிவானுபூதிச் செல்வராம் மணிவாசகர். பின்னர் சிவபெருமானது மகாதேவ சதாசிவத் தன்மையை விளக்கிவிட்டு, "அவரது ஞானாகாசமாக விளங்கி நிற்கும் பொன்னம்பலமான தில்லையம் பதிக்கு வருமாறு அடியேனுக்கு ஆணையிட்டருளியுள்ளார். ஆதலால் அடியேன் அங்கே போக வேண்டும்; என்னை விடுவிப்பீராக," என்று அரிமர்த்தன பாண்டியனிடம் கூறி விட்டுச் சோமசுந்தரப் பெருமானை வணங்கி விடைபெற்றுக் கொண்டு தில்லைத் திருப்பதி நோக்கிப் புறப்படலானார். பாண்டியனும் சிறிது அவரைப் பின்தொடர்ந்து சென்றான். பின்னர் அவரது திருவடி தொழுது விடைபெற்றுத் திரும்பினான்.

அரிமர்த்தன பாண்டியன் திருக்கோவிலுக்குச் சென்று சோமசுந்தரப் பெருமானைத் தரிசித்து வணங்கித் தானும் அடிக்குமாறு முதுகு காட்டியருளி எழுந்தருளி வந்த தன்மையைப் போற்றிப் பரவினான். அன்று தொடங்கிப் பல வகைத் திருப்பணி பூஜை திருவிழாக்கள் ஆகியவற்றை மிகுந்த சிறப்புடன் செய்வித்து அன்பும் அருளும் இன்பமும் நிரம்பிய நல்லாட்சி புரிந்து வந்தான்.

அரிமர்த்தன பாண்டியன் அறநெறி பற்றிச் செங்கோல் ஓச்சுகின்ற நாளிலே அவனது தவப் பயனே போன்று சகநாதன் என்ற நற்புதல்வனைப் பெற்று மகிழ்ந்தான். பின்னர் உரிய காலத்திலே தன் அருமருந்தன்ன திருக்குமாரனுக்குப் பட்டாபிஷேகம் செய்து விட்டுச் சிவலோகம் சேர்ந்தான்.

62. பாண்டியன் சுரம் தீர்த்தது

அரிமர்த்தன பாண்டியனது குமாரன் சகநாத பாண்டியனுக்குப் பின்னர் வீரபாகு தொடங்கி ஒன்பது பாண்டியர்கள் ஆலவாயை ஆண்டு சென்றனர். அவர்கள் வழிவந்த கூன் பாண்டியன் நாட்டை ஆண்டு வந்தான்.

நெடுமாறனான கூன் பாண்டியன் புஜபலபராக்கிரமத்தால் மிகவும் புகழ் பெற்று விளங்கினான். சேர சோழ வேந்தர்களைப் போரிலே வென்று முத்தமிழ் நாடுகளையும் ஒரு குடையின் கீழ் ஆண்டு வந்தான். சேர வேந்தன் பொன்மணிக் குவியல்களையும், அழகான பெண்டிர் குழாத்தையும் கொடுத்துத் தனது நாட்டை மீட்டுச் சென்றான்.

சோழ வேந்தன் தனது எழில் மகளாகிய மங்கையர்க்கரசியைப் பாண்டிய வேந்தனுக்குத் திருமணம் செய்து கொடுத்துத் தன் வள நாட்டைத் திரும்பப் பெற்றான். மங்கையர்க்கரசிக்குச் சீதனமாக ஏராளமான செல்வங் களையும், ஆடை யாபரணங்களையும், நன்செய்களையும், சேடியர்ரையும் வழுதி மகிழும் வண்ணம் கொடுத்தான். சிறந்த குணமுடையவரும் சாஸ்திர ஞானத்திலே சிறந்து விளங்கியவருமான குலச்சிறையார் என்பவரையும் உடன் அனுப்பித் தந்தான்.



கூன் பாண்டியன் குலச்சிறையாரைத் தனது பிரதம மந்திரியாக அமைத்துக் கொண்டு நாட்டைப் பரிபாலித்து வந்தான். முன் செய்த தீவினைப் பயன் போலும், பாண்டியனது உடலில் கூன் இருந்தது போலே, உள்ளத்திலேயும் கூன் உண்டாயிற்று. வைதிகச் சைவ மார்க்கத்தைக் கைவிட்ட நெடுமாறன் சமணனாகி விட்டான்.

'மன்னன் எவ்வழி அவ்வழி மக்கள்' என்பது மெய்யாகப் பாண்டியன் ஆருகத மதம் சார்ந்ததும் பாண்டிய நாடு முழுவதுமே சமண இருளிலே மூழ்கியது. விபூதி சாதன மார்க்கமாகிய சைவ மதமும் மோட்சத்தை அடைவிக்கும் தவநெறியும் வேத வொழுக்கமும் குன்றி மறைந்து பட்டன. நாடு முழுவதும் பறிதலையும், பாயுடையும், பாசிப் பல்லும், உறிக்கமண்டலமும், மயிற்பீலியும் 'அத்தி நாத்தி' மந்திரமும் மலிந்தன. மூதேவியை நிகர்த்த சமணம் எங்கும் பரவித் தங்கியது.

கூன் பாண்டியனது மனைவியான கற்பிற் சிறந்த மங்கையர்க்கரசியும் குணம் சிறந்த மந்திரி குலச்சிறையாரும் மனம் புழுங்கினர். சிவபெருமானது திருவடிகளையே தியானம் செய்து வந்தனர்.

மங்கையர்க்கரசியாரும் குலச்சிறையாரும் பெருங்கவலை கொண்டு, திருக்கோயில் சேர்ந்து, சோமசுந்தரப் பெருமான் திருமுன் வணங்கி நின்று, ''எம்பெருமானே! பாண்டி நன்னாட்டிலே சமணக் களை மண்டிக் காடாக்கி விட்டது; மீண்டும் வேத மார்க்கம் தழைக்கச் செய்ய அருள் புரிபவர் யாரோ? கடவுளே! கொடிய சமண வலையிலே அகப்பட்டுழலும் அறிவிழந்த மன்னனுக்கு நல்லறிவு ஈந்து நன்னெறியில் திருப்பியருள வேண்டும்!'' என்று முறை செய்து வேண்டினர்.

அது சமயம் தில்லைப் பகுதியிலிருந்து க்ஷேத்திராடனம் செய்து கொண்டு வந்த அந்தணன் ஒருவன் சோமசுந்தரப் பெருமானைத் தரிசிக்கும் பொருட்டு அங்கே வந்து சேர்ந்தான். பாண்டியன் தேவியும் மந்திரியாரும் அவ் வந்தணனைக் கண்டு, ''மறையவரே! எங்கிருந்து வருகிறீர்?'' என்று வினவினர்.

''சோழவேந்தன் அரசோச்சும் காவிரி நாட்டிலிருந்து வருகிறேன்,'' என்றான்.

''ஏதேனும் விசேஷம் உண்டோ?'' என்று வினாவினர் இருவரும்.

சிவநேசனான அவ்வேதியன், ''விசேஷம் உண்டு! உண்டு! சீகாழிப் பதியிலே அந்தணர் குலத் தோன்றலான சிவபாத ஹிருதயருக்கும் அவர்தம் இல்லாள் பகவதி யம்மையாருக்கும் தவப் பயனாக ஒரு புதல்வர் அவதாரம் செய்தார். மூன்றாம் வயதிலேயே ரிஷபாரூடரான சிவபெருமானைத் தரிசித்து உமையம்மையாரின் கையாலே ஞானப்பால் வாங்கியுண்டார். ஆதலால், இளம் வயதிலேயே சிவஞானம் கைவரப் பெற்றார். சிவஞானத்துடன் சம்பந்தம் கொண்டதாலே திருஞானசம்பந்தர் என்ற திருநாமம் பெற்று விளங்குகிறார். சத்திய சொரூபமான ஞான சரஸ்வதியருளால் அருமறைகளை யெல்லாம் அவர் அருந் தமிழ்ப் பாடலாக இசைத்தருளுகிறார். வேத விழுப் பொருளை வடித்தெடுத்துச் சிவமணம் கமழும் தெய்வத் தமிழ்ப் பாடல்களாக, சிவ க்ஷேத்திரங்கள் தோறும் சென்று பாடிப் பாடிப் பெருமானுக்குப் பதிக மாலை சூட்டி விளங்குகின்றார். மேலும் அவர் சிவபெருமான் திருவருளால் பொற்றாளம், முத்துச் சிவிகை, திருச்சின்னம், முத்துப் பந்தல் முதலானவை

பெற்றுள்ளார். திருவீழிமிழலைப் பதியில் படிக்காசு பெற்றார். திருமறைக் காட்டிலே வேதங்கள் வழிபாடு செய்த திருக்கோவில் கதவு அடைபடுமாறு பாடியருளினார். பற்பல அற்புதங்கள் நிகழ்த்திச் சிவப் பதிகளிலே சென்று திருப்பதிகங்கள் பாடி வரும் ஆளுடைப்பிள்ளை சோமசுந்தரப் பெருமானைத் தரிசிக்கும் பொருட்டு உங்கள் பாண்டியநாட்டுக்கும் வருவார்,'' என்று மகிழ்ச்சி பொங்கக் கூறினான்.

அந்தணாளன் மொழிந்ததைக் கேட்ட பாண்டியன் தேவியாரும் மந்திரியாரும் அப்போதே சிவானந்தத்திலே மூழ்கினர். உடனே சீகாழிப் பதிவாழ் திருஞான சம்பந்தருக்கு விண்ணப்ப ஓலை யொன்று எழுதி அவ்வந்தணன் கையிலேயே கொடுத்தனுப்பினார்கள். பின்னர் அரசியாரும் அமைச்சரும் சிவபெருமானை வணங்கி அரண்மனை சென்றனர்.

விரைந்து சென்ற அந்தணன் திருஞானசம்பந்தரை வேதாரண்ய க்ஷேத்திரத்திலே கண்டு வணங்கி ஆலவாய்ப் பதியிலிருந்து தான் பெற்று வந்த ஓலையைக் காட்டினான். சீகாழிப் பிள்ளையார் ஆலவாய்க்கு எழுந்தருளிச் சமண் இருள் போக்கிப் பாண்டிய மன்னனுக்கு விபூதி தந்து நாட்டினையே திருநீற்றொளியில் விளங்கச் செய்ய வேண்டுமென அதிலே கண்டிருந்தது.

திருஞான சம்பந்தர் பாண்டிய நாட்டிற்குப் புறப்பட எழுந்தருளினார். அது சமயம் அருகே யிருந்த திருநாவுக்கரசர் அவரைப் பார்த்து, ''ஆஹா! இது முறையில்லை. நீர் குழந்தை. சமணர்கள் பழிபாவத்துக்குப் பயப்படாதவர்கள். அங்கே போக வேண்டாம். உமக்கு இப்போது நாளும் கோளும் சரியாயில்லை!'' என்று கூறித் தடுத்தார்.

அதனைக் கேட்ட திருஞான சம்பந்தர், "இறைவன் திருவருளால் சமணர் தந்த கொடுந் துன்பங்கள் அனைத்தையும் தப்பி வந்த அன்பார்ந்த அப்பரே! நாளும் கோளும் சிவபெருமானின் ஆணைவழி நடப்பன. எம்பெருமான் திருவருள் காக்கும்!" என்று மொழிந்து, 'கோளறு திருப்பதிகம்' பாடிப் புறப்பட்டார்.

முத்துப் பந்தலின் கீழ் முத்துச் சிவிகையின் மேலே ஏறிச் சென்றார். செல்லும் வழிகளிலுள்ள சிவஸ்தலங்களையெல்லாம் தரிசித்துத் தேவாரத் திருப்பதிகங்கள் பாடிய வண்ணம் சோழநாடு தாண்டிப் பாண்டி நாட்டினை அடைந்தார். ஆலவாயம்பதியை நெருங்கி வந்து கொண்டிருந்தார். திருஞானசம்பந்தரின் முன்னே செல்லும் பரிவாரங்களில் திருச்சின்னம் ஓதுவோர், "பரசமய கோளரி வந்தான்! சமணவிருள் கெட உதித்த ஞானபானு வந்தான்!" என்று பன்முறை கூறிச் சென்றனர்.

அந்த ஆரவாரத்தைக் கேட்ட சமணர்கள் நேரிலே வந்தார்கள். "உங்கள் கடவுளைக் கும்பிட வந்தால் வெற்றிச் சின்னம் எதற்கு? வீண் கர்வம் எதற்கு? நீங்கள் எந்தச் சமயத்தார்களை வெற்றி கொண்டீர்?" என்று சொல்லிச் சிவனடியார்களைத் தடுத்தனர்.

சீகாழிப் பிள்ளையார் அந்தச் சிறு தடையை எளிதிலே விலக்கிவிட்டு ஆலவாய்த் திருநகரை அடைந்து சோமசுந்தரப் பெருமானின் திருக்கோவில் புகுந்தார். அம்மையப்பரைத் தரிசித்து உடல் குளிர உளம் குளிரப் பன்முறை வலம் வந்தார். சிவானந்த லகரியிலே அழுந்தியவராகி, "காமனைக் காய்ந்து நைந்த தேவனே! அடியேன் சமணர்களோடு வாது செய்ய வலிமை பெறுமாறு திருவருள் பாலிக்க வேண்டும்!" என்று திருப்பதிகம் பாடி வேண்டிக் கொண்டார்.

திருவருள் பெற்றுத் திருக்கோவிலிலிருந்து வெளிவந்த திருஞான சம்பந்தப் பிள்ளையாரை வாசிக முனிவர் என்ற தவப் பெரியார் எதிர் கொண்டு தமது திருமடத்திலே எழுந்தருளுமாறு வேண்டிக் கொண்டார். ஞான சம்பந்தரும் அதற்கு உடன்பாடு தெரிவித்து அம் மடத்திலே தங்கினார். பகற்பொழுதிலே திருவமுது செய்தருளினார்.

அன்றிரவு சைவ சமயத்திடம் பகைமை பூண்ட சமணர்கள் தீயகாரியம் செய்தனர். அபிசார ஹோமம் செய்து அக்னி தேவனை அழைத்து, ''எங்கள் பகைவன் தங்கியிருக்கு மிடத்தை உண்டு வருக,'' என்று ஏவினர். ஆனால், அக்னி தேவன் அஞ்சி நின்றான். ஆகவே, சமணர்களே தங்கள் கையில் தீ எடுத்துச் சென்று வாகீச மடத்திலே வைத்தனர். நெருப்பு பற்றியது. புகைந்து எழுந்தது.

அதுகண்ட சிவனடியார்கள் திருஞான சம்பந்தரிடம் சென்று தெரிவித்தனர். பிள்ளையார் வெந்தீயை நோக்கினார். ''அக்கினியே! சமணர்களது பொய் மொழியை ஏற்றுக் கொண்டு சத்திய வேதமார்க்கத்தைக் கைவிட்ட கூன் பாண்டியனைச் சென்று பற்றுக!'' என்று பணித்தருளிச் சோமசுந்தரப் பெருமான் மீது பதிகம் பாடி விடுத்தார்.

தீ உடனே மடத்தை விட்டகன்று, கூன் பாண்டியனைச் சேர்ந்து சுர நோயாகப் பற்றியது. சுர நோயின் வெப்பத்தால் பாண்டியன் அணிந்த கலன்கள் பொரிந்து துகள் பட்டன. மாலை தீய்ந்தது. படுக்கை சருகாகிவிட்டது, பாண்டியன் பதைபதைத்துப் போனான்.

தலைவன் நிலைகண்ட பாண்டிமாதேவி மங்கையர்க்கரசியாரும், அமைச்சர் குலச்சிறையாரும் பெரிதும் மனம் தளர்ந்தனர். மருத்துவ நூல் வல்லவரை அழைத்துச் சிறந்த மருந்துகளாகக் கொடுக்கச் செய்தனர்.

மணிமந்திரம், ஔஷதம் எதிலுமே கட்டுப்படவில்லை, கடுஞ்சுரம். வரவர வளர்ந்து கொண்டேயிருந்தது. பிறகு சமணர்களை அழைத்துக் கொண்டு வந்தனர். அவர்களும் தங்கள் தபோபலத்தைக் கொண்டும் மருந்துகளைக் கொண்டும் சிகிச்சை செய்து பார்த்தனர். பாண்டியனது வெப்ப நோய் கொஞ்சமும் தணிந்தபாடில்லை. அன்றிரவு கழிந்தது. மறுநாள் விடிந்தது.

மங்கையர்க்கரசியாரும் குலச்சிறையாரும் பாண்டியனை நோக்கி, ''கால பாசம் போன்ற இச் சுடுநோய் திருஞான சம்பந்தரால் தீருமேயல்லாது வேறு எவராலும் தீராது,'' என்றனர்.

சமணச் சார்புடைய வேந்தனோ, ''நீங்கள் சொல்லும் சைவர் திருநீறணிந்து என்னைக் காணல் அடுக்குமா?'' என்று வினாவினான்.

''தலைவரே! எப்படியாவது நோய் தீர்ந்து தாங்கள் உய்ய வேண்டுமல்லவா?'' என்று அவர்கள் சொன்னதும், ''நல்லது, அவரை இங்கே வரவழையுங்கள்,'' என்று சம்மதம் தெரிவித்தான்.

பாண்டியன் சம்மதம் தெரிந்த அமைச்சர் குலச்சிறையார் எல்லையற்ற உவகை கொண்டார். ஆல்வாய் நகரைத் திருவிழா நகரமெனத் தோன்றச் செய்தார். மங்கலச் செயல்கள் மாநகரமெங்கும் மலிந்தன.

பிறகு குலச் சிறையார் பிள்ளையார் எழுந்தருளியிருந்து விளங்கிய திருமடம் சேர்ந்து 'ஞானாமிர்த'த்தைக் கண்டு மகிழ்ந்தார்.

பாண்டிமாதேவியாரும் வணங்கி ஒருபுறம் நின்றிருந்தார். குசலப் பிரச்னங்கள் முறையே ஆன பின்பு, அமைச்சரும் அரசியாரும் சேர்ந்து, "இன்றைய தினம் உங்களது திருவருளினால் சமணர்கள் அழியுமாறும், பாண்டிநாடு திருநீற்றால் உய்யுமாறும் மன்னவன் உடலிலே கொடிய சுரம் கண்டுள்ளது. அந்த வெப்பு நோயை நீர்தாம் தீர்த்தருள வேண்டும்!" என்று திருவடி பணிந்து வேண்டினர்.

திருஞானசம்பந்தரும் அங்ஙனமே செய்ய வாக்குத் தந்தார். தமது முத்துச் சிவிகையின் மேல் ஆரோகணித்து மாறனின் திருமாளிகைக்குச் செல்வாரானார்.

வாசல்கள் தோறும் தூபம், மங்கல விளக்கு, பூரண கும்பங்கள் முதலியன வைக்கப்பட்டிருந்தன. இன்னிசை முழங்கக் காழிப் பிள்ளையார் பாண்டியன் முன்பு சென்று ஒரு ரத்னாசனத்தின் மேல் அமர்ந்தார்.

கூன் பாண்டியன் திருஞான சம்பந்தரைப் பார்த்தான். காழிப் பிள்ளையாரது திருப்பார்வை பட்டதாலே பாண்டிய மன்னன் சற்றே தெளிவு பெற்றான். "இந்தப் பாவியினுடைய பிணி போக்கி ஆட்கொண்டு அருளுக!" என வேண்டிக் கொண்டான்.

பிள்ளையைப் பார்த்துப் பாண்டியன் மொழிந்ததைக் கேட்ட அருகிருந்த சமணர்கள், "கலை வல்லோனே! தங்களது வலப்பக்கத்து நோயை இவரும் இடப்பக்கத்து நோயை நாங்களும் தீர்க்கும்படியாக ஆணையிடுவாயாக!" என்று சொல்லினர். வேந்தன் சம்மதம் தருவதற்கு முன்னதாகவே தங்கள் மயிற் பீலிகளைக் கையிலெடுத்துக் கொண்டு அருக மந்திரம் சொல்லி இடப்புறத்தைத் தடவத் தொடங்கினர். கமண்டல நீரைத் தெளித்தனர்.

ஆனால், நோய் பல மடங்கு பெருகியது. சமணர்கள் கருவம் ஒடுங்கியது. வெட்கமடைந்து வறிதே இருந்தனர்.

திருஞான சம்பந்தர் மாறனது வெந்நோய் தீர்க்கும் பொருட்டாகத் தமது பையிலிருந்த திருநீற்றைக் கையில் எடுத்தார். அவர் எடுக்கும்போதே சமணர்கள், "மாய நீறு இது!" என்று கூறி மறுத்தனர்.

உடனே காழிப்பிள்ளையும் அதைப் போட்டுவிட்டு, "ஆலவாய் அண்ணலின் திருமடைப் பள்ளியில் உள்ள சாம்பலை அள்ளி எடுத்துக் கொண்டு வாருங்கள்," என்று மொழிந்தார். வேந்தனது ஏவலர் உடனே சென்று அள்ளிக் கொண்டு வந்தனர். அதனைத் தன் கையிலே பெற்று, "மந்திரமாவது நீறு, வானவர் மேலது நீறு" என்று தொடங்கும் திருநீற்றுத் திருப்பதிகம் இயம்பிக் கூன்பாண்டியனது வலப்பக்கத்திலே திருவாலவாயன் திரு நீறென அதனைத் தடவினார். வலப் பக்கத்து வெந்நோய் ஓடி மறைந்தது. பனி நீர் குழைத்த சந்தனம் பூசியது போன்ற குளிர்ச்சி கண்டது.

ஒருபுறம் தண்மை கண்ட பாண்டியன் மிக மகிழ்ந்தான். காழியர் பிள்ளையைப் பார்த்து, "பெரியோனே! இந்தச் சுரம் பொறுக்க முடியாதது! பொறுக்க முடியாதது! சமணர் சார்பான குற்றத்திலிருந்து நீங்கி எளியேன் உய்தி பெற வேண்டுமானால் இடப்பக்கத்து நோயையும் தாங்களே நீக்கியருள வேண்டும்," என்று மிகவும் இரங்கி வேண்டிக் கொண்டான்.

திருஞான சம்பந்தரும் சோமசுந்தரப் பெருமானை உளத்திருத்தி விபூதியை எடுத்துத் தமது திருக்கையால் இடப்பக்கத்திலேயும் பரிவுடன் தடவிக் கொடுத்தார்.

உடனே பாண்டியனது நோய் தீர்ந்ததோடு, கூனும் நிமிர்ந்தது. கொடுமை நீங்கிய உடல் பெற்ற பாண்டியன் புதுமெருகு பெற்றவனாகத் துலங்கினான். அதனால், முன்பு கூன் பாண்டியனாக அவலமெய்தியவன், சௌந்தர்ய பாண்டியன் எனும் பெயர் பெற்றான்.

திருஞான சம்பந்தருடைய கடாட்சத்தாலும், ஸ்பர்சத்தாலும், திருமொழிகளாலும் நன்கு தெளிவு பெற்ற பாண்டிய மன்னன் அவரது தளிரடிகளிலே வீழ்ந்தான். அவரிடமிருந்து பஞ்சாக்ஷர மகாமந்திரத்தை உபதேசமாகப் பெற்றான். திருவிளக்கம் பெற்றதாலே சமண நெறியை விடுத்தான். பழைய வைதிகச் சைவ நெறியைப் பற்றிப் புண்ணிய சீலனானான்.

63. சமணரைக் கழு ஏற்றியது

சௌந்தர்ய பாண்டிமாதேவியான மங்கையர்க்கரசியாரும் அமைச்சர் குலச்சிறையாரும் திருஞான சம்பந்தரின் சேவடி வணங்கினர். "எமது வேந்தனது கடுஞ்சுரத்தையும் கூனையும் ஒருங்கே போக்கியருளினீர்! மற்றுமொரு பெருங்குறை உள்ளது. அதையும் போக்கியருள வேண்டும். பாண்டிய நாடு முழுவதும் சமணக் காடு மண்டி வளர்ந்துள்ளது. அதனையும் வெட்டிக் களைந்தருள வேண்டும்," என்று பணிந்து வேண்டினர்.

"திருவாலவாயுடையாரது திருவுள்ளக் குறிப்பை அறிந்து கொள்வோம்," என்று மொழிந்து, பாண்டிமாதேவியாரோடும் குலச்சிறையாரோடும் திருக்கோவிலை அடைந்தார் சம்பந்தர். பொற்றாமரைத் தீர்த்தத்திலே நீராடிவிட்டுச் சோமசுந்தரப் பெருமானைத் தரிசித்துத் தாழ்ந்து வணங்கினார்.



"ஆலவாய்ச் சொக்கநாதா! உடலை வருத்திக் கொண்டு, வஞ்சகம் பெருகத் தவம் புரிந்து கொண்டு திரிகிறார்கள் சமணர்கள். இம்மை மறுமைப் பயன்களையும், சதுர்வேதங் களையும், வேள்விகளையும் நிந்தனை செய்துழலுகின்றனர் சமணர்கள். அவர்களைத் தண்டிக்க எம்பெருமான் திருவுளம் புரிதல் வேண்டும்," என்று பரிவுடன் வேண்டிக் கொண்டார்.

உடனே சோமசுந்தரப் பெருமானும் ஆகாசவாணியாக, "அன்புடையீர்! உங்கள் கருத்துக்கு யாம் உடன்பாடு கொண்டுள்ளோம். நீங்களே வெற்றி பெறுவீர்கள். சமணர்கள் தோல்வி பெறத் தகுந்தவர். ஆகையால், நீங்கள் பாண்டியன் சபையை அடைந்து சமணர்களை அழைத்து வாதம் புரியுங்கள். அவர்கள் தோல்வியடைவார்கள். அதன் விளைவாகக் கழுவில் ஏறி இறந்துவிடுவார்கள்," என்று மொழிந்தருளினார்.

அதனைக் கேட்ட திருஞான சம்பந்தர் தமது திரு மடத்திற்கு எழுந்தருளினார். மங்கையர்க்கரசியாரும் மந்திரியாரும் தங்கள் தங்கள் மனை சேர்ந்தனர்.

மறுதினம் விடிந்ததும் பாண்டிமாதேவியாரும் பேரமைச்சரும் திருமடம் சேர்ந்து, சமணரை வெல்வதற்கான வழிதுறைகளை ஆராய்வாராயினர். பின்பு திருஞான சம்பந்தரை வணங்கி அவரைப் பாண்டியன் சபைக்கு அழைத்துச் சென்றனர்.

பின்னர் வேந்தனை நோக்கிப் பணிந்து, "செங்கோல் வேந்தே! நமது பாண்டிய நாடு முழுவதும் கறுத்த சமணக் காடு மண்டி வளர்ந்துள்ளது. அந்தக் காட்டு மரங்களை வேரோடு தூரோடு களைந்தெறிந்து திருத்த வேண்டும். அப்போதுதான் சைவப் பயிர் தழைத்தோங்கி வளரும்," என்று கூறினர்.

அதைக் கேட்ட அரசனும் அனுமதி வழங்கினான். "பாண்டிய நாடு உய்ய வேண்டிய உரிய காலம் இதுவே!" என்று சோமசுந்தரப் பெருமான் திருவருளைச் சிந்தித்தவாறு ஆங்கே இருந்தருளினார் சம்பந்தர்.

சமணர்கள் தங்கள் இல்லத்திலே இடியுண்டனர். அவர்களுடைய மனைவியரும் மக்களும் கோபத்துடனே நோக்கி, "பாண்டியனது சுரத்தைப் போக்க ஆற்ற மாட்டாது ஒரு சிறு பிள்ளையிடம் தோற்றுப் போனீர்களே! அதனாலே அருகக் கடவுளடியார் அனைவருக்குமே பழியை உண்டாக்கி விட்டீர்களே! பாண்டியனும் சாம்பற் பூச்சுச் சமயத்திலே சேர்ந்து கொண்டு பாம்பணி கடவுளைப் பணியத் தொடங்கி விட்டான். சமண சமயத்தை அவமதித்துக் கைவிட்டான்!" என்று இடித்துரைத்தனர்.

அவர்கள் சொல்லியதையும் கேட்டுக் கொண்டு சமணர்கள் சீகாழிப் பிள்ளையுடன் வாதம் செய்யக் கிளம்பினர். அவர்களது மனைவிமார், "நீங்கள் ஏற்கனவே பெற்ற வெற்றி போதும், போக வேண்டாம்," என்று தடுத்துப் பார்த்தனர். தாங்கள் கண்ட தீக்கனவைப் பற்றிச் சொன்னார்கள். என்னவெல்லாமோ சொல்லித் தடுத்து நிறுத்தப் பார்த்தனர். மீறிச் சென்ற கணவன்மாரைச் சபித்தும் பார்த்தனர்.

அழிவு காலத்தை நெருங்கிய சமணர்கள் எதையுமே பொருட்படுத்தாது துணிந்து சென்றனர். இடையிலே எத்தனையோ பொல்லாச் சகுனங்கள் தோன்றி மறித்தன. எதையும் அலட்சியம் செய்த சமணர்கள் நகர்ப்புறத்திலே சென்று ஓரிடத்தில் கூடினர். வெல்லும் வழி பற்றிச் சிந்தித்தனர்.

"பாண்டிய மன்னனைக் கண்டு சொல்லி அவனது உத்தரவு பெற்றுப் பகைவனை வாதினால் வெல்வோம்!" என்று தமக்குள் முடித்துக் கொண்டனர். பின்னர் ராஜசபையை நோக்கிச் செல்வாராயினர்.

அதுசமயம் திருஞானசம்பந்தரும் சோமசுந்தரப் பெருமானைத் தரிசித்து வணங்கிவிட்டுத் திருமடம் வந்து கொண்டிருந்தார். சமணர்கள் அவரை இடைமறித்து நிறுத்தித் திருப்பினர். சமணர்கள் பின்தொடரச் சீகாழிப் பிள்ளையார் பாண்டிய சபையை அடைந்தார்.

பாண்டியன் காட்டிய அரியணை மீதேறிப் பால சூரியனைப் போல் அருளொளி வீசிய வண்ணம் அமர்ந்தார்.

சிறந்த ராஜ மரியாதை பெற்ற திருஞான சம்பந்தரைக் கண்ட சமணர்களுக்குப் பொறுக்க முடியவில்லை. ஆதலால் பிள்ளையாரை நோக்கி, அவரையும் ஒரு சிறு பிள்ளையாகவே மதித்து, "மழலை மொழி மாறாப் பாலகனே! காக்கையேறப் பனம்பழம் விழுந்தது போலத்தான் உன் கதை. நீ அவ்வளவுக்கு மந்திர சக்தி படைத்தவனா? நீ கர்வம் கொள்ள வேண்டாம். நீ சிந்திய சாம்பலும் சொன்ன சிறு சொற்களும் மருந்தும் மந்திரமுமாக ஆகுமா? என்னவோ பாண்டியன் நோய் தீர்ந்து விட்டது. ஆதலால், உங்களது மந்திரத்தை ஒரு பனை ஓலையிலே எழுதுங்கள். மற்றொரு பனை ஓலையிலே எமது மந்திரத்தை எழுதுகிறோம். இந்த இரண்டு ஏடுகளையும் நெருப்பிலே போடுவோம். வெந்த ஏடு தோல்வியுற்றது என்றும் வேகாத ஏடு வெற்றியுற்றது என்றும், முடிவு கொள்வோம். இந்த வாதத்தைச் சிவபதிகளில் செய்யலாகாது. ஏனெனில், அவனும் நடுநிலை தவறி எமக்குக் கேடு செய்யலாம்.

ஆதலால் ஊர்ப் புறத்தே சென்று வாதம் செய்வோம்,'' என்று சொல்லி வாதுக்கு அழைத்தார்கள். திருஞானசம்பந்தரும் சௌந்தர்ய பாண்டியனும் ஒப்புக் கொண்டனர்.

சமணர்கள் முன்னே சென்றனர். மதுரைக்குக் கிழக்கே சென்று ஒரு பெரிய குழி வெட்டித் தீ மூட்டினர். தீ மூட்டிக் கொண்டே திருஞான சம்பந்தரை இழித்துப் பேசிக் கொண்டிருந்தனர். அப்போது சிவனடியார் பதினாறாயிரம் பேர்கள் சூழ்ந்து வர, சிவஞான முண்ட பிள்ளையும் அங்கே வந்து எழுந்தருளினார். மாறனும், பாண்டிமாதேவியும், பிரதம மந்திரியும் அவர் பின்னே சென்றனர்.

தாங்கள் முயன்று பயின்ற பல்வேறு மந்திரங்களை யெல்லாம் பச்சை யேடுகளிலே எழுதி ஒருங்கே சென்று அவற்றை யெல்லாம் தீயில் இட்டார்கள், சமணர்கள் எட்டாயிரம் பேர்களும். அந்த ஏடுகள் எல்லாம் தீப்பற்றி எரிந்து சாம்பலாகி ஒழிந்தன. அதுகண்ட சமணர்கள் மனம் புழுங்கினர். சுற்றியிருந்தோர் சிரித்தனர்.

திருஞானசம்பந்தர் தாம் பாடியருளிய தமிழ்மறைத் திருமுறைச் சுவடியை எடுத்துக் கயிறு இட்டுப் பார்த்தார். தாம் அன்று அருந்துமாறு சிவஞானப் பால் அருளிய உமையம்மையின் திருநாமம் உடைய "போகமார்ந்த பூண் முலையாள்'' என்ற பாடல் ஏடு கிடைத்தது. அதனையே எடுத்துத் தீயில் இட்டார்

அத்திருத்தேவார ஏடு தீயினிடையே பசுமையாகவே இருந்தது. மாறனும், தேவியாரும், மந்திரியாரும், அங்கு கூடியிருந்த ஏனையோரும் வியந்து மகிழ்ந்தனர். திருஞான சம்பந்தரைப் புகழ்ந்து பாராட்டி, அளவிலாத இன்ப

மடைந்தனர். பின்னர்ப் பிள்ளையாரும் தாம் நெருப்பிலிட்ட ஏட்டினைத் திரும்ப எடுத்துத் தமது சுவடியிலே வைத்துக் கட்டியவாறே பாண்டியனைப் பார்த்தார்.

சமணர்கள் சத்தியத்தையும் நாணத்தையும் ஒருங்கே கைவிட்டனர். அங்கு குழுமியிருந்தோர் சிரித்ததனால் அவர்களுக்குப் பொறுமை இழந்து பட்டது. பேராரவாரம் செய்து கொண்டு, மறுபடியும் காழிப் பிள்ளையாரைப் பார்த்து, "எங்கள் மந்திரம் எழுதப்பட்ட எட்டாயிரம் பச்சை ஏடுகளும் எரிந்து சாம்பலாகியிருக்கும்போது உமது ஏடு மட்டும் எரிந்து விடாமல் அப்படியே இருந்தது. நீர் அக்கினியைக் கட்டி ஏதோ மாயம் செய்து விட்டீர். ஆதலால் உமது ஏட்டையும் எங்கள் ஏடுகளையும் நதியின் நீரிலே இடுவோம், எவர் ஏடு எதிர்த்துச் செல்கிறதோ, அவர் வெற்றி பெற்றவராவார். வெற்றி பெற்றவருக்குத் தோல்வி கண்டவர் என்றென்றும் குற்றேவல் புரிந்து கொண்டிருக்க வேண்டும்," என்று கூறினார்கள்.

அதைக் கேட்ட திருஞானசம்பந்தர், "குற்றேவல் செய்யும் அடியார்கள் நமக்குப் பதினாறாயிரம் பேர்கள் உள்ளனர். அவர்களே போதுமானவர். சிவபெருமானை இகழ்ந்த கொடியவர்களாகையால், உங்களுக்குத் தகுந்த தண்டனை இதுவல்ல. சிவபெருமான் திருவருளால் யாம் வெற்றி யடைந்தோமானால் உங்களை யெல்லாம் கழுவில் ஏற்றுவோம்," என்று கூறினார். சமணர்கள் அதற்கு ஒப்புக் கொண்டனர்.

அதனையறிந்த அமைச்சர் குலச்சிறையார் பல தச்சர்களை வரவழைத்து, நீண்ட மரங்களில் சூல வடிவமான கழுக்களைச் செய்து அவற்றை யெல்லாம் கொணர்ந்து

மன்னவன் முன் வைத்தார். சீகாழிப் பெருமான் சமணர்களைப் பார்த்து, ''இப்பொழுதாயினும் நீங்கள் வாதம் புரிவதை விட்டு விடுங்கள். விபூதி ருத்ராக்ஷம் அணிந்து பஞ்சாட்சரத்தை ஓதிப் பாசம் ஒழிந்து உய்யுமாறு காணுங்கள்,'' என்று நன்னெறி நவின்றருளினார்.

அதைக் கேட்ட சமணர்கள் எரிகின்ற நெருப்பைப் போலப் பொங்கி எழுந்தனர். ''அனல் வாதத்திலே ஏதோ நீர் வெற்றியடைந்ததாலே புனல் வாதத்திலேயும் வென்றுவிட முடியும் என்ற எண்ணமோ? இந்த வாதத்திலிருந்து தப்பிச் செல்ல விரும்பி இவ்வாறு எம்மிடம் பரிவு காட்டுபவர் போல இணங்கிப் பேசுகிறீர் போலும்! எங்களோடு வாதம் செய்யத் துணியவில்லையே? வாதம் புரிய வாரும்,'' என்று கடுமொழி கூறினார்கள்.

வேகவதியாகச் செல்லும் வையையாற்று நீர்ப்பெருக்கைத் தமது மந்திர சக்தியால் மட்டுப்படுத்தினர் சமணர்கள். தங்கள் தங்கள் ஏடுகளை முன் போலவே மந்திரங்கள் எழுதி ஆற்று நீரிலே போட்டனர்.

திருஞான சம்பந்தரும், ''வேதங்கள் மொழிவது சத்திய வாணியானால், வேதங்கள் துணிந்து இயம்பும் சத்தியவஸ்து சிவபெருமானே என்பது உண்மையானால், இந்த ஏடு ஆற்று நீர்ப் பெருக்கை எதிர்த்துச் செல்க!'' என்று இயம்பி, ''வாழ்க அந்தணர்'' என்ற திருப்பாடலை ஏட்டிலே எழுதி நீரிலிட்டார்.

சோமசுந்தரப் பெருமானது திருவருளாலே இழுக்கப் பெற்ற திருஞான சம்பந்த ஏடு ஆற்று நீரை எதிர்த்துச் சென்றது. சமணர் எண்ணாயிரவர் விடுத்த ஏடுகள் எல்லாம்

ஆற்று நீரோடு போயின. பரசமயக் கோளரி திருஞான சம்பந்தர் விடுத்த ஏடு ஆற்றுப் போக்கை எதிர்த்து ஏறக் கண்ட தேவர்கள் பூமழை பொழிந்தனர். சிவனடியார்கள் ஆரவாரம் செய்து மகிழ்ச்சி தெரிவித்தனர். தோல்வியே கண்ட சமணர்கள் உடல் வியர்த்து நடுநடுங்கி வெட்கமடைந்து நின்றனர்.

'சிவபெருமானே தேவர்கள் அனைவருக்கும் போகத்தையும் மோட்சத்தையும் தந்தருளவல்ல முழுமுதல்!' என்ற நித்தியமான சத்தியத்தை அனல்வாத மூலமாகவும் புனல்வாத மூலமாகவும் குருமுக உபதேசம் நிகர்த்து மிகத் தெளிவாகப் பாண்டியன் உணர்ந்தான். சௌந்தர்ய பாண்டியனும், மாதேவி மங்கையர்க்கரசியாரும், மந்திரி குலச்சிறையார் மற்றுமுள்ள சிவனடியார்களும் திருஞான சம்பந்தரை வணங்கித் துதித்தனர்.

சமணர்களில் சிலர் தங்கள் மானத்தை இழந்தவர்களாகிக் காழிப் பிள்ளையார் திருமுன் வந்து, "யாம் தோற்றோம்! நீர் ஜயம் பெற்றீர்!" என்று ஒப்புத் தெரிவித்தனர்.

உடனே திருஞான சம்பந்தர் அங்கு தோல்வி கண்டு நின்ற அத்தனை சமணர்களையும் விளித்து, "சிவபெருமான் ஜீவராசிகளுக்கெல்லாம் தாய் போன்றவன்; அவனுக்கு ஆளாகி உய்யுங்கள்! ஏன் வீணே சாகின்றீர்கள்?" என்று மொழிந்தருளினார்.

மானம் பொறுக்கமாட்டாத சில சமணர்கள் சினந்து, "சிறுவனே! நீ கூறுவது தகாத மொழி," என்று சொல்லி விட்டுத் தாங்களாகவே கழுவிலே ஏறத் தொடங்கினார்கள். சமயப் பற்றுக் கொண்ட சமணர்கள் தாமே வலுவில் வந்து

கழுமரம் ஏறினர். ஏறாத சமணர்களைச் சைவக்கோலம் புனைந்தவர் துன்புறுத்தி ஏற்றி வைத்தனர். சாவுக்கு அஞ்சியவர் விபூதி பூசிக் கொண்டனர்.

பாண்டிய வேந்தன் திருஞானசம்பந்தரை வணங்கி நின்றான். ''தேவரீர் ஆற்றிலே விடுத்த ஏடு நீர்ப் போக்கை எதிர்த்துச் சென்றதே! அது எங்கு சென்றதோ?'' என்று பரிவுடன் வினாவினான்.

''ஆலவாய் எம்பிரானருளால் அதனை இப்போதே வரவழைப்போம்!'' என்று மொழிந்தருளி, ஆற்றங்கரை வழியே மேற்கு நோக்கிச் சென்றார் சம்பந்தர். ஏனையோரும் பிள்ளையாரைத் தொடர்ந்து சென்றனர்.

ஏடு ஒரு காத தூரம் எதிர்த்துச் சென்று பின்னர்த் திடீரென மறைந்து விட்டது. ஏடு மாயமாக மறைந்தது கண்ட அனைவரும் ஆச்சரியமடைந்தனர். ஆயர் சிறுவரைக் கண்டு அவ்விடத்து விசேஷம் பற்றிக் கேட்டனர். அவர்கட்கு ஏதும் தெரியவில்லை.

ஆனால் விசேஷம் இருக்க வேண்டுமென்ற சம்பந்தப் பெருமான் சிவபெருமானை நினைந்து 'வன்னியும் மத்தமும்' என்று தொடங்கும் திருப்பதிகம் பாடியருளினார்.

அப்போது ஆங்கொரு பெரிய வில்வ மரத்தினடியிலே சிவபெருமான் சுயம்பு லிங்கமாகத் தோன்றிக் காட்சி தந்தருளினார். காழிப் பிள்ளையார் சிவலிங்கத்தைத் தரிசனம் செய்து பணிந்து வலம் வந்து நின்றார். அது சமயம் லிங்கத்திலிருந்து வயது முதிர்ந்த அந்தணர் ஒருவர் வெளிப்பட்டு நின்றார்.

பிள்ளையாரைப் பார்த்து, "நீ எனது இளைய குமாரனைப் போல இருக்கிறாய்!" என்று மகிழ்ந்து கூறித் திருநீறு இட்டார். சிவஞானத்தைத் தமக்கருளிய இறையவரே அவர் என்று கருதிய ஞானசம்பந்தர் அவரை வணங்கி, "பெரியவரே! எளியேனது ஏட்டைத் தந்தருள வேண்டும்," என்று வேண்டினார்.

முதிய பெருமானும், "குமார! எம்மைத் தலங்கள்தோறும் சென்று பாடுவாய். இழி நெறி பற்றி ஒழுகுபவரைத் தெருட்டி வெற்றிகொள்வாய். பின்பு எம்முடைய சுத்தமான மோட்சத்தைப் பெறுவாயாக!" என்று மொழிந்தருளி ஏட்டைத் தந்து மின்னலை நிகர்த்து மறைந்தருளினார்.

திருஞான சம்பந்தரின் பெருமையை நன்குணர்ந்த பாண்டியன் அவரை வணங்கினான். பாண்டியன் பின்பு அங்கே எழுந்தருளிய சிவபெருமானுக்குப் பொற்கோவிலும் திருமண்டபமும், திருக்கோபுரமும், திருமதிலும், திருவீதியும் கண்டோர் களிக்குமாறு அமைத்தான். அன்று முதல் அத்திருப்பதி திருவேடகம் என்னும் திருப்பெயர் கொண்டு விளங்குவதாயிற்று.

சமணரோடு இணங்கிய தனது பாவமெல்லாம் போகுமாறு, அப்பதியிலுள்ள சிவபெருமானைப் பூசித்து, மும்மல நீக்கம் பெற்றான். பின்பு பாண்டியன் அங்கேயே திருநகரம் ஒன்று அமைத்து ஒரு வருஷ காலம் திருஞான சம்பந்தருடன் அங்கேயே தங்கியிருந்தான்.

பின்னர்ப் பாண்டியன் திருஞான சம்பந்தரோடு மதுரை சேர்ந்தான். சிவஞான குமாரர் பாண்டி நாடெங்கும் சென்று விபூதிச் செல்வம் விளக்கமுறச் செய்தார். சில நாட்கள்

மதுரையிலே தங்கியிருந்தார். பின் வடநாட்டிலுள்ள க்ஷேத்திரங்களைத் தரிசிக்க விரும்பினார் காழிப் பிள்ளையார். திருக்கோவில் சென்று சோமசுந்தரப் பெருமானையும் மீனாட்சியம்மையாரையும் தரிசனம் செய்து பல வரங்கள் பெற்றுப் புறப்பட்டார். சௌந்தர்ய மாறனும் மங்கையர்க்கரசியாரும் குலச் சிறையாரும் பிரியா விடை தந்தனுப்பினர்.

பல பாண்டிய நாட்டுச் சிவஸ்தலங்களைத் தரிசித்துக் கொண்டே சோழ நாடு சென்றார் திருஞானசம்பந்தப் பிள்ளையார்.

64. வன்னியும் கிணறும் இலிங்கமும் அழைத்தது

காவிரிப்பூம்பட்டினத்திலே வணிக குலத்தைச் சேர்ந்த ஒருவன் வாழ்ந்து வந்தான். பல வகைச் செல்வங்களிலே சிறந்தவன் அவன். வெகுநாட்களாகக் குழந்தைப் பேறின்றி வருந்தினான். அவன் தனது இல்லாளுடன் சேர்ந்து பலவகைத் தருமங்களைச் செய்ததால் பெண் குழந்தை பிறந்தது.

அவளைச் செல்வமாகப் போற்றி வளர்ந்து வந்தான். அவளுக்கு மணப்பருவமும் வந்தது. வணிகனது தங்கை மகன் ஒருவன் மதுரையிலே வாழ்ந்து வந்தான். மருமகனுக்கு ஏற்கனவே மணமாகியிருந்தது. இருந்தாலும் முறையை விட்டுக் கொடுக்க விரும்பாத வணிகன் அவனுக்கே தன் அருமை மகளைக் கொடுப்பதாகச் சொல்லிக் கொண்டிருந்தான். அதையே தன் உறவினர்களிடமும் அடிக்கடி தெரிவித்துக் கொண்டிருந்தான்.



சில நாட்கள் சென்றன. வணிகன் இறந்து போனான். அவனது கற்பிற் சிறந்த மனைவியும் உடன் இறந்தாள். உறவினர்கள் இறந்தவருக்குச் செய்ய வேண்டிய இறுதிக் கடன்களைச் செய்து முடித்தனர். அந்தச் சேதியை மதுரை மருமகனுக்கு ஓர் ஓலை மூலம் தெரிவித்தனர் உறவினர்.

அந்த ஓலையிலே, "உனது மாமன் இறந்து போனான். உடன் மாமியும் இறந்து போனாள். அவனுக்கு ஏராளமான செல்வம் உண்டு. அவனுக்கு ஒரு குமாரியும் உண்டு. அவளை உனக்கே மணம் செய்து கொடுப்பதாகச் சொல்லிக் கொண்டிருந்தான். ஆகையால் நீ வந்து உன் மாமன் மகளை மணம் செய்து செல்வாயாக!" என்று எழுதி யிருந்தனர்.

மாமனும் மாமியும் ஒருங்கே இறந்த சேதி கண்டு மிகவும் வருந்தினான் மதுரை மருமகன். பிற்பாடு ஒருவாறாக மனம் தேறித் தன் உறவினர் சிலருடன் மதுரையைவிட்டு நீங்கிப் பட்டினம் சேர்ந்தான். அங்கு தன் மாமன் இல்லம் சென்றிருந்தான்.

சில நாட்கள் போயின. "மாமன் மகளை அழைத்துச் சென்று மதுரையிலே உறவினர் முன்னிலையிலே மணப்பேன்!" என்று கூறி மாமன் தேடிய செல்வங்களையும் பிறவற்றையும் எடுத்துக் கொண்டு கிளம்பினான்.

தன்னுடன் வந்த உறவினர்களையெல்லாம் முன்னே செல்லுமாறு செய்தான். தனது ஏவலாளர்களோடு நாள் ஒன்றுக்கு ஒன்றரைக் காத தூரம் வழி நடந்து சென்று கொண்டிருந்தான்.

வருகின்ற வழியில் திருப்புறம்பியம் என்ற க்ஷேத்திரத்தை யடைந்தான். அன்று இரவு அங்கே தங்கிச் செல்ல

விரும்பினான். அந்தத் தலத்தின் திருக்கோவிலுக்கு அருகேயிருந்த கிணற்றிலே நீராடி விட்டு, வன்னி மரத்தடியிலே உணவாக்கி உண்டான். திருக்கோவிலருகே படியொன்றின் மீது தலைவைத்துத் தூங்கினான்.

அதுசமயம் கொடிய நச்சு நாகம் ஒன்று வந்து அவனைக் கொத்தியது. விஷம் வேகமாகத் தலைக்கேறியதால் வணிக மகன் இறந்தான். ஏவலர்களும் தோழியரும் புலம்பி அழுதனர்.

அவனது மாமன் மகள் செய்வது இன்னது என்று தெரியாமல் திகைத்தாள். மணமாகாத மகள் ஆனபடியால் மதுரை மகனது உடலைத் தீண்டாமல் சோகப் பதுமையாக ஒருபுறத்தே உளங்கலங்கி நின்றாள். சாவு, அழுகை, அயர்வு முதலியவற்றைக் கண்ட அப் பெண்மணி அம்பு பட்ட பைங்கிளி போலத் துடித்தாள். கீழே சோர்ந்து விழுந்து மயங்கினாள். சேடியர் சேர்ந்து அறிவு தெளிவித்தனர். அக்குலமகள் அழுத அழுகைக்கும் புலம்பிய புலம்பலுக்கும் எல்லை கிடையாது. பல பல சொல்லி உரக்கக் கூறிக் கதறினாள். ஆணை இழந்த அன்றில் பெடைபோல் தன்னந்தனியாக இருந்து அரற்றினாள்.

வணிக மகளின் அழுகையையும் புலம்பலையும் கேட்ட அக்கம் பக்கத்தவர் உறக்கம் விட்டு எழுந்தனர். அவளது துன்பம் கண்டு உள்ளம் நடுங்கினர். மனம் உளைந்தனர்.

பல சிவத் திருப்பதிகள் தோறும் சென்று வணங்கிய திருஞானசம்பந்தர் அப்போது அவ்வூர்த் திருமடத்திலே எழுந்தருளியிருந்தார். அவரும் அவ் வழுகை வொலியைக் கேட்டார். விவரம் அறிந்ததும் திருக்கோவிலின் பக்கம் விரைந்து போனார்.

"கன்னிப் பெண்ணே! நீ யார்?" என்று வணிகப் பெண்ணைப் பார்த்துப் பரிவுடன் வினாவினார். அந்தப் பெண்ணும் அவரை வணங்கி நடந்த எல்லாவற்றையும் அவரிடம் சொல்லித் தனக்கும் மதுரை வணிகனுக்கும் ஏற்படவிருந்த மணத்தினையும் தெரிவித்தாள்.

தனித்த பெண்ணின் துயர் போக்கக் கருதினார், பிள்ளையார். உயிர் நீத்த வணிகனின் உடலருகே சென்று, அவனது உடல் அமிர்தமயமாகும்படி அருள் நோக்கம் பாலித்தருளினார். கொடிய நஞ்சு உடலிலிருந்து இறங்கிச் சென்றது. செத்துக் கிடந்த வணிக மகன் புத்துயிர் பெற்றவனாகி உறங்கிக் கிடந்தவன் போல எழுந்து உட்கார்ந்தான்.

அந்த அதிசயத்தைக் கண்டு அங்கிருந்தோர் அனைவரும் திருஞான சம்பந்தரைப் போற்றித் தொழுதனர். கன்னிப் பெண்ணும் களியன்னம் போல் ஒரு பக்கம் ஒதுங்கி யிருந்தாள்.

வணிகக் கன்னி மாமன் மகளாக இருந்தாலும் தலைவன் இறந்த காலத்தும் உயிர் பெற்ற காலத்தும் அவனைத் தொடாதிருந்த பெற்றியையும் அன்பையும் கண்டு ஆச்சரியமடைந்த திருஞான சம்பந்தர் மதுரை வணிகனைப் பார்த்து, "வணிகர் மணியே! உனது அம்மான் மகளான இக்கன்னி திருமகளை ஒத்தவள். எக்காலும் உன் உடல் தீண்டத் தகுதி பெற்றவள். இவளை இவ்விடத்திலே விவாகம் செய்து கொண்டு செல்க!" என்று நன்று பகன்றார். பிள்ளையாரின் திருவாக்கைப் போற்றிய அவ்வணிகனும், "எம் குலத்தோரும் தக்க சான்றுகளும் இல்லாமல் எவ்வாறு மணம் முடித்துக் கொள்வேன்?" என்றான்.

திருஞானசம்பந்தர் மதுரை வணிகனை நோக்கி, "மகனே! இப்பெண் பிறந்தபோதே உனது மாமன் உனக்காகவே இவளைப் பேசியதை உறவுக்காரர்கள் பலர் அறிவார்கள். அது மட்டுமல்லாமல், இந்த வன்னியும், கிணறும், இலிங்கமும் சாட்சிகளாகும். எனது சொல்லைத் தட்டாமல் இங்கேயே மணம் புரிந்து செல்வாயாக!" என்று அருளிச் செய்தார். திருஞான சம்பந்தரையே ஆசிரியரும் நண்பரும் தெய்வமும் சுற்றமும் எனக் கொண்ட அவ்வணிகன் அவ்விடத்திலேயே முறைப்படி மணம் முடித்து விடைபெற்றுப் புறப்பட்டான்.

பணியாட்களும் மகளிர் கூட்டமும் உடன் வர, மதுராபுரியை அடைந்தான். மாமன் மகளை அவன் மணந்த சேதி கேட்ட சுற்றத்தார் பெரிதும் மகிழ்ந்தனர். பின்பு அவன் தான் தேடிய பொருள்களையும் மாமன் தேடித் தந்த பொருள்களையும் ஒரே யிடத்தில் தொகுத்து வைத்து வாணிபத்தால் குபேர சம்பத்தைப் பெற்றான். காலா காலத்திலே இரு மனைவியரும் புதல்வர்களைப் பெற்றுக் கொடுத்தனர். வணிகன் மிக்க நலமுடன் வாழ்ந்து வந்தான்.

ஆண்டுகள் சென்றன. மூத்த மனைவியின் குமாரர்கள் மிகவும் கொடியவர்களாக இருந்தார்கள். இளையவளுக்கு ஒரே ஒரு நல்ல புதல்வன் இருந்தான். இருவருடைய புதல்வர்களும் ஒரு நாள் வீதியிலே விளையாடிக் கொண்டிருந்தபோது திடீரெனச் சண்டை மூண்டது.

மூத்தாள் மக்கள் இளையாள் மகனைச் சினந்து அடித்தனர். இதன் காரணமாக, இளையவளுக்கும் மூத்தவளுக்கு மிடையே பேச்சு வார்த்தை தடித்தது. மூத்தவள் இளையவளை இழிவாகப் பேசியதோடு, "நீ எந்த ஊர்?

எந்தக் குலம்? என் கணவனைக் கண்டு ஆசைப்பட்டு வந்த காமக் கிழத்தியாகிய நீ கருவம் கொள்வது தகாது. நீ என் கணவனை அக்னி சாட்சியாக மணந்து கொண்டவள் என்பதற்கு என்ன சாட்சி இருக்கிறது? இருந்தால் காட்டுக!'' என்று கடுமொழி புகன்றாள்.

கற்பிலே சிறந்த அக்காரிகை மிகவும் மனம் வாடினாள். ''என் கணவன் பாம்பு தீண்டி மாண்டபோது உயிர் அளித்த திருஞான சம்பந்தரின் ஆணையால், எனது கணவன் என்னைத் திருப்புறம்பியத்திலே எழுந்தருளியிருக்கும் சிவலிங்கப் பெருமானும், வன்னி மரமும், கிணறும் காணத் திருமணம் முடித்தான். அந்த மூன்றும் சாட்சிகளாக உள்ளன!'' என்று கூறினாள்.

அதுகேட்ட மூத்தாள் கைகொட்டிச் சிரித்தாள். ''நன்று! வெகு நேர்த்தி! நல்ல சாட்சிகளாகத்தான் சொன்னாய்! அச்சாட்சிகள் மூன்றும் இவ்விடத்திற்கு வருமானால் அதுவும் உண்மையாகத்தான் இருக்கும்!'' என்றாள்.

இளையவள் துன்பத்தில் ஆழ்ந்தாள். பெருமூச்சு விட்டாள். ''ஐயோ, தெய்வமே!'' என்று வருந்தினாள். ''கடவுளே! தந்தை தாயிழந்த பேதையான எனக்கு வேறு துணை யார்? மாமனாக வந்து வழக்குரைத்து உரிமை வாங்கித் தந்த பெருமானே! நீரே கதி!'' என்று சோமசுந்தரப் பெருமானை நினைத்தவளாகி அன்றிரவு முழுவதும் உணவின்றி வருந்திக் கிடந்தாள்.

மறுநாள் விடிந்ததும் திருக்கோவில் சென்று பொற்றாமரைத் தீர்த்தத்திலே நீராடிச் சோமசுந்தரப் பெருமானை வழிபட்டு நின்றாள். ''அன்று நாங்கள் மணம் புரிந்த காலத்தில் சாட்சியாக நின்ற வன்னி மரமும், கிணறும்,

சிவலிங்கமாகிய தேவரீரும் இன்று இங்கு வந்து தோன்றி எனது மாற்றாளின் ஏச்சைப் போக்கி அடியாளைப் பாதுகாக்கா விட்டால் இறந்து போவேன்!'' என்று முறையிட்டாள்.

அக் கணமே சோமசுந்தரப் பெருமானது திருவருளால், அனைவரும் கண்டு வியப்படையும் வண்ணம், மணம் ஆன காலத்திலே திருப்புறம்பியத் தலத்தில் இருந்தபடியே மூன்று சாட்சிகளும் திருக்கோவிலின் வடகிழக்குத் திசையிலே விரைவாக வந்து தோன்றின.

உடனே இளையவள் மூத்தவளை அழைத்து வந்து, சொக்கநாதப் பெருமானை வணங்கிவிட்டு, ''வன்னி மரம் இது! கிணறு இது! சிவலிங்கம் இது! இந்த மூன்றுமே எனது விவாகத்திற்குச் சாட்சியாகி நின்றன!'' என்று காட்டிக் கூறினாள்.

இளையவளாகிய வணிக மாதின் கற்பின் சிறப்பையும் சிவ பக்தியையும், சோமசுந்தரப் பெருமான் அவளுக்காக அருள் புரிந்ததையும் மதுரை மக்கள் அனைவரும் தெரிந்து பேராச்சரியம் அடைந்தனர்; பேருவகை கொண்டனர்.

மூத்தாள் துன்பத்துள் ஆழ்ந்தாள். ஊர்க்காரர் மூத்தாளைப் பழித்துப் பேசினர். இவளது கணவனும் அவளைக் குலக்கேடி எனக் கருதிப் பழித்துப் பேசினான்; அவளை வெறுத்துத் தள்ளினான்.

ஆனால் இளையவளோ கணவன் அடிபணிந்து, ''அன்பரே! எனது கற்பின் திறத்தை உலகறியச் செய்து காட்டியவள் இவளே! இவள் எனது மாற்றாள் அல்ல. தாயற்ற எனக்குத் தாய்! நாங்கள் இனிமேல் ஒற்றுமையாக வாழ்வோம்!'' என்று மொழிந்து மூத்தாளைத் தழுவிக் கொண்டாள்.

வணிகனின் இல்லற வாழ்வு தூய்மை பெற்றது. இரு மனைவியரும் பொறாமை யின்றி ஒன்றி வாழ்ந்தனர். புதல்வர்களும் நல்லவர்களாக மாறி விட்டனர். தனது இளைய மனைவியினது கற்பின் சிறப்பால் ஆயுள், ஆரோக்யம், ஐசுவரியம் எல்லாம் பெருக, தருமமும் கீர்த்தியும் ஓங்க, ஒழுக்கத்திலே சிறந்து விளங்கினான் மதுரை வாணிகன்.

இளையவளும் இலக்குமியைப் போல வாழ்ந்திருந்தாள்.

திருவாலவாய்க் காண்டம் முற்றிற்று



சகுந்தலை நிலையம்